வெளியீடு 21-11-1983]

[Issued 21-11-198

2694

# தமிழ் நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES

## பணித்துறை வெளியீடு—OFFICIAL REPORT

வியாழக்கிழமை மார்ச் 17, 1983—தொகுதி XLV எண் 3

Thursday 17th March 1983 Volume XLV No. 3

சட்டமன்றப் பேரவைத் துறை, சென்னை-600 009

Legislative Assembly Department Fort St. George

Madras-600009

விலை ரூ. 3-50 காசுகள்] [Price Rs. 3-50 Paise

136071
சென்னை-600 008

# உள்ளடக்கம்

**17–3–1983**


| | |
|---|---|
| 1. வினாக்கள்—விடைகள்— உடுக்குறியிட்ட வினாக்கள் | 455—484 |
| 2. அறிவிப்புகள்— | |
| (அ) உறுப்பினர் திரு. கே. பி. நாச்சிமுத்து கைது செய்யப்பெற்றுள்ளது. | 485 |
| (ஆ) உறுப்பினர் திரு. கே. பி. நாச்சிமுத்து ஜாமீனில் விடுவிக்கப் பெற்றுள்ளது. | 489—490 |
| 3. தகவல் கோரல்— | |
| வறட்சியால் ஏற்பட்டுள்ள நிலைமைகளை அரசின் கவனத்திற்குக் கொண்டுவர எதிர்க் கட்சித் தலைவர்கள் உண்ணாவிரதம். | 485 |
| 4. ஒத்திவைப்புத் தீர்மானம்— | |
| பரம்பிக்குளம் ஆளியார் திட்டம், அமராவதி அணை ஆகியவற்றின் ஆயக்கட்டு பகுதிகளில் விவசாயம் பாதிக்கப் பெற்றுள்ளது. | 490—496 |
| 5. கவன ஈர்ப்பு— | |
| சூளைக்காரர்களுக்கு மண்வெட்டிக்கொள்ள விதிக்கப்பெறும் உரிம வரி. | 496—499 |
| வரவு-செலவுத் திட்டம் 1923-84 வாக்கெடுப்பு (தொடர்ச்சி) | |
| (அ) கோரிக்கை எண் 28—சமுதாய நல வளர்ச்சித் திட்டங்களும் நகராட்சி நிர்வாகமும். | 499 |
| (ஆ) கோரிக்கை எண் 39—சாலைகளும் பாலங்களும். | 500 |
| (இ) கோரிக்கை எண் 53—சாலைகள் பாலங்கள் குறித்த மூலதனச் செலவு, | 501 |
| மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு | 499—502, 525—530, 579—597 |
| திரு. கெ. சொக்கலிங்கம் | 503—507 |
| திரு. கெ. சௌந்திரராசன் | 507—509 |

| | |
|---|---|
| | 509—513 |
| திரு. என். எ. பூங்காவனம் | 514—516 |
| திரு. செ. செம்மலை | 516—521 |
| திரு. வெ. இராஜசேகரன் | 521—525 |
| திரு. இரா. பா. முனிரத்தினம் | 525 |
| திரு. என். பழனிவேல் | 535—537 |
| திரு. செ. பட்டாபிராமன் | 537—540 |
| திரு. ஏ. எம். சேதுராமன் | 541—544 |
| திரு. சி. த, சிதம்பரம் | 545—546 |
| திரு. பெ. திருமாறன் | 546—550 |
| திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் | 550—552 |
| திரு. வெ. அரங்கராசன் | 552—554 |
| திரு. ப. தீர்த்தராமன் | 555—558 |
| திரு. பொ. விஜயராகவன் | 558—561 |
| திரு. எஸ். டி. உகம்சந்த் | 561—566 |
| திரு. ஜி. மூர்த்தி | 566—571 |
| திரு. என். சங்கரய்யா | 571—577 |
| திரு. அ. செல்வரா[illegible] | |
| 7. அறிக்கை அளித்தல்— | 57[illegible] |
| கரும்பின் விலைக் குறைவை ஈடு செய்வது | 59[illegible] |
| 8. பேரவை முன் வைக்கப்பெற்ற ஏடுகள் | |


# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

வியாழக்கிழமை, 1983, மார்ச் 17
பங்குனி 3, துந்துபி—திருவள்ளுவர் ஆண்டு 2014

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9.00 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. க. இராசாராம் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் :

''குடிசெய்வார்க்கு இல்லை பருவம் மடிசெய்து
மானம் கருதக் கெடும்.''

தம் குடும்பத்தை—சமுதாயத்தை—நாட்டை உயர்த்துவதற்கும் முன்னேற்றம் அடையுமாறு செய்வதற்கும், பணிபுரிய விரும்புவோர்க்கு அந்தப் பணிகளையும் தொண்டுகளையும் செய்வதற்கு 'உரிய-ஏற்ற காலம்' என ஒன்று இல்லை. இதற்கு ஏற்ற காலம் வரட்டும் என எண்ணிக் காத்துக்கொண்டு இருக்கத் தேவை இல்லை. அவர்கள் உடனடியாகச் செயல்படுவதே வீட்டுற்கும் நாட்டிற்கும் நல்லது.

## 1. வினாக்கள்—விடைகள்

### உடுக்குறியிட்ட வினாக்கள்.

### சென்னையில் மீன்பிடி துறைமுகம் அமைக்கும் திட்டம்.

* வினா எண் 443—திரு. து. புருஷோத்தமன் : மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னையில் மீன்பிடி துறைமுகம் அமைக்க அரசிடம் செயற்குறிப்பு ஏதேனும் உள்ளதா?

(ஆ) ஆம் எனில் விவரம் என்ன?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) மற்றும் (ஆ) சென்னை மாநகரில் இராயபுரம் பகுதியில் சுமார் பதினோறு கோடி ரூபாய் செலவில் ஓர் மீன்பிடி துறைமுகம் சென்னை துறைமுக கழகத்தினரால் மத்திய அரசின் ஒப்புதலுடனும் நிதி உதவியுடனும் கட்டப்பட்டு வருகிறது. இத்துறைமுகத்தில் 500 மீன்பிடி படகுகளும், 50 பெரிய நாவாய்களும் தங்கலாம். இத்துறைமுகக் கட்டுமானப் பணிகள் 1984 பிப்ரவரி அளவில் முடிவடையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. ஆனால் இப்பொழுதே பல படகுகள் இத்துறைமுக வசதிகளைப் பயன்படுத்திக் கொள்கின்றன. ஆண்டொன்றுக்கு சுமார் 40,000 டன் மீன் உணவுப் பொருட்களை, இத்துறைமுகத்தில் தங்கும் படகுகள் பிடிக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது.

[1983 மார்ச் 17

திரு. ரா. கிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மீன் பிடிக்கக்கூடிய தொழில் தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில் மிக அதிகமான அளவில் நடப்பதற்கு வாய்ப்புள்ள பகுதியாகும். இந்தத் தொழிலின் மூலம் இன்றைக்கு அன்னியச் செலாவணி 210 கோடி ரூபாய் வரையில் கிடைக்க வாய்ப்பு இருக்கின்றது. அப்படிப்பட்ட ஒரு வாய்ப்புள்ள சூழ்நிலையில் கடலோரப் பகுதிகளில் மேலும் அதிக அளவில் மீன் பிடிக்கின்ற வகையிலே அக்கறை செலுத்தி அதற்கேற்ற வகையில் வாய்ப்பு வசதிகளை ஏற்படுத்துவது அரசின் கடமை. எனவே அந்த அடிப்படையில் இந்த மீன்பிடித் துறைமுகத்தை கூடிய விரைவில் அமைக்க ஏற்பாடு செய்ய அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாளுக்கு நாள் ஆண்டுக்கு ஆண்டு இந்த மீன்பிடித் தொழில் வளர்ந்து கொண்டு வருகின்றது. கடற்கரை ஓர மாநிலமாக இருப்பவை இதிலே ஊக்கமும் செலுத்தி வருகின்றன. அந்த வகையிலே சிலபல வகையிலே தமிழகம் இரண்டாவது இடத்தையும், சிலபல வகைகளில் 3-வது இடத்தையும் பெற்றிருக்கின்றது. சாதாரணமாக கரை ஓரத்தில் மீன்பிடிப்பதைவிட ஆழ் கடலுக்குச் சென்று மீன் பிடித்தால் அதிக அளவில் மீன் கிடைக்கும். அந்த வகையில் மீன்பிடிக்க இப்போது நாம் இரண்டு ட்ராலர்கள் வைத்துக் கொண்டிருக்கிறோம். அது விசாகப்பட்டிணம் துறைமுகத்திலே இருந்து வங்கக் கடலுக்குச் சென்று மீன்களைப் பிடித்து வருகின்றது. அதனால் நல்ல லாபமும் நமக்குக் கிடைக்கின்றது. இப்போது மேற்கொண்டு 4 ட்ராலர்கள் வாங்க வேண்டும் என்று அதற்கான அனுமதியை மத்திய அரசிடம் கேட்டிருக்கிறோம். விரைவிலே அதற்கான அனுமதி வந்தால் அவற்றை வைத்துக்கொண்டு மேலும் அதிக அளவிலே மீன்களைப் பிடிப்பதற்குரிய வழிவகைகள் ஏற்படும். மேலும் ஆங்காங்கே சிறு சிறு மீன்பிடித்துறைமுகங்களைக் கட்டுகின்ற முயற்சியையும் நாம் மேற்கொண்டிருக்கிறோம். சென்னையில் கட்டப்படுகின்ற மீன்பிடித் துறைமுகத்தைப் பொறுத்தவரையில் 11 கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்டு வருகின்ற அந்தத் துறைமுகம் அடுத்த ஆண்டில் நடைமுறைக்கு வரும். அப்போது அதிகமான அளவில் மீன்களைக் கொண்டு வரவும், அவற்றை குளிப்பதனப்படுத்தவும், பேக் செய்யவும், ஏற்றுமதி செய்யவும் போதிய வசதிகள் இருக்கும். மேலும் கொச்சி, விசாகப்பட்டிணம் போன்ற துறைமுகங்களில் அமல்படுத்துகின்ற துறைகளைக் கையாளவும் நமது அரசு திட்டமிட்டிருக்கின்றது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. பெ. சு. திருவேங்கடம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மீன்பிடித் துறைமுகத்தைப் போன்று [illegible]கே துறைமுகங்கள் கட்ட இருப்பதாகவும் மாண்புமிகு [illegible]வர்கள் அறிவித்தார்கள். சென்னையைத் தவிர [illegible]ங்களில் அப்படிக் கட்டுவதற்கு உத்தேசம் [illegible]



1983 மார்ச் 17]

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் அதாவது வாலிநோக்கம், சின்னமுட்டம் மற்றும் தஞ்சை மாவட்டத்தின் சில பகுதிகளில் சிறுசிறு துறைமுகங்களை கட்ட இருக்கிறோம். அவற்றிலே 50 படகுகள், 60 படகுகள், 70 படகுகள், 100 படகுகள், 200 படகுகள் வரையில் தங்குவதற்கு வழிவகை செய்கின்ற வகையில் அமைக்கப்படும். சென்னையிலே அமைக்கப்படுகின்ற துறைமுகத்தைப் பொறுத்தவரையில் 500 மீன்பிடிப் படகுகள் மற்றும் 50 கப்பல்கள் வந்து தங்குகின்ற வகையில் வசதிகள் ஏற்படுத்தப்படும். அதனுடைய முழுச்செலவான 11 கோடி ரூபாயினையும் மத்திய அரசுதான் ஏற்றுக்கொண்டு இருக்கின்றது. அது கட்டிமுடிக்கப்பட்டதற்குப் பிறகு அதைக் கண்காணிக்கின்ற பொறுப்பினை மாநில அரசுக்குத் தரவேண்டும் என்று கேட்டிருக்கிறோம். அந்தத் துறைமுகத்தைப் பொறுத்தவரையில் அதைக் கண்காணித்து மேற்பார்வையிடுகின்ற பணிகளைப் பொறுத்தவரையில் கொச்சி, விசாகப்பட்டிணம் துறைமுகங்களில் எப்படி நடக்கின்றதோ அப்படி அந்த அடிப்படையில் மாநில அரசினுடைய மீன்வளத்துறையின் மூலம் சிறப்பாக நடத்தலாம் என்று கேட்டுக்கொண்டிருக்கிறோம். மத்திய அரசு அதற்கு இணக்கமானதைச் செய்யும் என்று எதிர்பார்க்கிறோம்.

திரு. சு. பாலன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தற்போது ராயபுரம் பகுதியில் மீன்பிடிக்கும் துறைமுகத்திற்கு 11 கோடி ரூபாய் செலவழிக்கப்பட அரசு இருக்கிறது என்று சொல்லியிருக்கிறார்கள். கடந்த வாரம் இதே கேள்வியை கேட்கிறபோது 10 கோடி என்று சொல்லியிருக்கிறார்கள். ஆக இந்த இடைவெளியில் 1 கோடி ரூபாய் எப்படி அதிகமாக வந்தது என அறியவிரும்புகிறேன்? இன்றையதினம் மழை இல்லாத காரணத்தால் மீனவர்கள் அதிகமாக மீன் பிடிக்காமல் மிகவும் அவதிப்படுகிறார்கள். பலபேர் சர்க்காரிடம் கடன் வாங்க அந்த கடன் தொல்லையால் மிகவும் அவதிப்படுகிறார்கள். இப்படிப்பட்ட அவர்களுக்கு கடனில் சலுகைத் தர அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சென்ற ஆண்டு கேட்டபோது 10 கோடி இருந்தது என்று சொன்னார்கள். அப்போது கிடைத்த தகவலை வைத்து நாம் சொல்லியிருக்கிறோம். இதற்கு முதலில் 8 கோடி என்று போடப்பட்டு பிறகு 9 கோடி ஆகி, பிறகு கோடி ஆகி இப்போது 11 கோடி ஆகியிருக்கிறது. காலம் கடந்து போவதால் விலைவாசிகள் ஏறுகிற காரணத்தால் ரிவைஸ்டு எஸ்ட்டிமேட் போடுவது ஒவ்வொரு தன்மையிலும் உண்டு. இப்போது அதை 11 கோடி என்று சொல்லிவிட்டார்கள். சென்னை துறைமுகக் கழகத்தில் மத்திய அரசின் ஒப்புதலோடு அவர்கள் பொறுப்பு ஏற்றுக்கொண்டு இந்த புள்ளிவிவரங்களை அவர்கள் கொடுக்கிறார்கள். அதைப்

பெற்று அளித்துக்கொண்டு வருகிறோம். மீனவர்களுக்கு பல்வேறு வகைகளில் பல்வேறு துறைகளின் மூலம் கடன் வழங்கப்பட்டு அவர்கள் பணியாற்றி வருகிறார்கள். அதற்குத் தனிக் கேள்வி போட்டால் அது எந்த எந்த இனங்களில் எந்த எந்த வகைகளில் தரப்படுகிறது என்று எடுத்துச்சொல்லலாம்.

### தமிழ்நாடு நுகர் பொருள் வாணிபக் கழகத்திற்குச் சொந்தமான கிடங்குகள்.

* வினா எண் 444—திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்: மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் தன்வசம் எத்தனை சொந்த கிடங்குகள் வைத்துள்ளது?

(ஆ) உணவுப் பொருள்கள் கெடாமல் இருக்க கழகம் மேற்கொண்டுள்ள சிறப்பு நடவடிக்கைகள் என்ன?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் தன்வசம் 56 கிடங்குகளை சொந்தமாக வைத்துள்ளது.

(ஆ) உணவுப் பொருள்கள் கெடாமல் இருக்க கழகம் கீழ்க் காணும் நடவடிக்கைகளை எடுத்து வருகிறது.

1. ஒவ்வொரு கிடங்கும் தரக்கட்டுப்பாடு அலுவலர் மேற்பார்வையில் உள்ளன.

2. தக்க இடைவெளிகள் விட்டு மூட்டைகள் அடுக்கப் பட்டு காற்றோட்டத்துக்கும் தர பாதுகாப்புகளுக்கும் வழி செய்யப்பட்டுள்ளன.

3. அன்றாடம் தானியங்கள் சிந்தாமல் பாதுகாப்பதுடன் கிடங்குகள் சுத்தப்படுத்தப்படுகின்றன.

4. 20 நாட்களுக்கொருமுறை அங்கீகரிக்கப்பட்ட 'மாலதயான்' மருந்து தெளிப்பதன் மூலம் பூச்சிகள் பெருகாமல் கட்டுப்படுத்தப்படுகின்றன.

5. கிடங்குகளின் உணவுப் பொருட்கள் நிலையை பதினைந்து நாட்களுக்கொருமுறை மண்டல மேலாளர் கிடங்கிலுள்ள தரக்கட்டுப்பாடு அலுவலர்களிடமிருந்து அறிக்கை மூலம் [redacted] சீராக்குகிறார்.





6. மேற்படி நடவடிக்கைகள் நன்கு நடைபெறுவதை மண்டலத்திலுள்ள தரக்கட்டுப்பாடு மேலாளரும் தலைமையகத்திலுள்ள தரக்கட்டுப்பாடு முதுநிலை மேலாளரும் தமது பயணங்களின் போது கண்காணிக்கின்றனர்.

திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் பொருள்களை ஒரு கூடோனிலிருந்து மற்றொரு கூடோனுக்கு எடுத்துச் செல்லும்போது அந்த போக்குவரத்தால் உணவுத்தானியம் எவ்வளவு குறைவு ஏற்படுகிறது? மத்திய அரசுக்குச் சொந்தமான பூட் கார்ப்பரேஷனில் இந்த போக்குவரத்தால் ஆண்டு ஒன்றுக்கு 5 லட்சம் டன் பொருள்கள் வீணாகிறது என்று சொல்கிறார்கள். அப்படி ஏதேனும் குறைவு இந்த நுகர்பொருள் வாணிபக் கழகத்தில் ஏற்படுகிறதா? போக்குவரத்து மூலம் எடுத்துச்செல்லும் பொருள்களை இப்போது சணல் பைகளில் எடுத்துச் செல்கிறார்கள் அதற்கு பதிலாக பாலிதீன் பைகளில் எடுத்துச் செல்ல அரசுக்கு எண்ணம் உண்டா என அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதிலே சேதம் எவ்வளவு ஏற்படுகிறது என்ற புள்ளி விவரங்கள் கணக்குகள் இப்போது என்னிடம் இல்லை. தனிக்கேள்விப்போட்டால் அதற்கு பதில் சொல்ல முடியும். ஆனால் 56 கிடங்குகள் மிகச் சிறப்பாக பயன் படுத்தப்பட்டு வருகின்றன. சிலபல இடங்களில் கிடங்குகள் முழுமையாக கொள்முதல் செய்து நல்ல முறையில் செயலாற்றி வருகிறது. கடந்த 2, 3 ஆண்டுகளாக இதில் பணிபுரியும் ஊழியர்களும் நல்ல முறையில் பணிபுரிந்து போனஸ் மற்றவைகளும் பெருகின்ற அளவுக்கு இது வளர்ச்சிப்பெற்று வருகிறது. இதனை மிகச் சிறப்பாக பயன்படுத்துகிறது. சர்க்கரை ஆலைகள் ஸ்பிக் உர ஆலைகளும். மாவட்டங்களில் இந்த கிடங்குகள் இருப்பதன் காரணமாக ஸ்பிக் உரங்களை பாதுகாக்கப்பட்டு அந்த அந்த இடங்களுக்கு வினியோகிக்கப்படுகிறது. வேளாண்மைத் துறையைப் பொறுத்த அளவில் மிகப் பெரும்பாலான அளவில் வியாபாரிகளும் மற்றவர்களும் சீராக பாதுகாப்பாக வைத்துக் கொள்வதற்கு இவைகள் பயன்பட்டு வருகிறது என்பதை கூறிக் கொள்கிறேன்.

(முற்பகல் 9.10)

திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் : தலைவர் அவர்களே, நுகர்பொருள் வாணிபக் கழகக் கிடங்குகளில் பாதுகாப்பாக வைப்பதற்கு வாய்ப்பு இருப்பதைப்போன்ற வேர் ஹவுஸிங் கார்ப்பரேஷனிலும் பாதுகாப்பாக வைப்பதற்கான வாய்ப்புகள் இருக்கின்றன. அதைப்போன்று கிராமங்களிலே உள்ள விவசாயிகளுக்கு உணவு தானியங்களை பாதுகாப்பாக

வைப்பதற்கான வாய்ப்புகள் இல்லை. ஆகவே விவசாயிகள் கிராமங்களிலே உணவுதானிய சேதாரத்தை நீக்குவதற்காக உணவுதானியங்களை எப்படிப் பாதுகாப்பாக வைக்கமுடியும் என்பதற்கான பயிற்சியை அவர்களுக்கு அளிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, நுகர்பொருள் வாணிபக் கழகம் அதனுடைய கிடங்குகளில் உணவுப் பொருள்களையும் மற்றவைகளையும் வைப்பதற்குப் பயன்படுத்தப் படுகின்றன. சிலசமயங்களிலே போதுமான இடம் இருக்குமானால் மற்றவர்களுக்கும் தரலாம். நமக்கே இடம் போதாது என்ற நிலை ஏற்படுகிறபோது மத்திய அரசினுடைய கிடங்குகளை நாம் வாடகைக்கு எடுத்துக்கொள்கிறோம். நாம் வாடகைக்கு விடுகிறோம். தனியார்கள் அவர்களுடைய சரக்குகளை வைப்பதற்காக வேர்ஹவுஸிங் கார்ப்பரேஷன் என்ற நிறுவனத்தை வைத்து நடத்திக்கொண்டு வருகிறோம். அதுவும் சிறப்பாக நடை பெற்றுக்கொண்டு வருகிறது.

திரு. த. வேணுகோபால் : தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் சொல்கிறபோது தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்திலே 56 கிடங்குகள் இருப்பதாகக் கூறினார்கள். ஆனால் 56 கிடங்குகளில் எல்லாக் கிடங்குகளிலும் போதுமான உணவு தானியங்களைச் சேகரித்து வைத்து அரசாங்க உணவுப் பொருட்களை தனியார்களிடத்திலே வைப்பதற்கான சூழ்நிலை இருக்கிறது. ஆகவே கூடுதலாக இன்னும் கிடங்குகளைக் கட்டு வதற்கு அரசு முன்வருமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, அவ்வப்போது தேவைக்கு ஏற்ப சிலபல மாவட்டங்களிலே புதிய கிடங்குகளை அமைப்பதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப் படுகின்றன. அண்மையிலே திருச்சியிலே அதுமாதிரியான ஏற்பாடுகள் செய்யப்பட்டு இருக்கின்றன. அறுவடையாகிறபோது நெல் கொள்முதல் செய்யப்பட்டு ஏராளமாக சேர்த்து வைக்கிற போது நம்முடைய நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் கிடங்கு களிலே வைக்கப்படுகின்றன. அதுவும் போதாது என்றால் மத்திய அரசுக்குச் சொந்தமான கிடங்குகளிலே வைப்பதற்கு ஏற்பாடு களைச் செய்கிறோம். அதுவும் போதாது என்றால் தனியார் கிடங்குகளைப் பயன்படுத்துகிறோம். அதுவும் போதாது என்ற நிலை ஏற்படுகிறபோது திருவானைக்காவல், மதுரை, திருநெல் வேலி போன்ற இடங்களில் உள்ள கோயில்களில் உள்ள ஆயிரங்கால் மண்டபங்களைப் பயன்படுத்தி அதற்காக அவர்களுக்கு நாம் ஓரளவு வாடகை கொடுக்கக்கூடிய நிலை இருக்கிறது என்பதைத் தெரிவிக்கக் கொள்கிறேன்.



திரு. ஏ. எம். சேதுராமன்: தலைவர் அவர்களே, நிதியமைச்சர் அவர்கள் 1982-83 ஆம் ஆண்டுக்கான பட்ஜெட்டிலே கூறுகிற போது நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் மூலமாக 2 கோடி ரூபாயிலே நவீன அரிசியாலை ஒன்று கட்டுவதாக உறுதியளித்திருக் கிறார்கள். எந்த மாவட்டத்தில் எப்போது அது கட்டப்படும் என்பதையும் புதிய கிடங்குகள் கட்டுகிறபோது அரிசி வியாபாரிகள் இருக்கிற இடத்திலே, லெவி கொடுக்கிற வியாபாரிகள் இருக்கிற இடத்திலே, உணவுப் பொருள்கள் அதிகமாக விளைகிற இடத்திலே கட்டுவதற்கு அரசு ஏற்பாடு செய்யுமா?

மாண்புமிகு டாக்டர் இரா நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, இந்தக் கேள்வி மூலக் கேள்வியோடு நேரடியாகத் தொடப்பு இல்லையென்றாலும் ஏற்கெனவே பதில் சொல்கிறபோது சொல்லியிருக்கிறேன். தஞ்சை மாவட்டத்தில் சீர்காழிக்கு அருகே அது நிறுவப்பட இருக்கிறது. நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் மூலமாக மிக அதிகமாக கொள்முதல் விநியோகம் இருப்பதன் காரணமாக அதற்கே அவை பயன்படுகின்ற அளவுக்குத்தான் இருக்கின்றன. தனியார் பலருக்குப் பயன்படுகின்ற வகையிலே வேர்ஹவுசிங் கார்ப்பரேஷன் மூலமாக தனியாக வைத்து மாவட்டங்களிலே தனிக் கிடங்குகள் வைத்து அதையும் அவர்கள் பயன்படுத்தக்கூடிய அளவுக்கு நாம் செய்து வருகிறோம்.

*திரு. எல். இளையபெருமாள் : தலைவர் அவர்களே, இந்த சேமிப்புக் கிடங்களில் ஆயிரக்கணக்கான மூட்டைகள் பாதுகாப்பாக வைக்கப்பட்டதில் அரிசி கெட்டுவிட்டது என்பது அரசுக்குத் தெரியுமா; எத்தனை டன்கள் கெட்டுவிட்டன என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, அப்படித் தகவல் இருப்பதாகத் தெரியவில்லை. அதைப்பற்றித் தனிக் கேள்விப்போட்டால் சொல்லலாம். நமக்கு பற்றாக்குறை இப்போது இருக்கிற காரணத்தினால் விநியோகிக்கின்ற சூழ்நிலை ஏற்பட்டு இருப்பதால் அப்படி ஏற்படவில்லை. தனிக்கேள்வி போட்டால் முழு விவரமும் தரலாம்.

திரு. என். பழனிவேல் : தலைவர் அவர்களே, நுகர்பொருள் வாணிபக் கழகம் விவசாயிகளிடமிருந்து தானியங்களை கொள் முதல் செய்கிறபோது அரசு நிர்ணயித்த விலைக்குச் செய்கிறதா அல்லது அதற்கு மேல் சிறப்புத் தொகை ஏதாவது கொடுத்து செய்கிறதா? சத்துணவு மையங்களுக்கு இதன்மூலம் உணவு விநியோகம் நடைபெறுகிறதா? அப்படி விநியோகிக்கப்பட்டால் அங்கே அரிசி மூட்டைகள் குறைந்துவருவதாக சம்பந்தப்பட்ட அமைப்பாளர்களே சொல்கிறார்களே, அதைப் போக்குவதற்கு அரசு என்ன நடவடிக்கை எடுக்கும்?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசாங்கம் நிர்ணயித்த மூன்று ரகங்களான 122, 126, 130 என்ற அளவிற்கு தஞ்சை மாவட்டத்தில் நாம் கட்டாய கொள்முதல் செய்கிற முழுப் பொறுப்பையும் ஏற்றுக்கொண்டதன் காரணமாக, வறட்சி நிலையைக் கருதி மேற்கொண்டு 15 ரூபாய் கொடுக்கிறோம். 122 பிளஸ் 15; 126 பிளஸ் 15; 130 பிளஸ் 15; என்று தான் நாம் கொள்முதல் செய்கிறோம். ஆனால் சத்துணவுத் திட்டத்திற்கு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் மூலமாக தான் அரிசி பங்கீட்டைச் செய்து வருகிறோம் அதிலே ஏதாவது குறைபாடுகள் இருக்குமானால், அவற்றை அரசின் கவனத்திற்குக் கொண்டு வந்தால் உரிய நடவடிக்கையை மேற்கொள்ளலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண்கள் 445, 446 மற்றும் 447 மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சரின் வேண்டுகோளுக்கிணங்க ஒத்திவைக்கப்பெறுகின்றன.

1980-1981-ம் ஆண்டுகளில் முந்திரி உற்பத்தி பெருக்கத்திற்காக செலவிடப்பட்ட தொகை.

வினா எண் 390—திரு. கு. ரமணி : மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் முந்திரி உற்பத்திப் பெருக்கத்திற்காக 1980–81ம் ஆண்டுகளில் செலவிடப்பட்ட நிதி எவ்வளவு?

(ஆ) தமிழ்நாட்டில் வருடத்துக்கு சராசரி முந்திரிக் கொட்டை உற்பத்தி எவ்வளவு?

(இ) முந்திரி உற்பத்தியில் சுயதேவைப் பூர்த்தி அடைய அரசிடம் என்ன திட்டமுள்ளது?

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : (அ) ரூபாய் 13.43 இலட்சம்.

(ஆ) சுமார் 10,770 டன்.

(இ) சுயதேவைப் பூர்த்தியைக் காட்டிலும் மதிப்புள்ள வெளிநாட்டுச் செலவாணியை ஈட்டுவதே முந்திரிப் பயிர் அபிவிருத்தித் திட்டத்தின் நோக்கம். இதற்கென உலக வங்கி உதவியுடன் சுமார் ரூ. 3950.46 இலட்சம் மதிப்பீட்டில் ஒரு திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளது.

திரு. கு. ரமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசினுடைய நோக்கத்தைப்பற்றி மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிடும் போது வெளிநாட்டுச் செலாவணியை ஈட்டுவதே முந்திரிப் பயிர் அபிவிருத்தித் திட்டத்தின் நோக்க [redacted]ப்பிட்டார்கள். தமிழ்நாட்டில் தன்னிறை...





மாவட்டத்தில் அரை லட்சம் தொழிலாளர்கள் முந்திரிதொழிலில் ஈடுபட்டிருக்கிறார்கள். அந்த மாவட்டத்தில் முந்திரித் தொழிற்சாலைகள் மூடிக்கிடக்கிற காரணத்தால் தொழிலாளர்கள் வேலையில்லாமல் இருக்கிற நிலையில் இங்கேயே அபிவிருத்தி தேவையாக இருக்கிறது. வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்து விநியோகம் செய்வதற்கு மத்திய அரசு வைத்திருக்கிற கமிட்டியிலே இந்தச் சர்க்கார் பிரதிநிதித்துவம் கூட இல்லை என்று நினைக்கிறேன். ஆகவே உள்நாட்டு தேவையை பூர்த்தி செய்கிற அளவிற்கு இந்த முந்திரியை உபயோகப்படுத்த அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, நாம் அபிவிருத்தி செய்வது இங்கே தான்; தொழிலாளர்களுக்கு வேலை கொடுப்பது இங்கே தான்; அதை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்து அன்னியச் செலாவணியைப் பெருக்கவேண்டுமென்ற நோக்கம் என்று குறிப்பிட்டேன். தொழிற்சாலைகள் குறித்த பிரச்னைகள் இந்த துறையோடு தொடர்புடையதல்ல.

திரு. கு. ரமணி : தலைவர் அவர்களே, முந்திரி என்பது அரசினுடைய திட்டத்தின்படி உருவாக்கக் கூடியதாகும். இங்கே நாம் உற்பத்தி செய்யக்கூடிய முந்திரியோ, ரப்பரோ இங்கே இருக்கிற தேவைக்கே இல்லாமல் தொழிற்சாலைகளை வளர விட்டு ஏற்றுமதி செய்வது எப்படி சரியாக இருக்கமுடியும்? ஏற்றுமதி செய்து சம்பாதிக்க வேண்டாம் என்று நான் சொல்லவில்லை. ஆகவே இதற்கு முதலிடம் கொடுப்பதற்கு அமைச்சர் அவர்கள் ஏதாவது ஏற்பாடுகளைச் செய்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : மாண்புமிகு தலைவர் அவர்களே, பயிர் அபிவிருத்தி என்பது மட்டும் தான் வேளாண்மை துறையிலே வரும். மற்ற பிரச்னைகள் இதிலே வராது. அதற்கு தனிக்கேள்வி போட்டால் தொடர்புடையத் துறை பதில் அளிக்கும்.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் எந்தெந்த ஜில்லாக்களில் முந்திரி பயிரிடப்படுகிறது? இந்த முந்திரி உற்பத்திச் செய்வதற்கு மண்வளம் எப்படி இருக்க வேண்டும் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, 15 மாவட்டங்களிலே சாகுபடி நடந்து வருகிறது. முந்திரிக்குத் தேவைப்படுவது ஓரளவிற்கு வறட்சி நிலை, இருந்தாலும் கூட இதை தாங்கக்கூடிய நிலையில் இருக்கிறது. எல்லா மாவட்டங்களிலும் சிலபல நிலைமைகளைப் பொறுத்து அந்த பயிர் பயிரிடப்படுகிறது.

[1983 மார்ச் 17

திரு. பு. மணி : தலைவர் அவர்களே, 1980-81-ல் பத்தாயிரம் டன் முந்திரி வேளாண்மைத் துறை மூலமாக உற்பத்தி செய்யப்பட்டதாகச் சொன்னார்கள். இந்த முந்திரியை எந்த துறைக்கு அல்லது யாருக்கு விற்பனை செய்தார்கள்? இந்த விற்பனையினால் அரசாங்கத்திற்கு எவ்வளவு வருமானம் வந்தது? அந்த முந்திரியை நம்முடைய மாநிலத்தில் உள்ள ஆலைகளுக்கு கொடுப்பதற்கு என்ன நடவடிக்கை இருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : தலைவர் அவர்களே முந்திரி அபிவிருத்தித் திட்டத்திற்குத் தொடர்புடைய கேள்விக்கு மட்டும் தான் நான் பதில் அளிக்க முடியும். அது எங்கு ஏற்றுமதி செய்யப்பட்டது என்பதை பற்றிய விவரங்கள் தனியான துறையைச் சார்ந்தது. இந்தத் துறைக்குத் தொடர்புடையவை அல்ல.

1982 ஜனவரியில் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம் கண்டு பிடித்த புதிய விதைகள்.

*வினா எண் 391 — திரு. பெ. சு. திருவேங்கடம் : மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை பளிப்பாரா —

(அ) தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம் 1982 ஜனவரியில் புதிய விதைகளை கண்டுபிடித்து அறிவித்துள்ளதா?

(ஆ) ஆம் எனில் அதன் விவரம் என்ன?

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : (அ) ஆம்.

(ஆ) பையூர் -1 நெல்; கோ. 4. பாசிப்பயறு; கோ. 4. துவரை: டி. என். பி. 1. பருத்தி; கோ. 2. மிளகாய்; கோ. 4. வெங்காயம்; கோ. 3. சர்க்கரை வள்ளி; கோ. 2. பூசணி: கோ. 2. கொத்தமல்லி மற்றும் பெரியகுளம். 1. பிக்கன் ஆகிய பத்து புதிய ரகங்கள் தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகம் 1982 ஜனவரியில் கண்டுபிடித்து வெளியிட்டுள்ளது.

(முற்பகல் 9-30)

திரு. பெ. சு. திருவேங்கடம் : பேரவைத் தலைவர் அவர்களே இந்த 10 ரக விதைகளில் நஞ்சைப் பயிர் ஏதாவது வருகிறதா? அப்படி வருகின்ற அந்த விதை குறுகிய கால அடிப்படையிலே பயிரிடப்படுவதா? அல்லது நீண்டகால அடிப்படையிலே பயிரிடப் கூடியது என்பதை அமைச்சர் அவர்கள் அறிவிக்க இயலுமா? [redacted] பிட்டபாமை.



1983 மார்ச் 17]

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, பையூர் 1 நெல் என்பதனை நான் ஏற்கனவே குறிப்பிட்டேன். பொதுவாக, புதிதாக ஒரு ரகம் கண்டு பிடிக்கப்படுகிற நேரத்தில்; அதனுடைய உற்பத்தி அளவு நாட்கள் குறைவாக இருக்க வேண்டு மென்பதும், அது பல்வேறு பூச்சித் தாக்குதல்களிலிருந்து தாக்கு பிடிக்கக்கூடிய நிலையிலே இருக்க வேண்டுமென்பதும் அத்தகைய அடிப்படையிலேதான் புதிய ரகங்கள் கண்டு பிடிக்கப்பட்டிருக்கின்றன. நான் குறிப்பிட்ட அந்த 10 ரகங்கள்கூட அத்தகைய தன்மை வாய்ந்த ரகங்கள்.

திரு. பெ. சு. திருவேங்கடம் : பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் குறுகிய நெற் பயிரை விவசாயிகள் விரும்புகிறார்கள். காரணம், வறட்சி, மின்சாரப் பற்றாக்குறை, தண்ணீர் இல்லாத நிலைமை, இதையெல்லாம் அடிப்படையாக வைத்து, அந்தப் பயிரைதான் இன்றையதினம் இட வேண்டிய சூழ்நிலையிருக்கிறது. ஆனால் இந்தப் பயிர் அதிகமான அளவு பூச்சித் தாக்குதலுக்கு ஆளாகின்றதே, ஆகவே பூச்சித் தாக்குதலைத் தாங்குகின்ற அளவுக்குப் புதிய ரக விதையைக் கண்டு பிடிக்க அரசாங்கம் ஏதாவது நடவடிக்கை எடுக்குமா என்று நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, நான் குறிப்பிட்ட அந்தப் பையூர்—1 நெல் கூட தண்டுப்புழு, இலைச் சுருட்டுப்புழு, புகையான் முதலிய பூச்சிகளால் அதிகம் பாதிக்கப்படாத நெல் ரகம்தான். பொதுவாக, பூச்சித் தாக்குதல் என்பது, நாம் மருந்தைப் புதிது, புதிதாகப் பயன்படுத்துவதற்கேற்ப பூச்சிகளும் அதிலேயிருந்து தப்பித்துக் கொள்வதற்குப் புதிய, புதிய வழிமுறைகளைக் கண்டு பிடிப்பதைப் போல இருக்கிறது. ஆகவே தான் ஒவ்வொரு மருந்தையும் மாற்றிப் பயன்படுத்த வேண்டுமென்ற ஆலோசனையை நாம் விவசாயப் பெருமக்களுக்குத் தெரிவிக்கிறோம்.

டாக்டர் கே. சமரசம் : பேரவைத் தலைவர் அவர்களே, தர்மபுரி மாவட்டம் காவேரிப்பட்டிணம் தொகுதி பையூர் கிராமத்திலே இருக்கக்கூடிய வேளாண்மைப் பயிற்சி ஆராய்ச்சிக் கழகத்தின் மூலமாகக் கண்டு பிடிக்கப்பட்டதுதான் பையூர்—1 என்று சொல்லப்படுகிறது. 15 நாட்களிலே நாற்று நட்டாலும் 40 நாட்களிலே நாற்று நட்டாலும், ஒரே பலனை அது தந்து வருகிறது. அந்த அளவுக்கு மகசூல் தரக்கூடியது அது. அது மட்டுமல்லாமல், இன்னும் வேறுபல ரகங்களைத் தயாரித்து வெளியிடப்படுவதாகச் சொல்லப்படுகிறதே, அதுபற்றிய விவரங்களைச் சொல்ல முடியுமா ?

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து ; தலைவர் அவர்களே, அதுபற்றிய தகவல் இல்லை.

**திரு. ந. வேணுகோபால் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தின் மூலம் கண்டு பிடிக்கப்பட்ட இந்தப் புதிய விதைகள், தமிழகத்திலே உள்ள அனைத்து விவசாய மக்களுக்கும் எவ்வளவு காலத்திற்குள் அறிமுகப்படுத்தப்படுகிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து :** தலைவர் அவர்களே, ஒரு ரகத்தைக் கண்டுபிடித்து வெளியிடுவது என்றாலேகூட அதற்கு உரிய அளவுக்குப் போதிய விதைகளை நாம் வழங்க முடியும் என்ற நிலைமைகள் இருந்தால்தான் அந்த ரகத்தை வெளியிட வேண்டும் என்பது விதி. ஆகவே, எந்த அளவுக்குத் தேவையோ, அந்த அளவுக்கு விதைகள் வழங்கப்படுகிற அளவுக்கு விதைகளை உருவாக்கிக் கொண்ட பிறகுதான் விதைகள் வழங்கப்படுகின்றன.

**திரு. ஏ. சுப்பிரமணியன் :** பேரவைத் தலைவர் அவர்களே, பல புதிய ரக நெல் கண்டு பிடிக்கப்பட்ட நேரத்தில், தொடர்ந்து பல ஆண்டுகளாக வறட்சியாக இருக்கிற இராமநாதபுரம் போன்ற மாவட்டங்களில் புஞ்சைப் பயிர்கள் போடக்கூடிய, வறட்சியைத் தாங்கக்கூடிய, நெல் ரக விதை ஏதாவது கண்டு பிடிக்க முயற்சி செய்யப்படுகிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து :** தலைவர் அவர்களே, முகவை மாவட்டத்திலே முதுகளத்தூர் போன்ற பகுதிகளில் முழுநெல் என்ற ஒரு நெல் சாகுபடியாகிறது. வறட்சியைத் தாங்கக் கூடிய வகையான நெல் ரகத்தைப் பற்றிய ஆராய்ச்சி நடை பெற்று வருகிறது. தனியாகக் கேள்வி போட்டால், அதுபற்றிய விவரங்களைத் தெரிவிக்க இயலும்.

**திரு. எஸ். இளையபெருமாள் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வெள்ளைப் பொன்னி என்ற நெல் அதிகமான உற்பத்திக்கு, விவசாயத்திற்கு உகந்ததாக இருக்கும். சென்ற வருஷத்தில்கூட அமைச்சர் அவர்கள் சொன்னபோது, அது பற்றிய குறிப்பில்லை என்று கூடச் சொன்னார்கள். நான் ஏன் சொல்கிறேன் என்றால், விவசாயிகள் விரும்பிப் பயிர் செய்கிறார்கள். அதிகமான மகசூல் வருகிறது. அப்படிப்பட்ட விதையை, இந்தப் பல்கலைக் கழகத்தின் மூலம், ஆராய்ச்சித் துறைக்கு அனுப்பி, அவைகள் விவசாயிகளுக்கு சௌகரியமாகக் கிடைக்க ஒரு நிலைமையை உருவாக்க அரசு முன்வருமா என அறியவிரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து :** தலைவர் அவர்களே, வெள்ளைப் பொன்னியைப் பொறுத்த அளவிலே உற்பத்திக் கால அளவு அதிகம் என்று ஒரு குறையைச் சொல்லியிருக்கிறார்கள். நம்முடைய வேளாண்மைப் பல்கலைக் கழகத்தைப் பொறுத்த வரை சான்றிதழ் பெற்றதாக இருக்க வேண்டும். வழங்குவதற்குப் போதுமான அளவுக்கு விதைகள் இருக்கவேண்டுமென்ற கருத்துக்களுடைய அடிப்படையிலேதான் நாம் அதை வெளியிட முடியும். ஆகவே, அவைகளுக்கு உட்பட்டு வெள்ளைப் பொன்னி ரகம் [illegible] காரணத்தாலேதான் நாம் அறிவிக்க இயலவில்லை [illegible]



**திரு. எஸ். இராசாராமன் :** பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தினுடைய நெற்களஞ்சியமான தஞ்சை மாவட்டத்தில் குறுகிய கால நெற்பயிர் விவசாயப் பண்ணையில் கிடைக்கவில்லை என்பது அரசுக்குத் தெரியுமா? அதற்கான நடவடிக்கையை அமைச்சரவர்கள் எடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து :** தலைவர் அவர்களே, அப்படிப் புகார் எதுவும் வரவில்லை.

### கூவம் ஆற்றின் கரை ஓரமாக உள்ள குடிசைப் பகுதிகளை அப்புறப் படுத்தும் திட்டம்.

*வினா எண். 448—**திரு. இரா. தாமரைக்கனி :** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கூவம் ஆற்றில் சாக்கடை கலப்பதை தடுக்க கூவம் ஆற்றின் இரு பக்கமும் உள்ள குடிசைப் பகுதிகளை அப்புறப்படுத்தும் செயற்குறிப்பு அரசு பரிசீலனையில் உள்ளதா?

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :** கூவம் நதிக்கரை ஓரமாக உள்ள குடிசைப் பகுதிகளை வசிப்பதற்கு தகாத பகுதிகள் எனக் கருதி அந்தப் பகுதிகளில் வாழும் மக்களை இடம் பெயர்த்து மாற்றுத் திட்டங்களில் குடியமர்த்த, செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது.

**திரு. இரா. தாமரைக்கனி :** பேரவைத் தலைவர் அவர்களே, கூவம் ஆற்றில் சாக்கடை நீர் கலப்பது இந்த குடிசைகளால் மட்டும் கிடையாது. மத்திய சிறைச்சாலை, ஜெனரல் ஆஸ்பத்திரி போன்றவற்றிலிருந்து வெளிவருகின்ற கழிவு நீரும் இந்த கூவம் ஆற்றில்தான் கலக்கிறது. ஆதலால், இந்த கழிவு நீரை வேறு மார்க்கமாக கடலில் கலப்பதற்கு அரசிடம் ஏதேனும் திட்ட முள்ளதா? அல்லது இந்த மத்திய சிறைச்சாலை, ஜெனரல் ஆஸ்பத்திரி ஆகியவற்றை வேறு இடத்திற்கு மாற்றுவதற்கு ஏற்பாடு செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கூவம் இம்ப்ரூவ்மென்ட் ஸ்கீம் என்று ஒரு திட்டத்தைப் போட்டு, அதற்காக தனியாக வேலைகள் நடை பெற்று வருகின்றன. எனவே, கூவம் ஆற்று நாற்றத்தைக் குறைக்க அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன என்று கேட்டால், அந்தக் கேள்விக்கு பதில் வரும்போது, இதற்கான பதிலும் வரும். இந்தக் கேள்வி குடிசைகளைப் பொறுத்தது. இந்தக் குடிசை களில் வசிப்பவர்களுக்கு மாற்று இடம் கொடுப்பதற்கான ஏற்பாடுகள் ஆய்வில் உள்ளன.

[1983 மார்ச் 17

திரு. இரா. தாமரைக்கனி : பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் குடிசைகளிலிருந்து வரும் சாக்கடை நீர் கூவம் ஆற்றில் கலக்கிறது, அதை மட்டும்தான் அப்புறப்படுத்த வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்லிவிட்டார்கள். அது மட்டுமல்லாமல், முந்திய ஆட்சிகாலத்தில், இந்த கூவம் ஆற்று சாக்கடை நாற்றத்தைப் போக்க ஒரு சீரமைப்புத் திட்டம் இருந்தது. அந்தத் திட்டம் என்னவாயிற்று? அதனால், அரசுக்கு ஏற்பட்ட நஷ்டம் என்ன என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முன்பிருந்த அரசால் 'கூவம் மணக்கிறது' என்று ஒரு புத்தகம் வெளியிடப்பட்டது. தனியாக இந்த அரசு கூவத்தின் நாற்றத்தைப் போக்க நடவடிக்கைகள் எடுத்துக்கொண்டு வருகிறது. ஏற்கனவே எடுத்த நடவடிக்கைகளின் விளைவு என்ன என்று கேள்விகேட்டால், விரிவான பதில் சொல்லலாம். இப்போது குடிசைகளில் வாழ்வோரின் கழிவு நீரால் ஏற்படும் நாற்றத்தைப் பொறுத்தது இந்தக் கேள்வி. இதற்காக, அங்கிருந்து அவர்களை வெளியேற்றி, மாற்று இடங்களுக்கு அனுப்புவதற்கான ஏற்பாடு நடைபெறுகிறது.

திரு. மி. வின்சென்ட் : பேரவைத் தலைவர் அவர்களே, கூவம் ஆற்று நாற்றத்தை அப்புறப்படுத்துவதற்காக, அரசிடம் ஏதாவது தனித் திட்டம் உள்ளதா? கூவம் சீரமைப்புப் பணி நடந்ததே. அந்த சீரமைப்புப் பணியால், கொசுக்கள் அதிகமாக வளர்ந்ததா அல்லது நாற்றம் அதிகம் வளர்ந்ததா?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது ஆராய்ச்சிக்குரிய கேள்வி.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதற்காகத் தான் நான் தனிக் கேள்வி போடுங்கள் என்று சொன்னேன். இந்த அரசு வந்தபிறகு, பல்வேறு திட்டங்களை நிறைவேற்றிக் கொண்டு வருகிறோம். கூவம் இம்ப்ரூவ்மென்ட் ஸ்கீம் என்று சொல்லி, அதற்காக மாதம் ஒருமுறை அதிகாரிகள் கூட்டத்தை என் தலைமையில் கூட்டி, நடவடிக்கைகள் எடுக்கிறோம். தனிக் கேள்வி போட்டால், விரிவான பதில் தருகிறேன்.

திரு. சு. பாலன் : மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூவம் ஆற்றில் சாக்கடை நீர் கலப்பதற்கு, சுற்றியுள்ள குடிசைகள்தான் காரணம் என்றும், அவைகள் அகற்றப்படுவதாகவும் சொன்னார்கள். அகற்ற முடியாத அளவுக்கு பல குடிசைகள் அங்கே இருக்கின்றன. அவற்றிலிருந்து வரக்கூடிய கழிவு நீருக்கு சாக்கடை வசதியில்லாமல் இருக்கின்றது. ஆகவே, நிரந்தரமான குடிசைப் பகுதிகளிலே இருந்து வரக்கூடிய கழிவு நீரை அகற்றுவதற்கு வழிவகை செய்வதற்கு, அங்கே சாக்கடை வசதி செய்து கொடுக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.



1983 மார்ச் 17]

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குடிசைகளிலிருந்து வெளிவரும் கழிவு நீரால் கூவம் நாறுகிறது என்று சொல்லவில்லை. நாறுவதற்கு அதுவும் ஒரு காரணம். தகாத பகுதிகள் என்று இயர் மார்க் செய்யப் பட்டிருக்கின்றது. அந்தந்த பகுதிகளிலே உள்ள குடிசைகளை அகற்றவேண்டும்; அவர்களுக்கு மாற்று இடம் கொடுப்பதற்கான ஏற்பாடுகள் செய்து கொண்டிருக்கிறோம். ஆனால், அவர்கள் அங்கேயே இருக்க வேண்டும். அதற்கு மிக அண்மையிலேயே இருக்கவேண்டும் என்று கருதுகிறார்கள். அதற்குப் போதிய இடமில்லை. எனவே, அவர்களை எங்கே குடியமர்த்துவது என்பது அரசின் ஆய்விலே உள்ளது.

திரு. ரா. கிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கூவம் ஆற்றுக் கரையிலே இருக்கக்கூடிய குடிசைவாழ் மக்களினால் மட்டும் அந்த கூவம் நாறவில்லை என்று அமைச்சர் அவர்கள் சொல்லிவிட்டார்கள். நல்லது. ஆனால், இப்படி அங்கே குடிசைகளிலே வாழக்கூடிய மக்கள், அந்தந்தப் பகுதிகளிலேயே இருந்தால்தான், சின்ன சின்ன வேலைகளை அதாவது மூட்டை தூக்குவது போன்ற வேலைகள் செய்வதால், அங்கேயே இருக்கவேண்டிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது. ஆகவே, வெகு தூரத்தில் கொண்டுபோய் அவர்களை குடியேறச் செய்தால், அதுவும் மாநகரம் போன்ற இடங்களில் அப்படிச் செய்தால், அவர்களுக்கு கஷ்டம் ஏற்படும். ஆகவே, கூடுமான அளவில் அவர்களை சமீபத்திலேயே குடியமர்த்த இந்த அரசு என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அருகில் குடியமர்த்த வேண்டுமென்று சொல்லுகிறார்கள்; அப்படிச் சொல்வது சுலபம். தூரத்தில் கொண்டு போகாதீர்கள். அண்மையில் குடியமர்த்துங்கள் என்று சொல்வது, கேட்பதற்கு நன்றாக இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்களை நான் கேட்டுக் கொள்கிறேன்—ஒரு [illegible]ர்வே செய்து, அதற்காக 2,3 வாரங்கள் தங்கி, எந்தெந்த குடிசைப் பகுதிகளை மாற்ற வேண்டும்;

(முற்பகல் 9-30)

எங்கெங்கு இடம் இருக்கிறது என்று சொல்லி உதவி செய்தால் [illegible] எண்ணத்தை நிறைவேற்றத் தயார். [illegible] ரயில் நாங்கள் பார்த்து விட்டோம். [illegible] ாதீர்கள், தூரத்தில் கொண்டு போகா[illegible] ால் மட்டும் பிரச்னை தீர்ந்து விடுவ[illegible] ல்ல வேண்டும். நாகூரான் தோட்டத்திலே [illegible] இடம் இருக்கிறது; இங்கே இருப்பவர் [illegible] இருக்கிறது என்றெல்லாம் இடத்தைக் காட்டினால் நாங்கள் பரிசீலித்து குடியேற்றுகிறோம். ஆனால் எங்களைப் பொறுத்தவரைக்கும் இடம் இல்லை.

திரு. ரா. கிருஷ்ணன் : நாங்கள் ஆலோசனை சொல்ல வேண்டுமென்றால் அமைச்சர் எதற்காக, அரசாங்கம் எதற்காக? நாங்கள் ஒரு ஆலோசனை சொல்கிறோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்வி நேரத்திலே ஆலோசனை சொல்லக் கூடாது. மறு ஆலோசனை சொல்லும்படி அமைச்சரவர்கள் உறுப்பினர்களைக் கேட்டார். கேள்வி பதிலாக முடிந்துவிட்டது. கேள்விக்குக் நாங்கள் பார்க்கிற இடத்திலே பார்த்து விட்டோம். அமைச்சர் சொல்வது, அபிப்பிராயத்தைச் சொல்லலாம் என்று சொல்கிறார். நீங்களும் இடம் காலியிருந்து சொல்லி உதவினால் செய்யலாம் என்று சொல்கிறாரே தவிர, வேறொன்றுமில்லை.

பெரம்பலூர் பேரூராட்சிப் பகுதிக்கு குடிநீர் வழங்கும் திட்டம்.

*வினா எண். 449—திரு. என். பெருமாள் : மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

பெரம்பலூர் தொகுதியைச் சேர்ந்த பெரம்பலூர் பேரூராட்சிக்கு குடிதண்ணீர் கொண்டு வரும் திட்டம் எந்த நிலையில் உள்ளது?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : இதற்கான திட்டம் ஒன்று தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் தயாரிக்கப்பட்டு வருகிறது.

திரு. என். பெருமாள் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெரம்பலூர் பேரூராட்சிக்குக் குடிதண்ணீர் கொண்டு வரும் திட்டம் தயாரிக்கப்பட்டு வருவதாகச் சொன்னார்கள். அதன் மதிப்பீடு எவ்வளவு? எப்பொழுது அது ஆரம்பிக்கப்படும்?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, அதைததான் நான் சொன்னேன். இதற்கான திட்டம் ஒன்று தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் தயாரிக்கப்பட்டு வருகிறது.

திரு. த. ஆறுமுகம் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, பெரம்பலூர் பேரூராட்சி மிகவும் வளர்ந்து வந்திருக்கிறது. தன்னிறைவுத் திட்டம் நிறைவேற்றப்பட்டிருக்கிறது. குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலம் திட்டம் [illegible] சொன்னார்கள். எப்பொழுது அந்தத் திட்டம் எடு[illegible] படும்? இந்த ஆண்டு எடுத்துக் கொள்ளப்படு[illegible] அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : மாண்[illegible] தலைவரவர்களே. அங்கே ஃபைனான்ஷியல் [illegible] திட்டத்தை நிறைவேற்றினால் அந்தத் திட்டத்திற்காகும் செலவைத் திருப்பிக் கொடுக்கக்கூடிய பொருளாதார வசதி ஈட்டுவதே முறை[illegible] [illegible]பிட்டார்கள். தயாரி[illegible]





இல்லை என்று சொல்லப்பட்டது. ஆனாலும் அப்படியே அதை விட்டு விடக்கூடாது என்று கருதி, மறுபரிசீலனை செய்யும்படி, வருமானத்தை அதிகமாக ஆக்கி, அதன் மூலமாகத் திட்டச் செலவைத் திருப்பிக் கட்டுகின்ற அளவிற்கு மறுபரிசீலனை செய்யும்படி தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் கேட்டுக் கொள்ளப்பட்டது. நிதி பற்றிய விஷயங்கள் யாவும் நன்கு பரிசீலிக்கப்பட்ட பின்னர் மேல் நடவடிக்கை தொடரப்படும்.

திரு. வெ. அரங்கராசன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, பெரம்பலூர் நகர குடிதண்ணீர் திட்டத்தைத் துறையூர் நகரக் குடிதண்ணீர் திட்டத்தோடு இணைத்து. பெரம்பலூர் நகரத்திற்குக் குடிதண்ணீர் கொடுக்கும் திட்டத்தைச் செயல்படுத்துவது குறித்து ஆய்வில் உள்ளது என்று அதிகாரிகள் கூறுகிறார்கள். அப்படி துறையூர் நகரக் குடிதண்ணீர்த் திட்டத்தோடு பெரம்பலூர் நகரத்திற்குக் குடிதண்ணீர் கொடுக்கும் திட்டத்தைச் செயல்படுத்துவதற்கான ஆய்வு உள்ளதா? அப்பகுதி மக்கள் என்னிடத்தில் கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். எனவே, அமைச்சரவர்கள் அதற்குத் தக்க நடவடிக்கை எடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, துறையூர், தாத்தையங்கார்பேட்டை, மேட்டுப்பாளையம் ஆகிய ஊர்களுக்கு காவேரியாற்றிலிருந்து குடிநீர் கொண்டு வருவதற்கு ஓர் திட்டம் பரிசீலனையில் உள்ளது. இந்தத் திட்டத்தில் குறும்பலூர், பெரம்பலூர் பேரூராட்சிகளைச் சேர்த்துக் கொள்வது பற்றிப் பரிசீலிக்கப்படும்.

பாலசமுத்திரம் குடிநீர் திட்டம்

*வினா எண். 450—திரு. என். பழனிவேல் : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பழனி வட்டம் பாலசமுத்திரம் குடிநீர் திட்டத்திற்கு ஆயுள் காப்பீட்டுக் கழகத்திடமிருந்து பெற்ற கடன் தொகை எவ்வளவு?

(ஆ) அதற்கு வட்டி எவ்வளவு?

(இ) இதுவரை எவ்வளவு திருப்பி கட்டப்பட்டுள்ளது?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : (அ) 1976-77ம் ஆண்டில் இக்குடிநீர்த் திட்டத்திற்காக ரூ. 6.16 இலட்சங்கள் ஆயுள் காப்பீட்டுக் கழகத்திடமிருந்து கடனாக பெறப்பட்[illegible]

[1983 மார்ச் 17

(ஆ) மேற்படி கடனுக்கு வட்டி விகிதம் ஆண்டொன்றிற்கு 7 % இதுவரை ரூபாய் 2,87,516.98 வட்டித் தொகையாகக் கணக்கிடப்பட்டுள்ளது.

(இ) இப்பேரூராட்சி இதுவரை ரூபாய் 1,74,676.08 ஆயுள் காப்பீட்டுக் கழக வட்டித் தொகைக்காக அரசு கணக்கில் செலுத்தியுள்ளது. முதலீட்டுத் தொகையில் செலுத்தப்பட வேண்டிய தொகை ஏதும் செலுத்தப்படவில்லை. முதலீட்டுத் தொகைக்காக ரூபாய் 84,0 0-மும் வட்டித் தொகைக்காக ரூ.1,12,840.98-ம் பேரூராட்சி திருப்பி செலுத்த வேண்டியுள்ளது.

திரு. என். பழனிவேல் : பாலசமுத்திரம் குடிநீர்த் திட்டத்திற்கு ஆயுள் காப்பீட்டுக் கழகத்திடமிருந்து வாங்கப்பட்ட தொகைக்கு வட்டி இவ்வளவு அதிகமாக இருக்கிறதே. இந்தத் வட்டி முழுவதையும் அந்த பேரூராட்சியின் குறைந்த வருமானத்தை வைத்துக்கொண்டு செலுத்த முடியுமா? அவர்கள் அசலை கட்டுவது என்பது முடியாத காரியம். ஆகவே இந்த வட்டியை நமது தமிழக அரசு மூலம் கட்டுவதற்கு ஏதாவது ஏற்பாடு செய்யப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக அரசினுடைய நிதி நிலை இப்பேற்பட்ட வட்டிகளை எல்லாம் கொடுப்பதற்கான நிலையில இருக்காது. இந்த நிலையிலே வட்டிகளை எல்லாம் தமிழக அரசு கொடுத்துக்கொண்டு போனால் குடிநீர் கொடுக்கக் கூடிய ஒரு திட்டமும் நிறைவேறும் நிலை வராமல் போய் விடும் என்று அஞ்சுகிறேன்.

குடிநீர் வடிகால் வாரியத்தால் தீட்டப்பட்ட 10 ஆண்டுத் திட்டம்

*வினா எண். 451—திரு. இல. பலராமன் : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குடிநீர் வடிகால் வாரியம் 1350 கோடி ரூபாய் மதிப்பீட்டில் பத்தாண்டு திட்டம் தீட்டி மத்திய அரசுக்கு அனுப்பியது உண்மையா?

(ஆ) ஆம் எனில் அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : (அ) ஆம்.

(ஆ) 1991-ஆம் ஆண்டு மார்ச் இறுதிக்குள் தமிழ்நாட்டில் உள்ள எல்லா மக்களுக்கும் குடிநீர் வசதி அளிப்பதற்கும், 80 விழுக்காடு நகர்புற மற்றும் 25 விழுக்காடு கிராமப்புற மக்களுக்கு சுகாதார வசதி அளிப்பதற்கும் தேவையான நிதி அளவை துரிதமாக கணக்கிடுமாறு இந்திய அரசு தமிழ்நாடு அரசைக்



983 மார்ச் 17]

கேட்டுக் கொண்டது. ஒரு தோராயமாக உடனடி மதிப்பீட்டின்படி மேற்கூறிய திட்டத்திற்கு (சென்னைப் பெருநகர்ப் பகுதி நீங்கலாக) ரூ. 1,350 கோடி ஆகும் என்று இந்திய அரசுக்குத் தெரிவிக்கப்பட்டது. ஆனால் விரிவான ஆய்வும் மற்றும் திட்ட அமைப்புகள் மேற்கொள்ளப்பட்டு மேற்கூறிய திட்டத்திற்குத் தேவையான தொகை ரூ. 946 கோடி என மதிப்பீடு செய்யப்பட்டு மத்திய அரசின் பொது சுகாதாரம் மற்றும் சுற்றுப்புற சுகாதாரப் பொறியியல் அமைப்புக்கு (Central Public Health Environmental Engineering Organisation) அனுப்பப்பட்டுள்ளது.

திரு. என். எஸ். வி. சித்தன்: பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய அரசிற்கு என்றைக்கு எழுதப்பட்டது. அதற்கு பின்னாலே ஏதாவது பதில் வந்திருக்கிறதா? துரிதமாக நடவடிக்கை எடுக்க இந்த அரசாங்கம் வேறு ஏதாவது முயற்சி எடுத்து இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதைப் பற்றிய விவரம் என்னிடத்திலே இல்லை.

திரு. கோவைத்தம்பி : பேரவைத் தலைவர் அவர்களே, மற்ற திட்டங்கள் தமிழ்நாட்டிலிருந்து அனுப்புவது போல, மைய அரசு இந்தத் திட்டம் வேண்டாம் என்று சொல்லிவிட்டால் தமிழக அரசு ஏதாவது நடவடிக்கை எடுக்க முன்வருமா?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : பேரவைத் தலைவர் அவர்களே, இது வாட்டர் டீகேட் என்று ஐக்கிய நாட்டு சபையில் முடிவு எடுப்பதற்கேற்ப 1981–90க்குள்ளாக எல்லா இடத்திற்கும் தண்ணீர் கொடுத்துவிட வேண்டும் என்பதும், 80 விழுக்காடு நகர்ப்புற மக்களுக்கும், 25 விழுக்காடு கிராமப்புற மக்களுக்கும் சுகாதார வசதி அளிப்பதற்கும், தீட்டப்படுகிற திட்டம் டீகேட் செய்துவிட வேண்டும் என்ற இந்திய அரசினுடைய கொள்கையை தமிழக அரசும் பின்பற்றி திட்டத்தை நிறைவேற்றுவதற்கு முயற்சி எடுக்கும்.

திரு. இரா. சா. முனிரத்தினம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலே மற்ற திட்டங்களுக்கு ஒதுக்குவது போல, குடிநீர் பிரச்சனைக்கு அத்தியாவசியம் கொடுத்து இன்னும் இரண்டு ஆண்டு காலங்களில் அத்தனை கிராமங்களுக்கும் குடிதண்ணீர் வழங்குவதற்கு அரசு உடனடியாக தேவையான பணத்தை ஒதுக்குமா எனபதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிராமப்புற குடிநீர்த் திட்டத்தை 1985-க்குள்ளாக நிறைவேற்றிவிட வேண்டும் என்றும், அதற்காக ரூபாய் 170 கோடி ஆகும் என்றும் கணக்கிடப்பட்டிருக்கிறது. நிதிநிலை அறிக்கையில் சொன்னதைப் [illegible]

செலவாகிவிட்டது. 1983-84க்கு ரூ. 60 கோடியாக சொல்லி இருக்கிறார்கள். மேலும் வறட்சி நிவாரணப் பணிக்காக ரூபாய் 10 கோடி கொடுக்கப்பட்டிருக்கிறது. 20 அம்சத் திட்டத்திலே 8-வது அம்சத்தை நிறைவேற்றுவதற்கு ரூ. 55 கோடி கொடுக்க வேண்டுமென்று மைய அரசைக் கேட்டுக் கொண்டிருக்கிறோம். இந்த நிதிகள் எல்லாம் ஒழுங்காக வருமானால் 1985 முடிவதற்குள் தமிழகத்தில் இன்னும் குடிதண்ணீர் கொடுக்க வேண்டிய 17,000-க்கு மேற்பட்ட எல்லா கிராமங்களுக்கும் நல்ல குடிதண்ணீர் கொடுக்கப்பட்டுவிடும்.

திரு. பெ. சு. திருவேங்கடம் : பேரவைத் தலைவர் அவர்களே, இந்த 1,350 கோடி ரூபாய் திட்டத்தை மைய அரசிற்கு அனுப்பி உள்ளதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள், இந்தத் திட்டத்தை மைய அரசாங்கம் ஒத்துக்கொண்டால் இந்தத் தொகையை மைய அரசு மாநில அரசுக்கு அளித்தால் கிராமப் புறங்களில் சுகாதார வசதிக்காக இந்த நிதி பயன்படும் என்றார். அவ்வாறானால் கிராமப்புறங்களில் எந்தெந்த விதமான சுகாதாரப் பணிகள் எடுத்துக்கொள்ள இந்தத் திட்டத்தில் அறிவிக்கப் பட்டுள்ளது என்பதை அறிவிப்பார்களா என்று அறிய விரும்பு கிறேன்.

(முற்பகல் 9—40)

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எற்கனவே 1,350 என்று சொல்லி, 946 கோடி ரூபாய்க்கு திட்டம் அனுப்பியிருக்கிறார்கள். அதை ஏற்றுக் கொண்டு இதற்கு யார் யார் எவ்வளவு தொகை கொடுப்பது என்று டீட்டெயில்ஸ் எல்லாம் ஓர்க் அவுட் செய்ததற்குப் பின்னால், 80 விழுக்காடு நகர்ப்புறங்களுக்கும், 25 விழுக்காடு கிராமப்புறங்களுக்கும் சுகாதார வசதிகள் செய்து கொடுக்கப்படும். எந்தெந்த கிராமங்கள் என்று தேர்ந்தெடுக்கப் படும். ஆனால் தண்ணீர் கொடுப்பதைப் பொறுத்தவரைக்கும் எல்லோருக்கும் கொடுத்துவிட வேண்டும் என்பது திட்டமாகும். இப்போது அதற்கான டீட்டெயில்ஸ் எல்லாம் இந்த திட்டம் ஏற்றுக்கொள்ளப்பட்ட பிறகு ஓர்க் அவுட் செய்யப்படும்.

திரு. சேலம் மு. ஆறுமுகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் அடிக்கடி பருவமழை பொய்த்து விடுவதன் காரணமாக ஏற்படக்கூடிய வறட்சி, தண்ணீர்த் தட்டுப் பாடு ஆகியவற்றை கருத்தில் கொண்டு மத்திய அரசுக்கு அனுப்பப் பட்ட 1,350 கோடி ரூபாய் உள்ள 10 ஆண்டு காலத்திட்டத்தை உடனடியாக, விரைவாக அனுமதி பெற்றுவருவதற்காக சம்பந்தப் பட்ட அமைச்சர் அவர்களும், அதிகாரிகளும் டெல்லி சென்று அங்குள்ள அமைச்சர்களையும், அதிகாரிகளையும் சந்தித்து அதை விரைவில் கொண்டுவர அமைச்சர் அவர்கள் டெல்லி செல்வாரா



மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது மிகப்பெரிய திட்டம். 10 ஆண்டுத் திட்டம். ஆனால் 1985 ஆம் ஆண்டுக்குள்ளாக, ஆறாவது ஐந்தாண்டுத் திட்டத்திற்குள்ளாக தண்ணீர் கொடுக்க வேண்டுமென்பதற்காக மத்திய அரசு இந்தத் தொகையை தர வேண்டும் என்று சொல்லி, நான் சென்ற முறை டெல்லி போயிருக்கும்போது சம்பந்தப்பட்ட அமைச்சர் அவர்களிடம் வலியுறுத்தி வந்திருக்கிறேன். இதுவரை 7½ கோடி வந்திருக்கிறது. மறுபடியும் தற்போது 1 கோடி கொடுத்திருக்கிறார்கள். ஆறாவது ஐந்தாண்டுத் திட்டத்திற்காக ஒதுக்கப்பட்ட தொகையே 25 கோடிதான். இது போதாது என்று சொல்லி, மேலும் பெறுவதற்காக முயற்சி எடுத்தோம். அந்த முயற்சியின் பலனாக இப்போது ஒரு கோடி ரூபாய் சாங்ஷன் ஆகியிருக்கிறது. மேலும் தொடர்ந்து முயற்சிகள் செய்வோம். Trial costs nothing. Of course we will continue to fight.

திரு. ரா. கிருஷ்ணன் : தலைவர் அவர்களே, மத்திய அரசாங்கத்திற்கு மாநில அரசு அனுப்பியிருக்கக்கூடிய அந்த ஆய்வு அறிக்கையில் 80 சதவீதம் நகர்ப்புறத்திற்கும், 25 சதவீதம் கிராமப்புறத்திற்கும் சுகாதார வசதி அளிப்பதற்காக அனுப்பப் பட்டதாக அமைச்சர் அவர்கள் இங்கே சொன்னார்கள். நான் சொல்ல விரும்புவது நம்முடைய நாட்டில் பரவலாக இருப்பது கிராமப்புறங்கள்தான். அப்படி இருக்கும்போது 25 சதவீதம் என்று சொல்வது மிகக் குறைவாக இருக்கிறதே. அதனுடைய நோக்கம் என்ன? மத்திய அரசாங்கத்தினுடைய அந்த அடிப்படை நோக்கம் என்ன என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : பேரவைத் தலைவர் அவர்களே, இது ஐக்கிய நாட்டு சபையிலே எடுக்கப்பட்ட முடிவினுடைய விளைவு. ஐக்கிய நாட்டுசபை தீர்மானித்திருக் கிறது. 1981-90, 10 ஆண்டுக் காலத்தில் எல்லா மக்களுக்கும் பாதுகாக்கப்பட்ட குடிநீர் தரவேண்டும் என்பதும், நகர்ப்புறத்தில் 80 சதவீதம் என்றும், கிராமப்புறத்திற்கும் 25 சதவீதம் என்றும் சுகாதார வசதி செய்து கொடுக்க வேண்டும் என்று இது முடிவு எடுத்துள்ளது. அந்த முடிவினுடைய விளைவுதான் இது.

திரு. வே. இரா. ஜெயராமன் : பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் டெல்லிக்குச் சென்று தமிழகத்தினுடைய நிதி தேவையை எடுத்துக்கூறி வலியுறுத்தி வந்துவிட்டதற்குப் பிறகும் மத்திய அரசினுடைய மெத்தனப் போக்கை மீண்டும் நினைவுறுத்தும் வகையில் மீண்டும் டெல்லிக்குப் பயணம் செல்ல இருக்கிறாரா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : பேரவைத் தலைவர் அவர்களே, இவைகளுக்கு எல்லாம் அடிக்கடி டெல்லிக்குச் சென்று கொண்டிருக்க வேண்டும் என்பதல்ல. கடிதம் மூலமாக எழுதுகிறோம். அப்படி கடிதங்களும் எழுதப்பட்டிருக்

அதனால் 1 கோடி ரூபாய் நமக்கு வந்திருக்கிறது. உடனே கடிதம் எழுதினால், அதற்கு மேல் பணம் கிடைக்காது இப்போது. அந்த வாங்கிவிட்ட பிறகு கடிதம் எழுதுவோம். தேவைப் பட்டால் பிறகு டெல்லிக்குப் போகிறேன்.

### திருத்துறைப்பூண்டி நகருக்கான குடிநீர் திட்டம்

*வினா எண் 452—திரு. பொ. உத்திராபதி : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருத்துறைப்பூண்டி நகர மக்களுக்கு மேட்டுப் பாளையத்திலிருந்து குடிநீர் கொண்டுவரும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில் அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : (அ) ஆம்

(ஆ) திட்டம் ஆய்வில் உள்ளது.

திரு. எம். ஆறுமுகம் : பேரவைத் தலைவர் அவர்களே, இதே அவையில் ஒரு முறை திருத்துறைபூண்டி நகர மக்களுக்கு மேட்டுப்பாளையத்திலிருந்து குடிநீர் கொண்டுவரும் திட்டம் சம்பந்தமாக ஒரு வருடத்திற்கு முன்பே அறிவித்தார்கள். ஆனால் இதுவரை அந்தத் திட்டம் நிறைவேற்றப்படவில்லை. நான் கேட்டுக்கொள்வதெல்லாம் மேட்டுப்பாளையத்திலிருந்து குடிநீர் திருத்துறைப்பூண்டி நகர மக்களுக்கு கொடுப்பது சம்பந்தமாக ஒரு ஓவர் டாங்க் கட்டுவதற்கே திருத்துறைப் பூண்டியிலே இடம் கிடைக்கவில்லை என்று சொன்னார்களே, எனவே இந்த திட்டம் நிறைவேற்றப்படுமா என்று உறுதியாக அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா என அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : மாண்புமிகு தலைவர் அவர்களே, இப்பேரூராட்சி தனது நிதிநிலையை பெருக்கி அதன் மூலம் திட்டத் தீர்மான செலவுககாகவும், வருடாந்திர பராமரிப்புச் செலவுக்காகவும் ஆகும் ஆண்டு ஈவுத் தொகையை செலுத்த இயலும் என 1981ஆம் ஆண்டு ஊரக வளர்ச்சி இயக்குநர் குறிப்பிட்டுள்ளார். முதலிலே ஊரக வளர்ச்சி இயக்குநர் முடியாது என்றார். பிறகு முடியும் என்று சொல்லியிருக்கிறார். எனவே, இயக்குநரின் பரிந்துரையின் பேரில் 1975ஆம் ஆண்டில் தயாரிக்கப் பட்ட திட்ட அறிக்கையை தற்போதைய விலை நிலவரத்தின் படி திருத்தி அமைக்கும்படிகளப்பணியாளர்கள் கேட்டுக்கொள்ளப் பட்டுள்ளார்கள். அது அண்மையில் வேதாரண்யம் கூட்டு குடிநீர் திட்டத்திலும் இது அடங்குகிறது. அதிலும் இதை சேர்த்திருக் கிறார்கள். தன்னிறைவுத் திட்டத்தின் இரண்டாவது கட்டத்தின் கீழ் வேதாரண்யம் ஒன்றியத்திற்கு குடிநீர் வழங்குவதற்காக ... ரூபாய் மதிப்பீட்டில் ஒரு கூட்டு குடிநீர்த் திட்...





அறிக்கை தற்சமயம் ஆய்வில் உள்ளது. மேற்கண்ட திட்டத்தில் திருத்துறைப்பூண்டி பேரூராட்சிக்கும் குடிநீர் வழங்க வழிவகை செய்யப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்கு தேவையான குடிநீரை பட்டுக்கோட்டை ராஜாமடம் பிரதான சாலையில் ஆழ்துளைக் கிணறுகள் அமைத்து அதிலிருந்து பெற உத்தேசிக்கப்பட்டுள்ளது. எனவே இத்திட்டத்தை செயல்படுத்த வேண்டுமென்பதிலே இந்த அரசு மிகுந்த அக்கரையாக இருக்கிறது. எவ்வளவு விரைவிலே முடியுமோ அவ்வளவு விரைவிலே செய்ய ஏற்பாடு செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. எம். எஸ். மாணிக்கம் : தலைவரவர்களே, திருத்துறைப் பூண்டி பேரூராட்சிக்கு குடிநீர் வழங்க வேதாரண்யம் கூட்டு குடி நீர் திட்டத்துடன் இணைத்து செயல்படுத்தப்படும் என்று அமைச்சரவர்கள் சொன்னார்கள். அந்தத் திட்டத்தை விரைவிலே செயல்படுத்தி, வேதாரண்யம், திருத்துறைப்பூண்டி, தலைஞாயிறு ஆகிய பேரூராட்சிகளுக்கு குடிநீர் வழங்க எந்த ஆண்டுக்குள் திட்டம் முடிக்கப்படும் என்பதை அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தலைவரவர்களே, எந்த ஆண்டுக்குள் முடியும் என்று இப்போது சொல்வது இயலாத காரியம். மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் உணர்வுகளுக்கு மதிப்பு கொடுத்து எவ்வளவு விரைவிலே முடிக்க முடியுமோ அவ்வளவு விரைவிலே முடிக்க முயற்சி எடுக்கப்படும்.

### சேலத்திலிருந்து நாமக்கல் வரை பயணிகள் இரயில் விட மத்திய அரசை வற்புறுத்தும் திட்டம்

*வினா எண். 360—டாக்டர் கே. பி. இராமலிங்கம் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சேலத்திலிருந்து இராசிபுரம் வழியாக நாமக்கல் வரை (Passengers Trian) விடுமாறு மத்திய அரசை தமிழக அரசு வற்புறுத்துமா?

மாண்புமிகு திரு. க. முத்துசாமி : சட்டமன்ற உறுப்பினரது கோரிக்கையை பரிசீலித்து தேவை என்றால் மேற்கொண்டு நடவடிக்கை எடுக்கப்படும்.

டாக்டர் கே. பி. இராமலிங்கம் : தலைவரவர்களே, என்னுடைய கேள்வி சற்று பிழையாக அச்சிடப்பட்டிருக்கிறது. சேலத்திலிருந்து இராசிபுரம் வழியாக நாமக்கல் வரை என்று அச்சிடப்பட்டிருக் கிறது. சேலத்திலிருந்து இராசிபுரம், நாமக்கல் வழியாக திண்டுக்கல் வரை பாசஞ்சர்ட் ரயில் விட தமிழக அரசு மத்திய அரசை வற்புறுத்துமா என்பது என்னுடைய கேள்வி. சேலம், வடாற்காடு, கோவை போன்ற வட மாவட்டங்களை தென் மாவட்டங்களுடன் மீட்டர்கேஜ், பிராட்கேஜ் இரயில் பா...

மூலம், இணைக்க வழி இருக்கிறதா? இந்த இரயில் பாதையை விரைவில் அமைத்தால், சேலம், இராசிபுரம், நாமக்கல் போன்ற பகுதிகள் தென் பகுதிகளான கரூர், திண்டுக்கல் பகுதிகளுடன் இணைக்கப்படும் வாய்ப்பு இருக்கிறது. ஆகவே இந்த திட்டத்திற்கு முன்னுரிமை கொடுக்க மத்திய அரசை நமது அரசு வற்புறுத்துமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவரவர்களே, ஏற்கெனவே பல திட்டங்களுக்கு நாம் மத்திய அரசுக்கு எழுதியிருந்தும் இன்னும் பதில் வரவில்லை. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வதைப்போல இந்தத் திட்டத்தையும் ஆராய்ந்து பார்த்து தேவை இருக்குமானால் மத்திய அரசுக்கு மாநில அரசு நிச்சயமாக பரிந்துரை செய்யும்.

டாக்டர் கே. பி. இராமலிங்கம் : தலைவரவர்களே, இதை வேகமாக பரிசீலனை செய்து இந்த ஆண்டு மத்திய அரசுக்கு கடிதம் எழுதப்படுமா? இந்த ஆண்டே இத்திட்டத்தை எடுத்துக் கொள்ளச் சொல்லி மத்திய அரசை நமது அரசு வற்புறுத்துமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவரவர்களே, மிக வேகமாக பரிசீலனை செய்து 6 மாதங்களுக்குள்ளே அதனுடைய நிலைமையை மத்திய அரசுக்கு நாம் எழுதிவிடலாம்.

திரு. கோவைத்தம்பி : தலைவரவர்களே, இந்தக் கேள்வியை ஒட்டி ஒரு முக்கியமான செய்தியை மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களிடமிருந்து தெரிந்து கொள்ள விரும்புகிறேன். மேட்டுப்பாளையத்திலிருந்து சத்தியமங்கலம் வழியாக சாம்ராஜ் நகருக்கு ஒரு இரயில்பாதை....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மூலக்கேள்விக்கும் இதற்கும் தொடர்பு இல்லை.

திரு. சேலம். மு. ஆறுமுகம் : தலைவரவர்களே, சேலத்தைச் திரு. எஸ். வி இராமசாமி என்பவர் மத்திய அரசில் உதவி இரயில்வே அமைச்சராக இருந்தபோது சேலத்திலிருந்து மதுரை வரையில் இரயில்பாதை போடுவதற்கு ஏற்பாடு செய்து வந்தார் என்பது மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கும் தெரியும். அந்தத் திட்டம் இன்னும் செயலில் இருக்கிறதா? இல்லை என்றால் அந்தத் திட்டத்திற்கு மறுபடியும் உயிரூட்டி அதை செயல்படுத்த தமிழக அரசு மத்திய அரசை வற்புறுத்துமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: தலைவரவர்களே, தங்களுக்கும் இது தெரியும் என்று சொல்லியிருக்கிறார்கள். எனவே தலைவரிடமும் கேட்டுத் தெரிந்துகொண்டு, அந்தத் திட்டம் தேவையாக இருந்தால் அதையும் சேர்த்து நிறைவேற்ற நடவடிக்கை எடுக்க அரசு தயாராக இருக்கிறது.



திருச்சியிலுள்ள திருவள்ளுவர் போக்குவரத்து பேருந்து நிலையம்.

*வினா எண் 361—திரு. எஸ். இராசாராமன் : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருச்சி திருவள்ளுவர் போக்குவரத்து பேருந்து நிலையத்தில் பேருந்துகள் நிற்பதற்கு போதிய இடவசதி இல்லாமல் இருப்பது அரசுக்கு தெரியுமா?

(ஆ) ஆம் எனில் அதை விரிவுபடுத்த அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : (அ) ஆம்.

(ஆ) இப்பேருந்து நிலையத்தை விரிவுபடுத்தும் பணி நடந்து கொண்டிருக்கிறது.

(முற்பகல் 9—50)

திரு. எஸ். இராசாராமன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அங்கே பேருந்து நிலையத்தை விரிவுபடுத்தும் பணி நடந்து வருகின்றது என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அங்கே பயணிகள் தங்குவற்கு தேவையான குடிதண்ணீர் வசதி, தங்கும் வசதி, கழிப்பறை போன்றவற்றை ஏற்படுத்தித் தருவதற்கு அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அப்படிப்பட்ட வசதிகளோடு கூடித்தான் இப்போது காரியங்கள் நடைபெற்று வருகின்றன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. எஸ். இராசாராமன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருச்சி மாவட்டம் தமிழகத்தின் மத்தியிலே இருப்பதால் போக்குவரத்து கழகத்தினுடைய மத்திய அலுவலகத்தை திருச்சிக்கு மாற்ற அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, மூலக்கேள்விக்கும் இதற்கும் சம்பந்தம் இல்லாமல் இருக்கின்றது. எனவே தனிக் கேள்வி போட்டால் விளக்கமாக பதிலளிக்க முடியும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. கே. எம். எஸ். சுப்பிரமணியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருச்சி மாநகரம் தமிழகத்தின் மையபிரதேசத்தில் அமைந்து இருப்பதால் மதுரை மாவட்டம், கோயம்புத்தூர் மாவட்டம், தஞ்சை மாவட்டம் போன்ற இடங்களில்

கூடிய ஏராளமான பேருந்துகள் அங்கே நிற்க முடியாமல் திணறுகின்றன. விடியற்காலை 4 மணிக்குப் பார்த்தால் அந்த பஸ்களிலே ஏற வந்த மக்கள் ஏறமுடியாமல் அவதிப்படுகின்ற நிலைமை இருப்பதால் அந்த பேருந்து நிலையத்தை வேறு இடத்திற்கு மாற்ற அரசு பரிசீலனை செய்யுமா?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 170 முறைகள் அங்கே பேருந்துகள் வந்து செல்கின்றன. 29 பேருந்துகள் அங்கே இருந்து புறப்படுகின்றன. இவற்றை எல்லாம் கணக்கிலே கொண்டு அந்தப் பேருந்து நிலையத்திற்குப் பக்கத்திலே இருக்கின்ற இடங்களை எடுத்து விரிவாக்கிக் கொண்டு இருக்கிறோம். இது போதவில்லை என்ற நிலைமை வந்தால் அதற்குப் பிறகு மாற்று இடத்தைக் காண்பதற்கு யோசிப்போம்.

திரு. ப. செ. சென்னிமலை என்கிற கந்தசாமி: தலைவரவர்களே, திருச்சியிலே இருந்து எல்லா ஊர்களுக்கும் பஸ் இருக்கிறது. அதைக் கருத்தில் கொள்வதோடு அந்த இடம் குறுகிய இடமாக இருப்பதாலும் மேலும் பக்கத்திலே இடம் இல்லாமல் இருப்பதாலும் அங்கே இருந்து அந்த பேருந்து நிலையத்தினை வேறு இடத்திற்கு மாற்றுவதற்கு . . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வேறு பகுதிக்கு மாற்றுவது பற்றி பின்னால் யோசிப்போம். அந்தக் கேள்வி ஏற்கெனவே கேட்கப்பட்டுவிட்டது.

அரசு போக்குவரத்துக் கழக ஓட்டுநர்களுக்கான பயிற்சிப் பள்ளிகள்.

*வினா எண் 453.—திரு செ. செம்மலை: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரசு போக்குவரத்துக் கழக ஓட்டுநர்களுக்கென்று எத்தனை பயிற்சிப் பள்ளிகள் இருக்கின்றன?

(ஆ) அவைகள் எங்கெங்கு செயல்படுகின்றன?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: (அ) அரசு போக்குவரத்துக் கழக ஓட்டுநர்களுக்கென பதினொன்று பயிற்சிப் பள்ளிகள் இருக்கின்றன.

(ஆ) அவைகள் பின்வரும் இடங்களில் செயல்படுகின்றன:—

| போக்குவரத்துக் கழகம். (1) | பயிற்சிப் பள்ளி உள்ள இடம் (2) |
| --- | --- |
| (1) பல்லவன் போக்குவரத்துக் கழகம் (பெருநகர்) | — குரோம்பேட்டை |
| (2) திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகம் | — மதுரை |

[illegible]



| போக்குவரத்து கழகம். (1) | பயிற்சி பள்ளி உள்ள இடம். (2) |
| --- | --- |
| (3) பாண்டியன் சாலைப் போக்குவரத்துக் கழகம் | — மதுரை, காரைக்குடி |
| (4) சேரன் போக்குவரத்துக் கழகம் | — பொள்ளாச்சி |
| (5) சோழன் சாலைப் போக்குவரத்துக் கழகம் | — கும்பகோணம் |
| (6) கட்டபொம்மன் போக்குவரத்துக் கழகம் | திருநெல்வேலி — நாகர்கோவில் |
| (7) அண்ணா போக்குவரத்துக் கழகம் | — சேலம், தருமபுரி |
| (8) தந்தை பெரியார் போக்குவரத்துக் கழகம் | — விழுப்புரம் |

திரு. செ. செம்மலை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்படிப்பட்ட பயிற்சிப் பள்ளிகளில் அரசு போக்குவரத்துக்கழகங்களுக்காகத் தேர்ந்தெடுக்கப்பட்ட ஓட்டுநர்களுக்கு மட்டுமே பயிற்சியளிக்கப்படுகின்றது. ஓட்டுநர்உரிமம்பெறவிரும்பி பயிற்சிபெறவிரும்பும் தனியார்களுக்கும் இந்தப் பயிற்சிப் பள்ளியில் பயிற்சி அளிப்பதற்கு அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: பேரவைத் தலைவர் அவர்களே, இந்த 11 இடங்களில் இருக்கின்ற ஓட்டுநர் பயிற்சிப் பள்ளிகளில் அரசு போக்குவரத்துக் கழகங்களுக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட ஓட்டுநர்களுக்குத்தான் பயிற்சி அளிக்க முடியும். மற்றவர்களுக்குப் பயிற்சி கொடுப்பதற்குரிய சாத்தியம் இல்லை. அவர்களுக்காகத்தான் ஒவ்வொரு மாவட்டத்தின் தலைநகரத்திலும் போக்குவரத்துக் கழகங்களின் உதவியோடு அரசாங்கத் துறை சார்பாக பயிற்சிப் பள்ளிகளை அமைக்க அரசு முடிவு செய்திருக்கின்றது. முதல் நிலையாக 5 மாவட்டங்களில் அப்படி ஆரம்பிக்க நடவடிக்கை எடுத்திருக்கிறோம். படிப்படியாக ஒவ்வொரு மாவட்டத்தின் தலைநகரத்திலும் அந்தப் பயிற்சிப் பள்ளி அமைக்க இருக்கிறோம். அது பொதுவாக எல்லோருக்கும் பயன்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. செ. செம்மலை: மாண்புமிகு பேரவைத்தலைவர் அவர்களே, 11 பள்ளிகளில் எத்தனை ஓட்டுநர்களுக்குப் பயிற்சி கொடுக்கின்ற வாய்ப்பு இருக்கின்றது. [illegible] எத்தனைபேர் பயிற்சிபெற்று வரு[illegible] அறிய விரும்பு[illegible]

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, போக்குவரத்துக் கழகம் மிக்க வசதியோடு நல்லமுறையிலே இயங்குகின்ற காரணத்தால் எத்தனை ஓட்டுநர்களை நாம் எடுக்கின்றோமோ அத்தனைஒட்டுநர்களுக்கும் பயிற்சி கொடுக்க வாய்ப்பு இருக்கின்றது. 10 பேரை எடுக்கிறோம் என்றால் அந்தப் 10 பேருக்கும் பயிற்சி அளிப்பதற்கு வாய்ப்பு இருக்கின்றது. 100 பேர்களை எடுக்கிறோம் என்றால் அந்த 100 பேருக்கும் பயிற்சி அளிப்பதற்கு வாய்ப்பு இருக்கின்றது. அந்த வகையில் வசதியாக இயக்கிக்கொண்டிருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ஆ. வெள்ளைச்சாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது நடத்துனர்களாக பெண்களை நியமிக்கிறார்கள். அதேபோல் பெண்களை ஓட்டுநர்களாக நியமித்து அவர்களுக்கு இந்தப் பயிற்சிப் பள்ளியில் பயிற்சி அளிக்கப்படுமா என அறிய விருமபுகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய ஆர்வத்தை புரிந்துகொள்ள முடிகிறது. எனவே அதுபற்றி ஆராய்ந்து தேவையாக இருந்தால், சரியாக இருந்தால் நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. ஜி. கே .சுப்பிரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேரன் போக்குவரத்துக் கழகத்திற்கு பயிற்சி பள்ளி அமைப்பதற்காக பெரியார் மாவட்டம் பவானி சாகரில் 16 ஏக்கர் நிலம் ஒதுக்கப்பட்டதாக செய்திகள் கொடுக்கப்பட்டிருக்கிறது. அந்த பணி எந்த அளவில் இருக்கிறது? அது எப்போது கட்டுவதற்கு ஆரம்பிக்கப்படும் என்பதை அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேரன் போக்குவரத்துக் கழகத்திலிருந்து பிரிக்கப்பட்ட ஜீவா போக்குவரத்துக் கழகத்திற்கு பயிற்சிப்பள்ளி அமைக்கவேண்டும் என்று முயற்சி எடுத்து செய்துவருகிறோம். அது சம்பந்தமாக முழுமையான தகவல் இல்லை, என்றாலும் அது தனியாக உறுப்பினருக்கு அனுப்ப ஏற்பாடு செய்கிறேன்.

திரு. வேடசந்தூர் வி. பி, பாலசுப்பிரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த போக்குவரத்துக் கழக ஓட்டுநர்கள் பயிற்சி பள்ளிக்கு தேர்ந்தெடுக்கப்படுவர்களுக்கு என்ன என்ன தகுதிகள் வரையறை செய்யப்பட்டிருக்கிறது, வயது வரம்பு விதிக்கப்பட்டுள்ளதா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு .முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த பயிற்சி பள்ளிக்கு போக்குவரத்து கழகத்துக்கு [illegible] தனைத்தான் அனுப்புகிறோம். அவர்கள்தான் பயிற்சி [illegible] களை எடுக்கும்



போது40 வயதுக்குகீழே இருக்கக்கூடியவர்களாக இருக்கவேண்டும் எழுத படிக்கத் தெரிந்திருக்கவேண்டும். வேறு என்ன தகுதி இருக்க வேண்டும் என்று அவர் நினைக்கிறார் என்று எனக்குத் தெரியவில்லை. உயரம் 160 செண்டி மீட்டர் இருக்கவேண்டும். நல்ல நிலையில் இருக்க வேண்டும். இந்த தகுதிகள்தான் இருக்க வேண்டும்.

திரு. என். பழனிவேல்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த போக்குவரத்துக் கழக ஓட்டுநர் பயிற்சிப் பள்ளி பில் பயிலாமலேயே தனியாக லைசென்சு வைத்துள்ள பல்லாயிரக் கணக்கான ஓட்டுநர்கள் இன்றைக்கு வேலையில்லாமல் இருக்கி றார்கள். அவர்களுக்கு இந்த போக்குவரத்துக்கழகத்தில் வேலை கிடைக்காமல் போவதற்கு இது ஒரு இடையூறாக இருக்கிறதா? அப்படியிருந்தால் வெளியிலே தனியாக ஓட்டுநர்கள் பயிற்சி பெற்று லைசென்ஸ் வைத்துள்ளவர்களுக்கு விகிதாசாரப்படி ஏதாவது இட ஒதுக்கீடு செய்து அவர்களை சேர்த்துக்கொள்ள அரசு முயற்சிக்குமா என அறிய விரும்புகிறேன். அரசு போக்கு வரத்துக் கழகக்தின் மூலம் பயிற்சி பெறாமல் தனியாக டிரைவர் லைசென்ஸ் வைத்து இருப்பவர்களுக்கு இந்த போக்குவரத்துக் கழகத்தில் வேலை கொடுப்பதற்கு என்ன வழி இருக்கிறது என்பதையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கனவே சொன்னேன், வெளியில் ஓட்டுநர் உரிமை பெற்றவர்களைத்தான் போக்குவரத்துக் கழகத்தில் எடுக்கிறார்கள். எடுத்தபின்பு போக்குவரத்துக் கழக விதிமுறைகளை சொல்லித்தருவதற்காக இந்தப் பயிற்சிப்பள்ளி நடத்தப்படுகிறது. அவர்களுக்கு லைசென்ஸ் எடுத்துக்கொடுப்பதற்காக இந்த பள்ளி நடத்தப்படவில்லை. எனவே வெளியில் யார் யார் லைசென்ஸ் பெற்று இருக்கிறார்களோ அவர்களை போக்குவரத்துக் கழகத்தின் மூலம் எடுத்து அவர்களுக்கு இங்கே பயிற்சி அளிக்கப்படுகிறது.

திரு, வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஓட்டுநர்களுடைய ஓட்டும் பழக்கம் டிரைவிங் ஹாபிட் மூலம் 15 சதவீதத்திலிருந்து 20 சதவீதம் டீசலை மிச்சப்படுத்த முடியும் என்று நமது துறையைச் சேர்ந்தவர்களும் மேல்நாடுகளிலும் பல்வேறு ஆய்வுகளை நடத்தியிருக்கிறார்கள். மேலும் பி.ஏ., எம்.ஏ., போன்ற படிப்புகளை படித்தவர்கள் அரசு பணிகளில் சேர்ந்து எவ்வளவு சம்பளம் பெறுகிறார்களோ அந்த அளவுக்கு சம்பளத்தை இந்த போக்குவரத்துக் கழகங்களில் ஓட்டுநர்கள் இப்போது பெறுகிறார்கள். சாதாரணமாக ஒரு ஆசிரியர் பயிற்சிகூட 2 ஆண்டு காலம் முறையான பயிற்சி அளிக்கப்படுகிறது. ஆகவே டீசலை மிச்சப்படுத்துவதற்கும் இதன் மூலம் லட்சக்கணக்கான வருவாயை போக்குவரத்துக் [illegible]

வகை இருக்கிறது. ஒரு முழுமையான பயிற்சியாக லைசென்ஸ் பெறுவதற்கு ஒரு ஆண்டு அல்லது இரண்டு ஆண்டு காலம் பயிற்சி பள்ளியில் விரிவான பயிற்சி பெறும் வகையில் அரசு விதிகளை மாற்றுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கும்மிடிப்பூண்டியில் ஒரு பயிற்சியை வைத்து இருக்கிறோம். அதிலே 6 மாத காலத்திற்கு மிக முறையான பயிற்சியை கொடுத்துக்கொண்டு வருகிறோம். அவர்கள் தகுதி உடையவர்களாக இருந்தால் அதிலே அவர்கள் அந்த தகுதியை முழுமையாகப்பெற்று இருந்தால் மட்டுமே அவர்களுக்கு ஓட்டுநர் உரிமம் வழங்கப்படுகிறது. அப்படி யில்லாத நேரத்தில் அவர்கள் மீண்டும் அந்த பயிற்சியை தொடர்ந்து செய்யவேண்டும் என்ற நிலைமையை நாங்கள் வைத்திருக்கிறோம். எனவே ஏறக்குறைய அதிலே 6 மாத காலம் வந்து விடுகிறது. அந்த 6 மாதக் காலத்தில் அந்த முழுமையான பயிற்சியை பெறாதவர்கள் மேலும் தொடர்ந்து அந்த பயிற்சியை பெறவேண்டிய சூழ்நிலையில் இருக்கிற காரணத்தினாலும் இதுவும் ஒரு நல்ல ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு பயிற்சி கொடுப்பதற்கு வாய்ப்பாக இருக்கிறது. இருந்தாலும் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய அந்த யோசனை பரிசீலிக்கப்படும்.

(முற்பகல் 10.00.)

திரு. சேலம் மு. ஆறுமுகம்: தலைவர் அவர்களே, போக்குவரத்து துறையினுடைய நிதியுதவியுடன் தமிழ்நாட்டில் அரசுத் தரப்பிலே எத்தனை ஓட்டுநர் பயிற்சிப் பள்ளிகள் நடைபெற்றுக் கொண்டு வருகின்றன. அதனால் பயன்பெறும் ஓட்டுநர்களின் எண்ணிக்கை என்ன? ஆண்டு ஒன்றுக்கு போக்குவரத்துத் துறையிலிருந்து அரசுத் தரப்பிலே நடத்தப்படும் பயிற்சிப் பள்ளிக்கு எவ்வளவு நிதியுதவி அளிக்கப்பட்டிருக்கிறது என்பதை அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா?

மாண்புமிகு திரு சு. முத்துசாமி: தலைவர் அவர்களே, போக்குவரத்துக் கழகத்தினுடைய சார்பாக நடத்தப்படுகின்ற பயிற்சிப் பள்ளிகளைப் பற்றித்தான் நாம் பேசிக்கொண்டிருக்கிறோம். அரசினுடைய சார்பாக நடத்தப்படுகின்ற பயிற்சிப்பள்ளி ஒன்றே ஒன்றுதான். அதுபற்றி முழு விளக்கமும் தேவையென்றால் தனிக் கேள்வி போடவேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறியிடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது ... [illegible]]



## 2. அறிவிப்புகள்.

(அ) உறுப்பினர் திரு கே. வி. நாச்சிமுத்து கைது செய்யப் பெற்றுள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு, சேலம் மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளரிடமிருந்து நேற்று 16–3–1983 மதியம் 2.15 மணியளவில் கீழ்க்கண்ட செய்தி வரப் பெற்றுள்ளது:

Thiru K.P. Nachimuthu, M.L.A. Tamil Nadu Legislative Assembly, was arrested at 11.15 hours today while obstructing the lorries going to Mettur Aluminium Company near the main gate of the Company on the Omalur-Mettur Road. The case in Karumalaikudal Police Station Cr. No. 33/83 under Section 147 and 341 IPC has been registered against him for obstructing the lorry of a Private Contractor coming to MALCO for taking load. This is for your information.

## 3. தகவல் கோரல்.

### வறட்சியால் ஏற்பட்டுள்ள நிலைமைகளை அரசின் கவனத்திற்குக் கொண்டுவர எதிர்க்கட்சித்தலைவர்கள் உண்ணாவிரதம்.

திரு. ரா. உமாநாத்: தலைவர் அவர்களே, தமிழகத்திலே ஏற்பட்டு இருக்கக்கூடிய கடுமையான வறட்சி நிலைமையையும் மின்சாரத் தட்டுப்பாட்டு நிலைமையையும் அரிசி கிடைக்காத கஷ்டமான பொஸிஷன் இருக்கக்கூடிய நிலைமையையும் குடிநீர் நெருக்கடி இருக்கக்கூடிய நிலைமையையும் பற்றி ஜனங்கள் மத்தியிலே கொந்தளிப்பு இருக்கிற நிலைமையையும் அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டுவந்தும்கூட போதிய ரெஸ்பான்ஸ் இல்லாததால் இன்றைக்கு மாநிலம் பூராவும் இந்த அவையிலே ரெப்ரசன்ட் பண்ணக்கூடிய 6 கட்சிகளின் தலைவர்கள் உண்ணாவிரதம் இருப்பதை நான் அரசாங்கத்தின் கவனத்திற்குக்கொண்டு வருகிறேன்: இதை ஏன் நான் ரெய்ஸ் பண்ணுகிறேன் என்றால் ஏற்கெனவே கொண்டுவந்தும்கூட எந்தவிதமான ரெஸ்பான்ஸும் இல்லை. ரொம்ப கொந்தளிப்பு மக்கள் மத்தியிலே ஏற்பட்டு இருக்கிறது. நீங்கள் சொல்வீர்கள், அட்ஜர்மென்ட் மோஷன் கொடுங்கள் என்று. அட்ஜர்ன்மென்ட் மோஷன் கொடுக்கப் பட்டு இருக்கிறது. எடுக்கப்படவில்லை. ஜனங்கள் மத்தியிலே வெடிப்பு ஏற்பட்டால் என்ன ஆகும், லா அண்ட் ஆர்டர் என்ற சீரியஸான நிலை ஏற்பட்டால் என்ன செய்வது? ஆகவே அவை முன்னவர்கள்முக்கியமானபிரச்சனையாகஇருப்பதால் அவர்கள் உண்ணாவிரதம் மேற்கொண்டிருப்பதன் காரணமாக இப்போது என்ன செய்யப்போகிறீர்கள், எல்லா பார்ட்டிகளையும் கூப்பிட்டு நெருக்கடியைப் பற்றி மேலும் என்ன செய்யலாம் என்று ஸ்பெஸிபிக்காகப் பேசவேண்டும், அதற்கு அவர்களுடைய ரீஆக்ஷன் என்ன என்ப...

மாண்புமிகு பேரவைத் தலைவர்: எனக்கு ஒரு ஒத்திவைப்புத் தீர்மானம் வந்தது. இன்னொரு ஒத்திவைப்புத் எடுத்துக் கொண்டிருக்கிறோம். காலையிலே தீர்மானத்தை கொடுத்தார்கள். உடனடியாக அரசுத் கொண்டுவந்து சொல்வது கடினம் என்பதால் தரப்பிலே பதில் தீர்மானத்தை எடுத்துக்கொண்டிருக்கிறோம். இன்னொரு ஒத்திவைப்புத் தீர்மானம் என் கவனத்திற்கு வந்திருக்கிறது. ஒத்திவைப்புத்

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு உறுப்பினர் திரு. உமாநாத் அவர்கள் இங்கே பிரச்சினையைக் கிளப்பி இருக்கிறார்கள். ஆளுநர் உரை விவாதத்திலும் சரி, பிறகு வந்த நிதிநிலை அறிக்கை பொது விவாதத்திலும் சரி மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்டதைப்போல் உணவுப் பற்றாக் குறை நிலைமையையும் வறட்சி நிலையால் ஏற்பட்டு இருக்கிற அவதிகளையும் மற்றவைகளையும் இந்த அவையில் தெரிவித்துக் கொண்டு வருகிறோம். இந்த அரசு தன்னால் இயன்ற அளவுக்கு பணிகளை எடுத்துக்கொண்டிருக்கிறது என்பதையும் தெரிவித்துக் வந்திருக்கிறோம். நாட்டில் உள்ள பல்வேறு நிலைமைகளை மாண்புமிகு உறுப்பினர்கள் தங்கள் தங்கள் தொகுதிகளைப் பற்றியும் பொதுவாக தமிழகத்தினுடைய நிலைமைகளை யும் இந்த அவையிலே ஆளுநர் உரை விவாதத்தின்போதும் பற்றி குறிப்பிட்டு இருக்கிறார்கள், அதற்குப் பிறகு நிதிநிலை அறிக்கை விவாதத்தின்போதும் குறிப்பிட்டிருக்கிறார்கள். அதற்குப் பிறகு எந்த எந்த வகையில் மத்திய அரசினுடைய உதவி தேவைப்படுகிறது நாம் சமாளிக்க வேண்டியவர்களாக நமக்குத் கிறோம் என்பதை நாமும் எடுத்துத் தெரிவித்திருக்கிறோம். இருக் எடுத்துச் சொல்லியிருப்பது மட்டுமல்ல அந்த உணர்வில் நாம் அவைகளை வெளியிட்டிருக்கிறோம். எடுத்துச் செய்கின்ற காரியங்களை எடுத்துச் சொல்வது மட்டுமல்லாமல் விரிவாகவும் விளக்கமாகவும் உணவுத்துறையைப்பற்றி வறட்சி நிலையைப் பற்றி நாம் எடுத்துச் சொல்லியிருக்கிறோம். நாம் 190 கோடி ரூபாய் நிவாரணப் பணி செய்யவேண்டியிருக்கிறது என்று முதலில் கொடுத்திருந்தாலும் 217 கோடி ரூபாய் அளவுக்கு விண்ணப்பம் கொடுத்து மறுபரிசீலனை செய்யவேண்டுமென்று வந்திருக்கிறோம். இங்கே வந்திருக்கிற ஆய்வுக்குழு மிகப் பெருந்தன்மையோடு அக்கறையோடு ஆர்வத்தோடு சுற்றிப் பார்த்துவிட்டு இங்கே அரிசி போதாமல் இருக்கிறது. மத்திய அரசு அரிசி கொடுத்தாக வேண்டியவர்களாக இருக்கிறார்கள் என்று சிபாரிசு செய்யக்கூடிய நிலைமையை எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். குடிநீர் பற்றாக்குறையைச் சொல்கிறபோது மக்களும் மற்றவர்களும் உணரக்கூடிய அளவுக்கு இங்கே இருக்கிறது என்று சொல்லவந்தவர் என்னுடைய சொந்த மாநிலமான பீகார் மாநிலத்திலே உள்ள நிலைமையைவிட பாதகமான நிலைமை ஏற்பட்டிருக்கிறது என்றும் இந்தப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு அதிகப்பணம் செலவழிக்க வேண்டி வரும் என்று சொல்லியிருக்கிறார்கள். ஏனென்றால் 30 அடியிலே



தண்ணீர் கிடைக்கவில்லையென்றால் 40 அடிக்கு போக வேண்டி யிருக்கும். 40 அடிக்கு போக வேண்டுமென்றால் அதற்கு அதிக பணம் செலவு செய்ய வேண்டியிருக்கும். தண்ணீரே கிடைக்கா விட்டால் தண்ணீர் கிடைக்கிற இடத்திற்கு நகர்த்த வேண்டி யிருக்கும். இப்படிப்பட்ட மாற்றுத் திட்டங்களுக்கு மேலும் செலவாகும். இதை நாங்கள் மத்திய அரசிடம் சிபாரிசு செய் கிறோம் என்றுதான் சொல்லியிருக்கிறார்கள். அந்த வகையிலே மத்திய அரசு தக்க நடவடிக்கைகளை எடுக்கும் என்ற நம்பிக்கை யின் அடிப்படையிலேதான் நாம் இருக்கிறோம். ஆகவே மாண்புமிகு உறுப்பினர்களைப் பொறுத்தவரையில், தலைவர் களைப் பொறுத்தவரையில் இந்த மன்றத்திலே எடுத்துச் சொல்லி யிருக்கிறார்கள். அவர்களைப் பொறுத்தவரையில் இந்த மன்றத் திலே எடுத்துச்சொல்வதற்கு வாய்ப்பு இருக்கிறது. அந்த அளவில் வெளியே இருந்து உண்ணாவிரதம் இருந்து அவர்கள் உணர்த்த வேண்டிய அவசியம் இல்லை அவர்களுக்கு இங்கே சொல்வதற்கு வாய்ப்பு இருக்கிறது. வெளியிலே இருக்கிற மக்கள் தங்களுடைய உணர்வுகளை வெளிப்படுத்துகிற அளவிற்கு இந்த உண்ணா விரதம் இருப்பதை, அவர்களுடைய உணர்வுகளை நான் மதிக் கிறேன். இந்த அரசும் மதிக்கிறது. ஆகவே விரோதமாக எண்ணவில்லை, இந்த அரசிற்கு துணை செய்கிற அளவில் கூட அவர்கள் எல்லாம் தங்களுடைய உணர்வை வெளிப்படுத்துவது பாதிசாதகமாகத்தான் இருக்கும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் களுக்கு எடுத்துச் சொல்ல விரும்புகிறேன். அந்தவகையிலே இதில் கட்சி மாச்சரியமோ வேறு எதுவும் இல்லை. நாட்டிற்கு ஏற்பட்டிருக்கிற பல நெருக்கடியான நிலைமைகளை போக்கு வதற்கு அரசு ஈடுபடுகிறபோது அதில் இருக்கிற குற்றங்களைச் சுட்டிக்காட்டி, குறைகளைச் சுட்டிக்காட்டி அவற்றை போக்கு வதற்கு வழிவகை காணுவதோடு, மாண்புமிகு எதிர்க்கட்சியைச் சார்ந்த அத்தனை பேர்களுடைய ஒத்துழைப்பும் எங்களுக்கு தேவை. அத்தனை பேர்களுடைய சார்பாகத்தான் இந்த கோரிக்கையை எடுத்து வைப்பதற்கும் வாய்ப்பு ஏற்படும். அந்த நேரத்தில் பொது மக்களுடைய உணர்வுகள் எப்படி இருக்கிறது என்பதை நாங்கள் உணர்வதற்கு ஒரு வாய்ப்பு ஏற்படும். அந்த வகையிலே இந்த உணர்வை மதிக்கிறோம் என்று எடுத்துச் சொல்லி, அதற்கான நடவடிக்கை மேற் காள்வோம் என்று கூறிக்கொள்கிறேன். நேற்றைக்கு பத்திரிகையிலேகூட பார்த்தேன். டெல்லியிலே ஏப்ரல் 4, 5 தேதிகளில் முதலமைச்சருடைய மாநாட்டை கூட்டியிருப்பதாகப் படித்தேன். இதில் எந்த அளவிற்கு நமக்கு அழைப்பு வந்திருக்கிறது என்பதை காண வேண்டும். அப்படிப்பட்ட சூழ்நிலை ஏற்பட்டால் அந்த உணர்வு களை எடுத்துச் சொல்வதற்கு அவை பயன்படும். அந்த வகை யில் அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது. மானியக்கோரிக்கை கள் வருகிறபோது, உணவு பிரச்சினை குறித்தும் வருகிறது. வருவாய்த்துறையும் வருகிறது மற்றவையும் வருகின்றன. அப்போதும் இருக்கிற நிலைமைகளை எடுத்துச் சொல்வதற்கு உறுப்பினர்களுக்கு வாய்ப்பிருக்கிறது, இந்த உணர்விற்கு அரசு மதிப்பளிக்கும். அரசு தக்க நடவடிக்கை எடுக்கும் என்பதை மட்டும் கூறிக்கொள்கிறேன்.

[1983 மார்ச் 17

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சட்டமன்றம் நடந்து கொண்டிருக்கிறது. மாண்புமிகு தலைவர்கள் எல்லாம் உண்ணாவிரதம் இருப்பதாக மாண்புமிகு உமாநாத் அவர்கள் சொன்னார்கள். சட்டமன்றம் நடந்துகொண்டிருக்கிறபோது இங்கேயே பிரச்னைகளை பேசலாம். சட்டமன்றத்திற்கு முன்னுரிமை கொடுக்கவேண்டுமென்பதுதான் என்னுடைய வேண்டுகோள். (குறுக்கீடு) உமாநாத் அவர்களும் மற்றவர்களும், மற்றவர்களை வெளியே உட்கார வைத்துவிட்டு அவர்கள் இங்கே வந்து பேசலாம். அவரே போய் உட்கார்ந்து கொள்ளக்கூடாது என்பதைத்தான் நான் சொல்கிறேன்.

டாக்டர் மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, இங்கே சட்டமன்றம் நடக்கிறபோது இங்கேயே எடுத்துச்சொல்லலாம் என்று கூறினீர்கள். ஆனால் முதலமைச்சர் அவர்கள்கூட சட்டமன்றம் நடக்கிறபோது வெளியிலே உண்ணாவிரதம் இருந்தார்களே; அவரே வழி காட்டியிருக்கிறபோது இது தவறா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் உண்ணாவிரதம் இருந்தது மத்திய சர்க்காருக்கு உணர்த்துவதற்காக. இந்த மன்றத்தை பொறுத்த வரையில் உணர்த்த வேண்டியவைகளை மேலவையிலே விரிவாகவும், விளக்கமாகவும் எடுத்துச்சொல்லியிருக்கிறார்கள். ஆகவே இன்றைக்கு உண்ணாவிரதம் இருப்பது மத்திய அரசிற்கு உணர்த்த என்பது சேர்ந்திருக்கிறது என்றால் வெளியிலே இருப்பதிலே தவறில்லை.

திரு. ரா. உமாநாத்: தலைவர் அவர்களே, மாநில சர்க்கார், மத்திய சர்க்கார் இரண்டும் சேர்ந்திருக்கிறது.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாநில சர்க்கார் மட்டும் என்றால் இங்கே சொல்லியிருக்கலாம். இரண்டும் சேர்ந்திருந்தால் வெளியில் இருப்பதில் தவறில்லை.

டாக்டர் மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, அவை முன்னவர் நாவலர் அவர்கள் எழுப்பிய வினாவிற்கு உமாநாத் அவர்கள் விளக்கம் அளித்திருக்கிறார்கள். மத்திய அரசு, மாநில அரசு இரண்டும் சேர்ந்து தங்களுடைய அக்கறையிலேயிருந்து தவறி விட்டார்கள் என்பதை காட்டுவதற்காகத்தான் உண்ணாவிரதம் என்று சொல்லியிருக்கிறார்கள். ஆனால் முதலமைச்சர் அவர்கள் மத்திய அரசை எதிர்ப்பதற்காக வெளியில் உண்ணாவிரதம் இருந்தார்கள் என்று சொல்கிறார்கள். இந்த மத்திய அரசு அக்கறையற்ற தன்மையிலே இருக்கிறது என்பதை காட்டுகிற வகையிலே ஒரு தீர்மானமே போடுவதற்கு வாய்ப்பு இருக்கும்போது, அதை இந்த அவையிலேகூட சொல்லாமல், முதலமைச்சர் வேறு ஒரு அவையிலே, மேலவையிலே சொல்லி உண்ணாவிரதம் தொடங்கியது சரிதானா?



1983 மார்ச் 17]

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, இந்த அரசிற்கு அக்கறை இருக்கிறது. அக்கறை இருந்து இப்படிப்பட்ட நடவடிக்கைகளை எடுத்திருக்கிறது என்பதை திரும்ப திரும்ப நாங்கள் சொல்லியிருக்கிறோம். மத்திய அரசினுடைய சார்பாக நான் இங்கே பேசுவதற்கில்லை. மத்திய அரசு அதுபற்றி நடவடிக்கை எடுத்து வருகிறோம் என்று சொல்கிறார்கள். ஆனாலும்கூட அந்த நிலைமைகளை விளக்குவதற்கு உண்ணாவிரதத்தினுடைய உணர்வு பயன்படுகிறது, அதையும் நான் மதிக்கிறேன், என்று சொன்னேனே தவிர, அக்கறையற்ற நிலையில் இருக்கவேண்டிய அவசியமும் இல்லை; அக்கறை இல்லாமல் இருக்கவும் முடியாது. எல்லோருடைய ஒத்துழைப்பும் வேண்டியிருக்கிறது என்றுதான் சொன்னேன். நாட்டு மக்களுடைய ஒத்துழைப்பும் இப்படிப்பட்ட பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு வேண்டுமென்று சொன்னேன். உணர்வை நாங்கள் மதிக்கிறோம் என்றுதான் முதலில் குறிப்பிட்டேன்.

(முற்பகல் 10–10.)

2. அறிவிப்புகள் (தொடர்ச்சி).

(ஆ) உறுப்பினர் திரு கே. பி. நாச்சிமுத்து ஜாமீனில் விடுவிக்கப் பெற்றுள்ளது.

Mr. SPEAKER: I have got a message. To the Hon. Sdeaker, Tamil Nadu Legislative Assembly, Madras, from S.P. Salem, camp at Mettur. Thiru K.P. Nachimuthu, M.L.A. of the Mettur Constituency, was arrested at 11.15 hours in Karumalai Kundal Police Station, Cr. No. 33/83, u s. 147, 341 and 506 (1) I.P.C, was sent to remand and was released on bail by J.S.C Mettur at 18.45 hours today 16ih March 1983. I have got this message just now.

திரு. உ. சுப்பிரமணியன்: பேரவைத் தலைவர் அவர்களே, திடீரென்று சுவாதீனமுற்ற நம்முடைய அரசுத் தலைமைச் செயலாளர் அவர்களைப் பார்ப்பதற்காக, மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்களும், ஏனைய அமைச்சர்களும் செல்வதற்காக இந்தச் சட்டமன்ற நடவடிக்கைகளையே ஒத்தி வைக்க நேர்ந்தது. அப்படி இருக்கின்றபோது, கடந்த 1½ மாத காலமாக அவர் எந்த அளவுக்கு உடல் தேறி இருக்கின்றார்? எப்பொழுது அரசுப் பணியில் சேருவார் என்ற குறிப்புப் பத்திரிகைச் செய்தியிலும் இல்லை....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அது தனிப்பட்ட விவகாரம். அன்றைக்கு முதல்வருக்குத் தகவல் வந்ததால், முதல்வர் பேசிக் கொண்டிருந்ததால், அவர் போக வேண்டியதாக இருந்தது என்று தெரிவிக்கப்பட்டது.

வந்து அவர் பேசாத நேரமாக இருந்திருந்தால், யாருக்குமே தெரியாமல் போய் இருக்கக்கூடும். பொதுமக்களால் தேர்ந் தெடுக்கப்பட்டவர்கள் என்றால், உடல்நலம் இல்லாதபொழுது அரசு அறிவிப்பு என்று வந்திருக்கும். அவருடைய நிலைமை என்ன என்று எனக்குத் தெரியாது. வேண்டுமானால் விசாரித்துத் தெரி விக்கிறேன்.

The Hon. Dr. H.V- HANDE: He is improving, Sir.

திரு. ப. பொன்னுரங்கம்: பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாமன்ற உறுப்பினர் திரு. நாச்சிமுத்து கைது செய்யப் பட்டது பற்றி தெரிவித்தீர்கள், ரொம்ப நன்றி. ஆனால், திரு பாபு கோவிந்தராசன் கைது செய்யப்பட்டபொழுது, பெயிலில் வந்துவிட்டார் என்பதால் அறிவிக்கப்படவில்லை என்று சொன்னீர்கள். இப்பொழுதும் பெயிலில் வந்தது பற்றித்தான் சொன்னீர்கள். பிற்காலத்தில் எது பின்பற்றப்படும் என்று சொல்லுங்கள்..

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஒரு உறுப்பினர், யாராக இருந்தாலும், கைது செய்யப்பட்டது பற்றி தகவல் வந்தால் சொல்லவேண்டும். கைது செய்யப்பட்டு விடுதலை ஆகிவிட்டால் சொல்ல வேண்டியதில்லை.

திரு. ப. பொன்னுரங்கம்: திரு நாச்சிமுத்துகூட பெயிலில் வந்துவிட்டார்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உறுப்பினர் அப்பொழுது சபையில் இல்லாவிட்டால் நான் என்ன செய்வது? முதலிலே கைது செய்யப்பட்டதுபற்றிய தகவல் வந்தது. நான் சொல்லி உட்கார்ந்த கொஞ்ச நேரத்திலே, ரிலீஸ் ஆன செய்தி வந்தது. ஆகவே, இரண்டையும் அறிவிக்க வேண்டியதாக இருந்தது. இல்லையென்றால், நான் சொல்லியிருக்க வேண்டியதில்லை. கைதாகி விடுதலை ஆகியிருந்தால் அறிவிக்க வேண்டியதில்லை.

## 4. ஒத்திவைப்புத் தீர்மானம்

பரம்பிக்குளம் ஆளியார் திட்டம், அமராவதி அணை ஆகியவற்றின் ஆயக்கட்டு பகுதிகளில் விவசாயம் பாதிக்கப் பெற்றுள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திருவாளர்கள் எம். ஆறு முகம், என்.ஏ. பூங்காவனம், ஏ.டி. கருப்பையா, ஏ.டி. குல சேகர், பி.எம். தங்கவேல்ராஜ் ஆகியோர் "கோவை மாவட்டம், பொள்ளாச்சி, பல்லடம், பொங்கலூர், உடுமலைப்பேட்டை ஆகிய பகுதிகளுக்கு பி.ஏ.பி. அமராவதி ஆகிய அணைகளில் இருந்து தண்ணீர் திறந்து விடாததால் சுமார் 80 ஆயிரம் ஏக்கர் பூமியில் பருத்தி, நெல், கரும்பு மற்றும் விவ சாயம் காய்ந்து கொண்டிருப்பதால் அப்பகுதி விவசாயிகளிடம்





ஏற்பட்டுள்ள நிலை குறித்து விவாதிக்கப் பேரவையின் இதர அலுவல்களை ஒத்தி வைக்க வேண்டும்" என்ற தீர்மானத்தை மொழிய என் அனுமதி கேட்டு அறிவிப்புகள் கொடுத்துள்ள னர். இது எப்படி அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்தது என்பது குறித்து அவர்கள் மிகச் சுருக்கமாகக் கூறும்படி கேட்டுக்கொள்கிறேன்.

திரு எம் ஆறுமுகம்; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோவை மாவட்டத்திலே பொள்ளாச்சி, உடுமலைப் பேட்டை, பொங்கலூர், பல்லடம், வேட்டைக்காரன் புதூர் போன்ற பகுதிகளில் சுமார் 80,000 ஏக்கர்களில் நெல், கரும்பு பருத்தி, போன்ற விவசாயம் செய்யப்பட்டு வருகின்றது. சமீபத்திலே பரம்பிக்குளம் ஆளியாறு, திருமூர்த்தி, அமராவதி போன்ற அணைகளில் இருக்கக்கூடிய தண்ணீர் திறந்துவிடப் படாத காரணத்தினால் கிட்டத்தட்ட 80,000 ஏக்கர்களில் விவசாயம் செய்திருக்கக்கூடிய பருத்தி, நெல், இன்னும் கரும்பு போன்றவைகள் கடுமையாகப் பாதிக்கப்பட்டு, காய்ந்து கொண் டிருக்கக்கூடிய அவல நிலை இருந்து கொண்டிருக்கிறது. அது சம்பந்தமாக மாவட்ட அபிவிருத்தி கவுன்சில் கூட்டத்தில்கூட, கோவை மாவட்டத்திலே 80 ஆயிரம் ஏக்கர் விவசாயம் கடு மையாகப் பாதிக்கப்பட்டிருக்கிறதே, பி.ஏ.பி, அணையிலே யிருந்தும் திறந்துவிடப்பட வேண்டிய தண்ணீர் திறந்துவிடப் படாத காரணத்தினால்தான் இந்த அளவுக்கு விவசாயிகள் கடுமையாகப் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். ஆகவே, தண்ணீர் திறந்துவிட வேண்டுமென்று கேட்ட நேரத்திலேகூட, அங்கே மாவட்ட அபிவிருத்தி கவுன்சில் கூட்டத்திலே கொடுக்கப்பட்ட பதில், பி.ஏ.பி. அணைக்கட்டிலே இருக்கிற தண்ணீர் திறந்த விடப்பட வேண்டுமானால், கேரள அரசுடன் பேச்சு வார்த்தை நடத்தித்தான் திறந்து விட வேண்டும். இப்பொழுது இருக்கிற தண்ணீர் கேரள அரசுக்குச் சொந்தமானது என்று சொல் கிறார்கள். திருமூர்த்தி அணைக் கட்டிலிருந்தும் அந்தப் பகுதி மக்களுக்கு 20,000 ஏக்கர்களுக்குத் தேவையான தண்ணீரைத் திறந்து விடாத காரணத்தினால் அவர்கள் மிகவும் கடுமை யாகப் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். அது சம்பந்தமாகக் கேட்கின்ற நேரத்தில், கேரள அரசோடு பேச்சு வார்த்தை நடத்தித்தான் திறந்துவிட வேண்டுமென்று சொல்கிறார்கள்.

ஏற்கனவே அரசாங்கம் அறிவித்திருக்கின்ற அடிப்படையில் எட்டு முறைகள் தண்ணீர் திறந்து விடப்பட வேண்டும். ஆனால் பி.ஏ.பி. வாய்க்கால் மூலமாகவும் தண்ணீர் ஆறு முறைகள்தான் திறந்து விடப்பட்டிருக்கின்றன. அதேபோன்று திருமூர்த்தி அணையிலிருந்து ஆறு முறைகள் திறந்து விடப் படுவதற்குப் பதிலாக, நான்கு முறைகள்தான் திறந்து விடப் பட்டிருக்கிறது. அரசு அறிவித்திருக்கின்ற அறிவிப்பின்படியே முறையாகத் தண்ணீர் விடப்பட்டிருந்தால் இப்பொழுது காய்ந்து கொண்டிருக்கும் 80,000 ஏக்கர்கள் கடுமையாகப் பாதிக்கப் பட்டிருக்காது. ஆனால் முறையாகத் திறந்து [illegible]

தண்ணீர் திறந்து விடப்படவில்லை, இந்தச் சூழ்நிலையில் முறையாகத் திறந்து விட வேண்டிய தண்ணீர் திறந்து விடப் படாத காரணத்தால் 80,000 ஏக்கர் நிலங்கள் கடுமையாகப் பாதிக்கப்பட்டிருக்கின்றது. எனவே, அந்த விவசாயிகளுக்கு இருக்கின்ற இன்னல்களைப் போக்குகின்ற வகையில் பரம்பிக் குளம் ஆகியோர் பகுதியைச் சேர்ந்தவர்கள் தலைமைப் பொறியாளரையும், அமைச்சரையும் நேரடியாகச் சந்தித்துப் பேசி இருப்பதாகவும் சொல்லப்படுகிறது.

கோவை மாவட்டத்தில் உள்ள 80,000 எக்கர் நிலங் களைச் சேர்ந்த விவசாயிகள் மிகவும் கடுமையாகப் பாதிக்கப் பட்டிருக்கின்ற இந்தச் சூழ்நிலையில், பி.ஏ.பி.யிலிருந்து முறை யாகத் திறந்து விடப்பட வேண்டிய தண்ணீரையும், திருமூர்த்தி அணையிலிருந்து திறந்து விடப்பட வேண்டிய தண்ணீரையும் திறந்துவிட்டு 80,000 ஏக்கர் நிலங்களைப் பாதுகாப்பதற்கும் அந்தப் பகுதியிலுள்ள விவசாயிகளைக் காப்பாற்றுவதற்கும் அமைச்சரவர்களும், அரசாங்கமும் நல்ல முடிவை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

கேரள அரசுடன் பேச்சுவார்த்தை நடத்தித்தான் திறந்து விடவேண்டுமென்ற நிர்ப்பந்தம் ஏற்படுமேயானால், காய்ந்து கொண்டு இருக்கின்ற நிலங்களின் விவசாயிகளின் நிலைமைகளை எடுத்துச் சொல்லி, உடனடியாக அதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இன்றைக்கு இருக்கின்ற சூழ்நிலையில் அந்த விவசாயிகள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். அதைத் தொடர்ந்து கால்நடைகள் பாதிக்கப்பட்டிருக்கின்றன. மின்சாரத் தட்டுப்பாட்டின் காரண மாகக் கிணற்றுப் பாசனத்தின் மூலம் தண்ணீர் எடுக்க முடி யாத நிலை ஏற்பட்டிருக்கிறது. இப்படிப்பட்ட ஒரு அவல நிலையில் பொங்கலூர், பல்லடம், உடுமலைப்பேட்டை ஆகிய இடங்களில் இருப்பதால் இன்றைய இதர அலுவல்களை ஒத்தி வைத்து இந்தப் பிரச்னையைப் பற்றி விவாதிக்க வேண்டுமென்று கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாகக் கேட்டுக்கொள்கிறேன்.

திரு. ஏ. டி. குலசேகர்: மாண்புமிகு பேரவைத் தலைவர வர்களே, கோவை மாவட்டத்திலே பல்லடம், பொங்கலூர், உடுமலைப்பேட்டை, பொள்ளாச்சி ஆகிய இடங்களுக்கு பி.ஏ.பி வாய்க்கால், திருமூர்த்தி வாய்க்கால். அமராவதி போன்ற இடங்களிலிருந்து தண்ணீர் திறந்து விடப்படாததால் கிட்டத் தட்ட 80,000 ஏக்கர் நிலங்களிலுள்ள பயிர்கள் பாதிக்கப்பட் டுள்ளது.

அந்த நிலங்களிலே பயிராகக் கூடிய கரும்பு, நெல், பருத்தி புகையிலை போன்ற விளைபொருட்கள் மிகவும் காய்ந்து போய் கிடக்கின்றன. அவற்றைப் பயிரிட்ட விவசாயிகள், விவசாயக் கூட்டுறவுச் சங்கங்களின் மூலமாகவும், தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகளின் மூலமாகவும் கடன்களைப் பெற்று. இன்றைய தினம் அந்தக் கடன்களைத் திருப்பிக் கொடுக்க முடியாமல் உண்ணாவிரதமி [illegible] கொண்டிருக்கிறார்கள்.



ஆகவே, இந்த நிலையைப் போக்குவதற்காகத் தமிழக அரசு கேரள அரசுடன் தொடர்பு கொண்டு விரைவிலே அந்த வாய்க்கால்களைத் திறந்து விட்டு, விவசாயிகளின் துயரைப் போக்க வேண்டுமென்ற நிலைமை இருப்பதால் அவையின் இன்றைய அலுவல்களை ஒத்தி வைத்து, இந்தப் பிரச்னையை பற்றி விவாதிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு கே. இராஜாமுகமது: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, பரம்பிக்குளம் ஆளியார் திட்டம் கோவை மற்றும் பெரியார் மாவட்டங்களில் இத்திட்ட ஆயக்கட்டில் சேர்க்கப்பட்ட நிலங்களுக்கு ஓர் ஆண்டில் இரு பருவ காலங் களில் ஒவ்வொரு பருவத்திலும் நான்கரை மாதங்களுக்குப் பாசனத்திற்குத் தண்ணீர் வழங்க வழிவகை செய்கிறது. இத் திட்டத்திலிருந்து பாசனத்திற்குத் தண்ணீர் திறந்து விடத் தொடங்கியதிலிருந்து எல்லா ஆண்டுகளிலும் பருவமழை தவறிய ஓரிரு ஆண்டுகளைத் தவிர இரு பருவங்களிலும் தண்ணீர் திறந்து விடப்பட்டுள்ளது. நடப்பாண்டில் முதல் பருவத்தில் பாசனத் திற்குத தண்ணிர் திறந்துவிடப்பட்ட விவரங்கள் கீழே இப் பொழுது கொடுக்கப்பட்டிருக்கின்றன.

பரம்பிக்குளம் பிரதான கால்வாய் மூலமாகக் கிட்டத்தட்ட 74,088 ஏக்கருக்கு உடுமலை பல்லடம் தாராபுரம் வட்டங் களில் 1-8-82 ஆம் தேதி திறந்து விடப்பட்டு 15-12-1982 ஆம் தேதி அந்தப் பாசனம் முடிவடையக் கூடிய தேதி நிர் ணயிக்கப்பட்டு முடிக்கப்பட்டது.

(முற்பகல் 10-20)

பொள்ளாச்சிக் கால்வாய் 'ஏ' பிரிவு 11532 ஏக்கர் பாசனத் திற்கு 1-9-82 முதல் பாசனம் முடிவடைய நிர்ணயிக்கப் பட்ட 15-1-82 வரை திறந்து விடப்பட்டது.

வேட்டைக்காரன்புதூர் கால்வாய் 'பி' பிரிவு 5454 பாச னத்திற்கு 1-9-82 முதல் பாசனம் முடிவடைய நிர்ணயிக்கப் பட்ட 15-1-83 வரை திறந்து விடப்பட்டது.

சேத்துமடை கால்வாய் 5044 ஏக்கர் பாசனத்திற்கு 22-11-82 முதல் பாசனம் முடிவடைய நிர்ணயிக்கப்பட்ட 21-3-83 வரை திறந்து விடப்பட்டது.

சேத்துமடை கால்வாயில் பாசனத்திற்கு தண்ணீர் கொடுக் கப்பட்டு வருகிறது. மற்ற எல்லா கால்வாய்களிலும் நிர்ண யிக்கப்பட்ட நாள் வரை பாசனத்திற்கு தண்ணீர் கொடுக்கப் பட்டது. பரம்பிக்குளம் பிரதான கால்வாயில் நிர்ணயிக்கப் பட்ட முடிவு நாளுக்குப் பின்னரும் பயிர்களைக் [illegible] தண்ணீர் கொடுக்கப்பட்டது.

(திரு. கே. இராஜா முகமது) [1983 மார்ச் 17

நடப்பு ஆண்டில் (1982) இரு பருவங்களிலும் பருவ மழை தவறியதால் இத்திட்டத்தில் சராசரியாக ஒரு ஆண்டிற்குக் கிடைக்கும் 39 ஆயிரம் மில்லியன் கன அடி தண்ணீருக்குப் பதிலாக 21 ஆயிரம் மில்லியன் கன அடி தண்ணீர் வரத்து இருந்தது. இக்குறைந்த அளவு நீரைக்கொண்டு முதல் பாசன பருவத்தில் இத்திட்ட புதிய ஆயக்கட்டுக்கும் கேரளம் மற்றும் தமிழ்நாட்டைச் சார்ந்த பழைய ஆயக்கட்டு நிலங்களுக்கும் சிக்கனமாக பாசனத்திற்கு நீர் வழங்கப்பட்டது.

முதல் பருவ பாசனம் முடிவுற்ற தருணத்தில் இத்திட்ட நீர்த்தேக்கங்களில் மிகக் குறைவான நீர் தான் இருந்தது. இது முன்னுரிமை பெற்ற பழைய ஆயக்கட்டு நிலங்களுக்கு மீத முள்ள பாசன காலத்திற்குக் கூட தண்ணீர் வழங்க போது மானதாகவே இல்லை. அதனால் இரண்டாம் பருவ பாசனத் திற்கு தண்ணீர் கொடுக்க இயலவில்லை.

1982–83 ஆம் ஆண்டில் அமராவதி அணையிலிருந்து தண்ணீர் திறந்து விடுதல் சம்பந்தமான விவரங்கள்.

அமராவதி நீர்த்தேக்கத்தின் (முழு கொள்ளளவு 4047 மில்லியன் கன அடி) நோக்கம் 21,500 ஏக்கர் புதிய நிலங் களுக்குப் பாசன வசதி அளிப்பதும் இந்நீர்த் தேக்கத்தின் கீழ் உள்ள பழைய நிலங்களுக்குப் பாசன வசதி உறுதி அளிப்பது மாகும். அமராவதி நீர்த்தேக்கத்தின் கீழ் அமராவதி ஆற்றி னால் பயன்படும் பழைய பாசனம் 31200 ஏக்கராகும். இப் பரப்பு கோவை, பெரியார், திருச்சி மாவட்டங்களில் உள்ளன முதல் போகம் எல்லா நிலங்களிலும் சாகுபடி செய்யப்படுகிறது இரண்டாவது போகம் 17300 ஏக்கர் நிலங்களில் சாகுபடி செய்யப்படுகிறது. இந்த நிலங்களின் பாசனக் காலம் ஜூன் முதல் தேதியிலிருந்து மார்ச்சு மாதம் 31 ஆம் தேதி வரை யாகும். புதிய பாசனத்தின் பாசனக் காலம் ஆகஸ்ட் முதல் தேதியிலிருந்து ஜனவரி 31 ஆம் தேதி வரையாகும்.

1982–83 ஆண்டு தென்மேற்கு பருவ மழையும், வடகிழக்குப் பருவ மழையும் அமராவதி நீர்த்தேக்கத்தின் நீர்ப்பிடிப்புப் பகுதியில் பொய்த்து விட்டன. ஆகையால் ஜுன் முதல் டிசம்பர் வரை நீர்த்தேக்கத்தில் வந்த நீரின் அளவு இதே பருவத்தில் கடந்த ஐந்து வருடங்களில் சராசரி நீரின் அளவைவிட 50 விழுக்காட்டுக்குக் குறைவாகும். 1–6–82 அன்று அமராவதி நீர்த்தேக்கத்தில் இருந்த கொள்ளளவு 543 மி.க.அடி (முழுக் கொள்ளளவு 4047 மி.கன அடி) தென்மேற்கு பருவ மழை தவறியதாலும், குறைந்த அளவு நீர் வரத்தாலும் அமராவதி பழைய நிலங்களுக்குப் பாசனத்திற்காக தண்ணீர் 28–7–82 அன்று விடப்பட்டது. அமராவதி புதிய பாசனத்திற்குத் தண்ணீர் விடுவது 1-8–82 க்கு அப்பால் ஒத்தி வைக்கப்பட்டது. (பாச னத்திற்காக திறக்கப்பட வேண்டிய நாள் 1–8–82 ஆகும்) ...



1983 மார்ச் 17] (திரு. கே. இராஜா முகமது)

தேக்கத்தில் நீரின் கொள்ளளவு குறைவாக இருந்ததாலும், நீர் வரத்தும் குறைவாக இருந்ததாலும் பாசன ஆரம்ப காலம் முதல் கொண்டு சிரமங்கள் இருந்து கொண்டிருந்தன. மிக்க கவனத் துடன் பாசனத்திற்கான தண்ணீர் விட்டு விட்டு கொடுக்கப் பட்டதாலும், விவசாயிகளால் பயிரிடப்பட்ட 16,800 ஏக்கர் முதல் போக நிலங்களில் அறுவடை செய்வது சாத்தியமாயிற்று

1982–83 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் நீர்த்தேக்கத்தில் சுமாரான நீர் வரத்து இருந்தது. இது புதிய பாசனத்திற்குத் தேவையான கொஞ்சம் நீரைத் தேக்கி வைக்க உபயோகமாக இருந்தது. அமராவதி கூட்டுறவு கரும்பாலை நிர்வாகிகளிட மிருந்தும், அமராவதி கால்வாயின கீழுள்ளவிவசாயிகளிடமிருந்தும் அமராவதி கால்வாய்க்கு தண்ணீர் திறந்து விடவேண்டும் என்ற கோரிக்கைகள் வந்தன. ஆகையால் அமராவதி கால்வாய் 1-12–82 அன்று புன்செய்ப் பயிர் செய்வதற்கு திறந்து விடப் பட்டது. பாசனத்திற்கு வேண்டிய நீர் விட்டு விட்டு வழங்கப் பட்டது, அமராவதி புதிய பாசனத்திற்கு விடப்படும் நீர் அமராவதி நீர்த்தேக்கத்தில் அதற்குரித்தான கொள்ளளவிலிருந்து தான் விடப்பட்டது. நீர்த் தேக்கத்தில் இருந்த நீரிலிருந்தும், நீர் வரத்திலிருந்தும் அமராவதி அணையின் கீழுள்ள புதிய மற்றும் பழைய ஆயக்கட்டு நிலங்களுக்குப் பாசனத்திற்கான நீர் விட்டு விட்டு வழங்கப்பட்டது. அமராவதி நீர்த்தேக்கத்திலுள்ள நீரின் கொள்ளளவிலிருந்து எவ்வளவு உபயோகிக்க முடியுமோ அந்த அளவுக்கு 10–3–83 வரை பாசனத்திற்காக உபயோகிக் கப்பட்டது. பழைய பாசனத்திற்காக அனுப்பப்படும் நீர் அமராவதி ஆற்றின் அகன்ற மணற்பாங்கான வழியாக நீண்ட தூரம் செல்ல வேண்டியதாக இருப்பதால் பெரிய அளவில் தண்ணீர் விரையம் ஆகிறது. பொதுவாக அமராவதி ஆற்றுடன் கலக்கும் கிளை நதிகளிலிருந்து வரும் நீர் அமராவதி நீர்த் தேக்கத்திலிருந்து விடப்படும் நீருடன் சேர்ந்து உபயோகப் படுத்தப்பட்டு வருகிறது. ஆனால் தற்போதைய வறட்சி நிலை காரணமாக இக்கிளை நதிகள் வறண்டு இருப்பதால் அவற்றி லிருந்து தற்போது நீர் வரத்து இல்லை. இருந்த போதிலும் இருக்கும் நீரைக் கொண்டு நல்ல வகையில் முடிந்த வரை அதிக நிலங்களுக்கு தண்ணீர் தருவதற்கு தேவையான முயற்சிகளை தள அதிகாரிகளைக்கொண்டு நாம் இப்போது செயல்படுத்தி வருகிறோம், ஏற்கனவே குறிப்பிட்டது போல 10–3–83 வரை நாம் இப்போது ஒரு குறிப்பிட்ட பகுதிகளுக்கு நீர் வழங்கிக் கொண்டு வருகிறோம். அந்த அளவிற்கு இருக்கின்ற நீரை மிகக் கவனமாக இந்த அரசு முறையாக விநியோகித்து வருகின்ற காரணத்தாலே பெருமளவிலே விவசாயிகளுக்கு இழப்பு ஏற்படாத ஒரு காரியத்தை அரசு கவனமாக பார்த்து வருகிறது. எனவே மேலும் இது குறித்து விவாதிக்க இந்த அவையை ஒத்தி வைக்கத் தேவையில்லை என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நீர்ப்பாசனத்துறை அமைச்சரின் விளக்கத்திற்குப்பின் பேரவையின் இதர அலுவல்களை ஒத்திவைத்து இத்தீர்மானம் குறித்து விவாதிக்கத் தேவை இல்லை என்பதால், இதற்கு 'இசைவு மறுக்கப்பெறுகிறது.

## 5. கவன ஈர்ப்பு

### சூளைக்காரர்களுக்கு மண்வெட்டிக்கொள்ள விதிக்கப்பெறும் உரிம வரி

திரு. இரா. தாமரைக்கனி: தலைவர் அவர்களே, "திருவில்லிப் புத்தூர் சட்டமன்றப் பேரவை தொகுதியிலுள்ள ஏழை குயவர்கள் மண் எடுப்பதற்கு வரி செலுத்த வேண்டும் என வற்புறுத்தப் படுவதால் அவர்கள் படும் இன்னல் குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு தொழில் அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு எஸ். திருநாவுக்கரசு: தலைவர் அவர்களே, பேரவை முன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

அறிக்கை

இராமநாதபுர மாவட்ட பிற்பட்ட வகுப்பு நல அதிகாரி கடந்த 3–9–80 இல் திருவில்லிபுத்தூர் வட்டம் வெங்கடேச வரபுரம் கிராமத்தில் ஆய்வு நடத்திய பொழுது அங்கு உள்ள 62 செங்கற்சூளை உரிமையாளர்கள் ஆண்டுக்கு 1440 வண்டிப் பாரம் களிமண்ணை உபயோகித்து செங்கற்கள் தயாரிப்பதில் ஈடுபட்டுள்ளனர் என்பது தெரிந்தது. 1959 ஆம் ஆண்டு சிறு கனிம சலுகை விதிகள் விதி 6 (2)ன்படி சிறுகனிம வகையான களிமண், மணல் முதலியவற்றை வேளாண்மை மற்றும் சொந்த பயனுக்கு சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் முன் அனுமதி பெற்று இவ்விதிகளில் அனுபந்தம் இரண்டில் குறிப்பிட்டுள்ள உரிம வரியைச் செலுத்தி வெட்டியெடுத்துக் கொள்ளலாம்.

2. 10–7–80 நாளிட்ட தொழில்துறை அரசாணை நிலை எண். 1060 இல் அறிவிக்கப்பட்ட சலுகைகளின்படி தனி ஒரு மண்பாண்ட கைவினைஞர், கைகளால் செங்கற்கள் தயாரிப்பதிலும் ஈடுபட்டால் அவர்கள் ஆண்டுக்கு 500 வண்டிப்பாரம் களிமண் உரிமவரி செலுத்தாமல் எடுத்துச் செல்லலாம். இந்த குறியீட்டை மிஞ்சுபவர்கள் வண்டிப்பாரம் ஒன்றுக்கு ரூ. 15 பைசா வீதம் உரிமவரி செலுத்தத்தக்கவர்.

3. மாவட்ட பிற்பட்டோர் நல அதிகாரியின் நேரடி ஆய்வில் 62 சூளைக்காரர்களும், ஆண்டுக்கு 500 வண்டிப்பாரத்திற்கு மேல் அதிகமாக களிமண்ணை உபயோகித்திருப்பதாக தெரிய வந்தது. ஆகையால் 940 வண்டிப்பாரம் அதிக அளவு களி ... மாவட்ட ஆட்சியரால் 22–9–80



இல் விதிக்கப்பட்டது. இவ்வாணையின் படி ஒவ்வொரு சூளைக் காரரும் வண்டி ஒன்றுக்கு 15 காசு வீதம் 940 வண்டி களி மண்ணுக்கு ரூ. 141 யை உரிமயாக வரியாக அரசுக்கு செலுத்த வேண்டும். இத் தாகையை அவர்கள் செலுத்தத் தவறியதால் திருவில்லிபுத்தூர் வட்டாட்சியர் வருவாய் வரி வசூல் சட்டத் தின் கீழ் நடவடிக்கை எடுத்து அரசுக்குச் சேரவேண்டிய பணத்தை வசூல் செய்யும்படி பணிக்கப்பட்டார்.

4. இதனால் பாதிக்கப்பட்டவர்களில் சிலர் அரசுக்கு மேல் முறையீடு செய்திருந்தனர். அம்முறையீடு பரிசீலிக்கப்பட்டு இறுதி ஆணை பிறப்பிக்கும்வரை இராமநாதபுர மாவட்ட ஆட்சியரின் ஆணை நிறுத்தி வைக்க உத்தரவிடப்பட்டது. மேல்முறையீடு பரிசீலிக்கப்பட்டு, அரசு அளித்த சலுகையான 500 வண்டிப்பாரங்களுக்கு மேல் இவர்கள் களிமண் வெட்டி யெடுத்து தங்கள் செங்கற்சூளையில் வியாபாரத்திற்கு பயன் படுத்தியிருந்ததனால் இவர்களின் மேல் முறையீடு பரிசீலனைக்கு பிறகு நிராகரிக்கப்பட்டது. உரிமவரிக் கட்டணம் மண்பாண்டம் செய்யும் ஏழைக்குயவர்களுக்கு விதிக்கப்படவில்லை, அரசு அளித்த சலுகை குறியீடான 500 வண்டிப்பாரத்திற்கும் அதிகமாக களிமண்ணை எடுத்து உபயோகப்படுத்திய செங்கற் சூளை உரிமையளர்களுக்கு மட்டுமே உரிமவரி விதிக்கப்பட் டுள்ளது. செங்கல்லின் விலையை நோக்கும் போது 500 வண்டி பாரத்திற்கு மேல் களிமண் வெட்டி எடுத்து உபயோகிப் போருக்கு மட்டும் உரிமவரி வண்டி ஒன்றுக்கு 15 பைசா விதிப்பது அபரிமிதமானது அன்று.

திரு. இரா. தாமரைக்கனி: பேரவைத் தலைவர் அவர்களே, திருவில்லிபுத்துார் தொகுதியில் உள்ள ஏழைக் குயவர்கள், பெரிய சேம்பர் மாதிரி உள்ள செங்கல் சூளையோ, அல்லது பெரிய அளவிலான சூளையை வைத்திருக்கவில்லை. தரையிலான சூளையைத்தான் வைத்திருக்கிறார்கள். கையினால் செய்யக்கூடிய பானை, சட்டி, கைச்செங்கற்கள் முதலியவற்றைத் தான் அவர்கள் செய்து கொண்டிருக்கிறார்கள். கையினால் செய்யக்கூடிய அந்தத் தொழில்கள் இப்போது நசிந்துக் கொண்டு வருகின்ற காரணத்தால் இப்போது மண் எடுப்பதற்கு உள்ள அந்த வரியை அமைச்சர் அவர்கள் நீக்கி அறிவிப்பார்களா என்று நான் அறிவதுடன் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நேரடியாகவே வந்தால் அவர்கள் அந்த கையினால் செய்யக் கூடிய அந்தத் தொழிலைப் பார்வையிடலாம் என்று அவர் களுக்குக் கோடிட்டுக் காட்டி, வரிச் சலுகை அறிவிப்பார்களா என அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு எஸ். திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே: இந்தக் குயவர்கள் சமுதாயத்தைச் சேர்ந்த கைவினைஞர்களை உற்சாகப்படுத்த வேண்டும் என்ற நோக்கத்தோடு தான் 500 வண்டி பாரங்கள்

களி மண் எடுத்துக்கொள்ள அவர்களுக்கு அனுமதி அளிக்கப் பட்டிருக்கிறது. அதற்கு அவர்கள் எந்தவித வரியும் செலுத்த வேண்டியதில்லை என்ற ஆணையை 10-7-80-ல் தொழில்துறை வெளியிட்டிருக்கிறது. இதற்கு மேலே 500 வண்டிப் பாரத் திற்கு மேலே எடுக்கப்படுகிற ஒவ்வொரு வண்டிக்கும் 15 பைசா வீதம் உரிமம் அல்லது கட்டணம் வாங்கப்படுகிறது. எனவே 50 வண்டிக்கு மேலே எடுத்து, பெரிய செங்கற் சூளை நடத்துகின்றவர்கள் தான், அவர்கள் எடுக்கின்ற ஒவ் ொரு வண்டிக்கு 15 பைசா கட்டணம் கட்டவேண்டும் என்று இருக்கிறது. எனவே அவர்கள் 500 வண்டிப் பாரத் திற்கு மேலே எடுக்கவேண்டும் என்கிற நிலையில் இருக்கிற போது இந்த 15 பைசா என்பது மிகவும் குறைவான ஒன்று தான் எனவே 500 வண்டிப்பாரம் வரைக்கும் அவர்களுக்கு எந்தவிதமான கட்டணமும் இல்லாமல் பயன்படுத்திக்கொள் ளலாம்.

திரு. இரா. தாமரைக்கனி; பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் கொடுத்திருக்கின்ற குறிப்பில் 940 வண்டிகள் அவர்கள் மண் எடுப்பதாக குறிப்பிடப்பட்டிருக்கிறது. 500 வண்டிக்கு குறைவாக இருந்தால் அவர்களுக்கு எந்தவித கட்டணமும் கிடையாது என்று அமைச்சர் அவர்கள் சொல் கிறார்கள். 500 வண்டிக்கும் குறைவாகத்தான் அவர்கள் மண் எடுத்துக்கொண்டிருக்கிறார்கள். அரசாங்கத்திற்கு அரசு அதிகாரிகள் ஒரு தவறான குறிப்பைக் கொடுத்திருக்கிறார்களோ என்று நான் கருதுகிறேன். 500 வண்டிக்கும் குறைவாக யார் மண் எடுக்கிறார்கள் என்பதை அரசு அதிகாரிகள் சரியான முறையில் பார்க்கவில்லை என்று தெரிகிறது. அதனால் அவர்கள் கெடுபிடிகள் செய்கிறார்கள். ஆதலால் இந்தக் கெடுபிடிகள் நீக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு; பேரவைத் தலைவர் அவர்களே, அறிக்கையிலே சொல்லப்பட்டிருப்பது சுமார் நூற்றுக்கணக்கான பேர்கள் அந்தப் பகுதியிலே உள்ள குய வர்கள் சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் சிறிய மண்பாண்டங்கள் செய்வது போன்ற தொழிலில் ஈடுபட்டிக்கிறார்கள். அதிலே 62 பேர்கள் மட்டும்தான் இங்கே சொல்லப்பட்டது போல் ஏறக்குறைய ஆயிரம் வண்டிகளுக்கு மேல் களிமண் எடுத்துச் செ கிறார் ள். எனவே அப்படிப்பட்டவர்கள் தான் 500 வண்டிப் பாரத்திற்கு மேல் எடுத்துச்செல்கிறார்கள். அப்படி 500 வண்டிகளுக்கு மேல் எடுத்துச் சென்றவர்கள், ஒவ்வொரு வண்டிக்கும் 15 பைசா கட்டணம் கட்டவேண்டும் என்று சால்லி அதையும் கட்டாதவர்கள் மீதுதான் தாசில்தார் வெர்கள் நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள்; எனவே அவர்கள் அவ்வளவு எடுத்துச் சென்றார்களோ, அந்த வண்டியின் அளவு தான் இங்கே அறிக்கையிலே குறிப்பிடப்பட்டிருக்கிறது; எனவே இது ஒன்றும் தவறான குறிப்பல்ல. அவர்கள் எ[illegible]





வண்டிகளை எடுத்துச்சென்றார்கள் என்பதைத்தான் அதிகாரிகள் மூலம் பெற்று நான் இங்கே சொல்லியிருக்கிறேன்.

(முற்பகல் 10-30)

ஆனால் 500 வண்டிக்கும் குறைவாக எடுத்துச் சென்ற வர்களிடமும் கட்டணம் வசூல் செய்கிறார்கள் என்று தெரி வித்தால், ரெவின்யூ இன்ஸ்பெக்டரோ, தாசில்தாரோ பணம் கட்ட வேண்டுமென்று தவறாகச் சொல்வதாக இருந்தால், அவர்கள் யார், யார் என்ற விவரத்தை அரசின் கவனத்திற்குக் கொண்டு வந்தால் கண்டிப்பாக அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படும், என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

6. வரவு-செலவுத் திட்டம்1983-84 வாக்கெடுப்பு (தொடர்ச்சி)

(அ) கோரிக்கை எண் 28—சமுதாய நல வளர்சித் திட்டங்களும் நகராட்சி நிர்வாகமும்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு; தலைவரவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்.—

''மானியக் கோரிக்கை எண் 28—சமுதாய நல வளர்ச்சித் திட்டங்களும் நகராட்சி நிர்வாகமும் என்ற தலைப்பின் கீழ் ரூ. 1,40,21,14,000/-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்.''

திரு மு. அரங்கநாதன்: தலைவரவர்களே, குன்னூர் சந்தையில் நகராட்சி போக்குவரத்து பாதிக்கும் முறையில் நடைபாதை யில் கடைகள் அமைப்பது பற்றி விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்.—

''மானியக் கோரிக்கை எண் 28—சமுதாய நல வளர்ச்சித் திட்டங்களும் நகராட்சி நிர்வாகமும் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 1,40,21,14,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்.''

திரு. கே. கல்லன், தலைவரவர்களே, உதகை நகராட்சி வசம் உள்ள குடிநீர் தேக்கங்களில் பராமரிப்பு செய்து இரசாயன முறையில் சுத்தப்படுத்துவது சரியில்லாததைப் பற்றி விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்.

''மானியக் கோரிக்கை எண் 28—சமுதாய நலவளர்ச்சித் திட் டங்களும் நகராட்சி நிர்வாகமும் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 1,40,21,14,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்.''

திரு.ரா. கிருஷ்ணன்: தலைவரவர்களே, புளியங்குடிநகராட்சிப் பகுதியில் குடிநீர் உத்திரவாதம் செய்ய கோடைகால நீர்த் தேக்கம் அமைக்கப்படாமல் இருப்பது குறித்து விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்.

''மானியக் கோரிக்கை எண் 28—சமுதாய நல வளர்ச்சித் திட்டங்களும் நகராட்சி நிர்வாகமும் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 1,40,21,14,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்.''

திரு. எம் ஆறுமுகம்; தலைவரவர்களே, கோவை மாநகராட்சி அம்மன்குளம் பகுதி, காந்திபுரம சுப்பராயன் சாலை, வேலாண்டி பாளையம் கவுர்பாளையம் ஆவரம்பாளையம் புலியகுளம் ஆகிய பகுதிகளில் கழிப்பிட வசதிகள் செய்துகொடுக்கப்பட வேண்டும் என்று விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்.

'' மானியக் கோரிக்கை எண் 28—சமுத்ாய நல வளர்ச்சித் திட்டங்களும் நகராட்சி நிர்வாகமும் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 1,40,21,14,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்.''

கோரிக்கை எண் 39—சாலைகளும் பாலங்களும்

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: தலைவரவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

''மானியக் கோரிக்கை எண் 39—சாலைகளும் பாலங்களும் என்ற தலைப்பின் கீழ் ரூ. 67,54,80,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெற வேண்டும்.''

திரு. த. வேணுகோபால்: தலைவரவர்களே, தண்டராம்பட்டு ஊராட்சி ஒன்றியத்தில் திரு. எடுத்தனூரில் இருந்து புத்தூர் செக்கடிக்கு செல்வதற்கு குறுக்கே பாப்பன் ஆற்றில் பாலம் கட்டுவது பற்றி விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்.

''மானியக் கோரிக்கை எண் 39—சாலைகளும் பாலங்களும் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ 67,54,80,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்.''

திரு. எல். இளையபெருமாள்: தலைவரவர்களே, To discuss about the unsatisfactory conditions of Chidambaram to Kattumannar Koil Highways Road in South Arcot District, It move that

"A sum of Rs. 67,54,80,000 - under demand No. 39 Roads and Bridges be red uced by Rs. 100/-.

திரு. டி. மணி: தலைவரவர்களே, களியல் கிராமத்தில் மலைப்பாங்கான பகுதியான அணைமுகம் என்னும் பகுதியில் கருப்பை ஆற்றின் குறுக்கே கட்டியிருந்த பாலம் உடைந்துள்ளதால் புதிய பாலம் கட்ட நடவடிக்கை மேற்கொள்ளாதது பற்றி விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழி



''மானியக் கோரிக்கை எண் 39—சாலைகளும் பாலங்களும் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ. 67,54,80,000-ல் ரூ 100 குறைக்க வேண்டும்.''

136071

கோரிக்கை எண் 53— சாலைகள் - பாலங்கள் குறித்த மூலதனச் செலவு

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: தலைவரவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

''மானியக் கோரிக்கை எண் 53—சாலைகள்-பாலங்கள் குறித்த மூலதனச் செலவு என்ற தலைப்பின் கீழ் ரூ. 27,62,77,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்.''

திரு. பெ. சு. திருவேங்கடம்: தலைவரவர்களே, கிராம சாலைகள் போடும் திட்டத்தில் 1,500 மக்கள் தொகை என்பதை 1,000 மக்கள் தொகை உள்ள கிராமங்களுக்கும் தார் சாலை போட கோரி விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

''மானியக் கோரிக்கை எண் 53—சாலைகள்—பாலங்கள் குறித்த மூலதனச் செலவு என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ 27,62,77,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்;''

திரு. கே. எம் தங்கமணி: தலைவரவர்களே, திண்டிவனம் வட்டம்—இரட்டணையில் உள்ள தொண்டியாற்றில் மழைக் காலங்களில் போக்குவரத்தும் பொதுமக்களும் பாதிக்கப்படுவதால் வெள்ளையர் ஆட்சி காலத்திலிருந்து கோரப்பட்டு வரும் கோரிக்கையான மேம்பாலம் கட்டும் திட்டத்தை நிறைவேற்றி சுமார் 15 கிராமங்கள் பயனடைய வகை செய்வது பற்றி விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

''மானியக் கோரிக்கை எண் 53—சாலைகள்-பாலங்கள் குறித்த மூலதனச் செலவு என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 27,62,77,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்.''

திரு. ரா. கிருஷ்ணன்: தலைவரவர்களே, கொள்கை பற்றி விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்.—

''மானியக் கோரிக்கை எண் 53—சாலைகள்—பாலங்கள் குறித்த மூலதனச் செலவு என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 27,62,77,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்.''

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மானியக் கோரிக்கைகளும் வெட்டுத் தீர்மானங்களும் பேரவை முன் விவாதத்திற்கு வைக்கப் பெறுகின்றன. மாண்புமிகு அமைச்சரவர்கள் முன்னுரையாக ஏதாவது கூற விரும்பினால் கூறலாம்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: தலைவரவர்களே, மூன்று மானியக் கோரிக்கைகளுக்கும் நிர்வாக, கொள்கை விளக்கப் புத்தகங்கள் ** அவை முன் வைக்கப்பட்டிருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர்கள் தங்களுடைய கருத்துக்களைச் சொன்ன பின்னால் என்னுடைய முடிவுரையாக என்னுடைய கருத்துக்களைச் சொல்ல இருக்கிறேன்.

அதே நேரத்தில் ஒரே ஒரு திருத்தத்தை மட்டும் தெரிவித்துக் கொள்கிறேன். சமுதாயப் பணிகள் என்ற புத்தகத்தில் (தமிழ்) 23-வது பக்கத்தில் முதல் பாராவில் 300 பேரூராட்சிகள் என்று இருப்பதை 200 பேரூராட்சிகள் என்று மாற்றிக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அதைப்போன்று ஆங்கிலத்தில் இருக்கக்கூடிய அந்தப் புத்தகத்தில் பக்கம் 22-ல் 300 என்று இருப்பதை 200 என்று மாற்றிக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவை தலைவர்: இன்றைக்கு நிறைய பேர்கள் பேசுவதற்குப் பெயர் கொடுத்திருக்கிறார்கள். எல்லோருக்கும் உள்ளாட்சித் துறையிலே பேச வேண்டுமென்ற ஆர்வம் இருப்பதை பாராட்டுகிறேன். நேரம் குறைவாக இருப்பதால் ஒவ்வொருவரும் 5 நிமிடத்தில் முடித்துக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். (குறுக்கீடு.)

பேசுவதற்குப் பெயர் கொடுத்தவர்களை நான் கேட்டுக் கொள்கிறேன். சீக்கிரமாகப் பேசி முடித்துக்கொண்டால் இன்றைக் க் காலையிலேயே இதை முடிக்கலாம். இல்லையென்றால் மாலையிலும் கூட்டம் நடத்த வேண்டி இருக்கும். எனவே ஐந்தைந்து நிமிடத்தில் பேசி முடித்துக் கொண்டால் நல்லது.

திரு. ரா. உமாநந்த்: பேரவைத் தலைவர் அவர்களே, உள்ளாட்சித் துறை எவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்தது என்பது குறித்து தாங்களே குறிப்பிட்டு இருக்கிறீர்கள். எனவே 5 நிமிடத்தில் அந்தத் துறையினைப்பற்றி எப்படிப் பேச முடியும்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: விளக்கமாகப் பேசும்போதே சுருக்கமாகவும் பேசலாம் என்பதற்காகத்தான் சொல்கிறேன்.

திரு. ரா. உமாநந்த்: பேரவைத் தலைவர் அவர்களே நேரம் அதிகமாக வேண்டும்.

** [illegible] பக்கங்களில் [illegible] ாக அச்சிடப் [illegible]



மாண்புமிகு பேரவைத் தலைவர்: அப்படியானால் மாலையிலும் நடத்த வேண்டிய நிலைமை ஏற்படும். மாலையில் நடத்துவதற்கு அலுவல் ஆய்வுக் குழுவினைக் கூட்டித்தான் கேட்க வேண்டும். இப்போது அதற்கு நேரம் இல்லை.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: பேரவைத் தலைவர் அவர்களே, மணி இப்போது 10½ ஆகின்றது. ஒன்றரை மணி வரை என்று பார்க்கின்றபோது 3 மணி நேரம் இருக்கின்றது. வேண்டுமானால் கூட ஒரு அரை மணி நேரம் எடுத்துக் கொண்டால் 3½ மணி நேரம் இருக்கின்றது அதற்குள்ளாக முடித்து விட வாய்ப்பு இருக்கின்றது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சரி. ஆளுக்கு பத்து, பத்து நிமிடங்களாக எடுத்துக்கொண்டு பேசி முடித்து விட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. கெ. சொக்கலிங்கம்: மண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைய தினம் நமது உள்ளாட்சித்துறை அமைச்சர் அவர்கள் சமுதாய நல வளர்ச்சித் திட்டங்களும், நகராட்சி நிர்வாகமும் மற்றும் சாலைகளும் பாலங்களும் ஆகிய மானியக் கோரிக்கைகளைக் குறித்து என்னுடைய கருத்துக்களை திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாகச் சொல்ல விரும்புகிறேன்.

நமது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்த மானியத்தை இன்றைய தினம் அறிமுகம் செய்திருக்கிறார்கள். ஆனால் இந்த சர்க்கார் 1977-லிருந்து நடைபெற்றுக் கொண்டு வருகின்றது. பலமுறை இப்படிப்பட்ட மானியங்கள் இந்த மன்றத்திலே வந்திருக்கின்றது. ஆனால் இதுவரையில் இந்த நிர்வாக நிலைமைகளைக் கவனிக்கின்ற வகையிலே உள்ளாட்சி மன்றங்களான ஊராட்சி, பேரூராட்சி, நகராட்சி ஆகியவற்றுக்கான தேர்தல் நடைபெற்றதா என்றால் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அப்படித் தேர்தல் நடைபெறாததற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பல காரணங்களைச் சொல்லிக்கொண்டு வருகிறார்கள். எனவே நான் என்னுடைய பேச்சின் முதல் பகுதியிலேயே இந்த நகராட்சி, ஊராட்சி மன்றங்களுக்குத் தேர்தல் நடைபெறாமல் இருப்பது குறித்த என்னுடைய கண்டனத்தை தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்றைய தினம் இந்த ஆட்சி வந்ததற்குப் பிறகு கிராமங்களில் தண்ணீர் பஞ்சம் ஏற்பட்டிருக்கிறது, சாலைகள் எல்லாம் பழுதடைந்து விட்டது. மக்கள் பிரதிநிதிகள் இருந்தால் அவர்களிடம் மக்கள் கோரிக்கைகளை வைப்பார்கள். ஊராட்சி ஒன்றியத் தலைவர்கள் இருந்தால் அவர்களிடத்திலே [illegible] பிரச்சினைகளைக் குறித்து கோரிக்கைகளை [illegible]

அப்படிப்பட்ட சூழ்நிலையில் அன்றாடப் பிரச்சினைகளை உடனுக்குடன் தீர்த்துக் கொள்வதற்கு வசதியாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன. ஆனால் நாம் மட்டும் அமைச்சராக வரலாம், சட்டமன்ற உறுப்பினராக வரலாம் தொடர்ந்து பதவியிலே இருக்கலாம் என்ற நிலையில் ஊராட்சி மன்றத் தலைவர்களையோ, ஊராட்சி ஒன்றியத் தலைவர்களையோ வரவழைப்பதற்கு ஏனோ தயங்குகிறார்கள். ஏனோ அச்சப்படுகிறார்கள். பல காரணங்களைச் சொல்லி தள்ளிப் போட்டுக் கொண்டு வருகிறார்கள்.

அடுத்து, என்னுடைய தொகுதியான காட்டாங்குளத்தூர் ஒன்றியத்தில் அமைச்சர் அவர்கள் தன்னிறைவுத் திட்டத்தை அமல்படுத்தி இருக்கிறார்கள். ஆனால் அதே நேரத்தில் தனிப்பட்ட முறையில் நான் அமைச்சரிடத்திலே இந்த நிதி ஒதுக்கத்திற்காக பாராட்டும் சொல்லி இருக்கிறேன். ஆனால் அந்தப் பணம் ஒழுங்காக செலவழிக்கப்படுகின்றதா என்றால் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். குறிப்பாக காட்டாங்குளத்தூர் ஒன்றியத்தில் 1982–83-ஆம் ஆண்டு தன்னிறைவுத் திட்டத்தை அமல்படுத்திய நேரத்தில்—அந்தத் தன்னிறைவுத் திட்டத்திற்காக 40 இலட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டது.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை.)

(முற்பகல் 10–40)

அந்தப் பணிகள் ஒழுங்காக செம்மையாக நடைபெறவில்லை அதற்கு பல காரணங்கள் உள்ளது. நான் பலமுறை ங்கிருக்கிற அதிகாரிகளிடத்தில் சொல்கிற நேரத்தில் டெண்டர் விடுகிற நேரத்தில் 40 சதவீதம் அங்கு இருக்கிற ஒப்பந்தக்காரர்கள் தள்ளி எடுத்து விடுகிறார்கள். எப்படி அந்த வேலைகள் செம்மையாக நடைபெறும். என்றால் இல்லை அதற்கு முறையான சில வரைமுறைகளை செய்ய வேண்டும். டெண்டர் கால்ஃபர் பண்ணும்போது அந்த பணத்தில் 20 சதவீதம் என்று ஒரு வரைமுறை இருக்கலாம். ஆனால் 40, சதவீதத்திற்கு டெண்டர் எடுத்து விடுகிறார்கள். தனால் அந்த சாலைகளும் பாலங்களின் வேலைகளும் சரியாக நடைபெறவில்லை என்பதை அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு கொண்டுவர விரும்பு கிறேன். நீங்கள் இதில் நான் குற்றத்தைச் சொல்கிறேன் என்று எண்ணக்கூடாது. அந்த காட்டாங்குளத்தூர் ஒன்றியத்தில் இன்றைய தினம் அந்த வேலைகள் நடைபெறாததற்கு காரணங்கள் அங்கு இருக்கிற ஆளும் கட்சிக்காரர்கள் அதற்கு காரணம் இதற்கு முன்னோடியாக இருக்கிறார்கள். நான் உதாரணங்கள் சொல்ல முடியும். குறிப்பாக த னிறை பணிகள் அங்கிருக்கிற ஆணையாளர் முதற்கொண்டு அங்கிருக்கி அலுவலர்கள் குறிப்பாக பொறியாளர்கள் முதற்கொண் எல்லோரும் ஒப்பந்தக்காரர்களிடத்தில் போம் வந்



லகள் இன்றைய தினம் பாழ்படுத்தப்பட்டுள்ளது. அதற்கு ரணம் சொல்லலாம். எந்த எந்த இடம் என்று சொல்லலாம். எந்த கிராமம் என்று சொல்லலாம். வேண்டும் என்றால் புள்ளி விவரத்தோடு தருவதற்குத் தயாராக இருக்கிறேன். மட்டும் அல்லாமல் நீங்கள் தேசிய வேலை வாய்ப்பு திட்டம் ண்டு வந்திருக்கிறார்கள். அதற்கு மத்திய சர்க்கார் 50 தமும் மாநில சர்க்கார் 50 சதவீதமும் போட்டு அந்த டத்தை கொண்டு வந்திருக்கிறீர்கள். நீங்கள் சொல்வது ாம் இந்த மாநில சர்க்கார் தான் இந்த அ.இ.அ.தி.மு.க. ன் கொண்டு வந்தது என்று அதிகமாக விளம்பரப்படுத்தி கிறீர்கள். பரவாயில்லை. நீங்கள் எதையும் செய்யவில்லை றாலும் கூட இதை விளம்பரப்படுத்தியிருக்கிறீர்கள் சென்ற நிலை அறிக்கையிலே பேசும்போது விளம்பரப்படுத்துவதில் காயசூரர்கள் என்று சால்லியிருக்கிறேன். அப்படிப்பட்ட ம்பரத்தை இன்றைய தினம் இந்த அரசு செய்து கொண்டி றது. குறிப்பாக காட்டாங்குளத்தூர் தன்னிறைவு பணி த்து உதாரணமாக ஒன்றை மாண்புமிகு அமைச்சர் அவர் டைய கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். ட்டாங்குளத்தூர்.. (குறுக்கீடு)

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: மாண்புமிகு பேரவைத் ணைத் தலைவர் அவர்களே, குறுக்கீடு செய்வதற்காக மன்னிக்க ண்டுகிறேன். ஏன் என்று சொன்னால் மாண்புமிகு ப்பினர் அவர்கள் தன்னிறைவு திட்டத்திற்கு மத்திய க்கார் 50 சதவீதமும், மாநில சர்க்கார் 50 சதவீதமும் ட்டு வேலைகள் நடைபெறுவதாக பேசியிருக்கிறார்கள். ன்னிறைவு திட்டத்திற்கு ஒரு நயா பைசா கூட திய அரசு கொடுக்கவில்லை என்பதனை நான் பணிவோடு ரிவித்துக் கொள்கிறேன். ஏன் என்று சொன்னால் அப்படிப் ட கருத்துக்கள் வரக்கூடாது என்பதற்காகத்தான் நான் ால்கிறேன்.

திரு. கெ. சொக்கலிங்கம்: மாண்புமிகு பேரவைத் துணைத் லைவர் அவர்களே, தேசிய வேலை வாய்ப்புத் திட்டத்தை ன் சொன்னேன். தன்னிறைவு திட்டத்தை அல்ல. சிய வேலை வாய்ப்பு திட்டத்திற்கு சிலத் தொகைகள் லவழிக்கப் பட்டிருக்கிறது. அந்த தேசிய வேலை வாய்ப்பு ட்டத்திற்கு இப்போது ஆர். டபிள்யூ. ஓ. கிராம வக் மூலம் அந்த வேலைகள் கொடுக்கப்படுகிறது. ப்போது உங்கள் ஆட்சியில் அதிகாரிகள் தான் ஆட்சியை நடத்து றார்கள். அதிகாரிகள் எல்லா வேலைகளையும் செய்கிறார்கள். ராம சேவக் முதற்கொண்டு, ஆணையாளர் முதற்கொண்டு தற்கெடுத்தாலும் தனி அதிகாரிகள் தான் வேலை செய்கி ர்கள். நீங்கள் எதற்கெடுத்தாலும் தனி அதிகாரிகளை நீடிப்பு ட்டம் மூல நீடித்துக் கொண்டு இருக்கிறீர்கள்—இதனால் வலைகள் ரிவர நடைபெறவில்லை. * *

* * மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணை ணங்க அகற்றப்பெற்றது.

மாண்புமிகு திரு. ப, குழந்தைவேலு: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அவையில் இல்லாதவருடைய பெயரைச் சொல்லி ஒரு குற்றச்சாட்டை சொல்வது சரியாக இருக்க முடியாது. அப்படி அவர்கள் என்பது என்று சொன்னால் ** என்ற விவரமான பட்டியலை நான் சொல்வார்கள் இருக்கிறேன். அதை வேண்டுமானாலும் வைத்து தயாராக இருக்கிறேன். ** சொல்வதற்கு நான்

மாண்புமிகு பேரவைத் துணை தலைவர்: அதை எல்லாம் அவைக் குறிப்பிலிருந்து நீக்க ஆணையிடுகிறேன்.

திரு. கெ. சொக்கலிங்கம்: துணைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் இரண்டு கட்சிக்காரர்கள் என்று சொல் கிறார்கள். அந்த வாதத்தை நான் ஏற்றுக் கொள்கிறேன், இல்லையென்று நான் சொல்லவில்லை. நான் கவர்னர் அவர் களுக்கு 3—12—82 அன்று ஒரு கடிதம் எழுதினேன். முதலமைச் சருக்கும் எழுதினேன். நான் அந்த வாசகத்தைப் படிப்பதற்கு நேரம் இல்லை. என்னுடைய பகுதியிலே 48 பஞ்சாயத்துக் களிலே ஆளுங்கட்சியைச் சேர்ந்தவர்களுக்கு கொடுக்கப்பட்டு முழுமையாக அவர்களே ஈடுபட்டிருக்கிறார்கள். 1—11—82 அன்று 5 பஞ்சயத்துக்களை குறிப்பாகக் குறிப்பிட்டு ஒரு மனுவை நான் கொடுத்திருக்கிறேன். முதல் அமைச்சரிடத்தி லேயும் கொடுத்திருக்கிறேன். ஆளுநர் அவர்களிடத்திலேயும் கொடுத்திருக்கிறேன். ஆனால் இதுவரையில் அதற்கு எந்த பதிலும் இல்லை. அமைச்சர் அவர்கள் உடனடியாக கவனிக்கு மாறு கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, ஊரக வளர்ச்சித் திட்டத்தின் கீழ் அரிசனங்களுக்கு வீடு கட்டும் திட்டம் இருக்கிறது. என்னுடைய தொகுதியிலே எந்த ஒரு இடத்திலேயும் வீடு கட்டப்படவில்லை. இதிலே சொல்லியிருக்கிறார்கள், 'ஆயிரக்கணக்கான ஆதி திராவிடர் குடும்பங்கள் சொந்த வீடின்றி சிறு குடிசைகளில் வாழ்ந்து வருகின்றனர். பொருளாதாரத்திலும் சமுதாயத்திலும் நலிந்த இப்பிரிவினர்க்கு வீட்டுவசதி அவசியமாகிறது. இத்திட்டம் நகர்ப் புற வளர்ச்சி மற்றும் வீட்டு வசதித் துறையினரால் நிறைவேற்றப் படுகிறது' என்று சொல்லப்பட்டிருக்கிறது. என்னுடைய பகுதி யிலே எந்த ஒரு இடத்திலேயும் இந்தத் திட்டம் நிறைவேற்றப் படவில்லை. இந்தத் திட்டத்தை அங்கே அமல்படுத்துவார்கள் என்று நம்புகிறேன்.

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக் கிணங்க அகற்றப்பெற்றது.



திருப்போரூர் ஒன்றியத்தில் பல சாலைகள் செப்பனிடப் படாமல் இருக்கின்றன. உதாரணமாக தையூர் சாலை போக்கு வரத்து வசதியில்லாமல் இருக்கிறது. அதை துரிதமாக செய்து கொடுக்க வேண்டும். அதைப்போலவே பாலூர் சாலை, அதை யும் உடனடியாக செப்பனிட நடவடிக்கை எடுக்க வேண்டும். காட்டாங்குளத்தூரில் பல கிராமங்களில் சாலைப் போக்குவரத்து இல்லாத நிலையில் உதாரணமாக கலிவந்தப்பட்டு, கழிநிலையம் ஆகிய இடங்களில் மோசமான நிலை இருக்கிறது, அவைகளை நெடுஞ்சாலைத் துறையில் எடுத்து போக்குவரத்து வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும். திருச்செந்தூர் தொகுதியில்— நான் அங்கே நடந்த தேர்தலுக்குள்ளே போகவில்லை— திருச்செந் தூரில் தோப்பூர் என்ற கிராமத்திலே நான் வேலை செய்ய சென்றிருந்தபோது— அங்கே குடிநீர் குழாய் வேண்டுமென்று குடிநீர் வாரியத்திடம மனுவைக் கொடுத்து 7 ஆண்டுக் கால மாகியும்கூட கொடுக்கவில்லை. தேர்தல் காலத்திலே தான் அதைச் செய்தார்கள். இடைத்தேர்தல் வந்தால்தான் செய்கி றார்கள் என்ற நிலை இருப்பதால் இடைத்தேர்தல் வந்தால்தான் அந்தக் காரியங்கள் நடக்கின்றன. ஒரு சட்டமன்ற உறுப்பினரை சாகடித்து விட்டால் இடைத் தேர்தல் வரும் என்று சொல்லக் கூடிய நிலைமையில் உள்ளது. (மணியடிக்கப்பெற்றது.) இப்படிப்பட்ட நிலை இனி வரவேண்டாம் என்று அரசுக்கு கூறி விடைபெறுகிறேன். நன்றி வணக்கம்.

திரு. கே. சௌந்திரராசன்: துணைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் கொண்டு வந்துள்ள உள்ளாட்சித் துறை, சாலையும் சாலைப் போக்குவரத்தும் ஆகிய மானியக் கோரிக்கை களை ஆதரித்து என்னுடைய கருத்துக்களைக் கூறக் கடமைப் பட்டிருக்கிறேன். இன்றைய தினம் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் மிக விரைந்த நிலையிலே பணியாற்றி அடித் தளத்திலே இருக்கின்ற மக்கள் எல்லோரும் நாட்டிலே உள்ள அத்தனை வசதிகளையும் பெறவேண்டுமென்ற முறையிலே திட்டங்களைத் தீட்டியிருக்கிறார்கள். இன்றைய தினம் உள்ளாட்சித் துறையின் மூலமாக 140 கோடி ரூபாயும் சாலை களும் பாலங்களும் என்ற துறையின் மூலமாக 94 கோடி ரூபாயும் மொத்தம் 234 கோடி ரூபாய் செலவு செய்வதற்காக மானியக் கோரிக்கைகளை வைத்திருக்கிறார்கள். ஆகவே, நான் அமைச்சர் அவர்களைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். காரணம் புரட்சித் தலைவர் அவர்கள் கொண்டு வந்திருக்கின்ற தன்னிறைவுத் திட்டத்தின் மூலமாக கிராமப் பகுதிகள் எந்த அளவுக்கு எழிலோடு விளங்க வேண்டுமென்று திட்டங்களைத் தீட்டினார்களோ அந்த வகையில் இவை அமைந்திருக்கிறது என்பதால் நான் பாராட்டுதலைத் தெரிவித்துக் கொள்கிறேன். சில இடங்களிலே எப்படிப்பட்ட நிலைமைகள் உருவாகியிருக் கின்றன. உள்ளாட்சித் துறையானாலும் சரி, நெடுஞ்சாலைத் துறையானாலும் சரி எப்படிப்பட்ட நிலைமைகள் இருக்கின்றன என்பதை எடுத்துச் சொல்வது என்னுடைய கடமை என்பதைத்

(முற்பகல் 10.50)

தெரிவித்துக் கொள்கிறேன். காரணம் சில விஷயங்களை மூடி மறைத்துக்கொண்டு இருப்போமானால் நிச்சயமாக நம்மை நாமே ஏமாற்றிக் கொள்கிறோம் என்ற இடத்திற்கு நாம் வந்து விடுகிறோம். திருச்சியை எடுத்துக்கொண்டால் அங்கே இருக்கிற சாலைகள் போடுவதற்கு ஏராளமாக செலவு செய்திருக்கிறோம். அந்த செலவினுடைய முழுப்பயனும் நமக்கு கிடைத்திருக்கிறதா என்றால் இல்லை. அதேபோல நகராட்சியிலே செலவு செய்கிறோமே தவிர, அங்கே பெரிய மனிதர்களும், பணக்காரர்களும் தான் கொழுத்துப் பேசுகிற சூழ்நிலை உருவாகியிருக்கிறது. இந்தத் திட்டத்தின் மூலமாக செலவு செய்யப்படுகிற பணம் ஏழை, எளியவர்களைப் போய்ச் சேர்வதில்லை. காரணம் அவைகளைச் சொல்கிறபோது ஒன்றை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். திருச்சி நகரசபையிலே பல பகுதிகள், பிரதானமாக இருக்கிற பகுதிகள் கூட கடந்த காலத்தில் மிகப் பெரிய பணக்காரர்களாலும், சோடீஸ்வரர்களாலும் கபளீகரம் செய்யப்பட்டிருக்கிறது. இதை நான் பல நேரங்களில் மாவட்ட வளர்ச்சி மன்றக் கூட்டங்களிலும், நகரசபை வளர்ச்சிக் கூட்டங்களிலும் எடுத்துக் கூறியிருக்கிறேன். குறிப்பாக சொல்வதென்றால் திருச்சியினுடைய மத்திய பகுதியாக இருக்கிற மேலபுரிவார் ரோடு, பெரிய கடைத் தெரு, சிந்தாமணி, சிங்காரத்தோப்பு இப்படிப்பட்ட பகுதிகளிலே இருக்கிறவர்கள். பெரிய பணக்காரர்கள் அந்த இடங்களை ஆக்கிரமித்து வைத்துக் கொண்டு இன்றைய தினம் உல்லாச வாழ்க்கைக்கு அவர்கள் தங்களை தயார்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். இவைகளை எடுத்துச் சொல்கிறபோது அவைகள் குறித்து எந்தவிதமான நடவடிக்கையும் இல்லை என்பதை பார்க்கிறபோது நான் வேதனை அடைகிறேன். அங்கே ஒரு குடிசையை ஏழை போட்டு விட்டால், எளியவர்கள் போட்டு விட்டால், இல்லாதவர்கள் போட்டு விட்டால், இயலாதவர்கள் போட்டு விட்டால் அவைகளை நீக்குவதிலே அதிகாரிகள் முனைந்து பாடுபடுகிறார்கள். அவர்களுக்கு பின்னாலே, பணக்காரர்கள் முனைந்து உதவி செய்கிறார்கள் என்பதை மறைத்துவிட்டு இங்கே பேசுவது நியாயமில்லை என்று கருதுகிறேன். திருச்சி சிந்தாமணிப் பகுதியிலே ஒரு மிகப்பெரிய பிரச்சினை உருவாகியிருக்கிறது. அங்கே இருக்கிற இடத்தில் சாலைப் போக்குவரத்துத் துறையிலே, நகரசபையிலே ஒரு பேருந்து நிலையத்தை ஏற்படுத்த வேண்டுமென்று ஒரு திட்டம் தீட்டப்பட்டது. அந்தத் திட்டம் தீட்டப்படுகிறபோது, நகரசபையினுடைய பேருந்து நிலையம் உருவாகிறபோது எப்படி திட்டம் தீட்டப்பட வேண்டுமென்றால் பேருந்து நிலையத்தைச் சுற்றி இருக்கிற இடங்களை நகரசபையே வாங்கி அங்கே கடைகளை கட்டி விடுவார்களானால் நகரசபைக்கும் வருவாய் பெருகும். நம்முடைய திட்டத்திலே நாம் செலவு செய்கிறத் தொகையையும் அதிலே ஈடாகி விடும். ஆனால், [illegible] அங்கே இருக்கிற நிலைமை பேருந்து வளாங்க



செல்கிற பகுதிகளை மட்டும் பெற்றுக் கொண்டு, மற்ற பகுதிகளை எடுக்கவில்லை. பக்கத்திலே இருக்கிற பகுதி நேஷனல் கல்லூரிக்குச் சொந்தமானது. அந்த கல்லூரியிலே இன்றைய தினம் உள்பக்கத்திலே கடைகளை கட்டி சாலை ஓரத்தில் இருக்கிற சுவற்றை இடித்து விடுவதன் மூலமாக, ஒரு கடைக்கு 40 ஆயிரம், 50 ஆயிரம் என்று வாங்குகிற அளவிற்கு கடைகளைக் கட்டிக் கொண்டிருக்கிறார்கள். இன்னொரு புறத்திலே செயின்ட் ஜோசப் கல்லூரி. அந்த கல்லூரியும் இன்றைய தினம் காம்பவுண்டிற்கு உள்பக்கமாக கடைகளை கட்டி ஒரு கடைக்கு 40 ஆயிரம், 50 ஆயிரம் என்று பெருகிற அளவிற்கு பல்லாயிரக் கணக்கான ரூபாய்களை பெறுவதற்கு ஏற்பாடுகளை செய்து கொண்டிருக்கிறார்கள். ஆனால் அந்த சுவற்று ஓரத்திலே நம்முடைய ஏழை, எளியவர்கள் தெரு கடைகளைப் போட்டிருப்பதை நீக்குவதற்கு எவ்வளவோ முயற்சிகள் மேற்கொள்ளப் படுகின்றன. அதற்காக மாவட்ட ஆட்சித் தலைவரிடம் சொல்கிறபோது, அவைகளை நீக்கக்கூடாது, ஏழைகளுக்கு வாழ்வளிக்க வேண்டும் என்றும் கேட்டுக் கொள்கிறபோது, அவர் இதுபற்றி பேசிக்கொள்ளலாம் என்று சொன்னார். இன்றைய தினம் பெரிய பணக்காரர்கள் கையாட்களாக மாறுகிற சில அதிகாரிகள் அவர்கள் தருகிற ஊக்கத்தை வைத்துக்கொண்டு அந்த கடைகளை அகற்றுவதற்கான முயற்சியிலே ஈடுபடுகிறார்கள். இருக்கிற அதிகாரிகள் ஏழை, எளியவர்களை நசுக்குவதற்காக இருக்கிறார்களா? அல்லது பணக்காரர்களுக்கு உதவியாக இருப்பதற்கு இருக்கிறார்களா? அல்லது நகரசபை மூலமாக, சாலைப் போக்குவரத்து மூலமாக அங்கே இருக்கிற பல்வேறு நல்ல காரியங்களை செய்வதற்காக இருக்கிறார்களா? என்ற சந்தேகம் எனக்கு எழாமல் இல்லை என்பதை இந்த நேரத்தில் எடுத்துச் சொல்ல விரும்புகிறேன். இன்றைய தினம் திருச்சியிலே பல பகுதிகளில், குடிசைப் பகுதிகளில் குடிதண்ணீர் வசதி இல்லை; விளக்கு வசதி இல்லை; எந்த வசதியும் இல்லாத அளவிற்கு அங்கே இருக்கிற மக்கள் அல்லல் பட்டுக் கொண்டிருக்கிறார்கள். திட்டங்களுக்கு வருகிற பணம் பெரிய பணக்காரர்களுக்கு வாய்ப்பும் வசதியும் உருவாவதற்கு உதவியாக இருக்கிறது என்று இந்த நேரத்தில் கூற விரும்புகிறேன். திருச்சி நகரசபை பொறுத்தவரையில் அமைச்சர் அவர்கள் தனியாக எடுத்துக்கொண்டு விவரங்களை சேகரித்து திருச்சி நகரத்திற்கு நல்ல வசதிகளை தேடிக்கொடுக்க வேண்டுமென்றும், ஏழை மக்களுடைய வாழ்வு மலர்கிற வகையிலே நல்லத் திட்டங்களை அந்தப் பகுதியிலே தீட்ட வேண்டுமென்றும் கேட்டுக் கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது.)

**திரு. என். ஏ. பூங்காவனம்:** மாண்புமிகு சட்டப் பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஊரக வளர்ச்சி, உள்ளாட்சித் துறை சம்பந்தமாக, நம்முடைய உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் சமர்ப்பித்திருக்கிற 28, 39, 53 எண்களுள்ள மானியக் கோரிக்கைகள்மீது இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் நான் சில வார்த்தைகளைச் சொல்ல விரும்புகிறேன். இதில் அவர்கள்

முக்கியமாகக் குறிப்பிட்டிருப்பது, பாதுகாக்கப்பட்ட குடிநீர், இணைப்புச் சாலைகள், சிறு பாலங்கள், ஆதி திராவிட மக்கள் குடியிருப்பு, இடுகாட்டுக்குச் செல்லும் சாலைகள், சிறுபாசனத் திட்டங்கள், ஊரக மருந்தகங்கள், மகப்பேறு மற்றும் குழந்தைகள் நலக் காப்பகங்கள், பள்ளிக்கூடங்கள், ஆதிதிராவிட மக்களுக்கான குடியிருப்புகள், ஆகிய இந்தத் திட்டங்களை அமுலாக்குகிற துறையிலும், அவற்றை நிறைவேற்றுகிற முறையிலும் மானியக் கோரிக்கைகளை அமைச்சர் அவர்கள் அளித்திருக்கிறார்கள். தமிழகத்தைப் பொறுத்த வரையில் நம்முடைய ஆட்சி பொறுப்பேற்ற பிறகு பாதுகாக்கப்பட்ட குடிநீர் என்கிற் முறையில் நாம் இன்றைக்கு எடுத்துக்கொண்ட நடவடிக்கைகளின் மூலம் பல்வேறு கிராமங்களில் போதிய ஆழ் குழாய்க் கிணறுகள் போடப்பட்டிருந்தாலும், போர்கள் அமைத்திருந்தாலும், அவைகள் முறையாக செயல்படவல்லையென்பது ஒரு யதார்த்தமான உண்மை. அப்படிப் போடுகின்ற போர்களில் ஒரு குறிப்பிட்ட அளவு பைப்புகள் போடுகிறார்கள். தண்ணீர் கீழ் மட்டத்திற்குப் போனவுடன் மீண்டும் இணைப்புபைப் போடுவதில்லை. அதனால் தண்ணீர் எடுக்கக்கூடிய நிலைமை தடைபடுகிறது. அந்தக் கிராமத்திற்கு தண்ணீரும் கிடைக்கவில்லை.

இரண்டாவதாக, அதற்கு வேண்டிய வேலை செய்வதற்கு ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திலும் அல்லது குடிநீர் வாரியத்திலும் உள்ள பல்வேறு பகுதியைச் சேர்ந்தவர்களும் தனி ஆட்களை நியமிப்பதில்லை. அதற்குக் காரணம், பைப்புகளோ ஊராட்சி ஒன்றியங்களில் இல்லாமல் இருக்கிறது. அது தவிர்க்கப்பட்டு, தண்ணீர் கிடைக்க உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். அடுத்து, இணைப்புச் சாலை என்று வருகின்ற பொழுது மத்திய அரசு தருகிற அரிசியும் நாம் தருகிற அரிசியும் 50:50 என்ற முறையில் நிறைவேற்றப் படுகிற வேலைகள் இருக்கிறதே, இந்த வேலைகளில் நிறைய தவறுகள் நடந்திருக்கின்றன என்று சொன்னால், அமைச்சரவர்கள் வருத்தப்பட மாட்டார்கள் என்று நம்புகிறேன். ஏனென்றால், அந்த வேலைகளைச் செய்பவர்கள் ஊர் நல அலுவலர்—கிராம சேவக் என்று சொல்லப்படுகிறது. அவர்கள் பெயரால் அந்த வேலைகள் நிறைவேற்றப்படுகின்றன. அவர் என்ன செய்கிறார் என்றால், தனக்கு வேண்டிய, தான் சொல்வதைக் கேட்கின்ற, தேவைப்பட்ட ஆட்களுக்குக் கொடுத்து அந்த வேலையை ஒழுங்காகச் செய்யாமல், ஒழுங்கான முறையில் நடத்தாமல், மேல் போக்காகச் செய்யப்பட்ட நிலையில் தன் இஷ்டப்படி பில்கள் போட்டு, அவருக்கு இனாமாகத் தருகிற பணத்தை வைத்துக்கொண்டு, அந்த வேலைகளைச் செய்கிற காண்ட்ராக்டர்கள் முடிக்கிற உண்மை தமிழகம் முழுவதுமே யதார்த்தமாக இருக்கிறது. நான் சொல்வதிலே மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு ஏதேனும் குறைபாடு இருக்குமானால், ஆளுங் கட்சி உறுப்பினர்கள் தொகுதிகளில் எப்படி நடக்கிறது என்பதைக் கேட்டாவது, அவர்கள் சொல்வதை எடுத்துக் [illegible] என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.





**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு:** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, தேசிய கிராம வேலை வாய்ப்புத் திட்டத்தைப் பொறுத்த அளவில் மத்திய அரசு சில விதிமுறைகளை வகுத்திருக்கிறது. அந்த விதிமுறையின் அடிப்படையிலேதான் இந்த வேலைகள் எல்லாம் எடுத்து கொள்ளப் பட்டிருக்கின்றன, குறிப்பாக, தேசீய கிராமப்புற வேலை வாய்ப்புத் திட்டத்திலே எந்தவிதமான ஒப்பந்தமும் கூடாது என்பதுதான் விதிமுறை. அதற்கு ஏற்ப ஒவ்வொரு ஒன்றியத்திலும் இருக்கிற கிராம நல அலுவலர்களிடத்திலேதான் இந்தப் பணிகள் எல்லாம் ஒப்படைக்கப்பட்டு அவைகள் செய்யப்பட்டு வருகின்றன. குற்றச்சாட்டுகளைச் சொல்கிற நேரத்தில்' எந்த குற்றச்சாட்டுகளைச் சொன்னாலும் நீங்கள் ஆதாரத்தோடுதான் சொல்ல வேண்டுமென்ற விதிமுறைகளும் இங்கே இருக்கின்றன. ஆகவேதான், தயவுசெய்து மாண்புமிகு பூங்காவனம் அவர்கள் குற்றச்சாட்டுகள் ஏதாவது இருந்தால் ஆதாரத்தோடு சொல்ல வேண்டும். ஏனென்றால், நேரம் இல்லையென்று அவைத் துணைத் தலைவர் அவர்கள் கூறியிருக்கிறார்கள். ஆகவே, அதுகுறித்த மேலான யோசனைகளைத் தெரிவித்தால் இன்னும் நலமாக இருக்கும்.

**திரு. என். ஏ. பூங்காவனம்:** மாண்புமிகு துணைத்தலைவர் அவர்களே, எனக்கு ஒதுக்கப்பட்டிருக்கிற நேரம் 10 நிமிஷம். நான் 2½ நிமிஷம் பேசியிருக்கிறேன். அமைச்சர் 3 நிமிஷம் பேசியிருக்கிறார்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** ஒவ்வொருவருக்கும் 5 நிமிஷங்கள்தான். எல்லோரும் சட்டமன்ற உறுப்பினர்கள் தான். அதிலே வித்தியாசமே கிடையாது. கட்சித் தலைவர்களுக்கு மட்டும்தான் கொஞ்சம் வித்தியாசம் உண்டு.

**திரு. என் .ஏ. பூங்காவனம்:** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, இந்த வேலைகளில் உள்ள குறைபாடுகள் சம்பந்தமாகச் சொன்னதற்கு அமைச்சர் அவர்கள் மறுத்திருக்கிறார்கள். நிறைய நடந்திருக்கிறது என்பது உண்மை நிலைமை. வேண்டுமென்றால் வேண்டிய ஆதாரத்தை, அவர்களுக்குக் கொடுப்பேன் என்று சொல்லிக் கொள்கிறேன்.

எல்லா இடங்களிலும் சிறுசிறு பாலங்கள் கட்டுகிறார்கள. ரூ. 7,000-க்கு மேற்பட்ட பாலங்களைக் கட்டுகிறார்கள். அப்படி கட்டக் கூடிய அந்தச் சின்ன பாலங்கள், குறுக்குப் பாலங்கள், பல இடங்களில் தேவையற்றதாகவும், அவசியம் அற்றதாகவும், தனி நபரின் விருப்பு-வெறுப்பு அடிப்படையிலும் கட்டப்பட்டிருக்கிறது என்பதை நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

[திரு. என். ஏ. பூங்காவனம்] [1983 மார்ச் 17

இன்னொன்று. அவைத் துணைத் தலைவர் அவர்களே, ஆதி திராவிடர் குடியிருப்பு. இடுகாட்டுக்குச் சாலை என்று வரும் போது, அங்கே இருக்கிற சிக்கல் என்னவென்றால், சுடுகாட்டுக்குப் போகிற வழியை எடுக்கும்போது பல்வேறு தனி நபர்களுக்குச் சொந்தமான நிலங்களை எடுக்க வேண்டியிருக்கிறது ஒரு பக்கம். இரண்டாவது, அவர்களுக்கு வீடுகட்டித் தருகின்ற பிரச்னை வரும்போது தனித்தனியாகக் கட்டிக் கொடுக்கிறோம். இதிலே என்னுடைய மாறுபட்ட கருத்து என்னவென்றால், ஏற்கனவே ஒதுக்கப்பட்டவர்கள், தாழ்த்தப்பட்டவர்கள், பிற்படுத்தப்பட்டவர்கள் எல்லாம் தனிப் பகுதிகளில் வாழ்கிறார்கள். காலனி என்று சொல்கிறோம் அல்லது சேரி என்று சொல்கிறோம். இதைப் போக்க வேண்டுமென்றால், அரசாங்கம் புதிதாக வீடு கட்டிக்கொடுக்கக்கூடிய திட்டத்தின்கீழ், வீடு கட்டும்போது, அவர்கள் எங்கெல்லாம் வசிக்கிறார்களோ அந்தப் பகுதிகளிலேயே அவர்களுக்கும் வீடுகளைக் கட்டிக் கொடுத்து அதன்மூலமாக இந்த ஜாதிப பிரச்னைக்கு முடிவு கட்ட வேண்டுமென்று அரசாங்கத்தைக் கேட்டுக் கொள்கிறேன்.

கிராமப்புறங்களில் இருக்கின்ற மகப்பேறு இல்லங்களில் ஆயாமார்கள் குறிப்பிட்ட நேரங்களில் இருப்பதில்லை. கிராமப் புறங்களில் இருக்கின்ற மருந்தகங்களில் மருந்துகள் இருப்பதில்லை. ஆனால் மருந்துகள் இருப்பதற்கான எல்லாவிதமான ஏற்பாடுகள் இருக்கின்றன என்று அறிவிப்பு மட்டும் இருந்தால், போதாது. நடைமுறையிலும், மருந்துகள் இருக்க வேண்டும். மகப்பேறு இல்லங்களில் ஆயாக்கள் முறையாக வருவதும் இல்லை இருப்பதும் இல்லை இதன்காரணமாக கிராமப்புறங்களில் உள்ள தாய்மார்கள் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். அந்தக் கஷ்டத்தைப் போக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பள்ளிக்கூடங்களுக்கான கட்டிடங்களைக் கட்டும்பொழுது மேலே சிமென்ட் ஓடு போடப்படுகின்றது. ஏற்கனவே குடிசைக் கொட்டகைகளில் இருந்த பள்ளிகளுக்குக் கட்டிடங்கள் கட்டித் தருவதை நான் பாராட்டுகிறேன். அதை வரவேற்கிறேன். ஆனால் சிமென்ட் ஓடு போடுகின்ற காரணத்தினால் வெயில் காலங்களில் குழந்தைகளுக்கு மிகவும் பாதிப்பு ஏற்பட்டு கஷ்டப்படும் நிலைமை இருக்கிறது. எனவே, இதற்காக சற்று நிதி ஆதாரத்தை அதிகப்படுத்தியாவது தளமாக எதிர்காலத்தில் அமைத்து, பள்ளிக் கட்டிடங்களைக் கட்ட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து முக்கியமான பிரச்னையைச் சொல்ல விரும்புகிறேன். ஒன்றியமாக இருந்தாலும் சரி, கோட்ட தனி அதிகாரியாக இருந்தாலும் சரி, நகராட்சி தனி அதிகாரிகளாக இருந்தாலும் சரி, ஏதோ தனி சாம்ராஜ்யம் மாதிரி அவர்களுக்கு வேண்டியவர்கள், வேண்டாதவர்கள், என்ற முறையில் விருப்பு வெறுப்போடு பல பிரச்னைகளை அணுகுகிறார்கள்.



1983 மார்ச் 17] [திரு. என். ஏ. பூங்காவனம்]

வேலூர் நகரத்தை எடுத்துக்கொண்டால், அது நான் வாழும் பகுதி, அங்கே 1973ஆம் ஆண்டு 63 இலட்சம் ரூபாய் தான் வருமானம் இருந்தது; ஆனால் இன்றைக்கு 1 கோடியே 17 இலட்சம் ரூபாய் வருமானம் வருகிறது என்று நான் நினைக்கிறேன். அபிவிருத்தி வரி என்றெல்லாம் போட்டு இவ்வளவு தூரம் வருமானத்தை பெருக்கியிருந்தாலும்கூட, அந்த நகரத்திலே சாலைகள் பழுதடைந்திருக்கின்றன; அந்தப் பகுதிகளில் லைட் எரியவில்லை; குடிதண்ணீர் போதிய அளவிற்குக் கொடுக்கப்படவில்லை. வேலூர் நகரத்தைப் பொறுத்தவரைக்கும் இந்த நிலைமை.

அடுத்து என்னுடைய தொகுதியான காட்பாடி தொகுதியில் திருவலத்திலிருந்து குடியாத்தம் வரையில் எல்லா பகுதிகளிலேயும் சாலைகள் சரியாக இல்லை. குடிதண்ணீர் கிடைக்கவில்லை. கிராமங்களில் இருக்கின்ற மருந்தகங்களில் மருந்துகள் இல்லை. கால்நடை ஆய்வகங்களில் மருந்துகள் இல்லை.

இப்படிப்பட்ட நிலைமைகள் இருக்கும்பொழுது உடனடியாக நகராட்சித் தேர்தல்களை நடத்த வேண்டுமென்று இந்த மாதம் 13 ஆம் தேதி நடைபெற்ற அனைத்துக் கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் ஒரு முடிவினை எடுத்தார்கள், மாண்புமிகு அமைச்சரவர்களும் அதிலே ஒரு முடிவை அறிவித்தார்கள். ஆனால் அதற்குப் பிறகு ஒரு விஷயத்தை எழுப்பி இருக்கிறார்கள். அதன் காரணமாக, தேர்தல் நடக்குமா என்ற ஐயப்பாடு எழுகின்றது. இன்றைக்கிருக்கின்ற நகராட்சி சட்டத்தின்படி இந்தத் தேர்தல்களை நடத்த வேண்டுமென்று அனைத்துக் கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் தெரிவித்து அது சம்பந்தமாகப் பத்திரிகைகளில் செய்தி கொடுத்த பிறகு, தனியாக மாண்புமிகு அமைச்சரவர்கள் இந்த அவைக்கு அறிவிக்காமல் வெளியே ஒரு கருத்தைச் சொல்லியிருக்கிறார்கள்.

நகராட்சித் தேர்தல்களில் பிற்பட்ட, தாழ்த்தப்பட்ட, அரிசன மக்களுக்கும் இடம் கொடுப்பதற்கு மற்றக் கட்சிகள் உறுதுணையாக இருப்பார்களா என்ற வினாவை எழுப்பியிருக்கிறார்கள். இந்த அடிப்படையில் பார்க்கும்பொழுது, இந்தத் தேர்தல்களை நடத்தாமல் இருப்பதற்காக முயற்சிக்கிறார்களா என்பது தெரியவில்லை.

தனி அதிகாரிகள் சாம்ராஜ்யத்திலிருந்து ஊராட்சிகளையும் உள்ளாட்சிகளையும் விடுவித்து, மக்கள் ஆட்சியாக மாற்றுவதற்கு உடனடியாகத் தேர்தல் நடத்துவதற்கான எல்லாவிதமான நடவடிக்கைகளையும் எடுக்க வேண்டுமென்று வேண்டி விரும்பிக்கேட்டுக்கொண்டு என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன்.

[1983 மார்ச் 17

*திரு. செ. செம்மலை: மாண்புமிகு தலைவர் அவர்களே, மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சரவர்கள் கொண்டு வந்திருக்கின்ற சமுதாய நல வளர்ச்சித் திட்டங்களும் நகராட்சி நிர்வாகமும் மற்றும் சாலைகளும் பாலங்களும் ஆகியவை குறித்த மானியக் கோரிக்கைகளின் மீது என்னுடைய கருத்துக்கள் சிலவற்றை எடுத்து வைக்க விரும்புகிறேன்,

இன்றையதினம் 80 சதவீதம் மக்கள் கிராமங்களில் வசித்து வருகின்றார்கள். ஒரு நாட்டினுடைய வளர்ச்சி கிராமப்புறங்களில் உள்ள வளர்ச்சியைப் பொறுத்துத்தான் இன்றையதினம் அமைந்திருக்கிறது. எனவே, நாட்டு வளர்ச்சியை மேலும் மேலும் சிறப்பான முறையிலே வளர்ப்பதற்காக இன்றைக்கு ஐந்தாண்டுத் திட்டங்களின் மூலம் நாம் பல்வேறு சாதனைகளைச் செய்து வருகிறோம். அப்படிப்பட்ட ஐந்தாண்டுத் திட்டங்களின் நோக்கங்களை நிறைவேற்றுவதற்கு இந்தச் சமுதாய நல வளர்ச்சித் திட்டங்களை ஒரு வாய்ப்பாகக் கொண்டு, அதன்மூலமாகத்தான் இன்றைக்கு இந்தத் திட்டங்களை நிறைவேற்றுகின்ற சூழ்நிலை இருக்கிறது.

கடந்த 35 ஆண்டுக்காலமாக ஆறு ஐந்தாண்டுத் திட்டங்களைப் போட்டும் நாம் இன்னும் பல முன்னேற்றங்களை அடைய முடியாத இந்தச் சூழ்நிலையில், இருபது அம்சத் திட்டம் என்றும், தேசிய ஊரக வேலைவாய்ப்புத் திட்டம் என்றும், ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம் என்றும் பல்வேறு திட்டங்களை இன்றைக்கு நாம் மத்திய அரசின் உதவியோடு செயல்படுத்திக் கொண்டிருக்கின்ற சூழ்நிலையில், மற்ற மாநிலங்களோடு ஒப்பிட்டுப் பார்த்தால் அவைகளைக் காட்டிலும் இந்தத் துறைகளில் பல்வேறு பாராட்டுதல்களைப் பெறத் தக்க வகையில் சிறப்பாக நம்முடைய அரசு பணியாற்றி வருகிறது.

மத்திய அரசினுடைய திட்டத்தில் நாம் பாராட்டுதல்களைப் பெற்றாலும்; நமக்கு உரிய பங்கு கிடைக்கவில்லை. முதலாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் 10.81 சதவீதமும். இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் அது குறைக்கப்பட்டு, 9.1 சதவீதமாகவும், இப்படி மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் 7.4 சதவீதமும், நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் 6.8 சதவீதமும், ஐந்தாண்டுத் ஐந்தாண்டுத் திட்டத்தில் 5.5 சதவீதமும், ஆறாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் மிகவும் குறைந்து 4.5 சதவீதமாகவும், இன்றைக்குக் குறைக்கப்பட்டுவிட்டது. அப்படி மத்திய அரசு ஒதுக்கிக் கொண்டிருக்கிற நிதி ஆதாரங்களை வைத்துத் தான் மாநில அரசு செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. தமிழ்நாட்டிற்கு தனிநபர் மத்திய உதவி ரூ. 34.00 கொடுத்திருக்கிறது. கேரளா, ஆந்திரா போன்ற மாநிலங்களுக்கு ரூ. 44.00 என்ற அளவில் கொடுத்திருக்கிறது, மொத்த மாநிலங்களின் சராசரி உதவி ரூ. 59 ஆகும். ஒட்டு

*என்பதைக



1983 மார்ச் 17] [திரு. செ. செம்மலை]

மொத்தமாக பல மாநிலங்களைப் பார்க்கின்றபொழுது, தமிழ் நாட்டிற்கு இது மிகவும் குறைவாக இருக்கிறது. காந்தியடிகள் சொன்ன கிராம ராஜ்யமாக அமைவதற்கு அதிக நிதியுதவிகளை மத்திய அரசு அளிக்க வேண்டுமென்றும், வெறும் பாராட்டுகளை மட்டும் வழங்கிவிட்டால் போதாது என்றும் கேட்டுக்கொள்கிறேன்,

அதேபோல எனக்கு முன்னால் பேசிய தி.மு.க. உறுப்பினர்கள் தன்னிறைவுத் திட்டத்தின் பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கும் இன்றைக்கு நடைபெற வேண்டிய உள்ளாட்சித் தேர்தல்கள் நடைபெறவில்லை என்று சொன்னார்கள். மக்களைப் பொறுத்தவரையில், அவர்களுக்குச் செய்யவேண்டிய காரியங்களை இந்த அரசு தாமதமின்றி செய்துவருகிறது.

மக்கள் பிரதிநிதிகள் இருந்தால் இந்த அளவுக்கு வேகமாக நடக்கும் என்று எதிர்பார்க்கிறார்களோ அந்தஅளவுக்கு மாவட்ட அளவைப் பொறுத்தவரை, வளர்ச்சிப் பணிகளை, மாவட்ட ஆட்சித் தலைவர் கவனித்துவருகிறார்கள். மாவட்ட ஆட்சித் தலைவர்கள், பல்வேறு வேலைகளில் ஈடுபடுவதன் காரணமாக அந்தப் பணிகளில் சிறப்பாக ஈடுபடமுடியவில்லை என்ற குறைபாடு இருக்கிறது, விவசாயத்துறை, கால்நடைத் துறை, சுகாதாரத் துறை, கூட்டுறவுத் துறை, போன்ற துறைகளில் இணை இயக்குநர் பதவி இருப்பதுபோல, மாவட்ட ஆட்சித் தலைவரின் கீழ் ஒரு இணை இயக்குநர் பதவியை உருவாக்க வேண்டுமென்று அமைச்சரவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். இன்றைக்குச் சாலைகள் போடுதல், கட்டிடங்கள் கட்டுதல் போன்ற பல்வேறு பணிகளை நெடுஞ்சாலைத் துறையைச் சார்ந்த பொறியாளர்கள் கவனித்துவருகிறார்கள். இதனால் காலதாமதம் ஏற்படுகிறது. எனவே அந்தக் குறைபாட்டைத் தீர்க்கும் முறையில் 'Rural Engineering Service' என்ற புதிய அமைப்பை உருவாக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

குடிநீர் பிரச்னையைப் போக்க, குழாய் கிணறுகள் இன்றைக்கு ஊராட்சி ஒன்றியங்களில் 50, 60 என்ற நிலைமாறி ஊராட்சி ஒன்றியங்களில் இன்றைக்கு 200க்கும் மேலே குழாய்க் கிணறுகள் இருக்கின்றன. பணிகளைக் கவனிப்பதற்கு ஒரே ஒரு பணியாளர்தான் இருக்கிறார். கூடுதலாக பணியாளரை அமர்த்தவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் இன்றைக்கு ஊராட்சிகளில் பகுதி நேர எழுத்தாளர் கிட்டத்தட்ட 5,000 பேர்கள் குறைந்த ஊதியத்தைப் பெற்றுக் கொண்டு நிரந்தரம் இல்லாமல் இருந்துவருகிறார்கள். தற்போது Group Exceutive Officer என்றபதவி உருவாக்கப்பட்டபிறகு,

அவர்களுக்கு உதவியாக இந்த ஊராட்சிப் பகுதி நேர பணியாளரை அமர்த்தி, அதிக ஊதியத்தைக் கொடுத்து, அவர்களை நிரந்தரமாக ஆக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது.)

(முற்பகல் 11—10)

திரு. வே. இராஜசேகரன்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே சமுதாய வளர்ச்சி மற்றும் நகர நிர்வாகம்பற்றிய மானியக் கோரிக்கைகள் மீது காங்கிரஸ் கட்சியின் சார்பாக கொடுத்துள்ள வெட்டுத்தீர்மானங்களை ஆதரித்து சில கருத்துக்களைக் கூற விழைகிறேன். காந்தி அடிகளுடைய இலட்சியமான கிராம ராஜ்யத்தை பெருந்தலைவர் காமராஜ் அவர்கள் தலைமையிலான காங்கிரஸ் ஆட்சி அமுல்படுத்தி அதிகாரங்களைப் பரவலாக்கி, ஊராட்சி, பேரூராட்சி, ஒன்றியம், நகராட்சி, மாநகராட்சி என்று பிரித்து, மக்கள் பிரதிநிதிகள்மூலம் நன்மை செய்தது. ஆனால் இன்று மக்கள் பிரதிநிதிகள் இல்லாமல், எல்லாவற்றிற்கும் அமைச்சர் ஒருவரே ஏகபிரதிநிதியாக காட்சி அளிக்கக்கூடிய நிலைமைதான் இன்றைக்கு இருக்கிறது. கம்யூனிஸ்ட் சித்தாந்தத்தில் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம் என்று ஒன்று உள்ளது. அதேபோல், ஜனநாயகத்தின் பெயரால் அமைச்சர் அவர்கள் சர்வாதிகார ஆட்சி நடத்துகிறார்கள்.

திரு. ரா. உமாநாத்: சர்வாதிகாரி என்று சொல்வது தப்பு என்று நான் கூறுகிறேன்,

மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவர்: சர்வாதிகாரி என்றால் நீங்கள் லிட்டரலாக அர்த்தம் எடுத்துக்கொள்ளுங்கள். எல்லா அதிகாரமும் இருக்கிறது என்று சொல்லியிருப்பாரே தவிர வேறு ஒன்றும் அல்ல.

திரு. வே. இராஜசேகரன்: சென்னை நகராட்சியினுடைய தலைவர்களையும், மாநகராட்சிகளுடைய தலைவர்களையும், ஊராட்சிகளுடைய தலைவர்களையும், அமைச்சர் அவர்கள் ஒரே சட்டத்தின் மூலம் விசேஷ அதிகாரிகளுடைய காலத்தை நீட்டிப்பு என்ற ஒரு சட்டத்தின் மூலமாக ஒரு ஆண்டு என்று சொல்லி, 3 தவணைகளாக நீடித்திருக்கிறார்கள். சாதாரண ஒரு தனி அரசு அதிகாரி அவருடைய அலுவலகத்திற்கு சென்று வேலைச் செய்யாமல் இருக்கவேண்டும் என்று தடுத்தால், அதற்கு, அன் லாபுல் அபன்ஸ் என்று அரசாங்க அதிகாரியை சட்டபூர்வமாக வேலைக்குச் செல்லாமல் தடுத்தார்கள் என்பதற்காக அவர்கள் மீது இ.பி.கோ. சட்டம் பாய்கிறது. ஆனால் இன்றைக்கு ஒரே சட்டத்தின் மூலம் ஒரே அமைச்சர், 13 ஆயிரம் ஊராட்சி தலைவர்களையும், 375 பஞ்சாயத்து



சேர்மன்களையும், 115-க்கும் அதிகமான நகராட்சித் தலைவர்களையும், 200—க்கும் அதிகமான மாநகராட்சி உறுப்பினர்களையும், 2 மேயர்களையும் அவர்களுடைய இருக்கைக்கு செல்லவிடாமல், பஞ்சாயத்துக் கட்டிடங்களுக்குள் மாநகராட்சிக் கட்டிடங்களுக்குள் சென்று மக்களுக்காக பணி செய்யவிடாமல் ஒரே அமைச்சர் ஒரு சட்டத்தின் மூலமாக தடுத்து இருக்கிறார்களே, அவர்கள் மீது இந்த இ.பி.கோ. சட்டம் வராதா?

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இதற்கு எல்லாம் அது வராது.

திரு. வே. இராஜசேகரன்: தமிழகத்தினுடைய தலைநகராக இருக்கின்ற சென்னை நகரம், இன்றைக்கு இந்தியாவின் உள்ள மிக முக்கியமான மாநகராட்சிகளாக உள்ள, டெல்லி, கல்கத்தா, பம்பாய் போன்ற அந்த வரிசையில் நமது சரித்திரத்தில் சென்னை மாநகராட்சி ஒரு மிக முக்கிய இடத்தை வகிக்கிற காரணத்தால், இந்தியாவிற்கு வருகின்ற உலகத் தலைவர்கள் எல்லாம் சென்னைக்கு வராமல் போவது கிடையாது. இந்த நகராட்சியைப் பற்றி சில கருத்துக்களைச் சொல்வது இந்தச் சந்தர்ப்பத்தில் பொருத்தமாக இருக்கும் என்று கருதுகிறேன். 200 கிலோ மீட்டருக்கும் அதிகமாக விஸ்தீரணம் உள்ள இந்த நகரத்தில் 35 இலட்சம் மக்கள் இன்றைக்கு வாழ்கிறார்கள். 10 லட்சத்திற்கும் அதிகமான மக்கள் இந்த நகரத்திற்கு வந்து போகிறார்கள். 1,400 கிலோ மீட்டர் அளவில் அதனுடைய சாலைகளுடைய நீளம் இருக்கிறது அப்படிப்பட்ட இந்த நகரத்திற்கு தெருவிளக்குகள் சுமார் 45 ஆயிரம் இருக்கின்றன. அவைகளில் எத்தனை விளக்குகள் இன்றைக்கு ஒழுங்காக எரிகின்றன. முக்கியமான சாலைகளைத் தவிர வீடுகள் அதிகமாக இருக்கக்கூடிய தெருக்களில் விளக்குகள் எரிவதேயில்லை. இந்த விளக்குகள் எல்லாம் ஒருநாள் அல்ல, இரண்டு நாள் அல்ல, பல மாதங்களாக, பல வருடங்களாக எரிவதே கிடையாது. அதேபோல் பொதுக்கழிப்பிடங்கள் தற்போது 7[illegible]0 இருக்கின்றன. இவைகள் எல்லாம் 10 ஆண்டு காலத்திற்கு முன்னால் கட்டப்பட்டவைகளாக இருக்கின்றன. இதில் பல கழிப்பறைகள் சுகாதாரக் கேட்டால் சீர்கேடு அடைந்து, இன்றைக்கு சென்னைக்கு ஒரு பெரிய அளவிலே துர்நாற்றத்தை வீசிக்கொண்டு இருக்கிறது. இதுமட்டுமல்லாமல் சென்னையிலே கழிவு நீரகற்றும் நிலையங்கள் மொத்தம் [illegible] பொறுத்தப்பட்டுள்ளன. இவைகளிலே பொருத்தப்பட்டுள்ள கைப்பம்புகள் சுமார் 40 ஆண்டுகளுக்கு மேலானவை. அவற்றில் 1[illegible] நிலையங்கள் மிகவும் மோசமான நிலையில் பழுதடைந்து உள்ளன. இதோடு மட்டுமல்லாமல் அவைகள் எல்லாம் மிகவும் திறன் குறைந்தவைகளாக உள்ளன. இதனால் நகரத்தில் அடிக்கடி சாக்கடை அடைப்பு ஏற்படுகின்றது. குடியிருப்பு வீடு

களுக்குள் ஓவர் புளோ ஆகிறது. அப்படி ஓவர் புளோ ஆவதால் தொத்து நோய்களான வாந்திபேதி, காலரா, மலேரியா போன்ற கொடிய நோய்கள் பரவக்கூடிய ஆபத்துக்கள் ஏற்படுகின்றன. அதனால் ஆயிரக்கணக்கான மக்கள் மிகவும் சிரமப்படுகின்ற நிலைமை ஏற்படுகிறது.

100 சதவீதம் குடிசை வாழ் மக்களின் தொகை அதிகரித்துள்ளது. 50 சதவீதம் சாலைகளின் நீளம் அதிகரித்துள்ளது. 25 இலட்சத்திலிருந்து 45 இலட்சமாக மக்கள் தொகை உயர்ந்துள்ளது. ஆனால் 10 ஆண்டுகளுக்கு முன்னால் இருந்த அதே 7,000 துப்புரவு தொழிலாளர்கள் தான் இருக்கிறார்கள். 700 சத்து இல்லாத மாட்டு வண்டிகள், சக்கரம் இல்லாத மாட்டு வண்டிகள் இருக்கின்றன. 150 லாரிகள் வைத்திருக்கிறார்கள். அந்த லாரிகள் சரியாக இயங்க வழியில்லை. குப்பை அகற்றும் அந்த 150 லாரிகளில் 50 லாரிகள் ஒர்க் ஷாப்பிலே இருக்கின்றன. நிரந்தரமாக. குப்பை ஏற்றிச் செல்லும் சில லாரிகள் நடுரோட்டிலே நின்றுவிடும். குப்பையை ஏற்றிச்செல்லும் ஆற்றல் இல்லாத வண்டிகள் பல. இருக்கிற லாரிகளுக்கும் பிளாட்பாரம் கிடையாது. மேலே டார்பாய் கிடையாது. அதனால் ஏற்றிச்செல்லும் குப்பை முழுவதும் காற்றில் பறந்து ரோடுகளை நிரப்புகின்றன. இப்படி இருந்தால் குப்பைகள் சேராமல், தொற்றுநோய் வராமல் சுகாதார கேடுகள் இல்லாமல் எப்படி இருக்கும்?

எகிப்து நாட்டில் மண்ணாலும் கல்லாலும் 'பிரமிடுகளை' உருவாக்கி உலகத்தை வியப்பில் ஆழ்த்தினார்கள். ஆனால் நீங்கள் குப்பையினாலேயே 'குதுப்மினார்'களை உருவாக்கி பெருமையைச் சேர்த்துக்கொண்டீர்கள். இப்படி குப்பைகள் அகற்றப்படாததாலும் சாக்கடை நீர் அடைப்பாலும் மழை நீர் செல்ல முறையான ட்ரெனேஜ் கட்டப்படாததாலும் ஒவ்வொரு நாளும் கொசுக்களும் ஈக்களும் கோடிக்கணக்கில் உற்பத்தியாவதால் சென்னை நகரத்து மக்கள் படுகின்ற தொல்லைகளுக்கு அளவேயில்லை.

கொசுவை ஒழிக்க எடுத்த நடவடிக்கை என்ன? கொசுக்களின் கண்களுக்கு 'கிரீன்வேஸ்ரோடு' தெரியாமல் போகுமா? கொசுவை விழுங்க வாங்கப்பட்ட 'தர்மோபோக்கிங்' 5 இலட்சம் அதை விழுங்கியது யார்? வட சென்னையில் உள்ள 'பேசின்பிரிட்ஜ்' அனல் மின்சார நிலையத்தைப் பற்றி தங்கள் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

சுமார் 25 இலட்சம் மக்களுக்கு நிரந்தரமாக வியாதிகளை உண்டுபண்ணும் நிலையமாக அது இருக்கிறது. புகை போக்கிகளிலிருந்து வெளிபடும் கரித்தூள்கள் வீட்டுக்கு ஒருவருக்கு வியாதியை ஏற்படுத்தாமல் தடுக்க மக்களின் கோரிக்கைகளையும் மாநகராட்சியின் வேண்டுகோளையும் ஏற்று எப்போது வேறு இடத்திற்கு மாற்றப்போகிறீர்கள்?





சென்னை நகர குடிநீர் பிரச்சனை இன்று விசுவரூபம் எடுத்திருக்கிறது. தண்ணீர் குடங்களுடன் தாய்மார்கள் அலைகின்ற அவலநிலை வார்த்தைகளால் சொல்ல முடியாது; இந்த குடிநீர் பிரச்சனை இந்த ஆண்டுடன் முடிவதில்லை. நிரந்தர தீர்வு காண வேண்டியது அரசின் கடமை இல்லையா? இரண்டு தினங்களுக்கு ஒருமுறை தண்ணீர் விடுகிறீர்கள். சுமார் 3,700 ஆழ்குழாய் கிணறுகள் போடப்பட்டதாக சொல்கிறீர்கள். அவை போடப்படும் பொழுது நிலத்தடி நீர் இருந்த ஆழத்தைவிட இன்று அதிக ஆழம் கீழே போய்விட்டது. பல குழாய்களில் தண்ணீர் வருவதில்லை. அந்த ஆழ்க் குழாய்களை இன்னும் சில அடிகள் கீழே இறக்க வேண்டும். அப்படியானால்தான் தண்ணீர் வரும்.

கொற்றலை ஆற்றுப் பகுதியிலுள்ள பூண்டி, சோழவரம், செங்குன்றம் முதலிய ஏரிகளில் தேக்கப்படும் நீரில் சுமார் 57 சதவீதம் ஆவியாவதாலும், கசிவாலும் விரயம் ஆகின்றது என்று ஆய்வு செய்யப்பட்டுள்ளதாக தெரிகிறது, மேல் நீரையும், நிலத்தடி நீரையும் ஒருங்கிணைத்து பூமிக்கடியில் செயற்கை முறையில் செலுத்தி சேமிக்கும் திட்டத்திற்கு ஐ.நா. வளர்ச்சிக்குழு கூட சுமார் 8.73 இலட்சம் டாலர் உதவி செய்ய இருப்பதாக அறிகிறேன். இந்தத் திட்டத்தின் மூலமாவது சென்னைக்கு இப்போது தண்ணீர் கிடைக்குமா? சரி, கொற்றலை ஆற்றுத் திட்டம் இப்படி என்றால், கட்டளைக் கால்வாய் திட்டம் எப்படி இருக்கிறது? 300 கோடி ரூபாய் என்று திட்டமிட்டு கைவிட்டீர்கள். இன்று கிருஷ்ணா நதி நீர் கொண்டுவருவதாக பேசுகிறீர்கள். விஞ்ஞான அறிவு படைத்தவர்கள் சொல்கிறார்கள். இந்த திட்டம் நிறைவேற சுமார் பத்து ஆண்டுகளாவது ஆகும் என்று. இப்படியே போய்கொண்டிருந்தால் சென்னை நகர மக்களின கதி என்ன? வீராணம் என்றவுடன் வீண் விரயம் என்ற ரெடிமேட் பதிலைக் கூறுகிறீர்கள். ஆய்வு செய்தவர்கள் அங்கு கிடைப்பது நல்ல தண்ணீர் என்றும் சென்னைக்கு போதுமான அளவுக்கு மேல் கிடைக்கும் என்று சொல்லியிருக்கிறார்கள். மூன்று ஆண்டில் கூட முடித்துவிடலாம் என்று கூறப்பட்ட இந்தத் திட்டத்தில் இடையில் சில குறைகள். அவைகளை இந்த உயிர்நாடிப் பிரச்சனையில் ஒதுக்கி வைக்கக் கூடாதா?

கலைஞர் அவர்கள் சைக்கிள் ரிக்ஷாக்களை ஓடவிட்டார்கள். நீங்கள் மோட்டார் பொருத்திய சைக்கிள் ரிக்ஷாக்களை ஓடவிட்டீர்கள். கண்ணுக்கு கண்ணாடி என்றார், நீங்கள் தாலிக்கு தங்கம் என்றீர்கள். அதேபோல் இதையும் ஒரு நல்ல போட்டி மனப்பான்மையோடு அவர் வீராணம் திட்டம் என்றார், நீங்கள் சென்னை குடிநீர் நிவாரணத் திட்டம் என்று பெயரை மாற்றியாவது நகர மக்களை குடிநீர் பிரச்சனையிலிருந்து காப்பாற்றக் கூடாதா?--

(திரு. வெ. இராஜசேகரன்) [1983 மார்ச் 17

சென்னை மாநகர மக்கள் குடிக்க தண்ணீர் கேட்கிறார்கள். அவர்கள் பன்னீர் கேட்கவில்லை. மேலே சொன்ன இலாக்காக்கள் அத்தனையும் மாநகராட்சியின் அதிகாரத்தில் இருந்ததோடு மாநகராட்சி உறுப்பினர்களும் இருந்தார்கள். அப்பொழுதே இந்தப் பிரச்சனைகள் முழுமையாக தீர்க்கப்படவில்லை. ஆனால் இன்று நிலை என்ன? குடிநீர் வழங்கல்-கழிவு நீர் அகற்றல். அதற்கு ஒரு வாரியம்: சென்னை பெருநகர் விரிவாக்க இலாக்கா, வீட்டுவசதி வாரியம், குடிசைமாற்று வாரியம், வாரியங்களின் தலைவர்களும் அதன் அலுவலர்களும் வாரியங்களாக மாறி கேட்புகளின் மூலம் மாபெரும் யுத்தமே நடக்கிறது.

கொத்தவால் சாவடியை கோயம்பேடுக்கு மாற்றும் திட்டத்திற்கு சுமார் 400 இலட்சம் செலவிடப்பட்டதே, அதன் நிலை என்ன? 7 விசேஷ அதிகாரிகள் 8 ஆணையர்கள் மாற்றப்பட்டிருக்கிறார்கள். நகராட்சி வேலைகள் இதுவரை ஒழுங்காக நடைபெறுமா?

இவ்வளவு குறைபாடுகளையும் பல வருடங்களாக சுமந்து நிற்கின்ற மாநகராட்சியின் வருட வருமானம் சுமார் 24 கோடி. அலுவலர்கள் சம்பளம் சுமார் 15 கோடி. மீதம் 9 கோடியில் சென்னை நகர மக்களின் நல்வாழ்வுத் திட்டங்களை செயல்படுத்த முடியுமா? மற்ற எல்லாவித பிரச்சனைகளும் அதிகமாகிக் கொண்டு போகும்போது அதற்கேற்றார் போல் வருமானத்தை பெருக்க சென்னை மாநகராட்சிக்கு தமிழக அரசு என்ன திட்டத்தை கொடுத்தது.

உதாரணத்திற்கு ஒன்றிரண்டை இங்கே குறிப்பிட விரும்புகிறேன். மகாராஷ்டிர மாநில அரசு பம்பாய் மாநகராட்சிக்கு ஆண்டு வருமானம் சுமார் 550 கோடி கிடைக்க ஏற்பாடு செய்து கொடுத்திருக்கிறது.

பம்பாய் மாநகராட்சி அதன் எல்லைக்குள் பஸ் ட்ரான்ஸ்போர்ட் நடத்தும் உரிமை, வீடுகளுக்கு மின்சாரம் விநியோகம் செய்யும் உரிமை. வாகனங்களுக்கு விதிக்கப்படும் வரி முழுமையும் கிடைக்கும் உரிமை, இவற்றிற்கு மேல் மாநில அரசின் மானியம் இவைகளெல்லாம் செய்து கொடுத்த காரணத்தால் ஓராண்டு நபரின் பராமரிப்புச் செலவு ரூபாய் 124.46 ஆகின்றது. ஆனால் சென்னையில் ஒரு நபருக்கு ரூபாய் 60.17 தான் செலவு செய்யப்படுகின்றது. நான் ஒன்று கேட்க விரும்புகிறேன். சென்னைப் பெருநகரின் பஸ் ட்ரான்ஸ்போர்ட் வருமானம் சுமார் 40 கோடி, அதை சென்னை மாநகராட்சிக்கு, பம்பாய்க்கு அளிக்கப்பட்டது போல் அளிப்பீர்களா? சென்னை நகரின் வாகனங்களுக்கான டாக்சேஷன் சுமார் 14 கோடி. அதை மாநகராட்சிக்கு வழங்குவீர்களா?



1983 மார்ச் 17]

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: பேரவைத் துணைத்தலைவர் அவர்களே, பம்பாய் மாநகராட்சியிலே ஆர்ட்ராய் என்ற வரி வசூலிக்கப்படுகின்றது. ஆனால் இங்கே நுழைவு வரி என்று நாம் அறிவித்த நேரத்திலேயே இந்திரா காங்கிரஸ் நண்பர்கள் வெளிநடப்பு செய்தார்கள். அப்படியானால் பம்பாயில் வசூலிக்கப்படுவது மட்டும் சரியாக இருக்குமா? இங்கே நாம் நுழைவு வரி என்று கொண்டுவந்து வசூலிக்க வேண்டும் என்று சொல்கின்ற நேரத்திலே இந்திரா காங்கிரஸ் நண்பர்கள் வெளிநடப்புச் செய்தார்களே, அதற்கு அவர்கள் பதில் சொல்ல வேண்டாமா?

Thiru K.S.G. HAJA SHAREEF; Mr. Deputy Speaker Sir I have said on many occasions that the hon Minister should not compare our State with other States like Bombay or Calcutta. Bombay may collect octroi and its income is more than Rs'200 crores. Yours is only 24 crores. Is it correct Why don't you follow Bombay in all these matters Why don't you go and study what are the revenues the Bombay Corporation is getting and under what circumstances and in what ways Instead of doing this, if the Hon. Minister says our income is 24 crores, it is nothing but — — I do not want to use very harsh words — — out of ignorance, the Hon. Minister is telling that.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அடுத்து திரு. இரா. சா. முனிரத்தினம் அவர்களைப் பேச அழைக்கிறேன்.

திரு. வே. இராஜசேகரன்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் ஒன்றை மட்டும் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

திரு. ப. பொன்னுரங்கம்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, குறுக்கீடுகள் நிறைய வந்துவிட்டதன் காரணத்தால் அவர்களுக்கு சற்று அதிக நேரம் கொடுத்தால் நல்லது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: குறுக்கீடுகள் எவ்வளவு வந்தன. அதற்குத் தகுந்தமாதிரி எந்த அளவுக்கு நேரம் கொடுக்க வேண்டும் என்று பார்த்துத்தான் கொடுத்திருக்கிறேன். திரு. முனிரத்தினம் அவர்களைப் பேச அழைக்கிறேன்.

திரு. இரா. சா. முனிரத்தினம்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சமுதாய நலவளர்ச்சித் திட்டங்களும் நகராட்சி நிர்வாகமும் மற்றும் சாலைகளும் பாலங்களும் என்ற 1983-84-ஆம் ஆண்டுக்கான மானியக் கோரிக்கையினை நான் வரவேற்று நான் சார்ந்திருக்கின்ற எ[illegible] தொகுதியின் சார்பாக [illegible] கருத்துக்களைச் சொல்ல [illegible]

இன்றையதினம் நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்களால் கொண்டுவரப்பட்ட இந்த மானியக் கோரிக்கையில் கிராமப்புறங்களில் தேவையான சாலை வசதிகளையும் பெரிய பாலங்களையும் அமைக்க வேண்டும் என்ற நல்ல திட்டங்களை எல்லாம் மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் அவர்கள் கொண்டுவந்திருப்பதை நான் என்னுடைய தொகுதியின் சார்பாக பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். (குறுக்கீடு.)

இன்றையதினம் தமிழகத்தில் இருக்கின்ற அனைத்து கிராமங்களும் தன்னிறைவு பெற வேண்டும் என்ற நல்ல எண்ணத்தின் அடிப்படையில் அனைத்து கிராமங்களிலும் சாலைகளை நன்கு செப்பனிட வேண்டும் என்ற நல்ல எண்ணத்தில். . .

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மற்ற உறுப்பினர்களை எல்லாம் 5—வது நிமிடத்திலேயே மணி அடித்து முடிக்கச் சொல்லிவிட்டேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. ராஜசேகரன் மட்டும் இப்படி அதிக நேரம் வேண்டும் என்று கேட்டுக்கொண்டிருப்பது சரியல்ல. 12 நிமிடங்கள் அவருக்குக் கொடுக்கப்பட்டு விட்டன. அடுத்த உறுப்பினரும் பேச அழைக்கப்பட்டு பேசிக்கொண்டிருக்கிறார்.

திரு. இரா. சா. முனிரத்தினம்: இன்றையதினம் தமிழ் நாட்டில் இருக்கிற அத்தனை கிராமங்களுக்கும் நல்ல வசதிகள் செய்துகொடுக்க வேண்டும் என்ற நல்லெண்ணத்தின் அடிப்படையில் தன்னிறைவுத் திட்டம் என்ற நல்லதொரு திட்டத்தை தமிழ்நாடு முதல் அமைச்சர் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் கொண்டுவந்து இருப்பதற்காக அவர்களைப் பாராட்ட நாம் கடமைப்பட்டிருக்கிறோம். நாட்டில் வசிக்கக்கூடிய ஏழை எளிய மக்கள் மீது நல்ல அக்கறை கொண்டு சென்னை நகரத்தில் வசிக்கிற மக்கள் எந்தளவிற்கு பலன் பெறுகிறார்களோ அந்தப் பலன்களை கிராமங்களில் வசிக்கக்கூடிய மக்களும் பெறவேண்டும் என்ற நல்லெண்ணத்தின் அடிப்படையில் இந்தத் தன்னிறைவுத் திட்டம் கொண்டு வரப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன், (குறுக்கீடு.)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. ஹாஜா செரீப் அவர்களைப் போன்றவர்கள் அவர்களது கட்சி உறுப்பினருக்குச் சொல்ல வேண்டும்; மாண்புமிகு உறுப்பினர் திரு. ராஜசேகரன் அவர்களுக்கு இன்னொரு முறை பேசும்போது சிறிது நேரம் அதிகம் பேசலாம்.

Thiru K.S.G. HAJA SHAREEF : I would request Hon. [illegible] Rajasekaran please resume to his seat.





திரு. இரா. சா. முனிரத்தினம்: இன்றையதினம் தமிழ்நாட்டிலே இருக்கின்ற அத்தனை கிராமங்களிலும் உள்ள ஏழை மக்கள் நலனை மனதில் கொண்டு அவர்கள் வாழ்க்கைத்தரத்தை உயர்த்த வேண்டும் என்ற நல்லெண்ணத்தின் அடிப்படையில் தமிழக முதல்வர் புரட்சித் தலைவர் அவர்கள் தன்னிறைவுத் திட்டம் போன்ற நல்ல பல திட்டங்களைக் கொண்டு வந்திருப்பதைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இன்றையதினம் தன்னிறைவுத் திட்டத்தின்கீழ் முதல் கட்டமாக எடுக்கப்பட்ட ஊராட்சி ஒன்றியங்களுக்கும், அதற்கடுத்தாற்போல் இரண்டாம் கட்டமாக எடுக்கப்பபட ஊராட்சி ஒன்றியங்களுக்கும், மூன்றாம் கட்டமாக எடுக்கப்பட்ட ஊராட்சி ஒன்றியங்களுக்கும் ஒதுக்கப்பட்ட தொகை ஒன்றுக்கொன்று குறைவாக இருக்கிறது என்பதால் தன்னிறைவுத் திட்டத்தின்கீழ் எடுக்கப்பட்ட ஒன்றியங்களில் உள்ள வேலைகள் பொறுத்த ஆங்காங்கு சில சாலைகள், பள்ளிக்கூடக் கட்டடங்கள் விடுபட்டிருக்கிற ஒரு நிலை இன்றையதினம் இருக்கிறது என்பதை நான் அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவரக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆகவே மாவட்ட ஆட்சித் தலைவர்களைக் கலந்தாலோசித்து விடுபட்டிருக்கிற சாலைகளை, விடுபட்டிருக்கிற பள்ளிக் கட்டடங்களை கட்டித் தருவதற்கு வேண்டிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல எங்கெங்கு குடிநீர் இல்லையோ அந்தக் கிராமங்களில் குடிநீர் கிடைப்பதற்கான நடவடிக்கைகளை உடனடியாக மேற்கொள்ள வேண்டும் என்றும் மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

என் தொகுதியில் சென்னையிலிருந்து திருப்பதி செல்கிற வழியில் பெரியபாளையத்திலிருந்து ஊத்துக்கோட்டைக்குச் செல்லும் வழியில் உள்ள தரைமட்டப் பாலத்தை மேல்மட்ட பாலமாக கட்டித்தர வேண்டும் என்று பல ஆண்டுகளாக கோரிக்கை விடப்பட்டு வந்திருக்கிறது. இன்றையதினம் சென்னையிலிருந்து திருப்பதி செல்லும் விரைவு வண்டி 90 கிலோ மீட்டர் பெரியபாளையம் வழி செல்ல வேண்டியிருக்கிறது. பெரியபாளையத்தில் பிரசித்தி பெற்றதொரு அம்மன் கோவில் இருக்கிறது. அந்தக் கோவிலுக்கு ஆண்டுதோறும் சுமார் நான்கு இலட்சம் பக்தர்கள் வருகிறார்கள், மழைக் காலத்தில் அந்தச் சாலை மிகவும் மோசமாக இருக்கிறது. பெரியபாளையத்திலிருந்து செல்லும் வழியில் ஆற்றின் குறுக்கே தரைமட்டப் பாலம் இருப்பதால் மழைக் காலங்களில் பெரியபாளையத்திற்குச் சென்று வருகிற மக்கள் சுற்றிச் செல்ல வேண்டியிருக்கிறது. பெரியபாளையத்திலிருந்து ஊத்துக்கோட்டைக்கு சுற்றிச் [illegible] 90 கிலோ மீட்டர் செல்ல வேண்டியிருக்கிறது. எனவே [illegible]

[திரு. இரா. சா. முனிரத்தினம்] [1983 மார்ச் 17

அவர்கள் தயவுசெய்து அடுத்த ஆண்டிலாவது அந்தத் தரை
மட்டப் பாலத்தை மேம் மட்டப் பாலமாக அமை
வேண்டும் என்று இந்த நேரத்தில் பணிவன்புடன் துத் தர
கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். கேட்டுக்

இன்றைய தினம் ஊத்துக்கோட்டை செல்கிற நெடுஞ்சாலை
யில் சரியான பாதை இல்லை, ஆறடி அகலத்தில்தான்
பாதை உள்ளது. அந்த வழியாகத்தான் இரவு அந்தப்
பேருந்துகள் செல்ல வேண்டிய நிலை உள்ளது. நேரங்களில்கூட
அகலம் ஆறு அடிதான் உள்ளது. இரவு நேரங்களில் அந்த ரோடின்
செல்லக்கூடிய பாதையாக அது இருப்பதால் அதை உடனடியாகச் பேருந்துகள்
செப்பனிட்டு விரிவுபடுத்த வேண்டும், அகலப்படுத்த வேண்டும்
என்று இந்த நேரத்தில் பணிவன்போடு கேட்டுக்கொள்ளக்
கடமைப்பட்டிருக்கிறேன். இன்றைய தினம் ரூரல் ரோட்ஸ்

(முற்பகல் 11-30)

திட்டத்தின் கீழ் கிராமப் புறங்களில் தார் சாலை
வேண்டும் என்று அதன் முதல் கட்டமாக 1500 மக்கள் அமைச்சக
கொண்ட பகுதிக்கு தார்ச லை அமைக்க தொகை
உகதிரவு போட்டிருக்கிறார்கள். மற்றும் பின் தங்கிய வேண்டும் என்று
இருப்பின், பின்தங்கிய மக்கள் இருக்கிற இடமாக இடமாக
தாழ்த்தப்பட்ட மக்கள் இருக்கிற இடமாக இருப்பின் இருப்பின்,
1000 மக்கள் தொகை இருந்தால் தார் ரோடு அங்கு
என்று உத்திரவு வழங்கிபிருப்பதை நான் அமைக்கலாம்
பாராட்ட கடமைப்பட்டிருக்கிறேன். இந்த நேரத்தில்

அடுத்து இன்றைய தினம் கும்மிடிப்பூண்டியை
பின் தங்கிய பகுதியாக அறிவித்து இருக்கிறது. அரசாங்கம்
ஏழை எளிய விவசாய பெருங்குடி மக்கள் அங்கு வசிக்கிற
உணவுப் பொருளை நகரத்திற்கு எடுத்துச் செல்கின்ற விளையக்கூடிய
திற்கு கீழ்கண்ட தேசிய சாலையை தார் சாலையாக காரணத்
அமைக்க வேண்டும் என்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன். மாற்றி
(1) ஜி.என்.டி. ரோடு டு கண்ணம்பாக்கம் வழி ஏடூர் (2) கே எஸ்.
ரோடு பில்லாகுப்பம். (3) ஜி.என்.டி, ரோடு டு சுண்ணாம்புகுளம்
(வழி) தேர்வழி நத்தத் (4) ஜி.என்.டி. ரோடு டு மங்காவரம்
(வழி) கம்மவார்பாளையம், தம்புரெட்டி பாளையம்
பாக்கம் (5) எம்.ஜி. ரோடு டு ஆத்துப்பாக்கம் (6) ஆத்துப்
குளம் ரோடு டு ஓபசத்திரம் (7) சுண்ணாம்புகுளம் சுண்ணாம்பு
நத்தம் (8) ஜி.என். ரோடு டு செர்வழி காலனி ரோடு டு
ரோடு டு வத்தளம்பேடு ஆகிய கிராமங்களில் (9) எம்.ஜி.
சாலைகளை எல்லாம் தார் சாலையாக இருக்கிற
வேண்டும் என்று நான் கேட்டுச்கொள்கிறேன். அமைத்துத்தர
தின் கீழ் எடுக்கப்பட்டிருக்கிற பணிகள் வறட்சித் திட்டத்
...கின்றன அப்படி நடைபெறுகின்ற பணிகளை எல்லாம் இப்போது நடந்து



1983 மார்ச் 17] (திரு. இரா. சா. முனிரத்தினம்)

தின் கீழ் உட்படுத்தப்பட்டு அந்த ஊராட்சி ஒன்றியத்திற்கு
ஒப்படைப்போமானால் அந்த பணிகள் நல்ல முறையில்
விரைவாக சீக்கிரமாக செய்வதற்கு உறுதுணையாக இருக்கும்
என்பதை இந்த நேரத்தில் கேட்டுக்கொண்டு ஆந்திரா எல்லை
ஓரமாக இருக்கின்ற கும்மிடிப்பூண்டி பகுதியை மாண்புமிகு
உள்ளாட்சித்துறை அமைச்சர் அவர்கள் மேம்படுத்த வேண்டும்.
பெரியபாளையத்திற்கு ஒரு மேம்பாலம் கட்டிக்கொடுக்க
வேண்டும் என்று கேட்டுக்கொண்டு இந்த மானியக் கோரிக்கையை
வரவேற்று அமைகிறேன். வணக்கம்.

திரு. என். பழனிவேல்: மாண்புமிகு பேரவையின் துணைத்
தலைவர் அவர்களே, உள்ளாட்சித்துறை சம்மந்தப்பட்ட
மானியத்தின் மீது ஒரு சில கருத்துக்களை கூறவிரும்புகிறேன்.
இது ஒரு முக்கியமான மானியம். இது சம்மந்தமாக இங்கு
உள்ளாட்சித்துறை அமைச்சர் அவர்கள் 15-3-83 ஆம் தேதி
அன்று இந்த அவையில் ஒரு அறிக்கை வாசித்தார்கள் அந்த
அறிக்கையில் வருகிற ஜூலை ஆகஸ்டு மாதங்களில் தேர்தல்
நடத்தலாம் என்றும் அதற்காக தாழ்த்தப்பட்டவர்களுக்கும்,
பெண்களுக்கும் இட ஒதுக்கீடு செய்யலாம் என்றும் தயவு
செய்து மற்ற கட்சியைச் சேர்ந்தவர்கள் யாரும் கோர்ட்டுக்கு
செல்ல வேண்டாம் என்றும் அவர்கள் சொன்னார்கள். ஆனால்
நான் ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன், 13-3-83 அன்று
அனைத்து கட்சிகள் கூட்டத்தில் இந்த மாநிலத்தில் வசிக்கக்
கூடிய மேஜாரிட்டி மக்களை பிரதிநிதித்துவம் படுத்தக்கூடிய
கட்சிகள் எல்லாம் ஏற்கனவே இருக்கக்கூடிய இந்த நகராட்சிகள்
மாநகராட்சிகள் சட்டத்தின் கீழ் தேர்தல் நடத்துங்கள் அதிலே
சில அரிசனங்களுக்கும், மற்றவர்களுக்கும் இட ஒதுக்கீடு
செய்வதற்கான வழிகள் இருக்கின்றன. அந்த அடிப்படையில்
20 சதவீத மக்கள் இன்று நகராட்சிகளில் வசிக்கின்ற காரணத்
தினால் தேர்தல் நடத்திவிட்டு அதற்கு பின்னால் ஊராட்சி
மன்றத் தேர்தல்களை வேண்டுமானால் கோர்ட்டு தீர்ப்புக்கு
பின்னால் நடத்தலாம் என்று மெஜாரிட்டி மக்களை பிரதி
நிதித்துவம் படுத்தக்கூடிய மற்ற கட்சித் தலைவர்கள் சொன்
னார்கள். குடியரசு கட்சி, அம்பேத்கர் மக்கள் இயக்கம் இந்த
இரண்டு கட்சித் தலைவர்களை தவிர மற்ற எல்லாக் கட்சித்
தலைவர்களும் சொன்னார்கள். மேஜாரிட்டி கட்சித் தலைவர்
களின் கருத்துக்கு மதிப்பளித்து அவர் அறிக்கை விடுவதாக
சொல்லி இப்போது அதற்கு புறம்பாக அறிக்கை இங்கே
அமைச்சர் அவர்கள் கொடுத்திருக்கிறார்கள். ஏற்கனவே....

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: மாண்புமிகு பேரவை
மாற்றுத் தலைவர் அவர்களே, 15-3-83 அன்று இங்கே ஒரு
அறிக்கையை 106-வது விதிமுறைப்படி படிக்கப்பட்டது. அந்த
அறிக்கையில் ஜூலை ஆகஸ்டு மாதங்களில் நகராட்சி,
மாநகராட்சி தேர்தல்களை நடத்தலாம் என்று அறிவிப்பு
அறிக்கையை நாம் தெரிவித்தோம். அந்த நேரத்தில் ...

துக்களுக்கு எப்படி ஒதுக்கீடுகள் 18 சதவீதம் ஆதிதிராவிட மலைவாழ் மக்களுக்கும், 15 சதவீதம் பெண்களுக்கும் ஒதுக்கீடு செய்திருக்கிறோம். அந்த அடிப்படையில் இதை அரசு விரும்புகிறது என்பதையும் நாம் எடுத்துச் சொல்லியிருக்கிறோம். பெரும்பான்மையான எதிர்க்கட்சித் தலைவர்கள் அந்த கூட்டத்தில் சொன்னார்கள் 18 சதவீதம் 15 சதவீதம் நாங்கள் ஏற்றுக்கொள்கிறோம் என்று அந்த எண்ணத்தை வெளிப்படுத்தியிருக்கிறார்கள். ஆகவே தான் அரசாங்கத்தைப் பொறுத்த அளவில் இந்த ஒதுக்கீடுகள் தேவை என்று அரசு விரும்புகிறது என்பதை நாங்கள் அறிக்கையில் இங்கே சொன்னோம். அதே நேரத்தில் நான் மாண்புமிகு உறுப்பினர் பழனிவேல் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். நீங்கள் 18 சதவீதம் ஆதிதிராவிட மலைவாழ் மக்களுக்கும். 15 சதவீதம் பெண்களுக்கும் கொடுக்கக்கூடாது என்று விரும்புகிறீர்களா என்பதை மட்டும் தெளிவாக தெரிவிக்க வேண்டும்.

திரு. என். சங்கரய்யா: தலைவர் அவர்களே, இதுதான் முக்கியமான பிரச்சனை என்று மார்க்சிஸ்டு கம்யூனிஸ்டு கட்சி முதலிலே இந்த சட்டமன்றத்திலே பெண்களுக்கும், அரிசன மக்களுக்கும், பழங்குடி மக்களுக்கும் ரிசர்வேஷன் வேண்டும் என்று கோரியிருக்கிறது. ஆனால் பிரச்சினை என்னவென்றால் இந்த அரசு நிறைவேற்றிய சட்டத்தை எதிர்த்து அவர்கள் கொண்டுபோன தடையை எதிர்த்து வெற்றி காணவும் முடியவில்லை. அதே பெயரை வைத்துக் கொண்டு நகராட்சிகளுக்கும் மாநகராட்சிகளுக்கும் தேர்தல் நடத்துவதை ஒத்திப்போடுவதாகச் சொன்ன போது 13 ஆம் தேதி நடந்த கூட்டத்திலே பல்வேறு கட்சித் தலைவர்கள் சொன்னார்கள், நாங்கள் அனைவரும் ஏற்றுக்கொள்கிறோம் என்று. ஆனால் நான் கேட்கிறேன், நகராட்சிகளுக்கும், மாநகராட்சிகளுக்கும் ரிசர்வேஷன் என்ற சட்டத்தைக்கூட இந்த அரசு கொண்டுவரவில்லையே, அப்படிக் கொண்டுவராமல் இருக்கிற போது 4 மாத காலத்திலே நிறைவேற்றுவோம் என்றால் இனிமேல் அந்தத் திருத்தத்தைக் கொண்டுவந்து அது நிறைவேற்றப்பட்டு யாராவது 2 பேர்கள் கோர்ட்டுக்குப் போனால் அதன் காரணமாக தேர்தல் நடத்த முடியாது என்று சொல்லி நகராட்சிகளுக்கும் மாநகராட்சிகளுக்கும் தேர்தலை ஒத்திப்போடுவதுதான் அரசாங்கத்தினுடைய நோக்கமா? ஏற்றுக்கொள்ளுங்கள். அமைச்சர் ஒப்புக்கொண்டாரா? இன்றைக்கு வரை மாநகராட்சிகளுக்கும் நகராட்சிகளுக்கும் 18 சதவீதம் 15 சதவீதம் என்பதை ஏற்றுக்கொள்ளக்கூடிய சட்டத்தை அரசாங்கம் கொண்டுவரவில்லை. நீங்கள் கொண்டுவந்து நிறைவேற்றி அதற்கு அப்புறம் யாராவது கோர்ட்டிற்குப் போனால் அதையும் சமாளித்து எப்படிச் செய்யப்போகிறீர்கள். அதனால்தான் சொல்கிறோம். அரசாங்கத்தைப் பொறுத்தவரையில் சுப்ரீம் கோர்ட்டிலே போட்டிருக்கிற பெட்டிஷனை விரைவுபடுத்துங்கள். சீக்கிரத்திலே முடிவு செய்யுங்கள். சென்னை மாநகராட்சி சட்டத்தின்



3-ன்படி இப்போதே நகரங்களில் 25 சதவீதம் தாழ்த்தப்பட்ட மக்களுக்கும் மலைவாழ் மக்களுக்கும், பெண்களுக்கும் ஒதுக்கீடு இருக்கிறது—சென்னை மாநகராட்சியைப் பொறுத்தவரையில் யாரும் தேர்ந்தெடுக்கப்படாவிட்டால் 15 பெண்களும் 15 தாழ்த்தப்பட்ட மக்களும் பிரதிநிதிகளாக இணைக்கப்பட வேண்டுமென்ற சட்டம் இருக்கிறது. அதைப் பயன்படுத்திக் கொண்டு இன்றைக்குத் தேர்தலை நடத்துவோம். இன்றைக்கு அது நிறைவேறாமல் போனால் பல வருடங்களுக்கு மாநகராட்சிக்கும் நகராட்சிகளுக்கும் தேர்தல் நடக்கப்போவதில்லை. ஆகவே கூறுகிறோம், ரிசர்வேஷன் கொள்கையில் வித்தியாசம் இல்லை. எல்லாக் கட்சிகளும் ஏற்றுக்கொண்டார்கள். அப்படி ஏற்றுக்கொண்டுதான் இந்த மன்றத்திலே நிறைவேற்றப்பட்டது. ஆனாலும் இன்றைக்கு ஏன் இல்லை? மாநகராட்சிக்கும் நகராட்சிகளுக்கும் இன்றைக்கு இருக்கிற அடிப்படையில் நடத்துங்கள். சுப்ரீம் கோர்ட் முடிவு வந்ததற்குப் பிறகு திருத்தச் சட்டத்தைக் கொண்டுவந்து நிறைவேற்றலாம். இல்லாமல் போனால் பல ஆண்டுகளுக்கு நகராட்சிகள், மாநகராட்சிகளுக்கு தேர்தல் நடத்தாமல் மக்கள் பிரதிநிதிகள் இல்லாமல் வாடப்போகிறார்கள்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: தலைவர் அவர்களே, ஒதுக்கீடுகளைப் பொறுத்தவரையிலே அவர்களுக்கு மாறுபட்ட காரணங்கள் இல்லை என்பதை திரு. சங்கரய்யா அவர்கள் எடுத்துச் சொன்னார்கள். அனைத்துக் கட்சித் தலைவர்களுடைய கூட்டத்திலே அது பேசப்பட்டது. அனைத்துக் கட்சித் தலைவர்கள் கூட்டத்திலே நீங்கள் ஒதுக்கீடுகள் கொண்டுவராமல் தேர்தல் நடத்தினால் நாங்கள் கண்டிப்பாக கோர்ட்டிற்குப் போவோம் என்று சொன்ன கட்சிகளும் உண்டு, மறந்துவிட வேண்டாம். எந்தக் கட்சி என்று இந்த அவையிலே சொல்வது சரியாக இருக்க முடியாது.

திரு. என். சங்கரய்யா: துணைத் தலைவர் அவர்களே......

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இப்படியே, ஒவ்வொரு பிரச்சினையும் பற்றிப் பேசினால் 15, 20 நிமிடங்கள் போய் விடும், பிறகு மற்ற உறுப்பினர்கள் பேசமுடியாது. வெளியே கூட்டம் நடத்தப்பட்டது, வெளியே பேசிய பிரச்சினை பற்றி இங்கே பேசக் கூடாது.

திரு. என். சங்கரய்யா: இந்தக் கூட்டத்திற்கு வந்திருந்த கட்சிகளிலே காங்கிரஸ் கட்சியோ இந்திய கம்யூனிஸ்ட் கட்சியோ மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியோ மற்ற கட்சிகளோ எதிர்க்கவில்லை. அப்படி யாராவது கோர்ட்டிற்குப் போவேன் என்று சொன்னால் என்ன நோக்கத்தோடு சொல்வார்கள், அமைச்சர் அவர்கள் சொல்வது எப்படி இருக்கிறது என்று சொன்னால் அவர்கள் கோர்ட்டிற்குப் போவார்கள் என்று தெரிந்த பிறகும் அந்தச் சட்டத்தைக் கொண்டுவருவதன் அர்த்தம் என்ன? இதன் விளைவாக பல ஆண்டுகளுக்கு தேர்தல் நடத்தப்போவதில்லை என்பதுதான்.

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு:** இந்த ஒதுக்கீடுகளைச் செய்யவில்லையென்றால் நாங்கள் கோர்ட்டிற்குப் போவோம் என்றுதான் சொன்னார்களே தவிர ஒதுக்கீடு செய்ய வேண்டாமென்று அல்ல. அனைத்துக் கட்சித் தலைவர்கள் யார் யார் வந்திருந்தார்களோ அவர்களுக்கு எல்லாம் தெரியும். அனைத்துக் கட்சித் தலைவர்கள் கூட்டத்திற்கு வந்த தலைவர்கள் இங்கே இருக்கிறார்கள். அவர்களுக்குத் தெரியும். அவர்களேகூட அதைப் பற்றிப் பேசினார்கள். பஞ்சாயத்துத் தேர்தலிலே ஒதுக்கீடு செய்த காரணத்தினால் அந்தச் சட்டம் செல்லும் என்று உயர்நீதி மன்றம் தீர்ப்பளித்திருக்கிறது. நாம் வெற்றி பெறவில்லை என்று சொன்னார்கள். வெற்றி பெற்றிருக்கிறோம். உயர்நீதி மன்றத்திலே கொடுத்த தீர்ப்பின்மேல் மேல்முறையீடு செய்து உச்ச நீதிமன்றத்திற்குச் சென்றிருக்கிறார்கள். இந்த அரசாங்கம் நல்ல எண்ணத்தின் அடிப்படையில் கொண்டுவருகிற ஒதுக்கீடுகளை தவறு என்று சொல்வது எப்படி சரியாக இருக்கும்?

(முற்பகல் 11-40)

எதிர்க்கட்சியாக இருக்கிறவர்கள் இந்த ஒதுக்கீடுகள் எங்களுக்குத் தேவையில்லை. ஆதிதிராவிட மக்களுக்கு கொடுக்க வேண்டாம், பெண்களுக்கு கொடுக்க வேண்டாம் என்று வெளியிலே போய் ஆதிதிராவிட மக்கள் இருக்கிற இடத்திலே, பெண்கள் இருக்கிற இடத்திலே நீங்கள் சொல்லத் தயாரா? இதைதான் நான் கேட்க விரும்புகிறேன் (கூச்சல், குழப்பம்)

**திரு. என். சங்கரய்யா:** மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் அவர்களே முன்னாலே ஒரு தடவை ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள். கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த யாரும் அந்த தடைக்குப் போகவில்லை என்று ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள். அது மிகத் தெளிவு. பிரச்னை என்னவென்றால் அதனுடைய பெயரைச் சொல்லி இன்றைக்கு நடைபெற வேண்டிய மாநகராட்சி நகராட்சித் தேர்தல்களை பல ஆண்டுகாலமாக நடத்தவில்லை. நான் கேட்கிறேன், நான்கு மாதக்காலத்திற்குள்ளே சட்டத்தைக் கொண்டுவாருங்கள், நான்கு மாதத்திற்குள்ளே தேர்தலை நடத்தி முடிப்போம் என்ற உத்தரவாதத்தைக் கொடுக்கமுடியுமா என்றுதான் கேட்கிறேன்.

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு:** அதற்குரிய சட்டத்தை இந்தத் தொடர்க் கூட்டத்திலேயே கொண்டு வரவிருக்கிறோம். கொண்டுவந்து நான்கு மாதக் காலத்திற்குள்ளே நடத்துவதற்கு நாம் தயாராக இருக்கிறோம். அதைத்தான் நான் சொன்னேன். (குறுக்கீடு) ஸ்டே வாங்குவதென்றால் எதற்கு வேண்டுமானாலும் ஸ்டே வாங்கலாம். நல்ல கருத்தை, நல்ல கொள்கையை கொண்டு வரவேண்டியது ஒரு அரசினுடைய கடமை. அந்த கடமையைத்தான் நாம் செய்துகொண்டிருக்கிறோம். கடமையைச்



செய்கிற நேரத்தில் தடை செய்யவேண்டுமென்று, எப்படியாவது நிறுத்த வேண்டுமென்று சமூக விரோத செயல்களிலே ஈடுபடக் கூடியவர்கள் கூட ஒருசிலர் இருக்கலாம். நாம் என்ன செய்ய முடியும். உங்களுக்குத் தெரிந்தால் தடுத்து நிறுத்துங்கள்.

**திரு. என். சங்கரய்யா.** துணைத் தலைவர் அவர்களே, பஞ்சாயத்து தேர்தல்கள் சுப்ரீம் கோர்ட்டிலே தடை செய்யப்பட்டிருக்கிறது என்று தெரிந்தபின்னாலும் அதற்காக சர்வக்கட்சிக் கூட்டத்தை அரசு ஏன்கூட்டியது? அதிலே தீர்ப்பு வந்த பிறகுதான் நடத்தமுடியும் என்று சொல்லியிருக்கலாம் அல்லவா? எதற்காக சர்வக்கட்சிக் கூட்டத்தை கூட்டினார்கள்? அது ஒரு பக்கத்திலே இங்கே இருக்கிறபோது மாநகராட்சி, நகராட்சித் தேர்தல்களைப்பொறுத்த வரையில் சீக்கிரமாக நடத்துவதற்கு வழி இருக்கிறதா என்று பார்க்கவேண்டும். அப்படியிருக்கிறபோது மறுபடியும் ரிசர்வேஷன் பிரச்னையை கொண்டுவந்து....

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அமைச்சர் அவர்கள் இந்தக் கூட்டத் தொடரிலேயே சட்டத்தைக் கொண்டு வருகிறோம் என்று சொல்லிவிட்டகர்கள்.

**திரு. நா. சுந்தரராஜ்.** தலைவர் அவர்களே,......

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** உட்காருங்கள். இப்படி திடீரென்று பிரச்னையை எழுப்பக்கூடாது. ஒவ்வொரு உறுப்பினரும் இங்கு பேசப் போகிறார்கள். நினைத்தபோது பேசவேண்டுமென்றால் எப்படி முடியும்? அதற்காக ஒரு வரைமுறை வைத்துக்கொள்ளவேண்டும்.

**திரு. நா. சுந்தரராஜ்.** மினிஸ்டர் பேசியிருக்கிறார். அதனால்தான்......

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. சங்கரய்ய. அவர்களின் குறுக்கீடு வந்தது. அதற்கு பதில் சொன்னார் உட்காருங்கள். (கூச்சல், குழப்பம்)

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

**திரு. கே. எஸ். ஜி. ஹாஜாசெரீப்.** தலைவர் அவர்களே, சர்வ கட்சிக் கூட்டத்தில் நானும் காங்கிரஸ் கட்சியின் சார்பாக கலந்து கொண்டேன். அங்கே பேசியவர்கள் எல்லோரும் அவசியம் முனிசிபாலிட்டிகள், கார்ப்பரேஷன் எலக்ஷன் நடத்தவேண்டுமென்று சொன்னார்களே தவிர ரிசர்வேஷன் அடிப்படையிலே நடத்தவேண்டுமென்று யாரும் சொல்லவில்லை. அமைச்சர் அவர்கள் பேசுவது திசைத் திருப்பி பேசுகிறார்கள். அன்றே சொல்வேன். உங்களுக்கு மாநகராட்சி எலக்ஷன் நடத்துவதற்கு தைரியம் இல்லை என்று சொன்னேன். அவர் ஏன் இப்படி மாற்றிச் சொல்கிறார் என்று தெரியவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நானும் கேட்டுக்கொண்டுதான் இருந்தேன். அமைச்சர் அவர்கள் வேறு ஒன்றும் கூறவில்லை. தடை வாங்கியிருக்கிறார்கள். ஸ்டேக்கு போகிறவர்களை தடுத்துவிட்டால் தேர்தலை நடத்துகிறேன் என்றுதான் சொல்லியிருக்கிறார்கள். கூச்சல் குழப்பம்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அனைத்துக் கட்சித் தலைவர்களுடைய கூட்டத்திலே மரியாதைக்குரிய இந்திரா காங்கிரஸ் கட்சியினுடைய தலைவர் திரு. ஹாஜாசெரீப் அவர்கள் கலந்துகொண்டார்கள். திருமதி யசோதா அவர்களும் கலந்து கொண்டார்கள் ஆனால், கலந்துகொண்டு அவர்கள் பேசிவிட்டு, ஒரு மணி நேரத்திலேயே வெளியே சென்றுவிட்டார்கள். அவர்கள் மன்னிக்க வேண்டும். ஏனென்றால், ஒத்துக் கொள்வார்கள் என்பதிலே எனக்கு எள்ளளவும் சந்தேகம் இல்லை. ஆனால், திருமதி யாயோதா அவர்கள் இருந்தார்கள். அதற்குப் பின்னாலே திண்டிவனம் இராமமூர்த்தி அவர்கள் இங்கே வந்தார்கள். ஆனால், அவர்கள் பேசிவிட்டு சென்றதற்குப் பின்னாலே, பல்வேறு கட்சித் தலைவர்களும் அங்கே பல்வேறு கருத்துக்களை எடுத்துச் சொன்னார்கள். அந்தக் கருத்துக்கள் மதிப்பிற்குரிய ஹாஜாசெரீப் அவர்களுக்குத் தெரிந்திருக்க முடியாது என்று நான் நினைக்கின்றேன். ஏனென்றால், திருமதி யசோதா போன்றவர்கள் தெரிவித்திருந்தால் ஏதாவது தெரிந்திருக்கலாம். இல்லையென்று சொன்னால், கண்டிப்பாகத் தெரிந்திருக்க முடியாது. அதனால்தான் இந்தக் கருத்துக்கள் இங்கே வந்தன என்பதைச் சொல்வதோடு, ஏற்கனவே நாம் பஞ்சாயத்துத் தேர்தலைப் பொறுத்த அளவில் உச்ச நீதிமன்றத்திலே இருக்கக் கூடிய வழக்கைச் சீக்கிரமாக நடைமுறைப்படுத்த வேண்டுமென்று ஒரு எக்ஸ் பெட்டிஷனை 5—12—1983—லே நாம் போட்டோம். அந்த பெட்டிஷனை வருகின்ற 5—12—1983 அன்று எடுத்துக் கொள்கின்றோம் என்ற அறிவிப்பும் வந்திருக்கிறது. ஆகவேதான் அந்த பெட்டிஷன்மீது வழக்கறிஞர்கள் மூலமாக வாதாடிக் கொண்டிருக்கிறோம். கண்டிப்பாக தீர்ப்பு 8—4—1983—லே கிடைத்தாலும் கிடைக்கும். ஆகவேதான் இந்தச் சட்டத்தை நாம் கொண்டு வந்துவிட்டால், உடனடியாக, நகராட்சி. மாநகராட்சித் தேர்தலை முதலிலே நடத்திவிட்டு, அதற்குப் பின்னாலே, பஞ்சாயத்துத் தேர்தலை நடத்தலாம் என்ற முடிவைத்தான் நாம் சொன்னோம். ஆகவே, இந்தச் சட்டத்தை நாம் சீக்கிரமாகக் கொண்டு வர இருக்கிறோம். நீங்கள் கேட்டீர்கள், எப்படி இந்த 4 மாத காலத்திற்குள்ளாக நடைமுறைப்படுத்த முடியும் என்று. ஆனால், கண்டிப்பாக நடைமுறைப்படுத்த முடியும் என்கின்ற காரணத்திற்காக, இந்தத் திருத்தச் சட்டத்தை, இந்தத் தொடர் கூட்டத்திற்குள்ளே கொண்டு வந்து விட்டு, அதற்குப் பின்னாலே தேர்தலை நடத்துவதற்குப் போதுமான அவகாசம் இருக்கிறது. கண்டிப்பாக நடத்த முடியும்.



திரு. என். சங்கரய்யா: தலைவர் அவர்களே.....

திரு. எல். இளையபெருமாள்: பாயின்ட் ஆப் ஆர்டர்......

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பாயின்ட் ஆப் ஆர்டரிலே, 10, 10 நிமிஷம் பேசுவீர்கள் போல் இருக்கிறதே. நடப்பது உள்ளாட்சித்துறை மானியக் கோரிக்கை மீதான விவாதம். அதிலே, எல்லாக்கட்சி உறுப்பினர்களும் பேசிக் கெண்டிருக்கிறீர்கள். கடைசியாக, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் உரையை நல்க இருக்கிறார்கள். அதுவரைக்கும் எல்லோரும் பொறுத்திருங்கள். பதில் உரையில் ஒன்றும் இல்லையென்றால் அப்பொழுது குறுக்கீடு செய்யுங்கள். நடுநடுவிலே குறுக்கீடு செய்தால் மற்ற மாண்புமிகு உறுப்பினர்கள் பேசுவது தடைப்படும். இன்னும் நிறையபேர்கள் பேசவேண்டியிருக்கிறது.

திரு. அ. ரகுமான்கான்: ஒரு கட்சியின் தலைவர் பேசுகிறார்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்; உங்கள் சிபாரிசுக்காக ரொம்ப நன்றி. அவர் கட்சித் தலைவர் என்று இப்பொழுது தான் அறிமுகப்படுத்தி இருக்கிறீர்கள், எனக்கு. நான் என்ன செய்வது.

திரு. என். சங்கரய்யா: பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் தான் குறுக்கிட்டார்கள். அமைச்சா அவர்கள் குறுக்கிட்டதனுடைய விளைவாகத்தான்.....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அமைச்சருக்குக்கூட நான் சொல்கிறேன், தயவுசெய்து கடைசியிலே பதில் சொன்னால், அப்பொழுது குறுக்கீடு வந்தால் சரியாகப் போய்விடும். இப்பொழுது குறுக்கீடு இல்லாமல் இருந்தால் நல்லது. எல்லோரும் தேர்தல் வேண்டுமென்று கேட்கப் போகிறார்கள். அமைச்சர் உண்டு அல்லது இல்லையென்று சொல்லப் போகிறார். சொல்வதைக் கடைசியிலே சொல்லிவிடட்டும், அவ்வளவுதான்.

திரு. என். சங்கரய்யா: நான இப்பொழுது என்ன கேட்கிறேன் என்றால், அன்றைக்குக் கூட்டப்பட்ட கூட்டத்தினுடைய நோக்கமே சுப்ரீம் கோர்ட்டிலே வழக்கு முடிவடையாமலிருக்கிறது. இப்படி முடிவடையாத ஒரு நிலையிலே, நகராட்சிகள், மாநகராட்சிகள் தேர்தலை. அதேபோல் தள்ளிப்போட வேண்டுமா? இல்லை ஒரு வழி கண்டுபிடிக்கலாமா என்றுதான் அந்தக் கூட்டம் கூட்டப்பட்டிருக்கிறது. இல்லாவிட்டால், அமைச்சர் அவர்கள் தெளிவாகச் சொல்லிருக்கலாமே, இத்தனாம் தேதி சுப்ரீம்கோர்ட்டிலே முடிவடையக போகிறது. அதனுடைய முடிவு என்ன என்பதைப் பார்க்க

இதைத் தீர்க்கலாம் என்று ஒரு வார்த்தையிலே சொல்லியிருக்கலாம். அமைச்சர் அவர்களும் சொன்னார்கள், 4 மாதம திட்டம்போட்டு இதை நடத்தலாம் என்று. அப்பொழுது நான் கேட்டேன், இன்றைக்கு நீங்கள் சட்டத்தைக்கொண்டு வந்து யாராவது ஸ்டே வாங்கிவிட்டால், அப்பொழுது என்ன சொல்வீர்கள், இதற்கும் ஸ்டே வாங்கிவிட்டார்கள் என்று சொல்வீர்கள். எங்களுடைய நோக்கம்........

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அது கற்பனையிலே நடக்கிற விவாதம். ஒரு ஸ்டே வாங்கிவிட்டால், அதற்குப் பின்னால் என்ன என்பது சில உதாரணங்களை இங்கே சொல்வதற்கு சங்கடமாக இருக்கிறது. (திரு. ரா. உமாநாத் குறுக்கீடு) அமைச்சர் அவர்களே சொன்னார்கள், 8 ஆம் தேதி கேஸ் வருகிறது, விடை வந்தாலும் வரும் என்று. அதுவரைக்கும் பொறுப்போம். இன்றைக்கு சபையை முடிப்போம்.

**திரு. எல். இளையபெருமாள்.** ஸ்பீக்கர் சார், கனம் அமைச்சர் அவர்கள் சொல்கின்றபொழுது சில கட்சிகள் ஆதி திராவிட மக்களுக்கும், பெண்களுக்கும், இட ஒதுக்கீடு செய்வதை ஒத்துக் கொள்ளவில்லையென்று சொன்னார்கள். அதோடு கூட சில சமூக விரோதிகள் இதைச் செய்வார்கள் என்றும் சொன்னார்கள். தடை வாங்குகிறார்கள் என்றும் சொன்னார்கள். தயவுசெய்து சபாநாயகர் அவர்களிடம் நான் கேட்க விரும்புவது, ஆதிதிராவிட மக்களுக்கும் மலை வாழ் மக்களுக்கும் பெண்களுக்கும் இட ஒதுக்கீடு கூடாது என்று சொன்ன கட்சி எந்தக் கட்சி என்பதைக் கட்டாயம் இங்கே சொல்லவேண்டுமென்பதை உங்கள் முலமாக நான் இங்கே கேட்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அப்படி யாராவது கட்சிகள் இருந்தால், அமைச்சர் கடைசியிலே சொல்வார்.

(முற்பகல் 11–50)

**திரு. அ. ரகுமான்கான்.** எதிர்த்தது நாங்களா, திராவிட முன்னேற்றக் கழகமா என்பது தெரிய வேண்டாமா?

**Thiru. L. ILAYAPERUMAL.** Mr.Speaker Sir, My question is not answered.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இப்பொழுது கேட்டு விட்டீர்கள். அமைச்சருடைய பதிலின்போது வரவில்லை என்றால் குறுக்கீடு செய்யுங்கள்; அப்பொழுது கேளுங்கள். அவரிடமிருந்து கடைசியில் பதிலை வாங்கிக்கொள்ளுங்கள்.





**திரு. எல். இளையபெருமாள்:** யார் என்பதைச் சொல்ல வேண்டும்.

**மாண்புகு பேரவைத் தலைவர்:** கடைசியில் பதிலின்பொழுது சொல்வார்கள்.

**திரு. அ. ரகுமான்கான்:** அப்பொழுது வேண்டாம்; இப்பொழுதே சொல்ல வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இப்படிக் கேட்பதை நான் அனுமதிக்க முடியாது.

**Thiru L. ILAYAPERUMAL:** Mr. Speaker Sir, My question is not swered.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஒரு பிரச்னையைத் தெளிவாகச் சொல்லியிருக்கிறீர்கள். கடைசியாகப் பதில் அளிக்கும் பொழுது அமைச்சரவர்கள் சொல்வார்கள். நின்றுகொண்டிருக்கின்ற திருவாளர்கள் விஜயராகவன், முகமது இஸ்மாயில் ஆகியோர் உட்காரவேண்டும். பழனிவேல் அவர்கள் ஒன்றிரண்டு விஷயங்களில் தன்னுடைய உரையை முடித்துக் கொள்ள வேண்டும்.

**திரு. என். பழனிவேல்:** பேரவைத் தலைவரவர்களே, இன்றையதினம் நகராட்சிகளுககும், மாநகராட்சிக்களுக்கும் தேர்தல்கள் நடைபெற்று கிட்டத்தட்ட 13 ஆண்டுகள் ஆகிவிட்டன. ஆகவே, மக்கள் பிரதிநிதிகள் இல்லாததால் தனி அதிகாரிகளினுடைய ஆட்சிதான் நடந்து கொண்டிருக்கிறது. அதனால் மக்களுடைய பிரச்னைகள் சொல்ல முடியாத அளவிற்குப் பெருகியிருக்கின்றன. குடிதண்ணீர் வசதி, மின் விளக்குகள் வசதி, சுகாதார வசதி போன்ற எந்தவிதமான வசதியும் செய்து கொடுக்கப்படவில்லை அல்லது அவைப் பற்றி நகரசபைகளிலோ, மாநகராட்சிகளிலோ சொல்வதற்கான மக்கள் பிரதிநிதிகள் இன்றைக்கு இல்லை. அதன் காரணமாகத் தான், தேர்தலை விரைவாக நடத்த வேண்டுமென்ற நோக்கத்தோடு நாங்கள் சொல்கிறோமேயொழிய அரிசனங்களுக்கான இட ஒதுக்கீட்டுப் பிரச்னையில் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி பின்தங்கியது அல்ல, அதற்கு மற்றவர்கள் சர்ட்டிபிகேட் தேவையில்லை என்பதைச் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

இன்றைக்கு ஊராட்சி ஒன்றியங்களில் பணிபுரியக்கூடிய நகரசுத்தி, துப்புரவுத் தொழிலாளர்களுக்கு 60 ரூபாயிலிருந்து 100 ரூபாய் வரை சம்பளம் உயர்த்திக் கொடுக்க வேண்டும். பல கிராமங்களில் பல்லாயிரக்கணக்கான ஊழியர்கள் பணி புரிந்து கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கெல்லாம் இன்றைக்கு அரசு என்ன செய்யப் போகிறது? அவர்களும் [illegible]

வர்கள்தான். அவர்கள் வாழ்க்கை நடத்துவதற்கான போதிய சம்பள வசதிகூட இல்லாமல் 60 ரூபாய் சம்பளத்தில் இன்றைக்குப் பணிபுரிந்து கொண்டிருக்கிறார்கள். ஆகவே, அந்த ஊழியர்களின் சம்பளத்தை உயர்த்திக் கொடுக்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

குடும்பத்தில் ஒருவருக்கு வேலை என்ற திட்டத்திற்காக 15 கோடி ரூபாய் ஒதுக்கியிருப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள். குடும்பத்தில் ஒருவருக்கு வேலை என்பது பற்றி ஆராய்ச்சி செய்து கொண்டிருப்பதாகச் சொல்கிறார்கள். அது என்ன ஆராய்ச்சி என்பதையும் அமைச்சாவர்கள் தெளிவாகச் சொல்ல வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, அந்த வேலைகள் உடனடியாகக் கிடைக்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்றும் தெரிவித்துக்கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியிலே பல்லாண்டுக் காலமாக இரண்டு பாலங்கள் கட்ட வேண்டிய திட்டத்தைப்பற்றி இந்த அரசு ஆட்சிக்கு வந்ததிலேயிருந்து நானும்சொல்லிக்கொண்டிருக்கிறேன். பார்ட் 2 ஸ்கீமில் சேர்த்துக் கொள்ள வேண்டுமென்று தலைமைப் பொறியாளர் அரசுக்கு அறிக்கை அனுப்பினாலும்கூட, இன்னும் நிறைவேற்றப்படவில்லை. தாமரைக் குளத்தையும், ராசாபுரத்தையும் இணைக்கின்ற அந்தப் பாலத்தை இந்த ஆண்டிலேயாவது கட்டிக்கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மானூர் அருகே உள்ள பாலம் கட்டப்படாத காரணத்தால் மழை பெய்தால் மக்கள் பத்து பதினைந்து நாட்களுக்கு அந்தப் பகுதியில் செல்ல முடியாத சூழ்நிலை இருக்கிறது. எனவே, அந்தப் பாலங்களை இந்த அரசு அவசியம் கட்டிக் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

தன்னிறைவுத் திட்டம் கொண்டு வந்ததால் எல்லாப் பிரச்னைகளும் தீர்ந்து விட்டதாக ஆளுங்கட்சியைச் சேர்ந்தவர்கள் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். இந்த வறட்சியின் காரணமாகத் தன்னிறைவுத் திட்டம் இன்றைக்குத் தவிடு பொடியாகிக்கொண்டிருக்கிறது. தன்னிறைவுத் திட்டம் நிறைவேறிய அனைத்து ஒன்றியங்களிலேயும் குடிப்பதற்குத் தண்ணீர் இல்லை, எந்தவிதமான வசதியும் இல்லை. ஒன்றரை கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்து 100 நகராட்சிகளுக்கு லாரிகள் வாங்கி சப்ளை செய்யப் போவதாக இந்த அறிக்கையிலே சொல்லியிருக்கிறார்கள். ஒன்றரை கோடி ரூபாயில் 100 லாரிகளை வாங்குவதற்கும் அனுமதிதான் கேட்டிருக்கிறார்களே தவிர, அரசு பரிசீலித்துக்கொண்டிருக்கிறதே தவிர, இன்றைக்குத் தண்ணீர் இல்லாமல் இருக்கின்ற மக்களுக்கு எப்பொழுது தண்ணீர் கொடுக்கப் போகிறீர்கள்? எனவே உடனடியாக உத்தரவு போட்டு மக்களுடைய தண்ணீர்ப் பிரச்னையைத் தீர்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்



*திரு. செ. பட்டாபிராமன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உள்ளாட்சித் துறை அமைச்சரவர்கள் கொண்டு வந்துள்ள மானியக் கோரிக்கையை வரவேற்று, என்னுடைய கருத்துக்களை இங்கே சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். குறிப்பாக தன்னிறைவுத் திட்டத்தில், தமிழகத்தில் 378 ஊராட்சி ஒன்றியங்கள் மூன்று பிரிவுகளாக பிரிக்கப்பட்டு, இந்த ஆண்டில் முடிய இருக்கிறது. என்னுடைய தொகுதியிலே பூண்டி—தி வள்ளூர் ஊராட்சி ஒன்றியங்கள் 1981-82 ஆம் ஆண்டில் தன்னிறைவுத் திட்டத்தில் சேர்க்கப்பட்டு, 85 சதவீதம் மிகவும் நன்றாக நிறைவேற்றப்பட்டிருக்கிறது. இருந்தாலும் கூட, சில பல பாலங்கள், சாலைகள் ஆகியவற்றில் விடப்பட்டு இருக்கிறது. மாண்புமிகு அமைச்சரவர்கள் இந்த அவையிலே கூறியதுபோல, விடப்பட்டுள்ள தன்னிறைவுத் திட்டப் பணிகளில், 1983-84 ஆம் ஆண்டுத் திட்டத்தில், நிச்சயமாக ஒவ்வொரு ஒன்றியத்திற்கும் ஒரு நிதி ஒதுக்கீடு செய்து கொடுக்க, வேண்டுமென்று என்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்கிறேன்.

தன்னிறைவுத் திட்டத்தில் முதல் கட்டமாக எடுத்துக் கொண்டு, 69 ஊராட்சி ஒன்றியங்களுக்கு மட்டும்தான் இந்த வருடத்திலே நிதி ஒதுக்கீடு என்று அமைச்சரவர்கள் சொல்லி இருக்கிறார்கள். அதை விரிவாக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்கிறேன்.

ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தில் மத்திய அரசு தமிழக அரசிற்குக் கொடுத்துள்ள நிதி மிக வளமாக, செம்மையாக, சீராக தமிழகத்தில் மட்டும்தான் செயல்பட்டு வருகின்றது என்பதை மத்திய அமைச்சர் அவர்கள் பாராட்டியிருக்கிறார்கள். இந்த நேரத்தில் மத்திய அரசு REP திட்டத்திற்கு மீண்டும் அதிக நிதி ஒதுக்கீடு தரவேண்டுமென்று கூறிக்கொள்கிறேன். போன வருடம் ஊராட்சி ஒன்றியங்களில், இந்தத் திட்டத்தில், சமுதாயக் கூடங்கள் ஊராட்சி ஒன்றியத்திற்கு ஒன்று அவசியம் கட்டவேண்டும் என்றிருந்த நிலையில், அந்தப் பணியை மேற்கொள்ள வேண்டிய காலத்தில், நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறது. தயவு செய்து இந்த ஆண்டு ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திற்கும், சமுதாயக் கூடங்கள் அவசியம் கட்டித் தரவேண்டும். அதனால், ஒரு நிலையான வருமானம் ஊராட்சி ஒன்றியங்களுக்கு கிடைக்கும் என்பதை இந்த நேரத்தில் நான் நினைவுபடுத்திக் கொள்ள விரும்புகிறேன்.

கொடுக்கப்பட்டு திட்டங்கள் மிக வேகமாக நடைபெற்றுக் கொண்டிருக்கிற இந்த 20 நகராட்சி மன்றங்களில் இந்த திட்டம் திருவள்ளூர் நகராட்சியில் முதலில் முடிக்கமுடியும் என்பதை இந்த நேரத்திலே அரசு அதிகாரிகளுக்கு நான் தெரிவித்துக் கொள்கிறேன். மேலும் பாதிக்கு மேலே விடப்பட்டுள்ள வேலைகளை முடிப்பதற்கு, இன்னும் ரூ. 25 இலட்சத்தை திருவள்ளூர் நகராட்சிக்குத் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். திருவள்ளூர் நகராட்சி வருமானம் இல்லாத ஒரு நகராட்சி மன்றமாகும். ஆண்டு ஒன்றுக்கு 23 இலட்சம் ரூபாய் செலவும், 19 இலட்சம் ரூபாய் வரவும் உள்ள நகராட்சிமன்றமாகும். இந்த நகராட்சிக்கு உள்ள ஒட்டுமொத்தமான வருமானம் வீட்டு வரி ஒன்றுதான். எனவே அந்த நகராட்சி மன்றத்தில் வீட்டு வரி கூட திக்கப்பட்டு ஏறக்குறைய 12 ஆண்டுகள் ஆகிவிட்டது. நவு செய்து நகராட்சிக்கு, இந்த அரசினுடைய திட்டத்தில் போதுமான அளவு நிதி ஒதுக்கீடு செய்து அந்த நகராட்சியை ஒரு பிரச்சினை இல்லாத நகராட்சியாகக் கொண்டுவர வேண்டுமென்று அரசு அதிகாரிகளை இந்த நேரத்தில் நான் கேட்டுக் கொள்கிறேன்.

இந்த வறட்சிக் திட்டத்தில் மின் வெட்டு காரணமா திருவள்ளூர் நகராட்சிப் பகுதியில் அடிக்கடி குடிதண்ணீர் பிரச்சினை உள்ளது. ஆகவே அந்தப் பிரச்சினையைப் போக்க வறட்சித் திட்டத்தில் இரண்டு ஜெனரேட்டர்கள், நிலத்தடி நீர்ப் பகுதியாக இருக்கின்ற இடத்தில், திருவள்ளூர் நகராட்சிக்கு நிச்சயமாகத் தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

என்னுடைய பூண்டி ஒன்றியத்தில், நீண்டகாலமாகவே திருவள்ளூருக்கும், மெய்யூர் என்ற கிராமத்திற்கும் இடையில் செல்லுகின்ற குசஸ்தலை ஆற்றின் குறுக்கே ஒரு தரைப்பாலம் இந்தத் திட்டத்தில் கட்டித்தரவேண்டும் என்றும் அதன் மூலமாக 10 கிராமங்கள் பயன்பெறும் என்றும் சொல்லிக் கொள்கிறேன். அந்தக் கிராமத்திலுள்ள மக்கள் 3 கிலோ மீட்டர் நடந்து வந்து பஸ்ஸைப் பிடிக்க வேண்டிய நிலையில் இருக்கிறார்கள். ஆகவே ஒரு தரைப் பாலத்தை மைப் பதற்கு ஒரு திட்டத்தைச் சேர்க்கவேண்டும் என்று அமைச்சரவர் கேட்டுக்கொள்கிறேன்.

(நண்பகல் 12—00)

அதோடு கிராமப்புறங்களுக்கு தார் ரோடுகள் போடுகின்ற திட்டத்தின் கீழ் என்னுடைய ஒன்றியத்திலே எந்தவிதமான வேலையும் சேர்க்கப்படவில்லை. குறிப்பாக திருவள்ளூர், ஆவடி வழியாக சென்னைக்குச் செல்லுகின்ற நடுஞ்சாலையில் உள்ள பெருமாள்பட்டு என்ற அந்தக் கிராமத்தில் ஏறக்குறைய 8,000 ஜனங்களுக்கு மேல் இருக்கிறார்கள். அந்த நெடுஞ்சாலையை இந்தகிராமப்புற, ஆர். ஆர். என்ற டெவலப்மென்ட் திட்டத்திலே சேர்க்கப்படவேயில்லை என்பதை மிகவும் வருத்தத்தோடு





அடுத்து சத்துணவுத திட்டத்திற்காக கட்டுகின்ற கட்டிடங்கள் மற்றும் பணிகளை ஊராட்சி வளர்ச்சித திட்டத்தில் உள்ள அதிகாரிகள் செய்யும்போது அவற்றினுடைய அனைத்துப் பணிகளையும் ஊராட்சி வளர்ச்சி அதிகாரியிடம் ஒப்படைக்க அரசு முன்வரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அதோடு ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திலும் கிராமநல ஊழியர்கள் 10 பேர்களாவது அவசியம் இருக்கவேண்டும் என்று G.O. இருந்தாலும்கூட இப்போது, 7 பேர்கள், அல்லது 8 பேர்கள்தான் பணியாற்றுகிறார்கள். அதனை 10 பேர்களாக உயர்த்திக் கொடுக்க ஆவன செய்யவேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து திருவள்ளூர் நகராட்சிப் பகுதியில் இருக்கின்ற பஸ் போக்குவரத்து நிலையம் மக்களுக்குப் போக்குவரத்துக்கு மிகவும் இடைஞ்சலாகவும், இடம் மிகவும் குறுகியதாகவும் இருக்கிறது. எனவே அதை விரிவுபடுத்த அரசாங்கம் நடவடிக்கை எடுக்க முன்வரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து திருவள்ளூர் நகராட்சிப் பகுதியில் இப்போது மின்சார வெட்டின் காரணமாக குடிநீர்,சப்ளை பாதிக்கப் பட்டு இருப்பதால், எங்களுடைய பகுதிக்கு 2 ஜெனரேட்டர் களைத் தரவேண்டும் என்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள் கிறேன்.

கடைசியாகவறட்சிப் பணிகளை பொதுப் பணித்துறையின் மூலமாகவோ அல்லது நெடுஞ்சாலைத் துறையின் மூலமாகவோ செய்தாலும் இப்போது விவசாயத் தொழிலாளர்களுக்கும், கிராமப்புற மக்களுக்கும் போதிய வேலை வாய்ப்பைக்கொடுப் பதாக அவை இல்லை. ஆகவே ஊராட்சி மன்றங் களில் சில குடிநீர்க் குளங்கள் வெட்டுவதற்கும், பழுது பார்ப்பதற்கும், வரத்துக் கால்வாய் வேலைகளைச் செய் வதற்கும் ஊராட்சி ஒன்றியங்களின் மூலம் செய்வதற்கு அரசாங்கம் தீவிரப்படுத்த வேண்டும் என்று நான் இந்த நேரத்திலே கேட்டுக் கொள்கிறேன். ஊராட்சி ஒன்றியங் களின் அதிகாரங்கள் நாளுக்கு நாள் குறைக்கப்பட்டு வருகின்ற காலத்தில் இந்தப் பணிகளை ஒன்றியங்களுக்குக் கொடுத்தால் கிராம மக்களுக்கு நிச்சயமாக வேலை வாய்ப்பு கிடைப்பதோடு வறட்சிப் பணிகளை செம்மையாக நடக்கவும் உதவி கரமாக இருக்கும் என்பதை நான் இந்த நேரத்தில் தெரிவித்துக் கொண்டு வாய்ப்பு அளித்தமைக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன்.

திரு. ஏ. எம். சேதுராமன்; மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஊரக வளர்ச்சி திட்டத்தின் கீழும் சாலை கள். பாலங்கள் திட்டத்தின் கீழும் இந்த மானியக்கோரிக்கையின் மீது பேசுவதற்கு வாய்ப்புக் கொடுத்தமைக்கு நன்றிசொல்லிக்கொள்

1983–84 ஆம் ஆண்டுக்கான திட்டத்தில் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள், 15 கோடி ரூபாயில் குடும்பத்திற்கு ஒருவருக்கு வேலை கொடுக்க வேண்டும் என்று ஒரு திட்டம் கொண்டு வந்திருக்கிறார்கள். அந்த வகையிலே இந்த திட்டத்தை நிறைவேற்றுகின்ற தன்மையிலே தமிழ் நாட்டைப் பொறுத்த வரையிலே, அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பொறுத்த வரையிலே நாங்கள் பெரு மகிழ்ச்சி அடைகிறோம். இந்த திட்டத்தைக் நிறைவேற்றுகின்ற போது முதல் கிராமங்களிலே இந்தத் திட்டத் த கட்டமாக வந்து ஒவ்வொரு கிராமத்திலே உள்ள ஒவ்வொரு குடும்பத்தில் கொண்டு உள்ள ஒருவருக்கு வேலை வாய்ப்பு கொடுப்பதென நாம் முக்கியமாக எடுத்துக்கொள்ள வேண்டும். ஏன் என்றால், நகரத்தில் இருக்கின்றவர்கள் கூடுமான வரையில் படித்தவர்களாக இருக் கிறார்கள். ஒரு குடும்பத்திலே கட்டாயமாக ஒருவர் வேலை செய் கின்ற நிலைமையிலே இருந்து அவர்கள் தங்களுடையகுடும்பத்தை காப்பாற்றுகின்றவர்களாக இருக்கின்ற காரணத்தாலே கிராமப் புறத்திலே உள்ளவர்களுக்கு. வேலையில்லாதவர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கின்ற விதத்தில் இந்தத் திட்டத்தை நிறைவேற்ற முன் வர வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன். தேசிய ஊரக மேம்பாட்டுத் வளர்ச்சித் திட்டத்திற்கு 22 மாநிலங்களுக்கு இந்திய சர்க்கார் உதவிப்பணம் கொடுத்திருந்தாலும் கூட, அங்கே வேலைகள் எத்தனை செம்மையாக நடைபெற்றிருக்கின்றன என்பதையும் தமிழ்நாடு இருக்கின்ற மாநிலங்களிலே முதல் மாநிலமாக திகழ்கிறது என்ற பாராட்டுதலையும் இந்திய சர்க்கார் அறிவித்திருக்கின்றதைப் பார்க்கும் போது நாம் உண்மையிலே பெருமைப் படவேண்டியவர் களாக இருக்கிறோம்.

தமிழ்நாடு முழுவதும் பாரதியார் நூற்றாண்டு விழாவை மாண்புமிகு புரட்சித்தலைவர் அவர்கள் முன்னிலையில் சிறப்பாக கொண்டாட ஏற்பாடு செய்தார்கள். அந்த விழா ஊராட்சிகளில் நடைபெற்றது. ஊராட்சி ஒன்றியங்களில் நடைப்பெற்றது. நகராட்சிகளில் நடை பெற்றது. மாநகராட்சிகளில் நடைப் பெற்றது அந்த வகையிலே பாரதியாருடைய எண்ணங்களை அவர் கவிதைகள் மூலம், சொல்லாற்றல் மூலம் எடுத்து வைத்து. அவைகளை தாழ்த்தப்பட்ட மக்களுக்கும் பிற்பட்ட மக்களுக்கும் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் இந்த 1982 ஆம் ஆண்டில் பாரதியாருடைய நூற்றாண்டு விழா நிகழ்ச்சியாக எடுத்து வைத்து, செம்மையாக நடத்திய பெருமை தமிழக அரசைச் சேர்ந்திருக்கிறது என்பதை நான் இங்கே சொல்லியாக வேண்டும்.

அடுத்து, நகராட்சி, ஊராட்சி ஒன்றியங்களிலே இப்போது தன்னிறைவுத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. அதைப் போன்று பேரூராட்சிகளுக்குக் கூட தன்னிறைவுத் திட்டம்



1983–84 ஆம் ஆண்டு அந்தத் தன்னிறைவுத் திட்டம் மேலும் இருக்கிற நகராட்சிகளுக்கு விரிவுபடுத்தப்படுகின்றது என்பதை அறிந்து நான் மிகவும் மகிழ்ச்சி அடைகிறேன்.

அந்த வகையிலே இன்றைக்குக் கிராமப்புறங்களிலே இந்தத் தன்னிறைவுத் திட்டத்தின் கீழ் பல்வேறு பணிகள் எடுத்துக் கொள்ளப்பட்டு, குறிப்பாக ஏறத்தாழ 81.3 கிலோமீட்டர் நெடுஞ்சாலைகள் போடப் பட்டிருக்கின்றன. அதனால் கிராமமக்கள் போக்குவரத்து வசதி பெற்றிருக்கிறார்கள். பேருந்து வசதியும் ஏற்பட அது ஒரு நல்ல வாய்ப்பாக அமைந்திருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதைப் போன்று, ஆற்காட்டில் பாலாற்றிலிருந்து திண்டிவனம் நெடுஞ்சாலைக்கு இணைப்பு ரோடு—பை பாஸ் சாலையை செப்பனிடுவதற்கு அல்லது புதுசாலைபோடுவதற்கு சென்றஆண்டு 25 இலட்சம் ரூபாய் தமிழக அரசு ஒதுக்கீடு செய்திருந்தது. ஆனால் இன்று வரையில் எந்த அளவுக்கு அந்த நெடுஞ்சாலைப் பணி நிறைவேற்றப்பட்டது என்று தெரியவில்லை. அதை விரைவாக நிறைவேற்றி முடிக்க அமைச்சரவர்கள் உரிய கவனம் செலுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

ஆற்காடு தொகுதியில் திமிரி ஒன்றியத்தில் பல்ல குடிசை என்ற கிராமம் மிகவும் பின்தங்கிய நிலையில் இருக்கிறது. போக்குவரத்து வசதி இல்லை. சுதந்திரம் அடைந்து இத்தனை ஆண்டுகள் ஆன பின்னாலும் கூட அந்தக் கிராமத்தில் இருக்கக் கூடிய மக்களுக்கு பஸ் செல்கின்ற சாலைக்கு வர இணைப்பு சாலை இல்லை. அந்தக் கிராமத்து மக்களுக்கு நோய் ஏற்பட்டு நோயாளிகளை மருத்துவமனைக்கு அழைத்துச் செல்ல வேண்டுமென்றால் கூட பாதை வசதி கிடையாது பஸ் செல்லும் ரோட்டிற்கு இரண்டு கிலோ மீட்டர் தூரம் இருக்கிறது. அந்த இரண்டு கிலோ மீட்டர் தூரமும் நோயாளியைக் காட்டிலிலே படுக்க வைத்து, தலையிலே சுமந்து கொண்டு வந்து சேர்க்க வேண்டிய ஒரு அவல நிலை இன்றைக்கும் இருக்கிறது. இந்த அவல நிலையைப் போக்க நம்முடைய மாண்புமிகு அமைச்சரவர் கள் நடவடிக்கை எடுத்து, அவர்களுக்கு சாலை வசதி செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டு, அவர்களுடைய இன்னல்களை போக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

திமிரி ஒன்றியத்தில் குப்பம் கிராமத்தில் 'பிரிட்ஜ்' ஒன்று கட்ட 1981–82 ஆம் ஆண்டில் 4.25 இலட்சம் ரூபாய் ஒதுக்கப் பட்டும் கூட இன்னும் அந்த வேலை எந்த அளவுக்குநிறைவேற்றப் பட்டிருக்கிறது என்று தெரியவில்லை. அந்த வேலை இன்னும் ஆரம்பிக்கப்படவே இல்லை. அந்த வேலை முடிந்தால், ஏறத்தாழ 20, 30 கிராம மக்கள் பயனடைவார்கள். நெல் வண்டி செல் வதற்குக் கூட போக்குவரத்து வசதி இல்லை [illegible]

மக்கள் நடமாட முடியவில்லை. மாண்புமிகு அமைச்சரவர்கள் அதை கவனித்து உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

ஆற்காடு ஒன்றியத்தில் கலவை கூட்டு ரோடில் செய்யாறு—வேலூர் செல்லும் சாலையில் இரண்டு ஆற்றுக் கால்வாய்களில் இரண்டு பாலங்கள் கட்டித்தர வேண்டுமென்று நீண்ட நாட்களாக கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். அந்த இரண்டு பாலங்களையும் கட்டித் தந்து, பொது மக்கள் வசதியைப் பெருக்கித் தர வேண்டும். தேவையை பூர்த்தி செய்துதர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதைப் போன்று ஆற்காட்டிலிருந்து திருவண்ணாமலைக்குச் செல்லும் சாலை குறுகியதாக, ஒரு வழிப் பாதையாக இருக்கிறது. அதை அகலப்படுத்தி, இருவழிப்பாதையாக ஆக்கித்தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். ஏற்கனவே இன்ஜினீயர்கள் கூட வந்து பார்வையிட்டிருக்கிறார்கள். அதை விரைவிலே நிறைவேற்றித் தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதைப் போன்று, ஆற்காட்டிலிருந்து திண்டிவனம், செய்யாறு செல்லும் பாதையையும்—இப்போது ஒரு வழிப்பாதையாக இருக்கிறது—இருவழிப்பாதையாக விரிவுபடுத்தித் தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

ஆற்காடு நகராட்சியில் குடித்தண்ணீர் தட்டுப்பாடு இருக்கிறது. அங்கே ஏற்கனவே ஒருகுடிநீர்த் தொட்டிஇருக்கிறது இருந்தாலும் தண்ணீர்த் தட்டுப்பாடு இருக்கின்ற காரணத்தால் மேலும் ஒரு குடிநீர்த் தொட்டி அமைத்துத் தரவேண்டுமென்றும் அதற்கான வேலைகளை மேற்கொள்ள வேண்டுமென்றும் கேட்டுக் கொள்கிறேன்.

ஆற்காட்டிலே 8 பள்ளிகள் முனிசிபாலிட்டியினுடைய நிர்வாகத்தில் நடந்து வருகின்றன. அதிலே 8-வது வரையிலே இருக்கிற ஒரு பள்ளியை உயர்நிலைப்பள்ளியாக ஆக்கித்தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

திருச்சி, சேலம், நெல்லை ஆகிய மூன்று நகராட்சிகளை இன்றைக்குத்தமிழக அரசு மாண்புமிகு அமைச்சரவர்கள் மூலமாக மாநகராட்சிகளாக்கி இருக்கிற பெருமை தமிழக சர்க்காருக்கு உண்டு. ஏறத்தாழ இந்த ஐந்தாண்டு ஆட்சிக் காலத்தில், தமிழ் நாட்டில் அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில், 5 நகராட்சிகளை மாநகராட்சிகள் ஆக்கியிருக்கிற பெருமை தமிழக அரசுக்கு உண்டு. மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களுக்கு உண்டு என்பதைப் பணிவோடு தெரிவித்துக் கொள்கிறேன்....

(... ...யாக்கப் பெற்றது.)





(பிற்பகல் 12—10)

திரு. சி.த. சிதம்பரம்: மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவர் அவர்களே, மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கொண்டு வந்து இருக்கக்கூடிய இந்த மானியக் கோரிக்கையினை பொறுத்தவரையில் திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் சில கருத்துக்களைச் சொல்லிக் கொள்ளவிரும்புகிறேன்

(மாண்புமிகு மாற்றுத் தலைவர் தலைமை)

இந்த துறையினைப் பொறுத்த வரையில் எவ்வளவு வேலைகள் நடைபெறவேண்டும், எவ்வளவு குறைகள் இருக்கின்றன. என்பதைப் பற்றி எல்லாம் இன்றையதினம் ஆளும் கட்சியினைச் சேர்ந்த சட்டமன்ற உறுப்பினர்களும் அதிகமாக எடுத்துச் சொல்லியிருக்கின்ற காரணத்தால் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதை ஏற்றுக் கொண்டு ஆவன செய்வார்கள் என்று நான் நம்புகிறேன்.

இன்றைக்குக் குறிப்பாக வறட்சியினைப் பற்றி அதிகமான கவனத்தை அரசு செலுத்த வேண்டும். இந்த மானியத்திலே வறட்சித் திட்டம் பற்றி கவனிக்கப்படவில்லை. ஊராட்சி ஒன்றியங்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கின்ற பணியே கிணறுகளை ஆழப்படுத்துவதற்காகத்தான். அது மட்டும் போதாது. ஊராட்சி ஒன்றியங்களிலும், ஊராட்சிகளிலும் அதிகமாக சாலைப்பணிகள் போன்றவை நடக்க வேண்டும் என்றால் தேசீய ஊரக வேலை வாய்ப்பு திட்டத்திலே அதிகமான சாலைகளைப் போடுகின்ற வகையில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்தத் திட்டத்திலே சேர்த்துக் கொண்டு அதற்காக அதிக நிதி ஒதுக்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன் அதைப்போன்று குளங்கள் வெட்டுகின்ற பணிகளைத் தொடர்வதற்காக போதிய நிதி ஒதுக்க வேண்டும். அந்த வகையில் வறட்சி நிவாரணப் பணிகளும் வேலை வாய்ப்புப் பணிகளும், நடைபெறுவதற்கு நீங்கள் எல்லா ஏற்பாடுகளையும்செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து தன்னிறைவுத் திட்டத்தின் மூலம் பல்வேறு நல்ல பணிகள் நடக்கின்றன என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். அந்த நல்ல பணிகள் நடைபெற்றாலும் அவற்றுக்கு நிதி போதவில்லை என்ற நிலைமையும் நாள் போதவில்லை என்ற நிலைமையும் இருக்கின்றன இப்படிப்பட்ட இரண்டுவிதமான கஷ்டங்கள் இருக்கின்றன. குறிப்பாகச் சொல்ல வேண்டும் என்றால் இந்த ஆண்டு துவக்கப்படும் தன்னிறைவுத் திட்டத்திற்கு சிமெண்டை பிப்ரவரி மாதத்திலே தான் தருகிறார்கள். அதனால் அந்தப் பணிகள் எல்லாம் அப்படியே நின்று கொண்டிருக்கின்றன. மார்ச் மாதத்திற்குள்ளாக அந்தப் பணிகளைச் செய்து முடிக்க முடியாது. ஆகவே தன்னிறைவுத் திட்ட...

கொடுக்கப்பட்ட பணம் முழுமையும் செலவழிக்கப்பட்டிருக்கக் கூடிய நிலைமையில் சென்ற ஆண்டு கொஞ்சம் மாற்றிக் கொடுத்து செலவு செய்ய விட்டார்களே, அது போல் இந்த ஆண்டும் செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து பேரூராட்சிகளுக்கும் நாங்கள் தன்னிறைவுத் திட்டம் கொண்டு வந்திருக்கிறோம் என்று சொல்லியிருக்கிறார்கள். ஆனால் என்னுடைய தொகுதியிலே 5 பேரூராட்சிகள் இருக்கின்றன. சென்ற ஆண்டு கூட அங்கே ஒன்றும் செய்யப் படவில்லை. அங்கே எந்தவிதமான வசதி வாய்ப்புகளும் இல்லை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்த ஆண்டு எடுக்கிறேன் என்று சொல்கிறார்கள். அந்த 5-ல் மூன்றையாவது எடுத்துக் கொள்ள வேண்டும் என்று இந்த நேரத்திலே கேட்டுக் காள்கிறேன்.

இப்படிப்பட்ட காலக்கட்டத்திலே இன்றைக்குக் குடிதண்ணீர் தட்டுப்பாடு எல்லா இடங்களிலும் இருக்கின்றது. சுருக்கமாகச் சொல்ல வேண்டும் என்றால் இந்த மானியம் இங்கே நடை பெற்றுக் கொண்டிருக்கின்றபோது குறளகம் முன்பு குடிநீருக்காக உண்ணாவிரதம் இருக்கிறார்கள் எனவே குடிநீர் வழங்க வேண்டும் என்பது எவ்வளவு அவசியமான ஒன்று என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஏற்றுக் கொள்வார்கள் என்று கருதுகிறேன். எனவே எல்லா கிராமங்களுக்கும் குடி தண்ணீர் கொடுக்கக் கூடிய பணியினைச் செய்வதற்குரிய முயற்சியினை இந்த அரசாங்கம் எடுத்துக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

ஊராட்சி ஒன்றியங்களில் குடிதண்ணீர் வினியோகம் சிறப்பாகச் செயல்படவேண்டும் என்பதற்காக டீ. டீ. ஓ. பொறுப்பிலே ஒப்படைத்திருக்கிறார்கள் என்று சொல்கிறார்கள். ஆனால் டீ. டீ. ஓ. அவர்கள் மற்ற வளர்ச்சிப் பணிகளைச் செய்வார்களே தவிர இந்த டெக்னிகல் துறையில் அவர்களை ஈடுபடுத்துவது நல்லதல்ல. எனவே குடிநீர்ப்பணி சிறப்பாக நடை பெறவேண்டும் என்றால் அங்கே டெக்னிகல் ஸ்டாஃப் கொடுக்கப் படவேண்டும், டீ.டீ.ஓ.விற்கு உதவியாக டெக்னிகல் ஸ்டாஃப் கொடுத்து அந்தப் பணி சிறப்பாக நடைபெற உதவ வேண்டும்.

அடுத்து மருந்தகங்களை நீங்கள் நடத்துகிறீர்கள். பெரிய மருந்தகங்களாக இருப்பவை அரசாங்கத்தின் பொறுப்பிலே இருக்க வேண்டும். எனவே கல்லல் என்ற இடத்திலே இருக்கின்ற மருந்தகத்தை அரசு மருத்துவமனையாக ஆக்குவதற்கு அரசாங்கம் ஏற்பாடு செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து ஊராட்சி ஒன்றியங்களிலும், ஊராட்சிகளிலும் இருக்கக் கூடிய கண்மாய்கள், குளங்கள் ஆகியவற்றிலுள்ள மரங்களை எல்லாம் தற்போது வருவாய்த்துறை ஏலம்





விடுகின்றது. அப்படிப்பட்ட நிலைமை இல்லாமல் ஊராட்சி மன்றங்களோ அல்லது ஊராட்சி ஒன்றியங்களோ அவற்றை ஏலம் விட்டு அந்தப் பணத்தைப் பெறுவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும்.

அடுத்து கிராம சேவக்குகள் என்ற வகையில் பெண்கள் பணியாற்றுகின்றார்கள். எல்லா ஒன்றியங்களிலும் கிராம சேவக்குகள் நியமிக்கப்பட வேண்டும். சில இடங்களில் கிராம சேவக்குகள் குறைவாக இருக்கிறார்கள், சில பதவிகள் காலியாக கிடக்கின்றன. எனவே அந்தக் கிராம சேவக்குகள் இடத்தை நிரப்ப வெண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து 1,500 பேர் மக்கள் தொகை கொண்ட ஊருக்கு ரோடு போடுகிறோம் என்று கூறுகிறோம். இப்போது ரோடு போடுவது என்ற நிலைமை ஒரு பக்கம் இருந்தாலும் கூட ஏற்கனவே போட்ட ரோடுகளை யார் எடுத்துச் செய்வது என்ற நிலைமை இருக்கின்றது. குறிப்பாக என்னுடைய தொகுதியில் எஸ். ஆர். பட்டணம் என்ற இடத்திலே 1,500 பேர் மக்கள் தொகை என்ற வகையில் போடப்பட்ட சாலைகள் சீர்படுத்தப் படவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து பல நகராட்சிகளில் குடிநீர் இல்லை என்று சொல்கிறார்கள். என்னுடைய நகராட்சியில் குடிநீர் இருக்கின்றது. ஆனால் மின் தட்டுப்பாடு காரணத்தால் குடிநீர் கொடுக்கப் படாத சூழ்நிலை இருக்கின்றது. ஆகவே ஜெனரேட்டர் அமைத்து தர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். குடிநீர் வாரியத்தை கவனிப்பதற்கு நகராட்சிக்கு டெக்னிக்கல் ஸ்டாப்கள் இருக்கிறார்கள். அதே போல் ஹெத் ஆபிஸர்கள் இருக்கிறார்கள். அவர்கள் அங்கே இருக்கக் கூடிய பணிகளை நல்லவிதமாக செய்ய நீங்கள் ஆணையிட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அதே போல் மத்திய அரசு ஒருங்கிணைந்த மேம்பாட்டு திட்டத்தின் கீழ் அங்கே 93 லட்சம் ரூபாய் ஒதுக்கியிருப்பதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. 25 லட்சம் ரூபாய் கொடுக்கப்பட்டது என்று சொல்லப் பட்டிருக்கிறது. ஆனால் அந்த 25 லட்சம் ரூபாய் வந்து சேரவில்லை. அதற்குத் தகுந்த ஏற்பாடு செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். நெடுஞ்சாலைத் துறையிலே இன்னும் நிறைய சாலைகளை போடவில்லை. பழைய சாலைகளை மராமத்து செய்து தார் சாலைகளாக மாற்றுவதற்கு நமது அரசு முயற்சி செய்ய வெண்டும். அது அவசரமான சாலையாக இல்லாவிட்டாலும் கூட அது அவசியமான சாலை. நிரந்தரமாக இருக்கக்கூடிய சாலையாக போட்டுத்தரவேண்டும். என்னுடைய தொகுதியிலே ஈவெற்றியூர் கருங்குளம் என்ற ஊர் இருக்கிறது. அங்கே தன்னிறைவு திட்டத்தில் ரோடு போடு கிறார்கள். ஆனால் அதை இணைக்கிற பாலம் இல்லை. நீண்ட நெடுங்காலமாக அந்தப்பாலம் வேண்டும் என்று சொல்லி அது

அரசாங்கத்திற்கு வந்து இங்கு இருக்கிற டீ. ஆர். டீ. ஆபிஸ் மூலமாக சிபாரிசு செய்யப்பட்டு இன்னும் ஒரு முடிவு வரவில்லை. அந்த வேலைஇரண்டு ஆண்டுகாலம்ஆகியும் அப்படியே இருக்கிறது. அந்த ஈவெற்றியூர் கருங்குளம் பாதைக்கு 2 இலட்சம் ரூபாய் தேவை என்று சொல்கிறார்கள். ஆக நீங்கள் எத்தனையோ விஷயங்களில் எவ்வளவோ இலட்சக்கணக்கான ரூபாயைச் செலவு செய்கிறீர்கள், பாதை போட்டிருக்கிறீர்கள். ஆகவே இரண்டு லட்சம் ரூபாய் செலவு செய்து அந்தப்பாலத்தைப் போட்டு தரும் படி கேட்டுக் கொள்கிறேன்,

அதே போல் தன்னிறைவுத் திட்ட பணிகள் மூலமாக புதிய பாலங்கள் போடுவதை விட பெரிய பெரிய சாலைகளை இணைக்கக் கூடிய அளவுக்கு பாலங்கள் போட வேண்டும். அந்த பாலங்கள் போட்டால் தான் அந்த சாலைகள் இருக்கும். அதைப் போல் காரைக்குடி, தேவக்கோட்டை பகுதியில் ஒரு தேனாறு பாலம் இருக்கிறது. இப்போது பஸ் மோதி இடிந்து அது ரிப்பேர் ஆகியிருக்கிறது. அதை சீர்செய்வதற்குப் பணம் ஒதுக்கீடு செய்திருக்கிறார்கள். அந்தப் பாலத்தை இந்த தன்னிறைவு திட்டத்தின் மூலம் ரிப்பேர் செய்யும்போது 2, 3 பஸ்கள் போகும் அளவுக்கு அதை அகலப்படுத்த வேண்டும் என்று கேட்டுக் கொண்டு, தேர்தலைப் பற்றி தி. மு. க. பெண்களுக்கும் தாழ்த்தப்பட்டவர்களுக்கும் இட ஒதுக்கீடு செய்வதை வரவேற்று அதில் எங்களுக்கு மாறுபட்ட கருத்து இல்லை. ஆனால் எப்படியும் தேர்தலை 4 மாதங்களுக்குள் முடிக்கிறேன் என்று சொன்ன அமைச்சருடைய உறுதிமொழியைக் காப்பாற்ற வேண்டும் என்று விரும்புகிறேன். ஆக எப்படி அதை செய்கிறார்கள் என்று கிடையாது. எங்களுக்கு வேண்டியது தேர்தல் மக்கள் ஆட்சி என்று கூறி முடிக்கிறேன். வணக்கம்.

திரு. பெ. திருமாறன்: மாண்புமிகு பேரவையின் மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கொண்டு வந்துள்ள உள்ளாட்சி சாலை போக்குவரத்து மானியக் கோரிக்கை மீது பேச வாய்ப்பு அளித்தமைக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். இந்த மானியக் கோரிக்கையின் மீது பேசும்போது ஒரு சில காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த தலைவர்கள் மாண்புமிகு ஹாஜா செரீப் அவர்தள் கூட எங்களுக்குத் தேர்தலைச் சந்திக்க தைரியம் இல்லை என்று சொன்னார்கள். இந்த அரசு ஆட்சி பீடத்தில் இருக்கும்போதும் சரி, ஆட்சியில் இல்லாமல் கட்சி துவங்கப்பட்ட காலத்தில் கூட திண்டுக்கல் தேர்தல் முதற் கொண்டு திருச்செந்தூர் வரைக்கும் தேர்தல்களை சந்தித்து கொண்டிருக்கிறது. அதனுடைய நிலைமை என்ன என்பதை-எதிர் கட்சித் தலைவர்கள் அத்தனை பேரும் நன்கு அறிவார்கள். அதே நேரத்தில் தேர்தலைச் சந்தித்த இந்தக்கட்சி எல்லா இடத்திலும் வெற்றி பெற்றிருக்கிறது. உதாரணமாக அ. இ. அ. தி. மு. க. அரசு நகராட்சிகள் மாநகராட்சிகள் தேர்தலை வருகிற ஜூலை ஆகஸ்டில் தேர்தலை நடத்தும் என்று உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் சொன்னார்கள்



(பிற்பகல் 12-20)

அப்படி அந்தத் தேர்தல்கள் நடக்கும் என்று நான் கருதுகிறேன் அந்தத் தேர்தல்களிலும், அடுத்து நடக்க இருக்கும் ஊராட்சி மன்றத் தேர்தல்களிலும், அ.இ.அ.தி.மு.க. நிச்சயம் வெற்றி பெறும் என்று நான் உங்களுக்குக் கூற விரும்புகிறேன். காரணம் நான் 10 ஆண்டுக் காலமாக ஊராட்சிமன்ற தலைவராக பணி யாற்றியிருக்கிறேன். ஊராட்சிகள் சிறப்பாக நடக்க வேண்டும் என்றால் அரசு நிதி உதவியாக 1 லட்சம் அல்லது 2 லட்சம்தான் கொடுப்பார்கள். அதிலே ஒரு பாலத்தை, ஒரு பள்ளிக்கூடத்தை கட்டியிருப்போம். ஆகவே இந்த அரசு வந்து தன்னிறைவு திட்டம் என்று சொல்லி ஒவ்வொரு ஒன்றியத்திற்கும் 40 லட்சம் 50 லட்சம் என்று நிதி கொடுத்து ஒரு ஆண்டுக்குள் முடிக்க வேண்டும் என்று அந்தத் திட்டத்தைவகுத்து தமிழகத்தில் மிக சிறப்பாக எல்லா கிராமங்களுக்கும், பள்ளிக்கூடங்கள், பாலங்கள் ரோடு வசதி ஒரு ஆண்டுக்குள் முடிக்கக் கூடிய அளவிலே இந்தத் தொகை கொடுத்து செலவழிக்கப்பட்டு வருகிறது. சிறப்பாக நடந்து கொண்டிருக்கிறது, நான் ஊராட்சித் தலைவராக இருந்த காரணத்தினால் செல்கிறேன். பத்தாண்டுக் காலம் நான் பணியாற்றினாலும் கூட ஒரு பள்ளிக்கூடம் கட்ட முடியவிலலை. ஒரு பாலம் கட்ட முடியவில்லை. இப்போது என்னுடைய தொகுதியிலே ஒவ்வொரு யூனியனுக்கும் 40, 50 லட்சம் என்று கொடுக்கட்பட்டு அத்தனை திட்டமும் நிறைவேறி இருக்கிறது. என்னுடைய தொகுதிக்கு அதிகமாக நிதி ஒதுக்க வில்லை என்று சென்ற ஆண்டு சொல்லப்பட்டபோது கூட அமைச்சர் அவர்கள் சொன்னார்கள் எந்த எந்த ஊராட்சி ஒன்றியங்களிலே வேலைகள் பாக்கி இருக்கின்றனவோ அவைகளையெல்லாம் சொல்லுங்கள், அதற்காகப் பணம் தருகிறேன் என்று அந்த முறையிலே என்னுடைய தொகுதியிலே உள்ளவைகளை நான் எடுத்துச் சொல்லி, இன்றைக்கு 12 இலட்சம் ரூபாய் திருவரங்கம் ஊராட்சிக்குக் கொடுத்தார்கள். ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திற்கும் 12 லட்ச ரூபாய் கொடுத்து திட்டங்கள் நல்ல முறையிலே நிறைவேறியிருக்கின்றன. எந்தவிதமான பாகுபாடும் இல்லாமல் எதிர்க்கட்சி உறுப்பினர்களாக இருந்தாலும் சரி ஆளுங்கட்சி உறுப்பினர்களாக இருந்தாலும் சரி ஊராட்சி ஒன்றியத்திற்கு 40, 50 லட்ச ரூபாய் என்று கொடுத்து ஒரு ஆண்டிலே நிறைவேற்ற வேண்டுமென்று சொல்லி நிறைவேற்றப் பட்டிருக்கிறது என்றால் புரட்சித் தலைவர் அவர்களையும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களையும் பாராட்டுவதோடு எல்லா சட்டமன்ற உறுப்பினர்களையும் பாராட்ட வேண்டும். முன்பெல்லாம் ஒரு ஒன்றியத்திற்கு 2 லட்சம் அல்லது 3 லட்சம் ரூபாய்தான் கொடுப்பார்கள். அதை வைத்துக் கொண்டு ஆசிரியர்களுக்குச் சம்பளம் கொடுக்க முடியாது, சாலையோ பாலமோ போட முடியாது, நான் என் அனுபவத்தில் சொல்கிறேன். தன்னிறைவுத்திட்டத்தை மாண்புமிகு [illegible]

தலைவர் அவர்கள் கொண்டு வந்து இருப்பதால் அத்தனை திட்டங்களும் கிராமங்களிலே நிறைவேற்றப்பட்டிருக்கின்றன, அத்தனை கட்சிக்காரர்களும் மனதைத் தொட்டு இதைப் பாராட்ட வேண்டும். இந்தத் திட்டத்தினால்—இதற்கு முன்னால் இருந்த அரசு நகரத்திற்குதான் திட்டம் போடுவார்கள்.—ஆனால் கிராமங்களுக்கு இந்த அரசு வந்ததற்குப் பின்னாலே திட்டம் போட்டு நிறைவேற்றி வருகிறது. பாலங்கள் கட்டப்பட்டிருக்கின்றன. முன்பெல்லாம் பாலத்திற்கு ரூ. 20, 30 லட்சம் என்று எஸ்டிமேட்டுக்களைப் போடுவார்கள். ஆனால் இந்தத் திட்டம் ஒரு லட்ச ரூபாயிலே முடிந்து விடுகிறது. என்னுடைய தொகுதியில் திருமஞ்சேரி பாலத்தை அனுமதித்ததற்காக நான் புரட்சித் தலைவர் அவர்களுக்கும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். என்னுடைய பகுதியிலே கவளபள்ளசாலை என்ற சாலை மன்னர் ஆட்சிக் காலத்திலிருந்து செப்பனிடப்படவில்லை. இந்த ஆண்டு அதற்காக 22 லட்ச ரூபாய் அனுமதிக்கப்பட்டிருக்கிறது. அதற்காக நான் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஆலங்குடியிலே ஒரு சாலை மன்னர் காலத்திலிருந்து பராமரிக்கப்படாமல் இருக்கிறது. இந்த ஆண்டு அதற்காக 15 லட்சம் ரூபாய் அனுமதிக்கப்பட்டிருக்கிறது. அதற்காக நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன் திருவரங்குளம் யூனியனில் 110 பஞ்சாயத்துகள் இருக்கின்றன. அந்த யூனியனை 3 யூனியன்களாக அரசு பிரித்தது. அதனால் ஒரு யூனியனுக்கு 40 லட்ச ரூபாய் வீதம் தன்னிறைவுத் திட்டத்தின் கீழ் மொத்தம் 120 லட்ச ரூபாய் கிடைத்து இருக்கிறது. பிரிக்காமல் ஒரு யூனியனாக இருந்தால் 40 லட்ச ரூபாய்தான் கொடுத்திருப்பார்கள். இந்த அளவுக்கு இதைச் செய்வதை நான் பாராட்டுகிறேன். நான் ஊராட்சித் தலைவராக இருந்த காரணத்தினால்தான் இதை எடுத்துச் சொல்கிறேன்.

ஊராட்சி மன்றத் தலைவர்கள் காசோலையிலே கையெழுத்துப் போடுகிறார்கள். அந்தச்சட்டத்தைத் திருத்த வேண்டும். எப்படி நகராட்சித் தலைவர்கள் காசோலைகளிலே கையெழுத்துப் போட முடியாதோ அதைப் போல ஊராட்சித் தலைவர்களும் போட முடியாத அளவுக்கு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொண்டு இந்த அரசைப் பாராட்டி என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன்.

* திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : மாண்புமிகு தலைவர் அவர்களே, நம்முடைய அமைச்சர் அவர்களால் மாற்றுக் கொண்டு வரப்பட்டிருக்கிற மானியக்கோரிக்கை மீது ஒரு சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். இங்கே தேர்தலைப் பற்றி இதுவரைக்கும் பல சர்ச்சைகள் நடந்தன. பெண்களுக்கும், ஆரிசனங்களுக்கும் பிரதிநிதித்துவம் கொடுக்கவேண்டும்; தேர்தலையும் நடத்தியாக வேண்டும். தேர்தலை நடத்துவதற்கு ... வந்தால் வேலைகள் பாதிக்கக்கூடிய





சூழ்நிலை வருகிறது என்பதால் தேர்தலை நடத்தி விட்டு பெண்களுக்கும், அரிசனங்களுக்கும் கொடுக்கிற பிரதிநிதித்துவத்தை நாமினேஷன் மூலமாகக் கூட போட்டுக் கொள்ளலாம் அல்லவா? அப்படிப்பட்ட சூழ்நிலை வந்தால் இந்த பிரச்னை இருக்காது என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்றைக்கு பல நல்ல திட்டங்களை செய்திருக்கிறோம். தன்னிறைவுத் திட்டம், தேசிய வேலை வாய்ப்புத் திட்டம், ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம். நாங்கள் எல்லாம் கிராமப்புறங்களிலிருந்து வந்தவர்கள். கிராமங்களில் சின்னஞ்சிறு ரோடுகளை எல்லாம் இணைத்து 10 லட்சம், 15 லட்சம் என்று செலவு செய்து நல்ல காரியங்களை எல்லாம் செய்திருந்தாலும் மக்களுக்கு நாகரீகம் வளர்கிற காரணத்தால் தேவைகள் அதிகமாகக்கூடிய நிலை இருக்கிறது. இவ்வளவுத் திட்டங்களை போட்டும் கூட 75 சதவீதம் வேலைகள் தான் நம்மால் முடிக்கப்பட்டிருக்கிறது. ஆகவே அந்த பாக்கி வேலைகளை துரிதமாகச் செய்யவேண்டும். தன்னிறைவுத் திட்டத்தின் மூலமாக செய்த வேலைகள் அறைகுறையாக இருக்கின்றன. அந்த வேலைகளை எடுத்துச் செய்வதற்கு அதிகப்படியான பணத்தை ஒதுக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக இன்றைக்கு நம்முடைய சென்னையில் ஒன்பது கட்சிகள் உண்ணாவிரதம் இருக்கிறார்கள். உண்ணாவிரதம் எதற்காக என்றால் அரசு நான்கு மணி நேரத்தில் செய்கிற வேலையை ஒரு மணி நேரத்தில் செய்யவேண்டுமென்று துரிதப்படுத்துவதற்காக அடையாள உண்ணாவிரதம் இருந்து கொண்டிருக்கிறார்கள். குடிதண்ணீர் பிரச்னை, கிராமங்களில் ரேஷன் பிரச்னை, விலைவாசி உயர்வு போன்ற பல பிரச்னைகளை முன்வைத்து இன்றைக்கு அவர்கள் உண்ணாவிரதம் இருக்கிறார்கள். நான் அதில் கலந்து கொள்ளாமல் இங்கே வந்து பேசிக்கொண்டிருக்கிறேன். நம்முடைய முதல்வரின் சத்துணவுத் திட்டத்தைப் பொறுத்தவரையில் இந்தத் திட்டத்தில் 65 லட்சம் குழந்தைகளுக்கு உணவு வழங்கப்படுகிறது. இதில் பல குழந்தைகள் விடுபட்டு போயிருக்கின்றன. 70 குழந்தைகள் உள்ள பள்ளிகளிலே இந்தத் திட்டத்தை நடத்துகிறோம். இதற்குக் கீழே உள்ள சின்னஞ்சிறு கிராமங்களில் உள்ள ஏழை எளிய மக்கள், வறுமைக் கோட்டிற்கு கீழே இருக்கக்கூடிய மக்கள் தங்களுடைய குழந்தைகளை இரண்டு கிலோ மீட்டர், 3 கிலோ மீட்டர் என்று தூக்கிக்கொண்டு போகமுடியாமல் இருக்கிறார்கள். அந்த குழந்தைகளுக்கெல்லாம் இந்தத் திட்டத்தை விரிவுபடுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். காய்கறிகள் போட வேண்டும், பருப்பு போடவேண்டும் என்று நிர்ணயம் செய்திருக்கிறோம். கிராமங்களில் தண்ணீர் இல்லாத நிலையில் காய்கறிகள் கிடைப்பதில்லை. ஆகவே பலமுறை நான் சொல்லியிருப்பதைப் போல ஆங்காங்கு கண்மாய்களிலும், புறம்போக்கு இடங்களிலும் ஆழ்கிணறுகளை போட்டு, ராட்சத கிணறுகளை போட்டு பஞ்சாயத்து யூனியன் ...

தண்ணீர் கிடைப்பதற்கும் புல் வளர்ப்பதற்கும் ஏற்பாடுகளைச் செய்யவேண்டும். இதில் சற்று கவனம் செலுத்தினால் இந்த பிரச்னைக்கு ஓரளவு தீர்வு காணமுடியும் என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். அங்கே வேலை செய்யக்கூடிய சமையல்காரர் களுக்கு ஒரு நாளைக்கு இரண்டு ரூபாய் சம்பளம்; துணை சமையல்காரர்களுக்கு ஒரு ரூபாய்; இது ரொம்ப கொடுமையிலும் கொடுமை. விலைவாசிகள் ஏறி வருகிற இந்தச் சூழ்நிலையில் அவர்களுக்கு ஒரு ரூபாய் சம்பளம் கொடுத்தால் எப்படி நியாயமாக இருக்கும். ஆகவே சமையல்காரருக்கு 100 ரூபாய் என்ற அளவிலும், உதவியாக இருக்கிற ஆயாவிற்கு 60 ரூபாய் என்ற அளவிலும் சம்பளம் கொடுக்க வேண்டும். அந்த அடிப்படையில் இந்தத் திட்டத்தைச் செய்தால் ஏழை மக்கள் பாராட்டுகிற நிலைமை உருவாகும்.

குடிதண்ணீர் பிரச்னையில் நல்லமுறையில் காரியங்களை செய்திருந்தாலும் கூட வருண பகவான் நம்மீது கருணை வைக்கவில்லை. வருண பகவான் கருணை வைக்கவேண்டும். தண்ணீருக்காக போரிங் போட்டாலும் கூட சில இடங்களில் பெயிலியர் ஆகிவிடுகிறது. யுனிசெப் திட்டத்தின் கீழும், சத்துணவுத் திட்டத்தின் கீழும். தன்னிறைவுத் திட்டத்தின் கீழும் போர் பம்புகள் போட்டும் கூட மின்சாரம் இணைக்கப் படாத காரணத்தால் தண்ணீர் கிடைப்பதில்லை. இன்றைக்கு குடிதண்ணீர் பிரச்னைக்காக போர் பம்ப் போட்டதிலும் அந்த பம்புகள் பத்து அடி அடித்தாலே பைப் ரிப்பேர் ஆகிவிடுகிறது. ஒவ்வொரு யூனியனுக்கும் ஒரு பிளம்பர் தான் இருக்கிறார். ஆகவே ரிப்பேர் வேலைகளை சரியாக பார்க்கமுடிவதில்லை. ஆகவே பஞ்சாயத்து யூனியன் ஆணையாளரின் கீழ் ஒரு பிளம்பரைப் போட்டு, ஜூனியர் என்ஜினியர் அளவில் அதிகாரி ஒருவரையும் போட்டால் குடிதண்ணீர் பிரச்னையை தீர்த்து விடலாம் என்ற ஆலோசனையைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(பிற்பகல் 12.30.)

அதோடு மட்டுமல்லாமல், இன்றைக்கு இருக்கிற சூழ்நிலையில் நமக்கு இந்தச் சாண எரி வாயு மிக உபயோகமாயுள்ளது. அந்தச் சாண எரி வாயு திட்டத்தினை கிராமப்புறங்களிலே நல்லமுறையிலே உருவாக்குகின்ற சூழ்நிலையை அமைச்சரவை உருவாக்கியிருக்கிறது. அந்தச் சாண எரி வாயு அமைப்பை, ஒரு நபர் ஒரு வீட்டில் வைக்க வேண்டுமென்றால் ரூ. 5,000 செலவாகிறது. அந்த ரூ. 5,000 செலவிலே சாதாரண மக்கள் வைக்க முடியாது. ஏழைகளுக்கு ¾ பாகம் மான்யமாகக் கொடுத்து இத்திட்டத்தை தீவிரப்படுத்த வேண்டும். வெளியில் தள்ளப்படும் சாணத்தை வயலில் போடும் போது களை விடுவதில்லை என்று அதிகாரிகளால் சொல்லப்படுகிறது. அது மாத்திரமல்ல [illegible]





நைட்ரஜன் சத்து இருக்கிறது என்றும் சொல்லப்படுகிறது. ஆகையினாலே, அதைச் சற்றுத் தீவிரப்படுத்த வேண்டும், ஏனென்றால், நான் கூட எரிவாயு போட்டு வைத்துக் கொண்டிருக்கிறேன். இதைத் தீவிரப்படுத்திச் செய்தால் சாலச் சிறந்ததாக இருக்கும் என்பதையும் இந்த நேரத்திலே சொல்லிக் கொள்கிறேன்.

பஞ்சாயத்துக்களிலே இன்னும் பல இடங்களிலே கட்டிடங்கள் கட்டப்படாமலிருக்கின்றன. அந்தக் கட்டிட வேலைகளைப் பூர்த்தி செய்ய நம்முடைய அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

கடைசியாக என்னுடைய தொகுதியைப் பற்றி சொல்ல விரும்புகிறேன். பல பாலங்கள் என்னுடைய தொகுதியில் கட்டப்பட்டிருப்பதால், என்னுடைய தொகுதி மக்கள் சார்பிலும், என் சார்பிலும் நம்முடைய அமைச்சரவைக்கு, குறிப்பாக, நம்முடைய அமைச்சர் அவர்களுக்கு என்னுடைய நன்றியையும் பாராட்டையும் தெரிவித்துக்கொள்கிறேன். காரணம், எங்களுக்குப் பல பாலங்களைக் கட்டிக் கொடுத்து விட்டார்கள், இப்பொழுது கூட, அங்கே ரூ. 5 இலட்சம் செலவில் ஒரு பாலத்தை சாங்க்ஷன் செய்திருக்கிறார்கள். அது மாத்திரமில்லாமல், கட்டி முடிக்கப் பட்ட இடத்திலே, அதாவது இணைப்பு 12-பக்கம் 106-ல் 1977 ஆம் ஆண்டு சாங்க்ஷன் ஆன திட்டம்பற்றி குறிப்பிடப் பட்டுள்ளது. எமர்ஜன்சி காலத்திலே சாங்க்ஷன் ஆன அந்த வேலை முடிக்கப்பட்டுவிட்டது. அங்கே 'நிலக்கோட்டை செக்கநாயக்கனூரிலிருந்து செக்காளப்பட்டி வரைக்கும் செல்லக் கூடிய இணைப்புச் சாலை அது. அரசு ஹைவேசிலே எடுத்திருக்கின்றார்கள். ஆனால், நிலக்கோட்டை வட்டம் அலங்கம் என்று போடப்பட்டிருக்கிறது. அது என் சொந்த ஊர். அதன் பெயர் அழகன்பட்டி. தயவுசெய்து அதை மாற்ற வேண்டும். சொக்கியநாயக்கனூர் என்று உள்ளது. அது சக்கயநாயக்கனூர். இந்த மாதிரி மிஸ்டேக்குகள் வராமல் பார்த்துக்கொள்ளவேண்டும். சக்கயநாயக்கனூர் to ஜங்கல்பட்டி வையா அழகன்பட்டி—ரூ. 3.55 இலட்சம் மதிப்புள்ள திட்டம்—பூர்த்தியாகி உள்ளது.

அது மாத்திரமல்லாமல், மஞ்சளாற்றுக்குக் குறுக்கே வத்தலகுண்டு அருகிலே இருக்கிற பாலம் ஆடிக்கொண்டிருக்கிறது. அந்தப் பாலத்தை ஸ்ட்ரெந்தன் செய்யவேண்டும். அதை அகலப்படுத்துவதோடு, ராமநாய்க்கன்பட்டி, to ரங்கப்பநாய்க்கன் பட்டி என்ற பகுதியில் கட்ட ரூ. 25 இலட்சத்துக்கு எஸ்டிமேட் போட்டு, அமைச்சர் அவர்களுக்கு வந்திருக்கிறது. அந்தப் பாலத்திற்கு அவ்வளவு செலவு செய்யாமலிருந்தாலுங்கூட ஒரு தொங்கு பாலமாவது கட்ட வேண்டும். நிலக்கோட்டைத் தொகுதி பேரணைக்கு அருகிலே, உள்ள பாலம் மிகவும் குறுகலாக இருக்கிறது. அங்கே வண்டிகள் கூடச் [illegible]

முடியவில்லை. நிலக்கோட்டைக்கு வரக்கூடிய மக்கள் பல மைல் சுற்றி வரவேண்டிய நிலை உள்ளது, அங்கு ரெகுலேட்டர் இருக்கின்ற காரணத்தால் பாலத்தை விரிவுபடுத்திக் கட்ட ஏற்பாடு செய்ய வேண்டுகின்றேன். (மணியடிக்கப்பெற்றது).

திரு. வெ. அரங்கராசன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, இன்றையதினம் உள்ளாட்சித் மாற்றுத் அமைச்சர் அவர்களால் கொண்டு வரப்பட்டிருக்கிற துறை நல வளர்ச்சித் திட்டம், நகராட்சி நிர்வாகம், சமுதாய பாலங்கள் ஆகிய மானியக் கோரிக்கைகளுக்காக ரூ. 235.38 கோடி கோரியிருக்கிறார்கள். அவற்றின்மீது பேசுகின்ற சாலைகள், கிடைத்ததற்கு முதலில் என்னுடைய நன்றியைத் வாய்ப்பு கொள்கிறேன். இன்றையதினம் உள்ளாட்சித் தெரிவித்துக் அவர்கள், புரட்சித் தலைவர் ஆட்சிப் துறை அமைச்சர் பின்னால் தன்னிறைவுத் திட்டத்தைக் பொறுப்பேற்றதற்குப் ஊராட்சி ஒன்றியத்திற்கும் கொண்டு வந்து, ஒவ்வொரு அளவிற்கு நிதி ஒதுக்கீடு செய்து, கிட்டத்தட்ட ரூ. 40 இலட்சம் களும் இன்றையதினம் அனைத்து ஊராட்சி ஒன்றியங் கிட்டத்தட்ட ரூ. 205 கோடி செலவில் பணிகளை முடிக்கின்ற தருவாயில் இருக்கின்ற அனைத்துச் சட்டமன்ற உறுப்பினர்களும் காரணத்தால், முதல்வர் புரட்சித் தலைவர் அவர்களையும் மாண்புமிகு தமிழக அமைச்சர் அவர்களையும் உள்ளாட்சித் துறை கொண்டிருக்கிறார்கள். மனதார, உளமாறப் பாராட்டிக் செய்த காங்கிரஸ் இதுவரையில் இதற்கு முன்னர் ஆட்சி ஆட்சிக் காலத்திலேயும், திராவிட முன்னேற்றக் கழக காலத்திலேயும் இப்படிப்பட்ட திட்டங்களைத் தீட்டி கிராமப்புறத்தை மேம்படுத்தி செயல்படுத்தி இருக்கின்றார்களா என்று கேட்டால் கண்டிப்பாக, உறுதியாக, நிச்சயமாக, இல்லை என்பதை அனைத்து உறுப்பினர்களும் உணர்வார்கள். இன்றைய தினம் திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த சட்டமன்ற உறுப்பினர் சொக்கலிங்கம் அவர்கள் கூட பேசியபொழுது, அவரது ஊராட்சி ஒன்றியத்திற்கு ரூ. 40 இலட்சம் நிதி ஒதுக்கித் தந்த புரட்சித் தலைவர் அரசைப் பாராட்டித்தான் பேசியிருக் கிறார்கள். அந்த அளவிற்கு இன்றைக்குப் புரட்சித் தலைவ ரவர்கள் காந்தி கண்ட கிராம இராஜ்யத்தை உருவாக்கும் வகையில், கிராம மக்களுக்கு நலம் பயக்கும் வகையில் திட்டங்களை உருவாக்கிச் செயல்படுத்திக் கொண்டு இருக் கிறார்கள்.

கிராமப் புறங்களில் 5,181 பள்ளிக் கூடங்களைக் கட்டுகின்ற அளவிற்கு, நாடு சுதந்திரம் அடைந்து 36 ஆண்டுக் காலம் ஆனதற்குப் பிறகும் புரட்சித் தலைவர் ஆட்சியில்தான் இந்த அளவிற்குப் பள்ளிக்கூட கட்டிடங்களைக் கட்ட வேண்டிய நிலைமை கூட இருக்கிறது. ஊருக்கு ஒரு பள்ளி என்ற நிலைமையை காமராஜ் அவர்கள் கொண்டு வந்திருந்தாலும்



மாணவர்கள் படிக்கத்தக்க வகையில் பள்ளிக்கூடங்கள் இல்லாமல் மரங்களின் நிழலில் வகுப்புகளை நடத்திக் கொண்டிருக்கின்ற நிலைமைகளை மாற்றுவதற்காக புரட்சித் தலைவரவர்களின் ஆட்சி 5,181 பள்ளிக் கட்டிடங்கள் கட்டிக் கொடுத்திருக்கிறது.

புரட்சித் தலைவரவர்களின் அரசு பேருந்து வழித்தடங்களை எடுக்கின்ற திட்டத்தின் மூலமாக 1960–61 ஆம் ஆண்டில் கொண்டு வரப்பட்ட அந்தத் திட்டத்தின்படி 1973–74 ஆம் ஆண்டு வரையில் கிட்டத்தட்ட 14 ஆண்டுக் காலத்தில் 12,500 கிலோ மீட்டர் சாலைகளில் பணி செய்து முடிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் புரட்சித் தலைவர் ஆட்சியில் 1979–80 ஆம் ஆண்டிலிருந்து 1982–83 ஆம் ஆண்டு வரையிலும், கிட்டத்தட்ட மூன்றாண்டுக் காலத்திற்குள்ளாக 9,325 கிலோ மீட்டர்களை 40 கோடி ரூபாய்ச் செலவிலே செப்பனிட்டுப் பணிகளை முடித்திருக்கிறார்கள். 14 ஆண்டுக் காலத்தில் 12,000 கிலோ மீட்டர்கள். ஆனால் மூன்றாண்டு காலத்தில் 9,000 கிலோ மீட்டர்களுக்கும் மேலாக பணிகள் செய்யப்பட்டிருக்கின்றன என்றால் புரட்சித் தலைவ ரவர்கள் ஊராட்சி ஒன்றியச் சாலைகளைப் பொறுத்த வரையில் எந்த அளவிற்கு அக்கறை எடுத்துக் கொண்டு பணிகளைச் செய்து, அந்தப் பகுதிகளிலேயுள்ள மக்கள் பேருந்து வழித்தடங்களைப் பயன்படுத்துவதற்கான நிலைமைகளை உருவாக்கியிருக்கிறார்கள் என்பதைப் பார்க்கும் பொழுது நாமெல்லாம் உண்மையிலேயே பெருமைப்படுகின்ற அளவிற்குப் புரட்சித் தலைவரவர்களின் அரசு செயல்பட்டுக் கொண்டிருக்கிறது.

மேலும் இந்த ஆண்டு 1,326 கிலோ மீட்டர்களை 11 கோடி ரூபாயில் எடுத்துச் செயலாற்ற இருப்பதைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

ஊரக சாலைத் திட்டத்தின் மூலமாகக் கிட்டத்தட்ட 4,536 கிலோ மீட்டர் சாலைகளை 30 கோடி ரூபாய் செலவில் பணியை முடித்திருக்கிறார்கள். இதன் மூலமாகக் கிட்டத்தட்ட 3,496 பிரதான கிராமங்களும், குக்கிராமங்களும் பயன் அடையும் வகையில் ஊரக சாலைத் திட்டத்தை இந்த அரசு மிக்க சிறப்பாக செயலாற்றியிருக்கிறது. மேலும் இந்த ஆண்டு 10 கோடி ரூபாய்களை ஊரக சாலைத் திட்டங்களுக்கு ஒதுக்கியிருப்பதைக் கண்டு பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மேலும் பழங்குடியினர் துணைத் திட்டத்திற்கு இந்த ஆண்டு 137 இலட்சம் ரூபாய்களை அரசு ஒதுக்கியிருக்கிறது. இதிலே என் தொகுதியிலே இருக்கின்ற பச்சைமலையில் கிட்டத்தட்ட 3 பெரும் சாலைகளைப் போட வேண்டுமென்று மூன்றாண்டு களாகக் கோரிக்கை வைத்துக்கொண்டிருக்கிறேன். ஆனால் மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சரவர்களின் பார்வை ஏனோ இன்னும் இந்தச் சாலைகளின் பக்கம் படாமல் இருக்கிறது. ஆகவே, இந்த ஆண்டு என்னுடைய தொகுதியிலே இருக்கின்ற மூன்று சாலைகளையும், அதாவது, சோபனபுரத்திலிருந்து

டாப்செங்காட்டுப்பட்டிக்கும், செங்காட்டுப்பட்டியிலிருந்து செம்புளிச்சாம்பட்டிக்கும், டாப்செங்காட்டுப்பட்டியிலிருந்து செம்புளிச்சாம்பட்டிக்கும் உள்ள மூன்று சாலைகளையும் தார்ச் சாலைகளாக அமைப்பதன் மூலமாகப் பச்சை மலையில் உள்ள கிட்டத்தட்ட 50 கிராம மக்கள் இணைப்புச் சாலை வசதிகளைப் பெறுவார்கள். இப்பொழுது பஸ் போக்குவரத்து இல்லாமல் மலை வாழ் மக்கள் அல்லலுற்றுக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் வர வேண்டுமேயானால் கிட்டத்தட்ட 15 கிலோ மீட்டருக்கு மேல் நடந்து வரும் சூழ்நிலை இன்னும் இருக்கிறது. எனவே, இந்த மூன்று சாலைகளையும் தார்ச் சாலைகளாக அமைத்துத் தர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் என்னுடைய தொகுதியிலே உப்பிலியாபுரத்திலிருந்து கோட்டபாளையம் செல்லும் சாலையில் உள்ள பாலம் ஒன்றும், துறையூருக்கு பைப்பாஸ் ரோடு வேண்டுமென்றும் மூன்றாண்டுக் காலமாகக் கோரிக்கை வைத்துக் கொண்டிருக்கிறேன். முசிறி—குளித்தலை பாலம் போட்டதற்குப் பிறகு துறையூர் நகரத்தில் போக்குவரத்து மிகவும் அதிகமாக இருப்பதால் துறையூர் நகரத்தில் ஒரு மாதத்திற்கு முன்பாக ஒரு மாணவன் உயிரிழக்கும் நிலைமை ஏற்பட்டிருக்கிறது. எனவே, இந்த ஆண்டு எப்படியும் துறையூர் பைப்பாஸ் ரோட்டைப் போட்டுக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் வீரபச்சாம்பட்டியிலுள்ள மக்களுக்கு ஐயாற்றிலே பாலம் தேவை என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது).

திரு. ப. தீர்த்தராமன்: மாண்புமிகு மாற்றுத் தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் கொண்டு வந்திருக்கின்ற இந்த மானியக் கோரிக்கைகளின் மீது பேசுவதற்கு வாய்ப்பளித்தமைக்காக என்னுடைய நன்றியையும் வணக்கத்தையும் நான் தெரிவித்துக் கொள்கிறேன். இந்திய அரசியலமைப்பின் ஜனநாயகத்தினுடைய அடிப்படையே உள்ளாட்சித் துறையிலிருந்துதான் ஆரம்பிக்கப்படுகிறது. அந்த ஜனநாயகத்தினுடைய அடிப்படை இந்தத் தேர்தல்களை நடத்தாத காரணத்தினால் குழி தோண்டிப் புதைக்கப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

காந்தி கண்ட கனவாகிய, கிராம இராஜ்யங்களை இராம இராஜ்யங்களாக ஆக்க வேண்டுமென்ற கனவை நிறைவேற்றும் வகையில் அமைக்கப்பட்டதுதான் ஊராட்சித் துறை. ஆனால் இன்று, காந்தி கண்ட கனவாகிய இராம இராஜ்யத்திற்குப் பதிலாக தனி அதிகாரிகளின் இராஜ்யமாகத்தான் பல ஆண்டுக் காலமாக செயல்பட்டுக் கொண்டு வருகிறது. அப்படிச் செயல்பட்டுக் கொண்டு வருகின்ற காரணத்தினால் அங்கே இன்றைக்கு ஊழல் நிறைந்து காணப்படுகிறது. உள்ளாட்சித்



துறை என்று சொன்னாலே அதனுடைய மறு பெயர் ஊழலோ என்று சொல்லத்தக்க அளவிற்கு இன்று அது ஊழலிலே நின்று கொண்டிருக்கிறது.

செயல்படுகின்ற ஒவ்வொரு வேலையிலேயும் மக்களுக்காக ஒதுக்கப்படும் ஒவ்வொரு நிதியிலேயும் 25 சதவீதம் கூட அந்த மக்களுக்குப் போய்ச் சேரவில்லை என்பதை உறுதியாகச் சொல்ல முடியும்.

(பிற்பகல் 12–40)

இந்த நேரத்திலே மக்கள் பிரதிநிதிகள் இல்லாத காரணத்தால் தட்டிக்கேட்க முடியாமல் அங்கு நடைபெறுகிற திட்டங்கள் எல்லாம் — தன்னிறைவு திட்டம் தனி நபர் நிறைவுத் திட்டமாக செயல்பட்டு கொண்டு வந்திருக்கிறது. அது சில கான்ட்ராக்டரர்களுக்கும், அதிகாரிகளுக்காகவும் செயல்பட்டு கொண்டு வருகிறதே தவிர மக்களுக்கு பயனளிக்கும் திட்டமாகத் தெரியவில்லை. நீங்கள் கொண்டுவருகிற எந்த திட்டமானாலும் மக்களுக்கு பயன்படுவதாக இருந்தால் பாராட்டக் கடமைப் பட்டவர்களாக இருக்கிறோம். யாராக இருந்தாலும் அதை பாராட்டத்தான் செய்வார்கள். அப்படி பயன்படாமல் போகின்ற நேரத்தில் அதை சுட்டிக் காட்டுகிற பொறுப்பிலே நாங்கள் இருக்கிற காரணத்தால் சுட்டிக்காட்டுகிறோம்.

தேசீய கிராமப்புற வேலைவாய்ப்புத் திட்டத்திலே மத்திய அரசு பல கோடி ரூபாய் ஒதுக்கியிருந்தும், அதற்குரிய விளம்பரங்கள் இன்று கிடைக்கவில்லை. தங்களால் இயலாத நிலையிலெல்லாம் மத்திய அரசை கைகாண்பித்து விட்டு, மாநில அரசு விளம்பரங்களை தேடிக்கொண்டிருக்கிறது என்பதை இந்த நேரத்திலே குறைபாடாக குறிப்பிட விரும்புகிறேன். குறிப்பாகச் சொல்ல வேண்டுமானால், இன்று தேசீய வேலை வாய்ப்புத் திட்டத்திலே கட்டப்படுகிற பல கட்டிடங்களெல்லாம் நல்ல திட்டம் தான். வரவேற்கத்தக்கது. இருந்தாலும் முதலமைச்சர் சத்துணவுத் திட்டக் கட்டிடம் என்ற பெயரளிக்கப்பட்டு, அது மாநில அரசால் செயல்படும் திட்டம் என்று விளம்பரப்படுத்தப்பட்டு மத்திய அரசு கொடுக்கிறதெல்லாம் மறைக்கப்பட்டிருக்கிறது என்பதை நான் தெள்ளத் தெளிவாக இந்த நேரத்திலே எடுத்துச்சொல்ல கடமைப் பட்டிருக்கிறேன்.

அதேபோல மத்திய அரசு 1977—78-ம் ஆண்டு ஒரு கமிஷன் அமைத்தது. அந்த கமிஷன் உள்துறையினுடைய நிர்வாகம் நிதி நிலை பிரச்சினையை அறிவதற்காக போடப்பட்டது. அதிலே நம்முடைய முதலமைச்சரும், உறுப்பினராக இருந்தார். அதை அனைவரும் அறிவீர்கள். அந்த கமிஷன் வெளியிட்ட அறிக்கையின் மீது அரசு எடுத்த நடவடிக்கை என்ன என்பதை யாரும் புரிந்து கொள்ள முடியாத நிலையில் இருந்து கொண்டிருக்கிறார்கள். அதை மக்களுக்கு பயன்படுகின்ற வகையிலே மீண்டும் மறு பரிசீலனை செய்து செயல்படுத்த வேண்டும் என்பதை வேண்டுகோளாக விட ஆசைப்படுகிறேன்.

அதே போல் நகர பஞ்சாயத்துக்களுக்கு, குறிப்பாக என் தொகுதி பஞ்சாயத்துக்கு, — பல ஆண்டுகளுக்கு முன்பாக கட்டப்பட்ட கட்டிடங்கள் நல்ல கட்டிடங்களாக இல்லாத காரணத்தால் பழுதடைந்து, சீரழிகிற நிலையில் இருக்கிறது. அதை மேம்படுத்துகிற திட்டம் எதுவும் இல்லை. அதேபோல் என்னுடைய ஒன்றியத்திலே, 198 –81-ம் ஆண்டு, தன்னிறைவுத் திட்டத்தை எடுத்துக் கொண்ட காரணத்தால், குறைந்த தொகையை ஒதுக்கிய காரணத்தால், பல வேலைகள் செய்ய முடியாமல் நின்றுவிட்டது. இரண்டாம் கட்டமாக தன்னிறைவுத் திட்டத்தில் எடுப்பதாக அறிவித்து இருந்தார். பாராட்டுகிறேன். இந்த திட்டத்திலே முதலிலே குறைவாக தொகையை ஒதுக்கிய ஒன்றியங்களுக்கு. இன்று அதன் தேவைக்கேற்ப கூடுதலாக தொகையை ஒதுக்கி, அங்கேயுள்ள குறைகளை நிவர்த்தி செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சத்துணவுத் திட்டத்திற்கு ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டனர் சில ஒன்றியங்களிலே, ஏற்கனவே ஒருவர் வேலையிலிருந்தால் அந்த குடும்பத்திற்கு வேலை அளிக்கக்கூடாது என்று அரசு உத்திரவு போட்டதாக, அதன் அடிப்படையிலே சில ஒன்றியங்களில் வேலைக்கு அமர்த்தியிருக்கிறார்கள். ஆனால் பல ஒன்றியங்களிலே அதை மீறி ஏற்கனவே வேலையில் இருக்கும் குடும்பங்களுக்கு வேலை அளிக்கப்பட்டிருக்கிறது. ஒவ்வொரு ஒன்றியத்திற்கு ஒன்றியம், மாறுபட்ட, முரணான கருத்துக்கள் செயல்பட்டுக்கொண்டிருக்கின்றன. அதனால் பல பேர் வேலைவாய்ப்பு இல்லாத நிலையில் இருக்கிறார்கள். இதை மாற்றி அமைக்க ஒரு சீரான கொள்கையை வகுத்து எல்லோருக்கும் வேலை கொடுக்கிற ஒரு நிலைமையை ஏற்படுத்த வேண்டும் என்பதை இந்த நேரத்தில் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். தர்மபுரி மாவட்டத்தைப் பொறுத்தவரை, அங்கே இருக்கின்ற கோட்டப் பொறியாளர் அவர்கள் தனக்கு வேண்டிய சில ஒன்றியப் பொறியாளர்களை மட்டும் சில இடங்களிலே அமர்த்திக் கொண்டு சரியானபடி வேலைகள் நடைபெறாதபடி தடங்கலாக இருக்கிறார்கள். அதனை நாங்கள் மேலதிகாரிகளுக்கு சொன்னபோதும், அல்லது அரசினிடத்திலே சொல்லுகின்றபோதும், நாங்கள் ஏதோ சுய லாபத்திற்காக அதைச் சொல்வதாக சில பேர்கள் தவறாக நினைக்கின்ற நிலைமை இருந்து கொண்டிருக்கிறது. எனவே அதை மறு ஆய்வு செய்து, அங்கே நடைபெற்ற வேலைகளுக்கு எல்லாம் மறு ஆய்வு செய்யவேண்டும் என்று இந்த நேரத்திலே எடுத்துச் சொல்ல விரும்புகிறேன்.

அதேபோல் என்னுடைய தொகுதியிலே இருக்கின்ற நல்லம்பள்ளி என்ற ஊராட்சி ஒன்றியத்திலே பல வேலைகள் சரியானபடி செய்யப்படாத நிலையிலே இன்று இருக்கிறது. அதற்கும் ஒரு நல்ல வழியை ஏற்படுத்திக் கொடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது.)





திரு. பொ. விஜயராகவன் : மாற்றுத் தலைவர் அவர்களே, 1983-84 ஆம் ஆண்டுக்கான சமுதாய நல வளர்ச்சித் திட்டம், நகராட்சி நிர்வாகம், சாலைகள், பாலங்கள் ஆகிய மானியக் கோரிக்கைகள் மீது நான் சார்ந்திருக்கின்ற ஜனதாக் கட்சியின் சார்பில் ஒரு சில கருத்துக்களை எடுத்து வைக்க விரும்புகிறேன். இன்றைக்கு நம்முடைய உள்ளாட்சித்துறை அமைச்சர் அவர்கள் நகராட்சி தேர்தல் குறித்தும், மாநகராட்சி தேர்தல் குறித்தும், ஒரு தந்திரமான முறையைக் கையாண்டு இருக்கிறார்கள். ஏதோ எதிர்க்கட்சிகள் எல்லாம் இந்த இட ஒதுக்கீட்டிற்கு எதிராக இருப்பது போலவும், சர்க்கார் மட்டும் இந்த இட ஒதுக்கீடு செய்ய முனைப்பாக இருப்பது போலவும் ஒரு மாயையை இங்கே கற்பித்துக் கொண்டு அவருடைய வாதங்களை எடுத்து வைக்கிறார்கள். நான் இந்த சர்க்காரை ஒன்று கேட்கிறேன். உங்களுக்கு உள்ளபடியே உள்ளசுத்தியாக இந்த இட ஒதுக்கீடு செய்வதற்கு எண்ணம் இருக்குமானால் ஏன் ஊராட்சி, பேரூராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்களுக்கு சட்டம் கொண்டு வந்த அதே நேரத்தில் மாநகராட்சிக்கும், நகராட்சிகளுக்கும் இந்தச் சட்டத்தை நீங்கள் ஏன் கொண்டு வந்திருக்க முடியாது என்பதை நான் இங்கே குறிப்பிட்டுக் காட்ட விரும்புகிறேன். இன்றைக்கு நல்லகாலம் பார்த்து, முகூர்த்தம் பார்த்து இந்தச் சட்டத்தைக் கொண்டு வருகிறோம் என்று சொல்வது போல், இன்றைக்கு அமைச்சர் அவர்கள் தங்களுடைய விளக்கங்களை இங்கே எடுத்துச் சொல்கிறார்கள். பன்னெடுங்காலமாக கூக்குரலிட்டு இந்த மாநகராட்சிகளுக்கும், நகராட்சிகளுக்கும் தேர்தல் நடத்துங்கள் என்று சொல்லியபோதெல்லாம் ஏதேதோ பல்வேறு காரணங்களைக் காட்டி இன்றைக்கு நீங்கள் தேர்தலை கண்டிப்பாக நடத்தவேண்டும் என்று எதிர்க்கட்சிகள் எல்லாம் ஒரேயடியாக வற்புறுத்தியதற்குப் பின்னாலே, நீங்கள் இந்த இட ஒதுக்கீடு செய்யப்போகிறோம் என்ற அளவிலே கொண்டு வந்து இருப்பது வேண்டுமென்றே இந்தத் தேர்தல்களை காலம் தாழ்த்திக் கொண்டு போவதற்கான ஒரு சதியோ என்று கூட நான் அஞ்சுகிறேன். தேர்தல் நடத்தாததால் இன்றைக்கு நாட்டிலே மிகப் பயங்கரமான ஒரு சூழ்நிலை ஏற்பட்டுக் கொண்டிருக்கிறது. இன்றைக்கு நகராட்சிகளிலும் மாநகராட்சி களிலும், மக்கள் குடிப்பதற்கு தண்ணீர் இல்லாமல் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். இன்றைக்கு அடிப்படை ஜனநாயக உரிமைகளை மறுக்கப்பட்ட நிலையில், அதிகாரிகளிடம் சென்று மடிப்பிச்சைக் கேட்கின்ற நிலையிலே நாட்டு மக்கள் இன்றைக்கு வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள். இந்த நேரத்தில் நீங்கள் அடிப்படை ஜனநாயக அமைப்புகளுக்கு புத்துயிர் அளியுங்கள், அதற்கு உயிர் ஊட்டுங்கள் என்று கேட்கின்ற இந்த நேரத்தில் நீங்கள் இட ஒதுக்கீடு செய்வதற்கு நாங்கள் போகின்றோம், ஆகவே நீங்கள் தேர்தலை இட ஒதுக்கீட்டிற்குப் பின்னாலே வைக்கிறோம் என்பது வேண்டும் என்றே காலம் தாழ்த்து கிறீர்களோ என்ற ஐயப்பாட்டை எங்களுக்கு ஏற்படுத்துகிறது.

அனைத்துக்கட்சித் தலைவர்களுடைய கூட்டத்திலேகூட நாங்கள் தெளிவாகச் சொன்னோம். இட ஒதுக்கீட்டை நாங்கள் எதிர்க்கவில்லை, அதை நாங்கள் ஆதரிக்கிறோம் என்று. பெண்களுக்கும், அரிஜன மக்களுக்கும் இட ஒதுக்கீடு செய்ய வேண்டும் என்பதில் நாங்கள் உங்களுக்கு உறுதுணையாக இருக்கிறோம் என்று சொன்னோம். ஆனால் இன்றைக்கு ஏற்பட்டிருக்கக்கூடிய மிக மோசமான ஒரு சூழ்நிலையைக் கருத்தில் கொண்டு உடனடியாக தேர்தலை வையுங்கள் என்று சொல்கிறபோது — இட ஒதுக்கீடு நீங்கள் செய்யவேண்டாம் என்று சொல்லவில்லை — இப்போது இருக்கக்கூடிய சட்டத்தின் அடிப்படையிலேகூட முழுமையான அளவிற்கு நிவாரண இட ஒதுக்கீடு இல்லை என்று சொன்னாலும்கூட, இன்றைக்கு இருக்கக்கூடிய நகராட்சி சட்டங்களின்படி, 25 சதவீதம் நீங்கள் ஒதுக்கீடு செய்வதற்கான வாய்ப்பு இருக்கிறது. அதேபோல் சென்னை மாநகராட்சியை எடுத்துக்கொண்டால், அங்கே பெண்களுக்கும் அரிஜன மக்களுக்கும் ஒழுங்கான பிரதி நிதித்துவம் இல்லை என்று சொன்னால், 15 பெண்களும், 15 அரிஜன மக்களையும் நீங்கள் கோ-ஆப்ட் செய்வதற்கு உங்களுக்கு உரிமை இருக்கிறது. ஆகவே ஒரு தற்காலிக நடவடிக்கையாகவே அதை ஒரு இன்டெரிம் முறை மாதிரி செய்து கொள்கின்ற அளவிலே, தேர்தலை உடனே வையுங்கள், சட்டத் திருத்தத்தைக் கொண்டு வாருங்கள், அதற்கு நாங்கள் முழுமையான ஆதரவைத் தருகிறோம். ஏற்கனவே நாம் கொண்டு வந்த சட்டம் இன்றைக்கு சுப்ரீம் கோர்ட்டிலே இருந்துகொண்டிருக்கிறது. 4 மாதங்களுக்குள்ளாக தேர்தலை நடத்தி முடிக்க முடியும் என்று சொல்லிக் கொண்டிருக்கின்ற சர்க்கார், இப்படி ஒரு சட்டத்தைக் கொண்டு வருகின்றபோது — இங்கே அமைச்சர் அவர்கள் சொன்னார்கள் — இந்தச் சட்டத்திற்குக்கூட வேண்டாதவர்கள் போய் ஸ்டே வாங்குவதற்கு ஒரு சூழ்நிலை வந்துவிடும் என்ற நிலைமையை அவர்களே ஒத்துக்கொண்டார்கள்.

(பிற்பகல் 12.50)

அப்படி எடுத்துக்கொள்ளுகிற நேரத்தில், இந்தத் தேர்தலே நடைபெறாமல் ஆண்டுக்காண்டு தேர்தலை தள்ளிவைக்கிற காரணத்தால், இந்த நகராட்சிகளுக்கும் மாநகராட்சிகளுக்கும் தேர்தலை நடத்தாமல் இருக்கிற காரணத்தால் நாங்கள் இப்படிப் பட்ட எதிரான கருத்துக்களை வைக்கிறோம். ஆகவே நாங்கள் இட ஒதுக்கீட்டுக்கு எதிரிகள் அல்ல.

மாண்புமிகு அமைச்சரவர்கள், 4 மாதத்திற்குள் தேர்தலை வைப்போம் என்று சொல்கிறார்கள். அது எப்படி சாத்திய மாகும்? ஜனநாயக முறைப்படி தேர்தலை நடத்த இன்றைக்கு இருக்கக்கூடிய நிலைமையில், இட ஒதுக்கீடு பிரச்சனை ஒருபக்கம் இருந்தாலும், நகராட்சிகளுக்கும்



களுக்கும் தேர்தலை நடத்துவதன் மூலம் மக்கள் பிரச்சனை களில் மாற்றம் காணலாம் என்ற கருத்தில் சொல்கிறோமே அல்லாமல் இட ஒதுக்கீட்டுக்கு எதிரிகள் அல்ல என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஏனென்றால் இன்றைக்கு வறட்சி மிகக் கொடுமையாக இருக்கிறது. தமிழ்நாடு முழுவதும் நகராட்சிகளிலும் மாநகராட்சி களிலும் கிராமங்களிலும் இருக்கிற மக்கள் குடிக்க தண்ணீர் இல்லாமல் ஆலாய்ப் பறந்துகொண்டிருக்கிறார்கள். தண்ணீர் பிரச்சனையைத் தீர்க்க பல ஆயிரக்கணக்கான குழாய்கள் போடப்படுவதாகச் சொல்கிறார்கள். பத்திரிகைகளில் செய்திகள் எல்லாம் வருவதைப் பார்க்கிறோம். ஆனால் யதார்த்தமாகப் பார்க்கும்போது, சென்னை மாநகரிலே கூட போடப்பட்ட குழாய்க் கிணறுகளில் தண்ணீர் இல்லை. சில இடங்களிலே குழாய் வேலை செய்யவில்லை என்ற குற்றச் சாட்டு இருக்கிறது. அதைப்போன்றுதான் ஊராட்சிகளிலும் நகராட்சிகளிலும் இருக்கிறது. ஊராட்சிகளின் மூலம் போடப் பட்ட பல ஆயிரக்கணக்கான குழாய்க் கிணறுகளில் சரியாக தண்ணீர் வரவில்லை. பணம்தான் விரயம் ஆனதே தவிர தண்ணீர் வரவில்லை என்பதைப் பார்க்கிறோம். இதை மக்கள் எங்கே போய்ச் சொல்லுவார்கள்? மக்களுக்கு இருக்கிற குறைகளை நிவர்த்தி செய்ய ஒரு வாய்ப்பினை அளிக்க வேண்டுமென்று சொன்னால் இந்த அடிப்படை ஜனநாயகத்தை மறுக்கக்கூடாது; தேர்தலை உடனடியாக நடத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இன்றைக்கு குடிநீர் வாரியத்தில் பல்வேறு திட்டங்களைப் போடுகிறார்கள். அதன் மூலம் ஊராட்சிகளுக்கு வசதிகள் செய்திருந்தாலும் கூட ஒழுங்கான முறையில் பழுது பார்க்கும் வாய்ப்பும் வசதியும் ஊராட்சி ஒன்றியங்களுக்கு இல்லை. அங்கே இரண்டு பெண்டாட்டிக்காரன் கதையைப்போலத்தான் இருக்கிறது. மக்கள் போய் ஊராட்சி ஒன்றியத்திலே குறைகளைச் சொன்னால், அவர்கள் 'ட்வாட்போர்டு'தான் செய்ய வேண்டுமென்று கையைக் காட்டுகிறார்கள். ட்வாட்போர்டிடம் சென்றால் நாங்கள் பம்பை ரிப்பேர் செய்துவிட்டோம், குழாய் வாங்க வேண்டியது ஊராட்சி ஒன்றியம்தான், அங்கே போய் கேளுங்கள் என்று சொல்கிறார்கள். அதை ஒழுங்குபடுத்துவதற்கான திட்டம் நம்மிடம் இல்லை. இந்த குறை நிவர்த்தி செய்யப் பட்டு, சீராகச் செயல்பட வேண்டுமென்றால் ஊராட்சி ஒன்றியங் களிலே குடிநீர் வழங்குகின்ற பொறியியல் வல்லுநர்களை அமர்த்தி, அவர்களுக்கு ஒரு ரெஸ்பான்சிபிலிட்டியை, பொறுப்பை நிர்ணயித்துவிட வேண்டும். அப்படியானால்தான் இந்த குறையை நிவர்த்தி செய்ய முடியும் என்பதைத் தெரி வித்துக் கொள்கிறேன்.

[திரு. பொ. விஜயராகவன்] [1983 மார்ச் 17

இன்றைக்கு குடிநீர் திட்டங்கள் பல போடப்பட்டிருக் கின்றன. பல திட்டங்களில் மேல்நிலை தண்ணீர் தொட்டிகள் இருக்கின்றன. ஆனால் அங்கே தண்ணீர் வருவதில்லை. பல ஆயிரக்கணக்கான திட்டங்கள் நிறைவேறாமல், ஆண்டுக் கணக்கில் நிறுத்தி வைக்கப்பட்டிருக்கின்றன; திட்டங்கள் முடங்கிக் கிடக்கின்றன. இதை எடுத்துச்சொல்லி, நடவடிக்கை எடுப்பதற்கான வாய்ப்பு இன்றைக்கு மக்களுக்கு இல்லை. ஆகவே தேர்தலை வையுங்கள் என்று சொல்கிறோம். இன்றைக்கு இருக்கின்ற இந்த விசேஷ நிலைமையை கருத்தில் கொண்டுதான் அரசியல் கட்சிகள் இந்தக் கருத்தைச் சொல் கிறார்களே தவிர வேறல்ல. இட ஒதுக்கீட்டை எதிர்க்கின்ற அரசியல் கட்சிகள் இன்றைக்கு இல்லை என்பதை அமைச்சரவர் களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக என்னுடைய தொகுதி பற்றிய ஒரு பிரச் சனையை மட்டும் கூறி முடித்துக்கொள்கிறேன். கன்னியாகுமரி மாவட்டத்தில் குழித்துறை ஆற்றில் கணபதியான்கடவு என்ற இடத்தில் ஒரு பாலம் கட்ட வேண்டுமென்று பல்லாண்டு களாக கோரிக்கை வைக்கப்பட்டிருக்கிறது. இந்த நேரத்திலும் அந்தக் கோரிக்கையை வலியுறுத்துகிறேன். வெகு விரைவில் அந்தப் பாலத்தைக் கட்டுவதற்கு நிதி ஒதுக்கீடு செய்து, பணியைத் தொடங்க வேண்டுமென்று கேட்டு, என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

திரு. எஸ். டி. உகம்சந்த்; மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர் களால் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள சமுதாய நல வளர்ச்சி திட்டங்கள், நகராட்சி நிர்வாகம், சாலைகள்-பாலங்கள் என்னும் மானியக் கோரிக்கைகளின் மீது பேசுவதற்கு எனக்கு வாய்ப்பு அளித்தமைக்கு என்னுடைய நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

கடந்த மூன்று ஆண்டுகளில் தமிழகத்தின் கிராமங்கள் எந்த அளவுக்கு வளர்ந்துள்ளன என்பதை எண்ணிப்பார்த்தால் பேரறிஞர் அண்ணா அவர்கள் கண்ட கனவு, கிராம வளர்ச்சியும் கிராம மேம்பாட்டுத் திட்டங்களும் எந்த அளவிற்கு புரட்சித் தலைவர் அவர்களின் ஆட்சியிலே சீரோடும் சிறப்போடும் நடைபெற்று வருகின்றன என்பதை எண்ணிப்பார்த்து நான் மட்டுமல்ல; கிராமப் பகுதி மக்களும் இன்றையதினம் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறார்கள்.

இன்றைக்கு தன்னிறைவுத் திட்டத்தின் மூலம் 1980–81 ஆம் ஆண்டு 69 ஒன்றியங்களில் சுமார் 4,343 இலட்சம் ரூபாயும், அதைப்போன்று 1981-82 ஆம் ஆண்டில் 150 ஒன்றியங்களில் 7,851 இலட்சம் ரூபாயும், 1982-83 ஆம் ஆண்டில் 159 ஒன்றியங்களில் 8,276 இலட்சம் ரூபாயும் செல விட்டிருக்கிறார்கள்.



1983 மார்ச் 17] [திரு. எஸ். டி. உகம்சந்த்]

என்னுடைய தொகுதியைச் சேர்ந்த லத்தூர் ஊராட்சி ஒன்றியத்தில் சென்ற ஆண்டு இந்தத் தன்னிறைவுத் திட்டம் நிறைவேற்றப்பட்டிருக்கின்றது. இந்தத் திட்டத்திற்காக சுமார் 75 இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டது. ஆனால் அவை எல்லாம் இன்றைக்குச் சுருக்கப்பட்டு சுமார் 30 இலட்சம் தான் தன்னிறைவுத் திட்டத்திற்காகச் செலவு செய்யப்பட்டிருக்கின்றது. செங்கற்பட்டு மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் என்னுடைய 14-6-82 ஆம்தேதிய கடிதத்தின் மூலம் மீதியுள்ள அனைத்து வேலைகளையும் 1982-83 ஆம் ஆண்டில் என் ஆர் ஈ.பி. திட்டத்தின் மூலம் செய்ய ஆணை யிட்டிருக்கிறார்கள். அதன்மூலம் தாவது சாலைகள் அமைக்கும் 119 வேலைகள், ஆதிதிராவிடர்களுக்கு மயான பாதை அமைக்கும் 71 வேலைகள், சாலைகளுக்கு மெட்டல் பரப்பு கின்ற வேலைகள் ஆகியவற்றை இன்றைக்கு எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் இதற்கு ஒதுக்கப்பட்டு இருக் கின்ற நிதியோ மிகவும் குறைவு. சாலைகள் எல்லாம் போடப் பட்டு வருகின்ற நிலைமையில் அவர்களுக்கு போதிய நிதி கொடுக்காத காரணத்தால் அந்த கிராமத்தைச் சேர்ந்த ஏழை எளிய மக்கள் எல்லாம் மிகவும் சிரமத்திற்கு உள்ளாகி இருக் கிறார்கள். அவர்களுக்கு வேண்டிய நிதி வசதியைச் செய்து கொடுக்க வேண்டும் என்று இந்த நேரத்தில் கேட்டுக் கொள் கிறேன்.

அடுத்து மதுராந்தகம் ஊராட்சிக்கும் லத்தூர் ஊராட்சிக்கும் இந்த தேசிய ஊரக வளர்ச்சித் திட்டத்தின் மூலம் ஒவ்வொரு இடத்திற்கும் ஒவ்வொரு கல்யாண மண்டபம் கட்டுவதற்கு உதவி செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து ஊராட்சி ஒன்றியங்களில் இருக்கின்ற ரேடியோ டெலிவிஷன் போன்றவற்றிற்கு ஷெட்கள் கட்டாயமாக தேசிய ஊரக வளர்ச்சித்திட்டத்தின் மூலம் கட்டிக் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, மதுராந்தகம் ஊராட்சி ஒன்றியத்திலே சென்ற ஆண்டு 53 பஸ் ஷெல்டர்கள் கட்டி இருக்கிறார்கள். ஒவ்வொரு ஷெல்டருக்கும் 4,300 ரூபாய் செலவு செய்திருக்கிறார்கள். ஆனால், அவற்றை கான்ட்ராக்டுக்கு விட்டிருந்தால் கூட 2,000 ரூபாய் செலவிலே செய்திருக்கலாம். ஆனால், ஒரு சிலருக்கு நாமினேஷன் என்ற முறையில் கொடுக்கப்பட்டு அந்த வகையில் 4,300 ரூபாய் செலவு செய்து ஊராட்சி ஒன்றியங் களின் நிதியினை அவர்கள் பாழாக்கி இருக்கிறார்கள். எனவே, அதற்காக வேண்டிய நடவடிக்கையை எடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. எஸ். டி. உகம்சந்த்] [1983 மார்ச் 17

அடுத்து, மதுராந்தகம் நகராட்சி மிகவும் பின்தங்கிய நகராட்சி. அது பஞ்சாயத்தாக இருந்த காலத்தில் மிகவும் நல்லமுறையில் செயல்பட்டு வந்தது. அதனுடைய நிதிநிலைமை அப்போது நல்லநிலைமையிலே இருந்தது. அப்படி பஞ்சாயத்தாக இருக்கின்ற காலத்திலே போடப்பட்ட தார் சாலைகளில் இன்றைக்கு கிராவல் பரப்புகின்ற நிலைமை ஏற்பட்டிருக்கின்றது. எனவே அந்த அளவுக்கு அந்த நகராட்சிக்கு எந்த விதமான வருமானமும் இல்லாமல் இருக்கின்றது. எனவே அந்த நகராட்சியை மேம்பாடு செய்வதற்கு வேண்டிய நிதிவசதி செய்து கொடுக்க வேண்டும். அடுத்து அந்த நகராட்சியிலே தன்னிறைவுத் திட்டத்தை இந்த ஆண்டு செயல்படுத்த வேண்டும் என்று அரசை நான் வற்புறுத்த விரும்புகிறேன்.

மேலும் அரசு மானியமாக அதிக நிதியினைக் கொடுத்து அங்கே சாலை வசதிகளை மேம்பாடு செய்வதற்கு வேண்டிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அடுத்து நகராட்சிக்கு என்று தனியாக அலுவலகம் கட்டுவதற்கு நிதி கொடுக்க வேண்டும்.

அடுத்து, இன்றைக்கு பல ஊராட்சி ஒன்றியங்கள் பெரிய ஊராட்சி ஒன்றியங்களாக இருக்கின்றன. மதுராந்தகம் ஊராட்சி ஒன்றியமும், உத்தரமேரூர் ஊராட்சி ஒன்றியமும் மிகப்பெரிய ஊராட்சி ஒன்றியமாக இருக்கின்றன. ஆகவே அங்கே நிர்வாகம் நல்லமுறையில் செயல்படாமல் இருப்பதை மாற்றுகின்ற வகையில் அந்த ஊராட்சி ஒன்றியங்களை பிரித்து சிறு சிறு ஊராட்சி ஒன்றியங்களாக மாற்றுவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும். அதேபோன்று பெரிய பஞ்சாயத்தாக இருப்பனவற்றைப் பிரித்து சிறிதாக அமைப்பதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இன்றைக்கு ஊராட்சி ஒன்றியங்களில் கட்டப்பட்டிருக்கின்ற பள்ளிகளைச் சீர் செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். பள்ளிகளிலே வேலைபார்க்கும் ஆசிரியர்கள் அரசு ஊழியர்களாக ஆக்கப்பட்டதற்குப் பிறகு அந்தப் பள்ளிக் கட்டடங்களை யார் பாதுகாப்பது என்ற பிரச்சினை எழுந்து அதன் காரணமாக பள்ளிகள் சரியான முறையில் பாதுகாக்கப்படாத நிலைமைகள் இருக்கின்றன. எனவே, அதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும்.

அடுத்து, தாய் சேய் நல விடுதிகள் ஒருசில மூடப்பட்டு கிடக்கின்றன அவற்றை மீண்டும் துவக்க இடங்களில் செய்ய வேண்டும். மதுராந்தகம், ஒன்றியத்தில் பாக்கம், பெரிய வழிவகை பண்ணை போன்ற கிராமங்களில் தாய் சேய் நல விடுதிகள் மூடப்பட்டுக் கிடக்கின்றன. அவற்றை இயக்குவதற்கு வேண்டிய வழிவகை செய்ய வேண்டும்,



1983 மார்ச் 17] [திரு. எஸ். டி. உகம்சந்த்]

அடுத்து, இன்றைக்கு ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் மூலம் பல காரியங்களைச் செய்து கொண்டிருக்கிறார்கள். ஒரு ஊராட்சி ஒன்றியத்திற்கு 600 குடும்பங்கள் என்று கணக்கில் எடுத்துக்கொண்டு அந்த காரியங்களைச் செய்தால் கிராமங்களைச் சேர்ந்த மக்களுக்கு நன்மை செய்வதற்கு பல ஆண்டுகள் ஆகும். எனவே அதனை அதிகப்படுத்த வேண்டும், மதுராந்தகம் நகராட்சியாக இருந்தாலும் பஞ்சாயத்து போன்ற சூழ்நிலையில் தான் இருக்கின்றன. எனவே அதனை மேம்பாடு அடையச் செய்யவேண்டும். அப்படிப்பட்ட நிலைமையில்......(மணியடிக்கப்பெற்றது).

(பிற்பகல் 1-00)

திரு. ஜி. மூர்த்தி: மாண்புமிகு பேரவையின் மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கிற இந்த மானியக் கோரிக்கையை ஆதரித்து ஒரு சில கருத்துகளைக் கூற விழைகிறேன். எனக்கு பேச வாய்ப்பு கொடுத்தமைக்கு நன்றி கூறி ஆரம்பிக்கிறேன்.

தன்னிறைவு திட்டம் இந்த வருட காலத்தோடு முடிக்கப்பட இருக்கிறது. ஊராட்சி ஒன்றியங்களில் நிறைவேற்றப்படுகிற இந்தத் தன்னிறைவுத் திட்டம் இன்றைக்கு கடைசி கட்டத்தில் இருந்துகொண்டு இருக்கிறது. ஆனால் நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களை வேண்டி கேட்டுக்கொள்வது எல்லாம் இந்தத் தன்னிறைவு திட்டத்தை இந்த ஆண்டோடு முடித்து விடாதீர்கள். மேலும் பரவலாக நிறைவேற்றப்பட திட்டங்கள் இருக்கிற காரணத்தாலும், திட்டங்களை நிறைவேற்ற வேண்டும் என்று கோரிக்கைகள் இருக்கிற காரணத்தினாலும் இந்தத் தன்னிறைவுத் திட்டத்தை இன்னும் பல ஆண்டுகளுக்கு எல்லா ஊராட்சி ஒன்றியங்களுக்கும் விரிவுபடுத்தி தர வேண்டும் என்று நான் இந்த நேரத்தில் கோரிக்கையாக கேட்டுக் கொள்கிறேன். இன்றைக்கு மேல் நீர்த்தேக்க தொட்டி எல்லா இடங்களிலும் இருக்கிறது ஆனால் அதிலிருந்து தண்ணீர் கொண்டு வருகிற புதைக்கப்பட்ட குழாய்கள் பலயிடங்களில் சரிவர இருப்பது கிடையாது. 90 சதவீத கிராமங்களில் இருக்கின்ற இந்த குழாய்கள் உடைந்த நிலையிலும் ஓட்டை நிலையிலும் இருந்து கொண்டிருக்கிறது தண்ணீர் அங்கே வீணாகச் சென்று கொண்டிருக்கிறது. இந்த குழாய்களை மாற்ற மாநில அளவிலே ஒரு நல்லத் திட்டத்தைத் தீட்டி ஒழுங்கான குழாய்களை போடுவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பொறுப்பு ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இன்றைக்கு ஊர்களில் எல்லா இடங்களிலும் இருக்கின்ற குடிநீர் கிணறுகளும் மேல் நீர்த்தேக்க தொட்டிகளும் இருக்கின்ற [illegible] ஊர்களில் இருக்கின்ற பிரச்சனை தண்ணீர் [illegible] யிடத்தில் இந்தத் தண்ணீர் பிரச்சனை [illegible]

சென்றாலும் தாழ்த்தப்பட்ட மக்கள் வாழ்கின்ற பகுதிகளில்
தண்ணீர் கிடைக்காத பிரச்சனைஇருக்கிறது. இதற்கு மிகப்பெரிய
காரணம் அந்த ஊரில் இருக்கின்ற தாழ்த்தப்பட்டவர்கள் அல்லாத
மக்கள் இருக்கின்ற பகுதிகளில் மேல் நீர்த்தேக்கத் தொட்டி
களை கட்டியிருக்கிறார்கள். அதனால், அங்கு தண்ணீர் பிரச்
சனை இல்லை, ஆனால், காலனிகளிலும், சேரிகளிலும் குழாய்
களை இணைக்காத காரணத்தால் அங்கே தண்ணீர் கிடையாது.
ஆகவே, கட்டியிருக்கிற தொட்டிகளிலிருந்து குழாய்களுக்கு
இணைப்பு கொடுத்து காலனிகளுக்கும், சேரிக்கும் தண்ணீர்
கொடுக்க ஏற்பாடு செய்யவேண்டும். அடுத்து இனமேல்
கட்டுகிற தொட்டிகளையாவது தாழ்த்தப்பட்ட மக்கள்
வாழ்கின்ற பகுதிகளில் கட்டவேண்டும். இதனால் ஒரு மிகப்
பெரிய சமுதாய சண்டைகள் வராமல் இருப்பதற்கு நல்ல
வழியாக இருக்கும் என்பதை அரசாங்கத்திற்கு நான் கொண்டு
வர ஆசைப்படுகிறேன். அங்கு இருக்கிற தொட்டிகளில்
தாழ்த்தப்பட்ட மக்கள் தண்ணீர் எடுக்கச் செல்கிறபோது
சமுதாய ஜாதி சண்டைகள் உருவாவதற்கு இது ஒரு மிகப்
பெரிய காரணமாக இருக்கிறது. ஆகவே மேல் நீர்த்தேக்க தொட்டி
களை தாழ்த்தப்பட்ட பகுதிகளில் கட்டித்தரவேண்டும் என்று
இந்த நேரத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

இன்றைக்கு ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின்
காரணமாக ஏழை மக்கள், கூலி விவசாயிகள், தாழ்த்தப்பட்ட
மக்கள் பொருளாதாரத்தில் இன்று வறுமைக்கோட்டுக்கு மேல்
நோக்கிச் சென்று கொண்டிருக்கிறார்கள். இந்தத் திட்டம்
சிறப்பாக எல்லா ஒன்றியத்திலும் நிறைவேற்றப்பட்டு வருகிறது.
இதிலும் நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய கவனத்
திற்கு கொண்டு வருவது ஒவ்வொரு வட்டத்திலும் கூலி
விவசாயிகள், நிலம் அற்ற விவசாயிகள், தாழ்த்தப்பட்ட மக்கள்
இவர்கள் அதிகமாக இருக்கிறார்கள் என்று கணக்கு எடுத்து
40 சதவீதம் 50 சதவீதம் என்கிற விதத்தில் அவர்களுக்கு
கறவை மாடுகள், உழவு மாடுகள், வண்டிகள் வாங்கிதந்து
அவர்களை ஊக்குவித்து, பொருளாதார மேம்பாடு அடையச்
செய்ய வழிவகைகளை செய்யவேண்டும் என்று கேட்டுக்
கொள்கிறேன். நாம் கொடுக்கின்ற மானியம் வங்கிகள்
மூலமாகக் கொடுக்கப்படுகிறது. இந்தக் கடன்கள் அத்தனையும்
ஒரு குறிப்பிட்ட 4, 5 கிராமத்திற்கு மாத்திரம் நான் போய்
சேருகிறது. இந்தக் கடன் மானியத்தை பரவலாக்க வேண்டும்.
ஒவ்வொரு ஒன்றியத்தில் இருக்கிற அனைத்து ஊர்களுக்கும்
போய் சேருகின்ற விதத்தில் இந்த மானியத்தை நாம் விரிவு
படுத்த வேண்டும். வங்கிகள் இருக்கிற இடத்தைச் சுற்றி இரு
கிற கிராமங்களுக்கும் இந்தத் திட்டம் செயலாற்றிச் கொண்
டிருக்கிறது. அது மாத்திரம் அல்ல நாம் கொடுக்கின்ற கறவை
மாடு திட்டங்கள் ஒரே கிராமத்திற்கு அல்லது 4, 5 கிராமத்
திற்கு போய் சேர்ந்துவிடாமல் 100, 150, 200 என்று நாம்
கொடுக்கின்ற கடன்கள் அத்தனையும் 5 6 கிராமங்களிலே



முடங்கிவிடுகிறது. ஆனால், ஒரு ஒன்றியத்தில் 45, 5[illegible]
கிராமங்கள் இருக்கின்றன. மற்ற கிராமத்தில் உள்ள மக்கள் நம்
மீது கோபப்படுகிற நிலைமை இருக்கிறது. இந்தத் திட்டத்தை
பரவலாக்கி விரிவுபடுத்த வேண்டும். அதே நேரத்தில் திருப்பித்
தரமுடியாத நிலையில் இருக்கின்ற காரணத்தினால் உங்களுக்கு
கடன் தர மாட்டேன் என்று வங்கிகள் இன்றைக்கு கடனைத்
தர மறுக்கிறார்கள். அரசாங்கம் மானியம் கொடுக்கத் தயாராக
இருந்தாலும் 'ரீ.பெயிங் கேப்பாசிட்டி' இல்லை என்ற காரணத்
தினால் மானியத்தை வங்கிகள் தர மறுக்கிறது. அதற்கு
அரசாங்கம் உத்திரவாதம் போட்டு வங்கிகளை கட்டாயப்
படுத்தி அவர்களுக்கு கடன் உதவி செய்வதற்கு முன்வர
வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

சங்கங்கள் அமைத்தால்தான் அதன் மூலம் கறவை
மாடுகள் கடன் தரமுடியும் என்ற நிலையை போக்கி சங்கம்
இல்லாத ஊர்களிலும் சங்கம் அமைக்க இயலாத ஊர்களிலும்
உள்ளவர்களும் பயன்பெறும் நிலையில் இந்த மானிய கடனை
தர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

தாழ்த்தப்பட்ட மக்கள் உள்ள இடங்களில் உள்ள சுடு
காட்டுக்கு போகும் பாதையை புதிதாக போட அரசாங்கம் நல்ல
திட்டத்தை போட்டிருக்கிறது. ஆனால் பலயிடங்களில் தாழ்த்தப்
பட்ட மக்கள் வசிக்கின்ற பகுதிகளில் சுடுகாட்டுக்கு செல்கின்ற
பாதையில் உள்ள நிலச் சொந்தக்காரர்கள் முழுமையாக ஆக்கிர
மித்துக் கொண்டு ஒரே ஒரு வரப்பை மட்டும் விட்டு இருக்
கிறார்கள். அந்த ஒததையடிப் பாதையிலே பிணத்தை
எடுத்துச்செல்கிற மோசமான நிலையைப் பார்க்கிறோம். அந்த
என்க்ரோச்மெண்டை அப்புறப்படுத்தி கடுமையான சட்டம்
போட்டு அந்த மக்களுக்குத் தேவையான சுடுகாட்டுப்
பாதையை அமைத்துக் கொடுக்க அமைச்சர் அவர்கள் கடுமை
யான நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்
கொள்கிறேன்.

கட்டப்படுகிற சமுதாயக் கூடங்கள் நகரத்திலேதான் கட்டி
இருக்கிறோம். எல்லாம் கிராமங்களிலே உள்ள மூலைமுடுக்கு
களுக்கும் செல்ல வேண்டும். நாகரீகமாகத் திருமணம் செய்து
கொள்வதற்கும் பொது நிகழ்ச்சிகள் நடத்துவதற்கும் அது
மிகவும் உதவியாக இருக்கிற காரணத்தினால் சமுதாயக் கூடங்
களை அனைத்துக் கிராமங்களுக்கும் விரிவுபடுத்த வேண்டும்.

இன்றைக்கு டி.வி. நாம் சில ஊர்களுக்குக் கொடுத்திருக்
கிறோம். ரேடியோ எல்லா ஊர்களுக்கும் கொடுத்திருக்கிறோம்.
டி.வி. கொடுத்த ஊரிலே இன்றைக்கு சண்டை வந்து கொண்
டிருக்கிறது. டி.வி.யை சாதி இந்துக்கள் வாழ்கிற பகுதியிலே
வைத்திருக்கிறோம். காலனியைச் சேர்ந்தவர்கள் டி.வி. பார்க்கச்
செல்கிறபோது டி.வி. பார்த்துவிட்டு உதை வாங்கிக் கொண்டு
வருகிறார்கள். இந்த நிலையை மாற்ற வேண்டும் என்று

காலனிக்கு டி.வி. தாருங்கள். இல்லையென்றால் பெரிய மனது வைத்து காலனிக்கும் ஊருக்கும் தனித்தனியாக டி.வி. தாருங்கள். இதனால் நம் ஊரிலே சண்டையாவது மீதமாக இருக்கும். டி.வி. கொடுக்கிற நல்ல எண்ணத்தோடு நாம் கொடுக்கிறோம். ஆனால் அங்கே டி.வி. வைத்துக் கொண்டிருக்கிறவர்கள் இந்த பிரச்சனையை உருவாக்குகிறார்கள். அதைப் போக்குவதற்கு அன்பு கூர்ந்து அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

நகரியங்களுக்கு தன்னிறைவுத் திட்டத்தை விஸ்தரிக்கிற நேரத்திலே நகரத்திலே உள்ள குறைகளைக் கணக்கிலே எடுத்துக் கொண்டு செய்யவேண்டும். இன்றைக்கு மிகவும் முக்கியமாகப் பேசிக் கொண்டிருக்கிற நிலை உள்ளாட்சித் தேர்தல். குடியரசு கட்சியைப் பொறுத்தவரைக்கும் தாழ்த்தப்பட்ட மக்களுக்கும் பெண்களுக்கும் ரிசர்வேஷன் கொடுக்காத வரையில் இந்தத் தேர்தலை நிச்சயமாக நடத்தவிடமாட்டோம் என்பதை இந்த நேரத்திலே நான் தெரிவித்துக் கொள்கிறேன். எல்லா கட்சிகளும் ரிசர்வேஷன் வேண்டுமென்று சொல்கிறார்கள். ஆனால், உதட்டளவிலேயா உள்ளத்தளவிலேயா என்பதை இன்றைக்குத் தாழ்த்தப்பட்ட மக்கள் புரிந்து கொள்ளாத நிலையில் இருக்கிறார்கள். எந்தக் கட்சியாவது சட்டம் கொண்டுவராத நிலையில் எங்கள் கட்சி சார்பாக 15 சதவீத உறுப்பினர்களுக்கும் 18 சதவீத தாழ்த்தப்பட்ட மக்களுக்கும் சட்டம் இல்லையென்றாலும் துணிவு தைரியம் எந்தக் கட்சிக்காவது.....

திரு. ரா. கிருஷ்ணன்: மாண்புமிகு உறுப்பினர், திரு. மூர்த்தி அவர்கள் பேசுகின்றபோது ரிசர்வேஷன் என்பது மற்ற கட்சிகளுக்கு உதட்டளவில் கேட்கிறார்கள் என்று சொல்வது எந்த அடிப்படையில்?

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. சி. கோபால்): பேசுவதற்கு உரிமை இருக்கிறது. மறுப்பதற்கு உங்களுக்கு உரிமை இருக்கிறது. உங்கள் கட்சியின் சார்பிலே தலைவர் பேசுகின்ற போது அதையெல்லாம் பேசலாம்.

திரு. ஜி. மூர்த்தி: மாற்றுத் தலைவர் அவர்களே, உதட்டளவிலே இருக்கிறார்கள் என்று சொல்வது யார் யாருக்கு கோபம் வருகிறதோ அந்தக் கட்சிகளைச் சாரும், எதற்காகச் சொல்கிறேன் என்றால் மிகப்பெரிய இருதுருவமானது இது. ரிசர்வேஷன் கொடுத்தால் தேர்தல் நிற்கும் என்ற நிலை இருக்கிறது. ரிசர்வேஷன் இல்லை என்றால் தேர்தல் நடக்கும் என்ற நிலை இருக்கிறது. ஆனால் ரிசர்வேஷன் வேண்டுமென்று உண்மையிலே சொல்கிறவர்கள் தேர்தலை 10 ஆண்டுகளுக்குப் பொறுத்துக்கொண்டு இருந்தவர்கள் 11 ஆண்டுக்கும் பொறுத்துக் கொண்டிருந்தவர்கள். அப்போது உங்களுடைய போராட்டமும் ... நாம் 10 ஆண்டுகளாக இல்லாமல் ரிசர்வேஷன்





கொடுக்க வேண்டுமென்று புரட்சிகரமான திட்டம் கொண்டு வந்ததற்குப் பின்னாலே நீங்கள் அந்த வார்த்தையைச் சொல்கின்ற நிலை என்று சொன்னால் நீங்கள் உதட்டளவிலே பேசுகிறீர்கள், இந்த திட்டத்தை கொண்டு வந்திருக்கின்ற இந்த அரசாங்கத்தை இந்த திட்டத்தால் முடக்க வேண்டும் என்று நீங்கள் கொண்டு வந்திருக்கிறீர்கள். இதை நிறைவேற்றாமல் தேர்தலை நடத்தாதீர்கள் என்று எந்தக் கட்சியாவது சொல்வதற்கு துணிவு இருக்கிறதா? ஆனால் தேர்தலையும் நடத்தவேண்டும், ரிசர்வேஷனுக்கும் நாங்கள் எதிர்ப்பு இல்லை என்று இரண்டு வேடத்தை இன்றைக்கு அனைத்துக் கட்சியும் நடத்திக்கொண்டு இருக்கிறது. நாங்கள் சொல்கிறோம், தேர்தல் வரவேண்டும், அதேநேரத்திலே ரிசர்வேஷன் இல்லாமல் தேர்தலைக் கொண்டு வரக்கூடாது. எத்தனை ஆண்டுகளுக்கு தாழ்த்தப்பட்ட மக்களுக்கு பிரதிநிதிகள் இல்லாமலே மாநகராட்சிகளும் நகராட்சிகளும் இருந்துகொண்டிருப்பது? இந்த மக்களுக்கு விடிவுகாலம் வருவதற்கு இந்தத் திட்டத்தை இந்த அரசாங்கம் புரட்சித் தலைவருடைய அரசு கொண்டு வந்திருக்கிறது. இதை நிறைவேற்றாத காலத்திலே தமிழக மக்கள் மத்தியிலே தாழ்த்தப்பட்ட மக்கள் நிலையை அறிந்து அந்த மக்களுடைய எண்ணங்களுக்குப் புறம்பாகச் சென்றால் அந்த மக்களிடமிருந்து தூக்கி எறியப்படுவார்கள் என்பதை நினைவுபடுத்திக்கொண்டு தாழ்த்தப்பட்ட மக்களுக்கு ரிசர்வேஷனோடு தேர்தல் நடத்தியாக வேண்டுமென்று குடியரசுக் கட்சியின் சார்பாக கேட்டுக் கொண்டு உரையை முடித்துக்கொள்கிறேன்.

திரு. என். சங்கரய்யா: மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, நான் இந்த மானியத்திலே பேச விரும்புவது ஒரே ஒரு பிரச்சினை மாத்திரம்தான். பாக்கியிருக்கிற பிரச்சினைகள் பற்றி மற்ற உறுப்பினர்கள் பேசியிருக்கிறார்கள். ஏற்கெனவே இங்கே விவாதிக்கப்பட்ட மாநகராட்சிகள், நகராட்சிகள் தேர்தல் சம்பந்தமாக பேச விரும்புகிறேன் ஏன் என்றால் பேசிய திரு. மூர்த்தி அவர்கள் குறிப்பிட்டார்கள் மற்ற கட்சிகள் உதட்டளவில் இருக்கிறது என்று.

(பிற்பகல் 1-10)

குடியரசு கட்சி என்று இந்த நாட்டிலே தோன்றுவதற்கு பல ஆண்டுகள் முன்பே செங்கோடி பொறித்து இந்திய கம்யூனிஸ்ட் கட்சி இயக்கமும், மார்க்சிஸ்ட் இயக்கமும் தாழ்த்தப்பட்ட மக்களுக்காக சாணிப்பால் குடித்து நிலப்பிரபுக்களின் கொடுமையிலிருந்தவர்களுக்கு, மிராசுதாரர்களை எதிர்த்து போராடி வெண்மணிகளையும், பல தியாகிகளையும் ஈந்தவர்கள். அந்த காலத்திலே குடியரசுக் கட்சிப் போன்ற **எங்கே போயிருந்தன என்று நான் கேட்க விரும்புகிறேன். ஒருகாலத்திலே (கூச்சல், குழப்பம்).

**மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

திரு. ஜி. மூர்த்தி: பாயின்ட் ஆப் ஆர்டர். குடியரசுக் கட்சியை** என்று சொல்கிறார். நான்கூட அதை மறுக்க தயாராக இல்லை. தாழ் த்தப்பட்ட மக்களுக்காக நீங்கள் அன்று அதை செய்தீர்கள் என்று ஒரு உதாரணத்தைக்காட்டி கம்யூனிசம் பேசுவது நியாயமல்ல. உங்களுக்கு கொள்கை இருச்கிறதா? தமிழகத்தைப்பற்றி, சமுதாய முன்னேற்றத்திற்கு கம்யூனிஸ்ட் கட்சி வைத்துக் கொண்டிருக்கிற கொள்கை என்ன என்பதைத் தான் கேட்கிறேன்.

திரு. என். சங்கரய்யா: நேற்றைய தினம் காரல் மார்க்ஸ் அவர்களுக்கு இந்த சட்ட மன்றத்தின் சார்பிலே சட்டப்பேரவைத் தலைவர் அவர்கள் செய்த புகழ் அஞ்சலியே உலகம் முழு வதிலும், இந்தியா மட்டுமல்ல, கம்யூனிஸ்ட் இயக்கம் உழைப் பாளிகளுக்காக என்ன செய்திருக்கிறது என்பதற்கு; சிறந்த மேற்கோளாக இருச்கிறது அதைவிட சிறந்த மேற்கோள் காட்ட வேண்டியதில்லை. அது மட்டுமல்ல இன்றைக்கு குடியரசுக் கட்சி என்று சொல்லிக் கொண்டு அரிசனமக்களை, மற்ற உழைப்பாளி மக்களிடமிருந்து பிரித்து அவர்களுடைய விவசாயச் சங்கங்களிலே சேரவேண்டாம்; தொழில் சங்கங் களிலே சேரவேண்டாம் என்று தனித்து அவர்களை ஒதுக்கக் கூடிய இயக்கமானது நாட்டிலே மக்களுக்குள் ஒற்றுமையை ஏற்படுத்துவதற்கு பதிலாக ஒரு பிளவை ஏற்படுத்திக் கொண் டிருக்கிறது. ஆர்.எஸ்.எஸ். ம், ஜமாத் இஸ்லாம் செய்து வருவதைப் போல இந்த குடியரசுக் கட்சி என்ற பெயரை வைத்துக்கொண்டு அரிசன மக்களை இதர மக்களுடைய இயக் கத்தில் சேராமல் தடுத்து வருகிறார்கள். அவர்கள் யாருக்காக சேவை செய்கிறார்கள் என்பதை நான் கேட்க விரும்பு கிறேன்.

திரு. ஜி. மூர்த்தி: மாற்றுத் தலைவர் அவர்களே, பாயிண்ட் ஆப் ஆர்டர். ஒரு குற்றச்சாட்டை சொல்லியிருக்கிறார்.

திரு. என். சங்கரய்யா: அவர் குற்றச்சாட்டைச் சொன்னார். அதற்கு நான் விளக்கம் அளித்தேன். அவ்வளவுதான்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. சி. கோபால்): ஒருவருக் கொருவர் இப்படி பேசிக்கொண்டு போவது சரியல்ல. உட்காருங்கள். (கூச்சல், குழப்பம்)

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

திரு என். சங்கரய்யா: அவர் கேள்வியை கேட்டார். அதற்கு நான் பதில் கொடுத்தேன். அவர் தான் முதலில் குற்றம்சாட்டி பேசினார். (குறுக்கீடு) அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் என்றைக்கு குடியரசு கட்சியிலே சேர்ந்தது என்று தெரிய வில்லை. அ.தி.மு.க தனி, குடியரசுக் கட்சி தனி என்று நான் நினைத்துக் கொண்டிருக்கிறேன். (கூச்சல், குழப்பம்).

**மாண்புமிகு மாற்றுத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: ஒவ்வொரு வார்த்தைக்கும் பதில் சொல்லிக் கொண்டிருப்பதென்றால் முடியாது.

திரு. என். சங்கரய்யா: நான் முடித்தாகிவிட்டது. இந்த பிரச்னைக்கு உள்ளே போகப்போவதில்லை. மற்ற பிரசனை களைப் பேசவிருக்கிறேன். அவர் பிரச்னையை எழுப்பியதால் நான் பதில் சொன்னேனே தவிர வேறல்ல.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. மூர்த்தி அவர்கள் உட்கார வேண்டும். திரு. சங்கரய்யா அவர்கள் முடித்த பிறகு வாய்ப்புத் தருகிறேன்.

திரு. என். சங்கரய்யா: அவர் மறுபடியும் பேசினால் அதிலே தவறு வருமானால் நான் குறுக்கிட வேண்டியிருக்கும் (கூச்சல் குழப்பம்).

மாண்புமிகு திரு. கே. இராஜாமுகமது: துணைத் தலைவர் அவர்களே, நல்ல கருத்து பரிமாற்றம் தான். அதை ஏற்றுக் கொள்ள வேண்டியதுதான். ஆனால் குடியரசுக் கட்சியை* என்று சொல்கிறபோது ஒரு கருத்து வருகிறது. நம்முடைய மரியாதைக்குரிய தலைவர் அம்பேத்கார் படம் இங்கே வைத் திருக்கிறோம் (கூச்சல், குழப்பம்).

திரு. ஜே. எஸ். இராசு : டாக்டர் அம்பேத்கார் கட்சிக்கும், இந்தக் கட்சிக்கும் சம்பந்தமே இல்லை (குறுக்கீடு).

மாண்புமிகு திரு. கே. இராஜாமுகமது : நான் என்ன பேசுகிறேன் என்று கேட்டு அதற்குப் பிறகு சொல்லட்டும். நான் பேசி முடிக்கவில்லை. ** என்று சொல்லாமல், அது ஒரு கட்சி, அவ்வளவுதான். அதிலே **. அல்லது ஆலமரக்கட்சி, அல்லது புளியமரக் கட்சி என்று எதுவும் இல்லை. கட்சி என்று இருக்கிறது. அதற்கு நாம் மரியாதை கொடுக்க வேண்டுமென்று சொல்கிறேன். *என்ற வார்த்தை கூடாது என்று அவருடைய நன்மைக்காகச் சொல்கிறேன். இங்கே *ஆலமரக் கட்சி, புளியமரக் கட்சி என்று இல்லை. மக்களுக்காக கட்சிகள் இருக்கின்றன. அதைத் தான் சொல்ல வேண்டுமென்று சொல்கிறேன்.

திரு. ஜே. எஸ். இராசு : பாயின்ட் ஆப் ஆர்டர், டெப்யூடி ஸ்பீக்கர் சார், மினிஸ்டர் பேசியதால் நானும் பேசவேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக் கிணங்க அகற்றப்பெற்றது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** பாயின்ட் ஆப்
ஆர்டர் ஒன்றும் இல்லை. எல்லோரும் உட்காருங்கள்.
திரு. சங்கரய்யா தொடர்ந்து பேசட்டும்.

**திரு. என். சங்கரய்யா :** திரு. மூர்த்தி பேசியதால் ஒரு பிரச்னை
எழுந்தது. அந்த வார்த்தையை வேண்டுமென்றால் எடுத்து
விடலாம். அமைச்சர் சொன்ன காரணத்திற்காக அல்ல.
அப்படிப்பட்ட வார்த்தை, யாரையாவது புண்படுத்துமானால்,
அது தேவையில்லை என்று கருதுகின்ற காரணத்தால், நானே,
அந்த வார்த்தையை எடுத்துவிடலாம் என்று கூறுகின்றேன்.
அமைச்சர் சொன்ன காரணத்திற்காக அல்ல, நானே
உணருகிறேன். தேவையில்லை. ஏனென்றால், விஷயம் என்ன
வென்றால், சர்ச்சை, அதிலே வந்த கொள்கை, இதுதான்,

இதிலே உள்ள பிரச்னை என்னவென்றால், பஞ்சாயத்து
யூனியன் தேர்தலிலும் பஞ்சாயத்துத் தேர்தலிலும், பெண்
களுக்கும், அரிசனங்களுக்கும் ரிசர்வேஷன் கொடுக்க வேண்டு
மென்று மார்க்சிய கம்யூனிஸ்ட் கட்சியும் மற்றைய ஜனநாயகக்
கட்சிகளும் கடைசி வரை வற்புறுத்தினார்கள். இன்றைக்கு நான்
தெரிவிக்கிறேன், ஹைகோர்ட்டிலே போய் வழக்கு போட்டது,
மார்க்சிய கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்தவர்களா? அல்ல என்று
அமைச்சர் அவர்களே ஒப்புக் கொண்டிருக்கிறார். அப்படியானால்
யார்? எந்த, எந்தக்கட்சியிலே உள்ளவர்கள் அந்த வழக்குகளைப்
போட்டார்கள் என்பது உலகத்திற்குத் தெரியும். ஆகவே, ஏதோ
ஒரு வெஸ்டட் இன்ட்டரஸட் இருக்கிறது. அமைச்சர் அவர்கள்
கூட நேற்று சொன்னார்கள். வெஸ்டட் இன்ட்டரஸ்ட் இருக்கிறது
என்று சொன்னார்கள். சில பணக்காரர்கள் அதை விரும்ப
வில்லை அவர்கள் விரும்பமாட்டார்கள்.

சுப்ரீம் கோர்ட்டிலே கூட, தேர்தலை நடத்தக்கூடாது என்று
ஸ்டே விதிக்கவில்லையென்று நான் அறிகிறேன். இந்தத் தேர்தலை
நடத்தக்கூடாது என்று அவர்கள் ஸ்டே விதிக்கவில்லை. அப்படி
யென்றால், இந்த அரசாங்கம் ஏற்கனவே நாம் நிறைவேற்றிய
சட்டத்தின் அடிப்படையிலே, அதற்கான நடவடிக்கைகளை
எடுக்க வேண்டியதுதானே அவர்களுடைய கடமை. அவ்வாறு
நடவடிக்கை எடுத்தால் அதன் பேரிலே போவார்கள் என்று
நாமாக யூகித்துக் கொண்டு இன்றைக்கு நடவடிக்கை எடுக்காமல்
இருப்பது சரியா? இங்கு நடந்த விவாதத்திற்குப் பிறகு நான்
மறுபடியும் விசாரித்துப் பார்த்ததில், சுப்ரீம் கோர்ட்டிலே ஸ்டே
கொடுக்கப்படவில்லை. ஹைகோர்ட்டிலே நமக்குச் சாதகமாக,
இந்தச் சட்டமன்றத்திலே நிறைவேற்றிய சட்டத்திற்கு ஆதரவாக
தீர்ப்பு கிடைத்துவிட்டது. அதை எதிர்த்து சிலபோ சுப்ரீம்



கோர்ட்டுக்குப் போயிருக்கிறார்கள். அவர்கள் அங்கே ஸ்டே
கேட்டபொழுது, சுப்ரீம் கோர்ட் என்ன கூறியிருக்கிறது?
அந்தக் கட்டம் வரவில்லை, அந்தக் கட்டம் வரும்போது
உங்களுடைய ஆலோசகர்கள் ஆலோசனை கூறினால் பிறகு
வாருங்கள், உங்களை நாங்கள் தடுக்க மாட்டோம் என்று
சொல்லியிருக்கிறது. பொதுவாக மேற்கு வங்காளத்திலே கூட
இந்தத் தேர்தல் பிரச்னை வந்தபொழுது, அதற்கு ஹைகோர்ட்
ஒரு தடை விதித்துள்ளது. அந்த அரசாங்கம் சென்று வாதாடிய
பொழுது, அந்த ஸ்டே உத்தரவை ரத்து செய்து, தேர்தலைத்
தடை செய்யக்கூடாது என்று உத்தரவிட்டார்கள். ஆகவே,
இன்றைக்கு நான் தெரிவிக்கிறேன், இன்றைக்கும் கூட அந்த
ரிசர்வேஷன் சட்டத்தின் அடிப்படையிலே, பஞ்சாயத்து
யூனியனுக்கும், பஞ்சாயத்துக்களுக்கும் தேர்தல் நடத்துவதற்கு,
நடவடிக்கை எடுப்பதற்கு, அரசாங்கம் தவறி இருக்கிறதே தவிர,
சுப்ரீம் கோர்ட் ஸ்டே இல்லை. இது ஒரு விஷயம்.

அடுத்தாற்போல், இந்த ரிசர்வேஷன் சட்டத்தின்
அடிப்படையிலே மாநகராட்சிகளுக்கும் நகராட்சிகளுக்கும்
செய்திருக்க முடியும் என்றால் அமுதம்போல் ஏற்றிருப்போம்.
ஆனால் பிரச்னை என்ன? இங்கே இருக்கிற அத்தனை சட்டமன்ற
உறுப்பினர்களும் நகரங்களிலே உள்ள உறுப்பினர்களும், எங்கும்
பிரதிநிதிகள் இல்லாத காரணத்தால், மக்கள் அனைவரும் சட்ட
மன்ற உறுப்பினர்களைத்தான் சின்னப் பிரச்னையிலேயிருந்து
பெரிய பிரச்னை வரையில் நாடுகிறார்கள். யார் பதில்
சொல்வது? எத்தனை ஆண்டுக்காலம் இப்படி? இன்றைக்கு
அண்ணா திராவிட முன்னேற்றக்கழக உறுப்பினர்களும், திராவிட
முன்னேற்றக் கழக உறுப்பினர்களும் எல்லோரும் பதில் சொல்ல
வேண்டியிருக்கிறது என்று அப்படி பார்க்க வேண்டுமென்று
கேட்டுக்கொள்கிறேன். யாரிடத்திலே அவர்கள் கேட்கிறார்கள்?
தண்ணீர் இல்லை, ரோடு வசதி இல்லை, லைட் போடவில்லை;
எத்தனை நாளைக்கு இந்தப் பொறுப்பை இந்த மாமன்ற
உறுப்பினர்கள் ஏற்றுக்கொள்வார்கள்? அமைச்சர் அவர்கள்
சொன்னார்கள், என்னிடத்திலே வந்து கேட்கிறார்கள், என்று.
அப்படித்தான் வரும். ஆகவே, சீக்கிரத்திலே இதற்கு ஒரு
ஏற்பாடு செய்தால், நல்லதோ, கெட்டதோ அவர்கள் ஏற்றுக்
கொள்வார்கள். ஒரு உறுப்பினர் இங்கே பேசும்போது,
இன்றைக்குத் தேர்தல் வந்தாலும், அனைத்திந்திய அண்ணா
திராவிட முன்னேற்றக் கழகம்தான் ஜெயிக்கும் என்று சொன்னார்,
தாராளமாக ஜெயிக்கட்டும், வரவேற்கிறோம். மக்கள் யாரை
வேண்டுமானாலும் தேர்ந்தெடுத்து அந்த மன்றங்களை நடத்து
வதற்கு முடிவு செய்தால், அதுதானே இன்றைக்கு சரியான
தீர்ப்பு. அதைப்பற்றி பிரச்னை இல்லை. நீங்கள் வெற்றி
பெறுவது உறுதி என்று இருக்கும்போது உடனடியாகத்
தேர்தலை நடத்துவதற்குத்தான் நீங்கள் ஆர்வம் காட்ட
வேண்டும். அதைத் தள்ளி வைப்பதற்கு எந்தவித முகாந்திரமும்
இல்லை என்பதைத்தான் நான் இந்த நேரத்திலே குறிப்பிட
விரும்புகிறேன்.

மற்றொன்று, எனக்கிருக்கின்ற வருத்தம் என்னவென்றால், அமைச்சர் அவர்கள் ரிசர்வேஷன் சம்பந்தமாக, அரசு முடிவு செய்து விட்டுத்தான் தேர்தல் நடத்துவோம் என்று சொல்வாரானால், சர்வக்கட்சிக் கூட்டத்தை கூட்டியிருக்க வேண்டியது இல்லை. அங்கே வந்தபொழுது அவர்கள் சொன்னார்கள், நகராட்சி, மாநகராட்சிகளுக்குத் தேர்தல் நடத்துவதற்காகக் கூட்டம் என்று. நாம் எல்லோரும் ஒத்துக்கொண்டோம். பஞ்சாயத்து யூனியனைப்பற்றி நாமே சட்டம் இயற்றியிருக்கிறோம். நாமே இயற்றிய சட்டத்தை நாமே பாதுகாக்காமல் கைவிடுவதா? எக்காரணத்தைக் கொண்டும் கைவிடக்கூடாது, என்னதான் ஆனாலும். இதை சுப்ரீம் கோர்ட்டிலே விரிவு படுத்தவேண்டும். ஆனால், அது முடிகிற வரைக்கும் அதைப் பற்றி பேசவேண்டாம். ஆனால், இதைப் பொறுத்தவரைக்கும் நாம் ஒரு சட்டத்தை நிறைவேற்றவில்லை. நகராட்சிகளுக்கும் மாநகராட்சிகளுக்கும் ஒரு சட்டத்தை நாம் நிறைவேற்றாத காரணத்தாலே, அது ஓப்பனாக இருக்கிறது.

(பிற்பகல் 1-20)

அப்படியிருக்கும்பொழுது ஏற்கனவே முனிசிபாலிட்டி சட்டம் 73 படி 25 சதவீதம் பெண்களுக்கும், அரிசனங்களுக்கும், இன்றைய சட்டமே கூறுகிறது, சென்னை கார்ப்பரேஷனில் 15 அரிசனங்களும். 15 பெண்களும் தேர்ந்தெடுக்கப்படாவிட்டால் நியமிக்க வேண்டுமென்று சொல்கிறது இப்படி உள்ள வாய்ப்பைப் பயன்படுத்திக்கொண்டு தற்காலிக நடவடிக்கையாக எடுத்து இவைகளை நடத்தினால் ஒரு கோடி பேர்களுக்குப் பிரதிநிதித்துவம் வந்து விடுகிறது.

சுப்ரீம் கோர்ட்டிலே எப்பொழுது ஜெயிக்கிறோமோ அப்பொழுது அதற்கான சட்டத்தை நகராட்சிகளுக்குக் கொண்டு வருவதற்கு, வார்டுகளைப் பிரிப்பதற்கு ஆகிய வேலைகளைச் செய்து அடுத்து வரும் காலத்தில் அதையும் செய்யலாம்.

சர்வ கட்சிக் கூட்டத்தில் மிகப் பெரும்பான்மையான கட்சித் தலைவர்கள், நான்கு மாதக் கெடுவை ஏற்றுக்கொண்டு, மாநகராட்சிகளுக்கும், நகராட்சிகளுக்கும் முடித்து விடுங்கள் என்ற பொதுக் கருத்து தான் வந்திருக்கிறது. ஆனால் அந்தப் பொதுக் கருத்து நீங்கள் வெளியிட்ட அறிக்கையில் இல்லை. ரிசர்வேஷனை இப்போது இங்கே கொண்டுவர வேண்டுமென்றால் பல சிக்கல்கள் வரும். அப்படிப்பட்ட சிக்கல்கள் இல்லாமல் கொண்டு வாருங்கள் 4 மாத அவகாசத்தில் என்கின்றபொழுது, ரிசர்வேஷனைப்பற்றி அரசாங்கம் சிந்திக்கிறது என்று சொன்னால் மறுபடியும் சிக்கல் ஏற்பட்டு, மறுபடியும் ஒத்திவைக்கப்படுமோ என்ற நிலைதான் இருக்கிறது. ஆகவே, கம்யூனிஸ்ட் கட்சியைப் [illegible] சாதிமதங்களுக்கு அப்பாற்பட்டது. ஒடுக்கப்





பட்ட மக்களுக்குப் பாதுகாப்பு கொடுப்பதற்காக தங்களுடைய உயிரையே தியாகம் செய்த வெண்மணி நிகழ்ச்சியைக் கொஞ்சம் ஞாபகப்படுத்திப் பாருங்கள். நிலப்பிரபுக்களின் கொடுமையினால் எரிக்கப்பட்டவர்களை எண்ணிப்பாருங்கள். தஞ்சை மாவட்டத்தில் நிலப்பிரபுக்களின் தாக்குதல்களின் காரணமாக உயிரிழந்த தியாகிகளை ஞாபகப்படுத்திப் பாருங்கள்.

அவர்களுக்கு இட ஒதுக்கீடு, பெண்களுக்கு ஒதுக்கீடு ஆகியவை உறுதிப்படுத்தப்பட்டிருக்கிறது. ஆனால் அதற்கு சுப்ரீம் கோர்ட்டிலே ஸ்டே கட்டால் அவர்கள் யார் என்பது நமக்குத் தெரிய வரும். எனவே, இன்றைக்கு ஸ்கீமை அமைக்கச் செய்து நடத்துவதற்கு ஏற்பாடு செய்யுங்கள். துணிச்சலாக யார் சுப்ரீம் கோர்ட்டுக்குச் சென்று தடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கிறார்கள் என்பதைப் பார்த்து விடுவோம். 4 கோடி மக்களின் நலன் பெரிதா அல்லது ஒரு சில நபர்களின் நலன் பெரிதா என்பதைப் பார்த்து விடலாம். அந்த வகையில் நீங்கள் தேர்தலை நடத்துவதற்கு முயற்சிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அப்படி செய்ய முடிந்தால் ஏப்ரல் மாதம் 4-ந் தேதிக்குள் முடியும் என்று சொல்கிறீர்களே, அப்படி முடிந்தால் அதோடு சேர்த்து திருத்தத்தை ஒரு நிமிஷத்திலே நிறைவேற்றி விட்டு, 4 மாத காலத்தில் இந்தத் தேர்தல் நகராட்சிகளுக்கும், மாநகராட்சிகளுக்கும் நடத்துவதற்கு முன் வந்தால் நீங்கள் என்ன சொன்னாலும் கேட்பதற்குத் தயாராக இருக்கிறோம் என்று கூறி என்னுடைய பேச்சை முடிக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : ** என்று சொல்லப்பட்டது நீக்கப்படுகிறது.

திரு. ஜி. மூர்த்தி : மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவர் அவர்களே, மாண்புமிகு சங்கரய்யா அவர்கள் பேசும் பொழுது விவசாயத் தொழிற்சங்கங்களில் தாழ்த்தப்பட்ட மக்களைச் சேர விடாமல் தனியாகப் பிரித்து தொழிற்சங்கங்களைப் பலவீனப் படுத்துவதாகச் சொன்னார்கள். அது உண்மைக்கு மாறான தகவல். அதை நீக்க வேண்டும். மேலும்....

திரு. என். சங்கரய்யா : அவர் எவ்வளவோ சொல்லியிருக்கிறார்....

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அவரவர்கள் கருத்தைச் சொல்லியிருக்கிறார்கள். இரண்டு பேர்களுடைய கருத்தும் இருக்கட்டும்.

திரு. அ. செல்வராசன் : மாண்புமிகு பேரவைத் துணைத்

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.

தலைவரவர்களே, சமுதாய நல வளர்ச்சித் திட்டங்களும், நகராட்சி நிர்வாகமும் மற்றும் சாலைகளும் பாலங்களும் சம்பந்தப்பட்ட மானியக் கோரிக்கைகளின் மீது திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக என்னுடைக் கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். இந்த மானியக் கோரிக்கையைப் பொறுத்த மட்டில், ஒதுக்கிய தொகையை விட அதிகமாகக் கேட்டுப் பெறுவதுதான் இந்த மன்றத்தினுடைய கடமையாக இருந்து வந்திருக்கிறது. ஆனால் இன்றையதினம் இருக்கின்ற நிலைமை களை எண்ணிப் பார்க்கும் பொழுது ஒதுக்கிய தொகையை கூட தேவை தானா என்று கேட்கின்ற அளவிற்கு நிலைமைகள் மோசமாக ஆகிக்கொண்டிருந்கின்றன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்,

மக்களுக்குச் சேவை செய்வதற்கும் உதவுவதற்கும் இருகக வேண்டிய உள்ளாட்சித் துறை நிறுவனங்கள் உருக்குலைந்து ஊழல்கள் மலிந்து, நிர்வாகச் சீர்கேடுகள் மலிந்து இருக்கின்றன என்பதைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அரசாங்கத்தினுடைய அசட்டையும், அலட்சியப் போக்கும், செயலற்ற தன்மையும்தான் இதற்குக் காரணம்.

சென்னை மாநகராட்சி மன்றத்தைப் பொறுத்த வரையில் இந்த அரசு மாற்றாந்தாய் மனப்பான்மையோடு நடந்து கொள்கிறது என்பதை நான் குற்றச்சாட்டாகக் கூற விரும்பு கிறேன். சென்னையைச் சுற்றிலும் உள்ள மாவட்டங்களைப் பொறுத்தவரையில் பல மாவட்டங்களில் வறட்சியின் கொடுமை களுககு ஆளாகியிருப்பதால் சென்னையை நோக்கி மக்கள் அலை அலையாக வந்து கொண்டிருக்கிறார்கள்.

அசாமில் சொல்வதைப் போல் சென்னை நகரை விட்டு அவர்களை வெளியேற்ற வேண்டும் என்று நாங்கள் சொல்ல வில்லை. சென்னை நகரிலே இருக்கிற அத்தனை பேர்களுக்கும் வசதி செய்து கொடுக்க வேண்டியது இந்த அரசின் கடமையாகும். 1990 ம் ஆண்டு சென்னை நகரின் மொத்த மக்கள்தொகை ஒரு கோடியை எட்டிவிடும் என்று சொல்லப்படுகிறது. இப்போதே கூட அன்றாடம் வந்து போகிறவர்களையும் சேர்த்துப் பார்த்தால் ப்ளோட்டிங் பாப்புலேஷன் என்று சொல்பவர்களையும் சேர்த்துக் கணக்கிட்டுப் பார்த்தால் மொத்தம் நாற்பது ஐம்பது இலட்சம் மக்கள் சென்னையில் வசித்துக்கொண்டிருக்கிறார்கள். அவர்களுக் கெல்லாம் இங்கே வசதிகள் செய்யப்பட்டிருக்கிறதா என்று பார்த்தால் இல்லை. குடிநீர் சுகாதார வசதிகள் சரியாக திட்டம் இடப்படவில்லை. கிராமங்களிலிருந்து சென்னை நகருக்கு வந்து கொண்டிருப்பவர்கள் தங்குவதற்கு வசதிகள் உள்ள இடங்கள் இல்லாதிருப்பதன் காரணத்தால் ரோடுகளின் , நடைப்பாதைகளின்



பங்குகளிலேகூட, எங்கெல்லாம் வசதி என்று எண்ணு கிறார்களோ அங்கெல்லாம் இன்னும், சொல்லப்போனால் நான்கு ஆணியும் ஒரு கோணியும் இருந்தால் அவர்கள் தங்குமிடத்தை அமைத்துக் கொள்கிறார்கள். இதையெல்லாம் அமைச்சர் அவர்கள் பார்த்ததில்லை என்று நினைக்கிறேன். அமைச்சர் அவர்கள் என்னோடு ஒரு நாளைக்கு வந்து இவற்றைப் பார்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன் (குறுக்கீடு) பார்த்திருக்கிறேன் என்று அவர்கள் கூறுகிறார்கள். வசதியற்ற அந்த இடங்களில் தங்குபவர்கள் குழந்தைகள் பெறுவது வரை சகலமும் அங்கேயே வைத்துக் கொள்கிறார்கள்.

சென்னை நகரிலே மக்கள் தொகையைக் கணக்கெடுக்கும்போது கட்டட வேலை செய்பவர்கள், ரிக்ஷா தொழிலாளர்கள், துறைமுகத் தொழிலாளர்கள் இவர்களையெல்லாம் சேர்த்திருக் கிறார்களா என்றால், இல்லை. அந்தக் கணக்குகளையெல்லாம் எடுத்துப்பார்த்தால் நிச்சயம் சென்னை நகர மக்கள் தொகை எழுபது இலட்சம் இருக்கும். 'உழைப்பாளர் உலகம்' என்ற பத்திரிகயில் இத்தகைய தொழில் செய்பவர்கள் பற்றிய விவரங்களையெல்லாம் தெரிவித்திருக்கிறார்கள். முறையாக இவைகளையெல்லாம் அரசு கணக்கிலெடுத்துக் கொள்ள வேண்டும். இவர்களுக்கெல்லாம் உரிய சுகாதார, தண்ணீர் வசதிகள் செய்து தரப்படவேண்டும். இந்த அடிப்படைத் தேவைகள் கூட இந்த அரசு செய்யவில்லை. இவைகளை அரசு செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். மத்திய அரசின் ஆறாவது ஐந்தாணடுத் திட்டத்தில் உள்ளாட்சி மன்றங்கள் உதவியோடு இத்தகைய திட்டங்களை மாநில அரசு செயலாற்ற வேண்டுமென்று சொல்லப்பட்டுள்ளது.

உள்ளாட்சி மன்றங்கள் மக்கள் பிரதிநிதிகளிடம் ஒப்படைக்கப பட வேண்டும். இங்கே பேசிய மாண்புமிகு உறுப்பினர் திரு. சங்கரய்யா அவர்கள் கூட தேர்தலைப் பற்றியெல்லாம் மிக விளக்கமாகக் கூறியுள்ளார்கள். வழக்கு மன்றத்திலே இருக்கிற தேர்தல்களை நாம் பின்னால் சந்திப்போம். இன்று சென்னை மாநகராட்சி தேர்தலை உடனடியாக நடத்துவதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று சொன்னார்கள். மூன்று நாட்களுக்கு முன்னால் ஒரு பத்திரிகையில் பார்த்தேன். 18 வயது அடைந்தவர் களுக்கு வாக்குரிமை அளிக்கப்படும் என்று. ஆனால் இங்கே ஒரு குறிப்பு தரப்பட்டிருக்கிறது. அதைப்பார்க்கிறபோது வாக்குரிமை வயது 21 என்றிருக்கிறது. அமைச்சர் அவர்கள் பதில் கூறும் போது இதில் எது சரி என்று சொல்லவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். மத்திய அரசும் இதற்கானஅறிவுரைகளை மாநில அரசுக்கு—உடனடியாக தேர்தல்களை நடத்தவேண்டும் என்று சொல்லியிருக்கிறார்கள். மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் அசோக் மேத்தா கமிட்டியில் உள்ளாட்சி மன்றங்கள் தேர்தல்களை உடனடியாக நடத்தவேண்டியது அவசியம் என்று கூறியிருக் கிறார்கள். சென்னை நகரத்தைப் பொறுத்தமட்டில், சட்ட

நாதன் கமிட்டி அறிக்கையில் கூட இதுபற்றி விரிவாகச் சொல்லப் பட்டிருக்கிறது. அந்தக் குழு ஆலோசனையின் மீது அரசு என்ன செய்துள்ளது என்று அறிய விரும்புகிறேன். அந்த ஆலோசனைப் படி நடந்திருந்தால் இந்நேரம் தேர்தல்கள் நடந்து முடிந்திருகக வேண்டும். சிங்காரச் சென்னை என்பது இப்போது சீர்கெட்ட சென்னையாக இருக்கிறது. சென்னை நகர வாழ்க்கை நரக வாழ்க்கையாக மாறியிருக்கிறது. சென்னை நகரைச் சுற்றிப் பார்த்துள்ளதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அவர்களை என் தொகுதியில் உள்ள லோன்ஸ்கொயர் என்ற பகுதிக்கு,—கொத்தவால் சாவடிக்கு அருகில் உள்ள பகுதி—வந்து பார்க்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். முன்னாள் குடியரசுத் தலைவர் திரு. கிரி அவர்கள் கூட சென்னை நகரம் பற்றி மனம்நொந்து சொல்லியிருக்கிறார்கள். சென்னையை சீராக வைத்திருக்க வேண்டும் என்று சொல்லியிருக்கிறார்கள்.

(பிற்பகல் 1–30)

நீங்கள் முன்னோடியாக சென்னைக்கு என்று ஒரு நல்ல திட்டத்தை கொண்டுவந்திருக்க வேண்டும். நீதிக்கட்சித் தலைவர்கள் எல்லாம் இருந்து நிர்வாகம் செய்த சென்னைக்கு இப்படிப்பட்ட ஒரு நிலை வரலாமா என்று நான் கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். சென்னை மாநகராட்சி தேர்தலை நடத்துவதற்கு இந்த அரசுக்கு அக்கறையில்லை. இதற்கு மாறாக சென்னையினுடைய தலைநகரை திருச்சிக்குக் கொண்டுபோவோம் என்று முதல் அமைச்சர் அவர்கள் சொல் கிறார்கள். தங்கள் பக்கத்திலே அமர்ந்திருக்கக் கூடிய ராகவானந்தம் அவர்கள் சவால் விட்டேச் சொல்கிறார்கள். கேட்டால் நான் பாக்சர் என்று சொல்கிறார்கள். பாக்சர் நீயும் பாக்சர், சண்டைக்கு வருகிறாயா என்று சொல் கிறார்கள். அவர்களைவிட அதிகமான வயதானவன் என்ற காரணத்தாலே நான் அவர்களோடு குஸ்தி செய்வதற்கு தயாராக இல்லை என்பதை நான் இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள் கிறேன். சென்னை மாநகராட்சிக்குக் குடிநீர்தேவையைநிறைவேற்று வதற்கு இதில் வந்த அரசுக்கு கவலையில்லை. கேட்டால் 2 நாளைக்கு ஒரு முறை தண்ணீர் தருவதாக, டாங்கிலே தண்ணீர் தருவதாக அமைச்சர் அவர்கள் சொல்கிறார்கள். நான் அமைச்சர் இராகவானந்தம் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். நீங்கள் 2 நாளைக்கு ஒரு முறை தண்ணீர் தருகிறீர்கள். ஆனால் ஏழை எளியவர்கள், குடிசைகளிலே வாழ்கிறவர்கள், பிளாட் பாரத்திலே வாழ்கின்றவர்கள் எப்படி அந்தத் தண்ணீரை தேக்கி வைத்துக்கொள்வார்கள். நீங்கள் எல்லாம் அமைச்சர்களாக இருக்கிறீர்கள். வசதியாக இருக்கிறீர்கள். அண்டா குண்டா எல்லாம் வைத்திருக்கிறீர்கள். அவைகளிலே எல்லாம் நீங்கள் நீரை நிரப்பி வைத்துக்கொள்ளலாம். ஆனால் சாதாரண ஏழையைப்பற்றி அமைச்சர் அவர்கள் சிந்தித்துப்பார்க்கவேண்டும் கேட்டால் 2 நாளைக்கு ஒரு முறை தண்ணீர் டாங்கியில் வருகிறது என்று சொல்வார்கள். சரி அப்படி டாங்கியிலேயாவது ஒழுங்காக வருகிறதா என்றால் அதுவும் இல்லை. அப்படியே வந்தாலும்



ஆளுங்கட்சியிலே உள்ளவர்கள் அங்கே அதை விலை பேசு கிறார்கள். நான் பகிரங்கமாகவே குற்றம் சாட்டுகிறேன். டாங்கியிலே தண்ணீர் வந்தல் முதலில் அங்கே இருக்கும் டீ கடைக்குக் கொடு, சிறிய ஓட்டலுக்குக் கொடு என்று அங்கே இருக்கின்ற ஆளும் கட்சிக்காரர்கள் சொல்கிறார்கள். பிடி, 5,6 பக்கெட் தண்ணீர், கொண்டா. 10, 15 ரூபாய் என்று சொல்லக் கூடிய நிலைமை இருக்கிறது. இப்படிப்பட்ட நிலைமை என்னுடைய தொகுதியிலே இருக்கின்றது. என்னுடைய தொகுதியிலே வைத்துள்ள டாங்கியிலே தண்ணீர் ஒழுங்காக வருகிறதா என்றால், இல்லை. நான் மேனேஜிங் டைரக்டர் அவர்களைப் பார்த்துக் கேட்டேன். என்னுடைய ஏரியா இன்ஜினியர் அச்சுதன் பிள்ளை என்று ஒருவர் இருக்கிறார்; அவரிடம் நேரிடை யாகவேச் சந்தித்துச் சொல்லியிருக்கிறேன். தொலைபேசி மூலமாகவும் சொல்லியிருக்கிறேன். அப்படி சொல்கின்றபோது அவர்கள் சொல்கிறார்கள், நாங்கள் இப்போதுதான் டாங்கிக்கு ஆர்டர் கொடுத்திருக்கிறோம் என்று. கேட்டால் நாங்கள் இரண்டு நாளைக்கு ஒரு தடவைதான் தண்ணீர் கொடுக்கிறோமே என்று சொல்கிறார்கள். என்னுடைய வட்டாரத்தில் இருக்கின்ற ஜே.இ-க்கள் எல்லாம் எவ்வளவு டாங்க் மொத்தம் தேவை என்று குறிப்பு தந்திருக்கிறார்கள். ஒரு வட்டாரத்திற்கு 40,50 தேவைப் படுகின்றன. ஒரு வட்டாரத்தை எடுத்துக்கொண்டால், ஒரு வீதிக்கு 2 டாங்க் என்று வைத்துக்கொண்டாலும் கூட, கிட்டத் தட்ட, 20 வீதிகள் இருக்கின்றன ஒரு வட்டத்திலே. அப்படிப் பார்க்கின்றபோது, ஒரு வட்டாரத்திற்கு 40 டாங்குகளாவது தேவைப்படும். ஆனால் இப்போது ஒரு வீதிக்கு ஒரு டாங்க்தான் இருக்கிறது. அதுவும் சில வீதிகளில் கிடையாது. எங்கள் பகுதியிலே சரியானபடி தண்ணீர் கொடுக்கவில்லையே என்று கேட்டால், நாங்கள் சென்னை பூராவுக்கும் தண்ணீர் கொடுக்க வேண்டும் என்று அவர்கள் சொல்கிறார்கள். இப்படிப்பட்ட நிலைமைகளை அமைச்சர் அவர்கள் கவனிக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து நான் பகிரங்கமாக ஒரு குற்றம் சாட்டுகிறேன். இந்த வீராணம் திட்டத்தை நிறைவேற்றியிருந்தால், இந்தத் தொல்லைகள் எல்லாம் வந்திருக்காது. இந்தத் திட்டத்தை நிறைவேற்றியிருந்தால் சென்னையைப் பொறுத்தமட்டில், நிச்சயமாக 20 ஆண்டுகளுக்கு இந்த தண்ணீர் பஞ்சம் வந்திருக்காது. இதை நான் சொல்லவில்லை, டெல்லியிலே இருந்து வந்த நிபுணர் குழு சொல்லியிருக்கிறது, வீராணம் திட்டம் பீசிபிலிட்டியான திட்டம் என்று, இந்தத் திட்டத்தை நிறைவேற்றாமல் இருப்பதற்குக் காரணமே, இந்தத் திட்டத்தை நிறைவேற்றிவிட்டால் எங்கள் கட்சித்தலைவர், டாக்டர் கலைஞர் அவர்களுக்கு ஒரு சிறப்பு வந்துவிடும், திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு ஒரு பெரிய புகழ் வந்துவிடும் என்று எண்ணிவிட்டீர் களே தவிர வேறு அல்ல இப்போதுகூட எல்லாக்கட்சித் தலைவர் களும் சொல்கிறார்கள்; இப்போதுகூட அதைச் செய்யலாம் என்று

ஆனால் நீங்கள் கிருஷ்ணா, காவேரி என்று சொல்லிக்கொண்டிருக்கிறீர்கள். அந்த திட்டங்கள் எல்லாம் வந்து நிறைவேற்றுவதற்கு குறைந்தது 15, 20 வருடங்கள் ஆகும். ஆனால் வீராணம் திட்டம் அப்படி இல்லை. ஆகவே அரசு இதையெல்லாம் கூர்ந்து கவனிக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்

அடுத்துத் தேர்தலைப் பொறுத்த வரையில் (குறுக்கீடு). மாநகராட்சிகளுக்கு தேர்தல் நடத்தப் போகிறோம் என்று சொல்கிறார்கள். நான் கேட்கிறேன். நீங்கள் மாற்றாந்தாய் மனப்பான்மையோடு நடக்கிறீர்கள் என்பதற்கு ஒன்று சொல்கிறேன். மதுரையிலே எல்லாக் காரியங்களையும் செய்கிறீர்கள். பணத்தை ஏராளமாக செலவு செய்கிறீர்கள் ஆனால் சென்னையைப் பற்றி நீங்கள் சிந்தித்தது உண்டா.

கடைசியாக என்னுடைய தொகுதியைப்பற்றி ஒன்றிரண்டு கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். என்னுடைய தொகுதி என்று சொல்லும்போது அதுவும் சென்னையிலேதான் இருக்கிறது. அங்கே வீதிகள் பராமரிப்பு சரியாக இல்லை. சாக்கடை வசதி சரியாக இல்லை; தெரு விளக்குகள் சரியாக இல்லை. இங்கே மாண்புமிகு மின்சாரத்துறை அமைச்சரவர்கள் இருக்கிறார்கள், அவர்களுடைய கவனத்திற்கும் ஒன்றைக் கொண்டு வருகிறேன். நாங்கள் இந்த மன்றத்தில் பேசும்போதெல்லாம் சொல்லி வருகிறோம். பேசின்பிரிட்ஜ் அனல் மின்சார நிலையத்திலிருந்து புகை வருகிறது. அதனால் சுற்றுப்புற சூழ்நிலை கெடுகிறது. அதோடு கரித்தூளும் கலந்து வருகிறது பக்கத்திலுள்ளவர்களுடைய சுகாதாரம் அதனால் கெடுகிறது. குறிப்பாக வடசென்னை மக்கள் அதனால் மிகவும் அவதிப்படுகிறார்கள். அங்கே துறைமுகம் இருக்கிறது; ஸ்டான்லி மருத்துவமனை இருக்கிறது. வீட்டு சமையல் அறையில் கூட அந்த கரிபடிந்து, சமையல் நன்றாகச் செய்யமுடியவில்லை.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : சமையல் அறையில் சமையல் செய்த கறிதான் இருக்கும். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அந்தக் கறியை குறிப்பிடுகிறார்களா அல்லது வேறு கறியா?

திரு. அ. செல்வராசன் : அன்றாடம் சமைத்துச் சாப்பிடும் கறி அல்ல நான் குறிப்பிடுவது. உங்கள் பேசின்பிரிட்ஜ் கரித்தூளைத் தான் சொல்கிறேன்.

என்னுடைய தொகுதியைப் பொறுத்தமட்டில் எந்தக் காரியமும் சரியாக நடைபெறவில்லை. சரியான ரோடு கிடையாது. ஆனால் திடீரென்று அமைச்சர் யாராவது வந்தால் ஏதோ செய்கிறார்கள். ஒரு நாள் முதலமைச்சர் மண்ணடிக்கு வந்தார். உடனே அந்தப்பகுதி ரோடுகள் எல்லாம் ரிப்பேர் பார்க்கப்பட்டு தெருக்கள்



சுத்தப்படுத்தப்பட்டன. இப்படி மாற்றாந்தாய் மனப்பான்மையோடு இருக்கக்கூடாது. தேவையான இடத்திற்கு தேவையான வேலைகளைச் செய்ய வேண்டும்.

தேர்தல் நடத்துவதைப்பற்றிச் சொன்னார்கள். அதற்கு ஒரு கூட்டத்தைக் கூட்டினார்கள். எல்லோரும் சென்றிருந்தோம். தேர்தலைப்பற்றி எல்லோரும் கேட்டார்கள். ஆனால் ஒழுங்காக முடிவு செய்யவில்லை. ஒருவேளை இன்றைக்கு பதில் உரையில் அமைச்சரவர்கள் சொல்வார்கள் என்று நினைக்கிறேன்.

தண்ணீர் பிரச்சினையை எடுத்துக்கொண்டால் இன்றைக்கு சென்னை மாநகரில் எங்குப் பார்த்தாலும் அடிதடிதான் நடக்கிறது. நான் நேற்றுக் கூட போலீஸ் கமிஷனர் ஸ்ரீபால் அவர்களோடு பேசினேன். ஏனென்றால் போலீஸ் காவல் போட வேண்டியிருக்கிறது. எப்போது தண்ணீர் வரும் என்று சொல்ல முடியாது. இரவு 12.00 மணிக்கு, ஒரு மணிக்கு தண்ணீர் வருகிறது. ஆகவே, தண்ணீர் பிடிக்கச் செல்கிற தாய்மார்களுக்கு பாதுகாப்பு கொடுக்க வேண்டியிருக்கிறது. இந்தப் பிரச்சனைகளுக்கு எல்லாம் தீர்வு காண உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று சொல்லி, பேச வாய்ப்பளித்தமைக்கு நன்றி தெரிவித்து, முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

## 7. அறிக்கை அளித்தல்.

### கரும்பின் விலைக் குறைவை ஈடுசெய்வது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** அடுத்து மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சரவர்கள் 106-வது விதியின்கீழ் பேரவைக்கு ஓர் அறிக்கை அளிப்பார்கள்.

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, கரும்பு விலையை அரசு நிர்ணயம் செய்தது தொடர்பாக இந்த பேரவையிலும் மேலவையிலும் மாண்புமிகு உறுப்பினர்கள் ஒத்திவைப்புத் தீர்மானங்கள் கொண்டுவந்தபோது அதை அரசு மறுபரிசீலனை செய்யும் என்று தெரிவித்தேன். அந்த வகையில் இப்போது ஒரு அறிக்கையை இங்கே வைக்க விரும்புகிறேன்.

கடந்த சில ஆண்டுகளாகவே கரும்புக்கான விலை படிப்படியாக டன்னுக்கு ரூ. 100-லிருந்து உயர்ந்து கொண்டே வந்து 1980-81 ஆம் ஆண்டில் 8.5 சதவிகித சர்க்கரை கட்டுமானத்திற்கு டன்னுக்கு ரூ. 175 என நிர்ணயம் செய்யப்பட்டது. 1981-82 ஆம் ஆண்டில் சர்க்கரைக்கான விலை குறைய ஆரம்பித்ததால் டன்னுக்கு ரூ. 165 என நிர்ணயிக்கப்பட்டது. ஆயினும் கரும்பு விவசாயிகளின் வேண்டுகோளுக்கிணங்க ரூ. 165 விலையுடன் அரசு தனது நிதியிலிருந்து டன் ஒன்றுக்கு ரூ. 10-ஐ கரும்பு

(டாக்டர் கா. காளிமுத்து) [1983 மார்ச் 17

7. அறிக்கை அளித்தல்.

கரும்பின் விலைக் குறைவை ஈடுசெய்வது.

விவசாயிகளுக்கு வழங்கியது நடப்பு 1982–83 ஆம் ஆண்டில் சர்க்கரைக்கு வெளிச் சந்தையில் மேலும் விலை சரிவு ஏற்பட்டதால், அரசு கரும்புக்கு 8.5 சதவீத சர்க்கரை கட்டுமானத்திற்கு டன் ஒன்றுக்கு ரூ. 155 வீதம் நிர்ணயம் செய்து அறிவிப்பு செய்தது. இந்த விலை மிகவும் குறைவானது எனவும், விலையை உயர்த்திக் கொடுக்க வேண்டுமெனவும் கரும்பு விவசாயிகளிடமிருந்தும், சட்ட மன்றத்திலும் வேண்டுகோள் விடுக்கப்பட்டன.

கரும்பு விவசாயிகளின் பிரதிநிதிகள் திருவாளர்கள் அரூர் முத்து, டி. எம். நல்லுசாமி ஆகியோரோடு இப்பொருள் பற்றி பேசப்பட்டது. எல்லா சூழ்நிலைகளையும் ஆராய்ந்து, கரும்பு விவசாயிகளுக்கு 1981-82 ஆம் ஆண்டில் கொடுக்கப்பட்ட விலைக்கு குறையாமல், நடப்பு 1982-83 ஆம் ஆண்டில் கொடுப்பதே சிறந்த வழியாகும் என அரசு முடிவு செய்துள்ளது.

1981-82 ஆம் ஆண்டில், இம்மாநிலத்திலுள்ள சர்க்கரை ஆலைகள் 8.5 சதவீத சர்க்கரைக் கட்டுமானத்திற்கு டன் ஒன்றுக்கு ரூ. 165 வீதமும் அரசு அளித்த டன் ஒன்றுக்கு ரூ. 10-ம் சேர்த்து கொடுத்தன. நடப்பு 1982-83 ஆம் ஆண்டின் 8.5 சதவீத சர்க்கரைக் கட்டுமானத்திற்கு டன் ஒன்றுக்கு ரூ. 155 வீதம் அரசு நிர்ணயம் செய்துள்ளது. இவ்விதம் நடப்பு ஆண்டில் நிர்ணயம் செய்யப்படுள்ள விலை, கடந்த ஆண்டு அளிக்கப்பட்டுள்ள விலையைவிட குறைவானதாக இருந்தால், அவ்விதம் குறைவுபடும் தொகையை அரசு தனது நிதியிலிருந்து கரும்பு விவசாயிகளுக்கு வழங்கும். (மேசையை தட்டும் ஒலி) நடப்பு ஆண்டில் நிர்ணயம் செய்யப்பட்டுள்ள விலை 1981-82 ஆம் ஆண்டு விலையைவிட அதிகமாக இருந்தால், அவ்விதம் அதிகமாக உள்ள விலையை விவசாயிகள் நடப்பு ஆண்டில் பெறுவார்கள். இதனால், நடப்பு ஆண்டில் கரும்பு விவசாயிகளுக்கு அரசு நிதியிலிருந்து சுமார் 8 கோடி ரூபாய் அளிக்க மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவர் அவர்கள் ஒப்புதல் வழங்கியுள்ளார்கள் (மேசையை தட்டும் ஒலி) என்பதை மகிழ்வோடு தெரிவித்துக் கொள்கிறேன். இதன் மூலம் சுமார் ஒரு இலட்சத்திற்கும் மேற்பட்ட கரும்பு விவசாயிகள் பயன் பெறுவார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

6. வரவு-செலவுத் திட்டம் 1983–84 வாக்கெடுப்பு—(தொடர்ச்சி.)

கோரிக்கை எண். 28—சமுதாய நல வளர்ச்சித் திட்டங்களும் நகராட்சி நிர்வாகமும்.

கோரிக்கை எண். 39—சாலைகளும் பாலங்களும்.

கோரிக்கை எண். 53—சாலைகள் பாலங்கள் குறித்த மூலதனச் செலவு (தொடர்ச்சி).





6. வரவு-செலவுத் திட்டம், 1983–84 வாக்கெடுப்பு—தொடர்ச்சி.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, இந்த மன்றத்தில் சமுதாய நல வளர்ச்சித் திட்டங்களும் நகராட்சி நிர்வாகமும் என்ற கோரிக்கை எண் 28-ன் கீழும், சாலைகளும் பாலங்களும் என்ற கோரிக்கை எண் 39-ன் கீழும், சாலைகள்—பாலங்கள் குறித்த மூலதனச் செலவு என்ற கோரிக்கை எண் 53-ன் கீழும்—இந்த மூன்று மானியக் கோரிக்கைகள் மீதும் பல்வேறு கட்சிகளைச் சேர்ந்த மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்கள் தங்களுடைய மேலான கருத்துக்களை எல்லாம் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள்.

(பிற்பகல் 1–40)

அந்தக் கருத்துக்களின் அடிப்படையில் அவரவர்களின் தொகுதிகளைப் பொறுத்தவரையில் பல கருத்துக்கள் பேசப்பட்டன. குறிப்பாக தண்ணிறைவுத் திட்டம் போன்ற திட்டங்களின் மூலமாக செய்யப்பட்ட பணிகளைப் பொறுத்தவரையில் சில இடங்களில் விடுபட்டுப் போய்விட்டன. எனவே அவற்றை எடுத்துக்கொள்ளவேண்டும் என்ற வகையில் இங்கே கோரிக்கைகளும் வைக்கப்பட்டன. குறிப்பாக தமிழகத்தைப் பொறுத்தவரையில் உள்ளாட்சி மன்றங்களில் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள் இல்லாத நிலையிலும் கூட 378 ஊராட்சி ஒன்றியங்களிலும் கடந்த 3 ஆண்டுக் காலத்திலும் சரித்திரத்திலேயே இல்லாத அளவுக்கு வளர்ச்சித் திட்டங்கள் என்ற வகையில் ஒரு புதிய சகாப்தத்தை உருவாக்கி இருக்கிறோம் என்பதில் கண்டிப்பாக மாறுபட்ட கருத்துக்கள் யாரும் கூற மாட்டார்கள் என்று கருதுகிறேன். 1961 ஆம் ஆண்டிலே இருந்து 1977 ஆம் ஆண்டு வரையில் உள்ள கிட்டத்தட்ட 16 ஆண்டுக் காலத்திலே கூட பல்வேறு அரசுகள் ஆட்சிப் பொறுப்பிலே இருந்த காலத்திலே கூட இப்போது நாம் உருவாக்கி இருப்பதைப் போல பொதுச் சொத்துக்கள் உருவாக்கப்படவில்லை. தமிழக முதல்வர் புரட்சித் தலைவர் அவர்கள் தமிழகத்தினுடைய முதல்வராகப் பொறுப்பேற்றதற்குப் பிறகுதான் தமிழகத்திலுள்ள ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் ஊராட்சி மன்றங்களுக்கு பொதுச் சொத்துக்களைப் பொறுத்தவரையில் 1977 ஆம் ஆண்டிலே இருந்து 1982 ஆம் ஆண்டு வரை உள்ள 5 ஆண்டு காலத்தில் 240 கோடி ரூபாய் அளவுக்கு பொதுச் சொத்துக்கள் உருவாக்கப்பட்டிருக்கின்றன என்பதை நன்றியோடு தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். ஆனால் 1961 ஆம் ஆண்டிலிருந்து 1977 ஆம் ஆண்டு வரையிலும் உள்ள 16 ஆண்டுக் காலத்தில் காங்கிரஸ் கட்சி மற்றும் திராவிட முன்னேற்றக் கழகம் ஆண்ட காலத்தில் 376 ஊராட்சி ஒன்றியங்களுக்கு உருவாக்கப்பட்ட சொத்துக்கள் 47 கோடியே 42 இலட்சம் தான். ஆகவே நாம் ஒரு ஐந்தாண்டுக்காலத்திலே 240 கோடி ரூபாய் அளவுக்கு சொத்துக்களை உருவாக்கி இருக்கின்றோம் என்றால் இந்த அரசு சாதனை செய்திருக்கிறதா இல்லையா என்பதை எண்ணிப்பார்க்கவேண்டும்.

குறிப்பாக கடந்த 1980 ஆம் ஆண்டிலே தன்னிறைவுத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டு இந்த மூன்றாண்டுகளில் 201 கோடி ரூபாய்க்கு பொதுச் சொத்துக்களை உருவாக்கி இருக்கிறோம். சமுதாய நலத்திட்டங்களை இங்கே கொண்டுவரவேண்டும் என்பதற்காகவும் மக்களின் அன்றாடத் தேவைகளைப் பூர்த்தி செய்யவேண்டும் என்ற வகையில் அடிப்படைத் தேவைகளைச் செய்து கொடுக்க வேண்டும் என்பதற்காகவும் இந்த அரசு எடுத்துக்கொண்ட நடவடிக்கைகளின் காரணமாக இவ்வளவு பொதுச் சொத்துக்கள் உருவாக்கப்பட்டிருக்கின்றன. ஆகவே தன்னிறைவுத் திட்டத்தின் கீழ் மூன்று கட்டங்களிலே எடுத்துக் கொள்ளப்பட்ட வேலைகள் முடித்துக்கொடுக்கப்பட்ட வேலைகள் [illegible] கிராமங்களில் ஒருசில பணிகள் விடுபட்டிருந்தால் அந்தப் பணிகளை எல்லாம் எடுத்துக்கொள்ள இந்த அரசு 1983-84 ஆம் ஆண்டிலே முயற்சி எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஆகவே யாருக்காவது ஒருசில கிராமங்கள் விடுபட்டுப் போய்விட்டன, எனவே தன்னிறைவுத் திட்டம் வருமோ வராதோ என்ற சந்தேகம் இருந்தால் அதைத் தவிர்க்கலாம். கண்டிப்பாக அவற்றை எடுத்துக்கொள்ள இந்த அரசு நடவடிக்கை எடுக்கும் என்ற உறுதிப்பாட்டினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து இங்கே இந்திரா காங்கிரஸ் கட்சி உறுப்பினர்கள் பேசினார்கள். தேசிய கிராமப்புற வேலைவாய்ப்புத் திட்டம், ஒருங்கிணைந்த கிராமப்புற வளர்ச்சித் திட்டம், சாண எரிவாயுத் திட்டம் ஆகியவை பற்றி எடுத்துச் சொன்னார்கள். நான் அவர்களுக்கு ஒன்றைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். பிரதமர் திருமதி இந்திரா காந்தி அவர்களுடைய திட்டமான 20 அம்சத் திட்டத்தை யார் நல்லமுறையிலே நடைமுறைப்படுத்துகிறார்கள் என்றால் அது தமிழகம்தான் தமிழகத்தில்தான் 20 அம்சத் திட்டம் நல்லமுறையில் நடக்கின்றது என்று நான் சொல்லவில்லை, பிரதமர் திருமதி இந்திரா காந்தி அவர்களே தெரிவித்து இருக்கிறார்கள்.

தேசிய கிராமப்புற வேலைவாய்ப்புத் திட்டத்தில் மட்டும் கொடுக்கப்பட்ட பணத்தைக் காட்டிலும் அதிகமான நிதி இந்த ஆண்டிலே செலவழிக்கப்பட்டிருக்கின்றது. அதேபோன்று கடந்த ஆண்டிலே எடுத்துக்கொண்ட மொத்தப் பணிகள் பற்றிய கணக்குகளை எடுத்துச்சொல்லி நல்ல பெயரை நாம் பெற்றிருந்தோம். அதைக்காட்டிலும இந்த ஆண்டு 155 சதவீதம் பணிகள் நடைபெற்றிருக்கின்றன என்ற குறிப்பினை மத்திய அரசு கொடுத்திருக்கின்றது. இந்திரா காங்கிரஸ் ஆளுகின்ற மாநிலங்கள்கூட திருமதி இந்திரா காந்தி அவர்களுடைய 20 அம்சத் திட்டத்தைச் சரிவர நடத்தவில்லை. ஆனால் காங்கிரஸ் கட்சி ஆளாத மாநிலமான அனைத்திந்திய அண்ணா திர விட முன்னேற்றக் கழகம் ஆளுகின்ற தமிழகத்திலேதான் அந்த 20 அம்சத் திட்டத்தை நல்ல முறையில் நடைமுறைப்படுத்தியதன் காரணத்தால் நற்சான்றிதழை மத்திய அரசு நமக்குக் கொடுத்திருக்கின்றது.



அது மட்டும் அல்ல இன்று ஒருங்கிணைந்த கிராமப்புற வளர்ச்சி திட்டத்திலும் இந்த தமிழகம்தான் முன்னிலையில் இருக்கிறது என்று நற்சான்றிதழை அவர்கள் கொடுத்திருக்கிறார்கள். கடந்த ஜனவரி மாதம் வரையிலும் ஒருங்கிணைந்த கிராமப்புற வளர்ச்சி திட்டத்தில் மட்டும் 75 சதவிதம் வேலைகள் முடிக்கப்பட்டிருக்கிறது என்ற நிலைமைகளை இன்று மத்திய அரசாங்கம் நமக்கு எடுத்து சொல்லியிருக்கிறது. ஆகவே வறுமை கோட்டுக்கும் கீழே இருக்கக்கூடிய வாடிய மக்களுக்கு நன்மை செய்யவேண்டும் என்பதற்காக ஒருங்கிணைந்த கிராமப்புற வளர்ச்சி திட்டத்தை நாம் நடைமுறைப்படுத்தி கொண்டிருக்கிறோம் குறிப்பாக ஒவ்வொரு ஒன்றியத்திலும் 600 குடும்பங்களை எடுத்துக்கொண்டு அந்த 600 குடும்பங்களுக்கும் நல வாழ்வு அளிப்பதற்கு இந்த திட்டத்தை நடைமுறைப்படுத்திக் கொண்டிருக்கிறது இந்த அரசு. அதன் மூலமாக ஆண்டு முழுவதும் 2 லட்சத்து 25 ஆயிரம் குடும்பங்கள் பயன்பெற வேண்டும் என்ற முறையில் இந்த அரசு எடுத்துக்கொண்ட முயற்சியின் காரணமாக இந்த ஒருங்கிணைந்த கிராமப்புற வளர்ச்சி திட்டத்தின் கீழ் இப்பணி நடைபெற்றுக் கொண்டு வருகிறது.

அதேபோல் தான் சாண எரிவாய்வு திட்டம். அந்த திட்டமும் இங்கே தமிழகத்தில் தான் நல்ல முறையில் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது என்ற நற்சான்றிதழை இன்று மத்திய அரசு கொடுத்திருக்கிறது. ஆகவே மத்திய அரசு பாராட்டுகின்ற அளவுக்கு இந்த அரசு பணி செய்து கொண்டிருக்கிற நேரத்தில் தான் இங்கே இருக்கக்கூடிய மத்திய அரசின் சொந்தக்காரர்களாக இருக்கின்ற இந்திரா காங்கிரஸ் கட்சிக்காரர்கள் ஏன் இந்த அரசை சாடுகிறார்கள் என்ற அந்த கேள்விக்கும் அவர்கள் பதில் சொல்ல வேண்டும். ஏன் இதை கூறுகிறேன் என்றால் இங்கே இருக்கின்ற தீர்த்தராமன் அவர்கள் ஒரு கருத்தை தெரிவித்தார்கள். இன்று நாங்கள் ஏதோ விளம்பரத்திற்காக இந்த தேசிய வேலை வாய்ப்பு திட்டத்தை செய்வது போல் சொன்னார்கள். தேசிய கிராமப்புற வேலைவாய்ப்பு திட்டத்தை சொல்லித்தான் விளம்பரம் வாங்கவேண்டும் என்ற நிலை இந்த அரசுக்கு இல்லை. குறிப்பிட்டு சொல்லவேண்டும் என்று சொன்னால் தன்னிறைவுத் திட்டம் என்ற மிகப்பெரிய திட்டம் இருக்கிறது. இன்று தமிழகத்தில் மட்டும் தான் இந்த திட்டம் நடைபெற்றுக்கொண்டு வருகிறது. வேறு எந்த மாநிலத்திலும் இந்த திட்டம் இல்லை. ஆகவே தன்னிறைவு திட்டம் என்ற மிகப்பெரிய திட்டம் இருக்கின்ற நேரத்தில் புரட்சித் தலைவர் அவர்கள் இந்த திட்டத்தை இங்கே தமிழகத்திலே நடைமுறைப்படுத்திக்கொண்டு வருகிற நேரத்தில் தேசிய கிராமப்புற வேலைவாய்ப்பு திட்டத்தில்கூட மத்திய அரசு 50 சதவிதம் தான் செலவழிக்கிறது. ஆனால் 50 சதவிதம் மாநில அரசு ஏற்றுக்கொள்கிறது அப்படிப்பட்ட திட்டத்தை நாங்கள் விளம்பரத்திற்கு செய்யவில்லை. அதற்கு மாறாக இருக்கக்கூடிய வறுமை கோட்டுக்கு கீழே இருக்கக்கூடிய மக்களுக்கு வேலைகள் கிடைக்கவேண்டும் என்பதற்காக இன்று 4 கோடி மனித [illegible]

நாட்களை இங்கே தான் உற்பத்தி செய்து கொண்டிருக்கிறோம். இதுவரையிலும் எந்த மாநில அரசும் இவ்வளவு அதிகபட்ச மனித உழைப்பு நாட்களை உற்பத்தி செய்யவில்லை. ஆனால் தமிழகத்தில் மட்டும் 4 கோடி மனித உழைப்பு நாட்களை உற்பத்தி செய்யப்படுகிறது இதே தேசீய கிராமப்புற வேலைவாய்ப்பு திட்டத்தின் மூலமாக. ஆகவே தயவுசெய்து இந்திரா காங்கிரஸ் நண்பர்களை நான் கேட்டுக்கொள்வது இந்த அரசாங்கம் எடுக்கின்ற முயற்சிகளுக்கு நீங்கள் எல்லாம் பாராட்டுதல் தெரிவிக்க வேண்டும். ஆனால் பாரபட்சமாக இருந்துகொண்டு எப்படியாவது பங்காளிகளுக்குள் சண்டை வராதா அதன் மூலமாக எப்படியாவது கட்சியை வளர்க்க முடியாதா என்று நீங்கள் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறீர்கள். கண்டிப்பாக நீங்கள் ஏமாந்து போயிருக்கிறீர்கள் என்பது நாடு அறிந்த உண்மை. பல்வேறு தேர்தல்களும் உங்களுக்கு அதைத்தான் சொல்லிக்கொண்டிருக்கிறது. தமிழகத்தைப் பொறுத்தவரையில் திராவிட பாரம்பரியத்தை பொறுத்தவரையில் வேறு ஒரு பாரம்பரியம் தமிழகத்தில் வரமுடியாது என்று திருச்செந்தூர் போன்ற தேர்தல்கள் எல்லாம் எடுத்துச்சொல்லிக்கொண்டிருக்கிறது. ஆகவே தான் நான் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன். பாரத பிரதமர் இந்திரா சாந்தி அவர்களுடைய 20 அம்ச திட்டம் போன்ற (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அவர் நாட்டு நடப்பைத்தான் சொன்னார். அதில் ஒன்றும் தப்பு இல்லை.

திரு. நா. சுந்தரராஜ்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அவர் பங்காளி என்று சொல்லி எங்களை வம்புக்கு இழுக்கிறார்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அவர் பேசிக் கொண்டிருக்கிறார். நீங்கள் ஏன் வம்புக்கு இழுக்கிறார் என்ற வார்த்தைகளை எல்லாம் சபையில் பேசுகிறீர்கள். அவைக்குள் அப்படி பேசக்கூடாது. உட்காருங்கள்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்று தமிழகத்தைப் பொறுத்த வரையில் 16 ஆயிரம் ரெவின்யூ கிராமங்கள் இருக்கின்றன. அந்த 16 ஆயிரம் ரெவின்யூ கிராமங்களில் 16 ஆயிரம் கழிப்பிடங்கள் கட்டியிருக்கிறோம்.

(பிற்பகல் 1.50)

இந்த ஆண்டில் 8 ஆயிரம் கழிப்பிடங்கள் கட்டுவதற்கு 11 கோடியே 8 லட்சம் ஒதுக்கப்பட்டு வேலைகள் நடக்கின்றன. 1983-84 ஆம் ஆண்டிலே அதே போல் 8 ஆயிரம் கழிப்பிடங்களை எடுத்துக்கொண்டு கட்டுவதற்காக 11 கோடியே 28 லட்சம் ரூபாய்



செலவழிக்க இருக்கிறோம். அதன் மூலமாக 16 ஆயிரம் கழிப்பிடங்கள் 16 ஆயிரம் ரெவின்யூ கிராமங்களிலே வசதிசெய்கிற பணியை எடுத்துக்கொண்டிருக்கிறோம்.

அதிலேகூட மாண்புமிகு உறுப்பினர்கள் ஒரு கருத்தை எடுத்துச் சொன்னார்கள். தண்ணீர் இல்லாத காலத்திலே கழிப்பிடத்தைக் கட்டிக் கொண்டிருக்கிறீர்களே என்று. ஆனால் இந்த நிலை அப்படியே நீடித்துக் கொண்டிருக்காது என்பதையும் சீக்கிரமாக 2 மாதங்களில் கண்டிப்பாக மழைவரப்போகிறது என்பதையும் மழை வந்தால் இருக்கக்கூடிய நிலையெல்லாம் சரியாகிவிடும் என்பதையும் அவர்கள் அறிந்திருக்கிறார்கள். ஆகவே கட்டவேண்டிய பணிகளை இப்போதே கட்டினால்தான் மழை வரும் நேரத்திலே அவற்றை நாம் பயன்படுத்தமுடியும். ஆகவே அந்தப் பணிகளைச் செய்து கொண்டிருக்கிறோம். அந்தக் கழிப்பிடங்களிலே 24 மணி நேரமும் தண்ணீர் கொடுக்கக்கூடிய சூழ்நிலையை நாம் உருவாக்கியிருக்கிறோம்.

திரு. அ. ரகுமான்கான்: 2 மாதத்திலே மழை வரும் என்று சொன்னார்கள். என்ன ஜோசியமா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: தமிழகத்திலே செயற்கை மழைக்காக நாம் போகவேண்டிய அவசியம் இல்லை. இயற்கையாகவே மழை பெய்யும். அதைத்தான் நான் சொன்னேன்.

நகரப் பஞ்சாயத்துக்களைப் பொறுத்தவரையில் 620 நகரப் பஞ்சாயத்துக்கள் தமிழ்நாட்டிலே இருக்கின்றன. ஒவ்வொரு நகரப் பஞ்சாயத்திலும் 2 கழிப்பறைகள் கட்டுவதற்கு ஆணை பிறப்பித்திருக்கிறோம். இந்த ஆண்டு கட்ட இருக்கிறோம். ஒரு நகரப் பஞ்சாயத்திலே இரண்டு கழிப்பறைகளைக் கட்டுவதற்கு முதல் தவணையாக 27 லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. ஆகவே கட்டுவதற்கு எவ்வளவு பணம் தேவையோ அந்த பணத்தைச் செலவழிக்க இருக்கிறோம்.

மிகப்பெரிய ஒரு திட்டத்தினை மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஆளுநர் உரையிலேயும் தெரிவித்தார்கள், நிதிநிலை அறிக்கையிலேயும் அவர்கள் தெரிவித்தார்கள். அதுதான் குடும்பத்திற்கு ஒருவருக்கு வேலைத் திட்டம், இந்தத் திட்டத்தையும் ஊரக வளர்ச்சித் திட்டம் மூலம் செய்ய இருக்கிறோம். அதற்காக 12 கோடி ரூபாயை புரட்சித் தலைவர் அவர்கள் ஒதுக்கியிருக்கிறார்கள். இந்தத் திட்டத்தின் விவர அறிக்கைகளை பின்னாலே சொல்ல இருக்கிறோம்.

கடந்த ஆண்டிலே 146 நகரப் பஞ்சாயத்துக்களை நாம் எடுத்துக் கொண்டோம். அதற்காக ஒதுக்கிய தொகை .5 கோடி ரூபாய். மாண்புமிகு உறுப்பினர்கள் சொன்னார்கள். ஒரு நகராட்சிக்கு நீங்கள் ஒதுக்கிய தொகை 3 லட்சத்து 42 ஆயிரம்

என்றால், 3 லட்சத்து 42 ஆயிரம் ரூபாயை வைத்துக் கொண்டு
நீங்கள் குடிநீர்ப் பிரச்சினையை தீர்க்க முடியாது, எனவே தயவு
செய்து அதிகமாக பணம் ஒதுக்கவேண்டுமென்று கேட்டுக்
கொண்டார்கள். அதற்கேற்ப இந்த ஆண்டிலே 10 கோடி ரூபாய்
ஒதுக்கப்பட்டிருக்கிறது. நகரப் பஞ்சாயத்துகளுக்கு அதன்
மூலமாக 200 நகரப்பஞ்சாயத்துக்கள் எடுக்கப்பட்டு ஒவ்வொரு
நகரப்பஞ்சாயத்திற்கும் 5 லட்சம் ரூபாய் ஒதுக்கியிருக்கிறோம்.
அது போதவில்லை. நிதிநிலைக்கு ஏற்ற முறையிலே நாம்
ஆராய்ந்து செய்வதற்கு உரிய நடவடிக்கைகளை எடுப்போம்
என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். நகரப் பஞ்சாயத்துக்
களைப் பொறுத்தவரையில் இந்த வேலைகள் நடந்தாலும் நடக்கா
விட்டாலும் குடிநீர்ப்பிரச்சினைக்கு முன்னுரிமை கொடுத்து டை
முறைப்படுத்தவேண்டும் என்று ஆணையிட்டிருக்கிறோம். ஒருங்
கிணைந்த நகர்ப்புற வளர்ச்சித் திட்டத்தின் மூலமாக 28 நகரப்
பஞ்சாயத்துக்கள் பலன்பெற்றிருக்கின்றன. ஒவ்வொரு நகராட்
சிக்கும் ஒரு கோடி ரூபாய் அளவிலே நிதி ஒதுக்கப்பட்டிருக்கிறது.
அதன்மூலமாக பல்வேறு பணிகளை, பஸ் ஸ்டாண்டு போன்ற,
அதே நேரத்தில் இருக்கக்கூடிய கடைகளை கட்டி விடுதல்
போன்ற பல்வேறு பணிகளை நாம் எடுத்துக்கொண்டிருக்கிறோம்.
இந்த ஆண்டிலே ஒருங்கிணைந்த நகர்ப்புற வளர்ச்சித் திட்டத்தின்
அடிப்படையில் 10 நகராட்சிகள் எடுத்துக்கொள்ளப்பட்டிருக்
கின்றன. அதற்காக 10 கோடி ரூபாயை நாம் செலவிட இருக்
கிறோம். நகராட்சிகளைப் பொறுத்தவரையில் மாண்புமிகு உறுப்
பினர்கள் எல்லாம் எடுத்துச் சொன்னார்கள். அது பழைய
சட்டம், கடந்த 1920 ஆம் ஆண்டிலே கொண்டுவரப்பட்ட
சட்டம், அந்தச் சட்டத்தை மாற்றவேண்டுமென்று சொன்னார்
கள். அந்தக் கருத்திற்கு ஏற்ப நகராட்சிகளினுடைய சட்டத்தை
மாற்றி புதிய சட்டத்தை இந்த ஆண்டிலே கொண்டுவர இருக்
கிறோம். மாநகராட்சிகளுக்கு தனித்தனி சட்டங்கள் வைத்திருக்
கிறோம். சென்னைக்கு ஒரு சட்டம், கோவைக்கு இன்னொரு
சட்டம், மதுரைக்கு இன்னொரு சட்டம் என்று னித்தனியாக
சட்டங்கள் இருந்துகொண்டிருக்கின்றன. அந்தச் சட்டங்களை
ஒன்றாகச் சேர்த்து மாநகராட்சிகளுக்கு காம்ப்ரஹன்சிவ் ஆக்ட்
என்ற முறையிலே கொண்டுவர இருக்கிறோம். நகராட்சிகளுக்கு
உதவிசெய்வதற்கு பைனான்ஷியல் கார்ப்பரேஷன் பார் லோக்கல்
பாடிஸ் என்று ஏற்படுத்த இருக்கிறோம். ஏனென்றால் வங்கிகள்
மூலமாக கடன்களைப் பெறவேண்டுமென்ற சூழ்நிலையில்
ஒவ்வொரு நகராட்சியும் தனித்தனியாக அணுகுகிற நிலை இருக்
கிறது. வங்கிகளின் மூலமாக நிதிநிலைக்கு ஏற்றவகையில் அந் ப்
பணிகளையெல்லாம் முடுக்கிவிடுவதற்காகவும் தனிக்கார்ப்பரேஷன்
என்று ஒன்று இருந்தால் நகராட்சிகளுடைய நிதிநிலைக்கு
ஏற்பவும் வருமானத்திற்கு ஏற்பவும் பல்வேறு பணிகளைக்
கொண்டுவருவதற்கும் நடைமுறைப்படுத்துவதற்கும் ஏதுவாக
இருக்கும். ஆகவே அப்படிப்பட்ட ஒரு கார்ப்பரேஷனை,
கழகத்தை நாம் அமைப்பதற்குரிய நடவடிக்கையிலே ஈடுபட்டிருக்
கிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.



அடுத்து சாலைகளும், பாலங்களும் என்கிற கோரிக்கையின்
அடிப்படையில் தேசிய நெடுஞ்சாலையைப் பொறுத்தவரையில்
மத்திய அரசாங்கம் ஒரு கிலோமீட்டருக்குகூட தேசிய நெடுஞ்
சாலையை நமக்குக் கொடுக்கவில்லை. நாம் இதைத்தான்
முறையாக அல்ல, கோரிக்கையாக பல்வேறு காலங்களில் மத்திய
அரசாங்கத்திற்கு எடுத்துச்சொல்லி எங்களுக்கு இருக்கக்கூடிய 14
முக்கியமான மாநில நெடுஞ்சாலைகளை எல்லாம் தேசீய நெடுஞ்
சாலை தரத்திற்கு உயர்த்தவேண்டுமென்று கேட்டுக்கொண்டிருக்
கிறோம். இன்னமும் ஒரு சாலையைக் கூட அவர்கள் ஏற்றுக்
கொள்ளவில்லை. இன்றைக்குக் கூட பல்வேறு இடங்களில்
ரெயில்வே கிராசிங் எங்கெங்கெல்லாம் வருகின்றதோ அங்கெல்லாம்
மேம்பாலம் கட்டவேண்டும். அதற்கு 50 சதவீதம் நிதியை
அவர்கள் கொடுக்கவேண்டும். 50 சதவீத நிதியை நகராட்சிகளிலே
அல்லது ஊராட்சி ஒன்றியப் பகுதிகளில் இருந்தால் நாம்
ஏற்றுக்கொள்ள வேண்டி இருக்கிறோம். ஆகவே இந்த நிதியைக்
கொடுங்கள் என்று சொன்னால் கொடுப்பதில்லை. அதற்கு
மாறாக ஒரு கருத்தை தெரிவித்துக்கொண்டு இருக்கிறார்கள்.
இவைகளை எல்லாம் லோ பிரையாரிட்டி என்ற அடிப்படையில்
அவர்கள் கவனித்துக்கொண்டிருக்கிறார்கள். இந்த மாமன்றத்தின்
மூலமாக மத்திய அரசைக் கேட்டுக்கொள்வது பல்வேறு இடங்களில்
எங்கெங்கெல்லாம் போகிறோமோ அங்கெல்லாம் தடையை
ஏற்படுத்திக்கொண்டிருக்கிறார்கள். ஆகவே மத்திய அரசு
என்றாலே மாநில அரசுக்குத் தடையாக இருக்கிற அரசு என்ற
நிலை மாறவேண்டும். அப்படி மாறினால்தான் மாநில அரசும்,
மத்திய அரசும் சுமுகமாக காரியங்களை நடைமுறைப்படுத்த
முடியும். எப்போது பார்த்தாலும் பிச்சைப் பாத்திரத்தை ஏந்திக்
கொண்டிருக்கிற நிலை இருக்கக்கூடாது என்பதுதான்
மாமன்றத்தின் உறுப்பினர்களின் எண்ணம் என்பதையும் தெளிவு
படுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆகவே தேசிய நெடுஞ்
சாலையைப் பொறுத்தவரையில் நமக்கு பல்லாண்டு காலமாக
1869 கிலோமீட்டர் நீளம் இருக்கிறது. மாநில நெடுஞ்சாலையாக
1814 கிலோமீட்டர் இருந்து கொண்டிருக்கிறது. மாவட்ட பெருஞ்
சாலையாக 4,028 கிலோமீட்டர் இருக்கிறது. மாவட்ட இதர
சாலையாக 19,765 கிலோமீட்டர் இருக்கின்றன. மத்திய அரசு
நிதி கொடுத்தாலும் நிதி கொடுக்காவிட்டாலும் நம்முடைய
அரசினுடைய பணத்தின் மூலமாக பொது நிதியின் மூலமாகத்
தான் ஊராட்சி ஒன்றிய சாலைகளை அதிகமாகக் கொண்டிருக்
கிறோம். இன்றைக்கு ஊராட்சி ஒன்றியத்தின் மூலமாக இருக்கிற
சாலையின் மொத்த நீளம் 81,139 கிலோமீட்டர் தூரம் இருக்
கிறது. இது இந்தியாவிலேயே மிக அதிகமான நீளமான சாலையை
உள்ள மாநிலமாக தமிழகம் இருக்கிறது. ஆகவே இதிலும் ஒரு
முதன்மை ஸ்தானத்தைப் பெற்றுக்கொண்டிருக்கிறோம். அதே
போல பேருந்து வழித்தடங்களை கடந்த 974-லே திராவிட
முன்னேற்றக் கழக அரசு பொறுப்பிலே இருந்த நேரத்தில் இந்த
வழித்தடங்களை எடுத்துக்கொள்வதில்லை என்று நிறுத்தி
விட்டார்கள். ஆனால் இந்த அரசு பொறுப்பிற்கு வந்ததற்குப்
பிறகு 1979-80-லே இந்த பேருந்து வழித்தடங்களை எடுத்துக்

கொள்ள வேண்டுமென்ற முடிவிற்கு வந்து அதற்காக இன்று 1720
கிலோமீட்டர் தூரத்திற்கு இந்த பேருந்து வழித்தடங்களில்
பேருந்துகள் போவதற்குரிய நிலைகளை ஏற்படுத்திக் கொடுக்க
வேண்டுமென்று இந்த ஆண்டிலே 11 கோடி ரூபாய் ஒதுக்கியிருக்
கிறோம். அதன்மூலமாக 1720 கிலோமீட்டர் தூரத்திற்கு
பஸ்கள் போக, வர இருக்கக்கூடிய நிலைமைகள் மாற்றப்படும்
என்பதை பணிவோடு தெரிவித்துக் கொள்கிறேன். அதேபோல
இந்த கிராமப்புற சாலைத் திட்டத்தைக் கொண்டு வந்திருக்
கிறோம். உலக வங்கி உதவியோடு இந்த தமிழகத்திலே உள்ள
பாதி கிராமங்களுக்கு அதாவது 1,000-லிருந்து 1,500 வரை மக்கள்
தொகை கொண்ட அந்த கிராமங்களுக்கெல்லாம் 'ஆல் வெதர்
ரோட்ஸ்' என்று சொல்லக்கூடிய சாலையை அமைப்பதற்கு 326
கோடி ரூபாய் திட்டத்தை மத்திய அரசிற்கு அனுப்பியுள்ளோம்.
உலகவங்கி உதவியோடு அந்த 326 கோடி ரூபாய் திட்டத்தை
நடைமுறைப்படுத்தவிருக்கிறோம். அப்படி நடைமுறைப்படுத்து
வதன் மூலமாக, இன்றைக்கு தமிழகத்திலே 47 ஆயிரம் கிராமங்கள்
இருக்கின்றன, அதிலே பாதி குடியிருப்புகள் இந்தத் திட்டத்தின்
கீழ் வரக்கூடிய சூழ்நிலை இருக்கிறது. ககவ எல்லாப்பகுதி
களிலும் சாலை வசதி இருக்கும். அதேநேரத்தில் பேருந்து வழித்
தடங்கள் போடக்கூடிய நடவடிக்கையை நாம் எடுத்துக்கொண்
டிருக்கிறோம். நெடுஞ்சாலைத் துறையைப் பொறுத்தவரையில்
அதற்கான தனியாக ஒரு கட்டிடம் இல்லை. அதற்கு தனியாக
கட்டிடம் கட்டவேண்டும் என்பதற்காக கடந்த ஆண்டிலே கூட
நாம் கொள்கைக் குறிப்பிலே முன்வைத்தோம். ஆனால் கட்ட
முடியவில்லை. அதற்கு காரணம் சாமராஜர் சாலையில் அந்த
கட்டிடம் கட்டவேண்டுமென்ற குறிப்புகளை மாண்புமிகு
முதலமைச்சர் அவர்களுக்கு அனுப்பினோம். முதலமைச்சர்
அவர்கள் இனிமேல் அந்த இடத்தில் எந்த கட்டிடமும் வரக்
கூடாது என்று சொல்லி அதற்கான ஆணை பிறப்பித்தார்கள்.
ஆகவேதான் அந்த கட்டிடத்தை கடந்த ஆண்டிலே நாம் கட்ட
முடியவில்லை. இந்தஆண்டிலே கூட கிண்டியிலே ரிசர்ச் ஸ்டேஷன்
இருக்கிறதே, ஆராய்ச்சி நிலையம் அதற்கு பக்கத்திலே அந்தக்
கட்டிடத்தை கட்டுவதற்குரிய நடவடிக்கையை எடுத்துக்கொண்
டிருக்கிறோம். அதைப்போல இன்றைக்கு மிகப்பெரிய
பிரச்னையாக இந்த மாமன்றத்தில் பாம்பன் பாலத்தைப்பற்றி
யாரும் கருத்தைத் தெரிவிக்கவில்லை. பாம்பன் திட்டத்தைப்
பொறுத்தவரையில் 1974-ல் இந்தத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டது.
நான்கு ஆண்டிலே முடிவடைந்து இருக்கவேண்டும். 1978-ல் அது
முடிந்திருக்கவேண்டும்.

(பிற்பகல் 2-00)

பல்வேறு காரணங்களால் அந்தப் பாலவேலை தடைப்பட்டு,
இன்று வழக்கு மன்றத்திற்கும்கூடப் போய்விட்டது. வழக்கு
மன்றத்திலும்கூட, அதை இலாகாவின் மூலமாக—பல்வேறு
வேலைகளை—செய்யலாம் என்கின்ற அனுமதியை





பிறப்பித்தார்கள். அதற்கேற்ப இன்று இலாகாவின் மூலமாகவே
பல்வேறு பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. அதே
போல, இன்று ஆல் இந்தியா லெவலில்—குளோபர் டென்டர்
அல்ல—டெண்டா கால்பார் பண்ணி, அதற்குரிய நடவடிக்கைகளை
எடுத்திருக்கிறோம். பல்வேறு கம்பெனிகள் அதற்காக
டென்டரைப் போட்டிருக்கிறார்கள். ஆகவே, எவ்வளவு
சீக்கிரமாக இந்தப் பாலவேலையை முடிக்க முடியுமோ அவ்வளவு
சீக்கிரமாக முடிக்கின்ற நடவடிக்கைகளை நாம் எடுத்து இருக்
கிறோம்.

அதேபோல, மிக முக்கியமான இன்னொரு பணி, கிழக்குக்
கடற்கரைச் சாலைப் பணி. அந்தச் சாலைக்காக, பல்வேறு
நேரங்களில் நாம் நிதியைக் கேட்டோம். கடந்த 4 மாதங்களுக்கு
முன்பாக, திரு. வீரேந்திரப்பட்டீல் அவர்கள் அந்த இலாகாவின்
பொறுப்பை வைத்து கொண்டிருந்த நேரத்தில், நான் நேராக
அவரிடத்திலே சென்று கேட்டேன், இந்தக் கிழக்குக் கடற்கரை
முக்கியமானது. அதுவும் போர்க்காலத்தின் அடிப்படையில்
எடுத்துக்கொள்ள வேண்டும். Economic and Inter State என்று
சொல்லக்கூடிய முறையிலே, இது முக்கியமான சாலை—ஆகவே,
தயவு செய்து எடுத்துக்கொள்ளுங்கள் என்று சொன்னோம்.
ஆனால், அவர்கள் Inter State என்று சொல்லக்கூடிய
அளவுக்கு எடுத்துக்கொள்ளாமல், Inter State என்ற வகையிலே
தான் இந்தப் பணியை நாம் ஏற்றுக்கொள்ளமுடியும் என்று
சொல்லி, அதற்கு பிரையாரிட்டி அதிகமாகக் கொடுக்க முடியாது
என்று சொல்லிவிட்டார்கள். ஆனாலுங்கூட இன்று அதற்கு
ரூ. 150 இலட்சம் கொடுத்து இருக்கிறார்கள். கொடுத்து இருக்
கிறார்கள் என்று சொன்னால் மானியமாகக் கொடுக்கவில்லை.
அதற்கு மாறாகக் கடன் கொடுத்திருக்கிறார்கள். ரூ. 150
இலட்சம் கொடுத்துவிட்டு, இன்று மாநில அரசின் மூலமாக
ரூ. 150 இலட்சம் போட்டு, ரூ. 3 கோடியில் அந்தத் திட்டத்தை
நடைமுறைப்படுத்த வேண்டுமென்று அவர்கள் கேட்டிருக்
கிறார்கள். ஏற்கனவே இந்தத் திட்டத்திற்காக ரூ. 4 கோடி
செலவிடப்பட்டிருக்கிறது. ரூ. 4 கோடி செலவிடப்பட்டு 38 பால
வேலைகள் முடிவடைந்திருக்கின்றன. இது ஒரு வழிப்பாதையாக
இல்லாமல், இரு வழிப் பாதையாக இருப்பதற்கு நாம் இந்தத்
திட்டத்தைக் கொடுத்தோம். ஒரு வழிப் பாதையாக நாம் நடை
முறைப்படுத்த வேண்டுமென்று சொன்னால் ரூ. 52 கோடி
செலவாகும் என்று மதிப்பீடு செய்யப்பட்டது. இரு வழிப் பாதை
யாக இருக்க வேண்டுமென்று சொன்னால் ரூ. 80 கோடி
செலவாகும் என்று மதிப்பீடு செய்யப்பட்டிருக்கிறது. ஆனாலும்,
இந்தத் திட்டத்தை நடைமுறைப்படுத்தினால், அதன் மூலமாக
தென் மாவட்டங்கள் பயன அடைகின்ற சூழ்நிலையிருக்கிறது.
ஆகவே, இந்தத் திட்டத்திற்காக மீண்டும் மத்திய அரசை நாம்
கேட்டிருக்கிறோம் என்பதையும் இங்கே மாண்புமிகு உறுப்பினர்
களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

அதே போல் கட்டுமான கழகம் (கன்ஸ்ட்ரக்ஷன் கார்ப்ப ரேஷன்) என்று சொல்கின்ற ஒரு நல்ல கழகத்தை நாம் ஏற்படுத்தியிருக்கிறோம். அது 1980-லே அமைக்கப்பட்டது. இன்று கட்டுமானக் கழகத்தின் மூலமாக, பல்வேறு பணிகளைச் செய்து கொண்டிருக்கிறோம். அந்தக் கழகம்கூட இலாபத்திலே நடந்து வருகிற கழகமாக இருந்து வருகிறது. ஒப்பந்தக்காரர்கள் எல்லாம் எஸ்டிமேட்டுக்கு மேலே அதிகமாக, 40%, 50% என்று போடுகின்ற நிலைமை எல்லாம் இருந்து கொண்டிருக்கிறது. அதை மாற்றுவதற்கு ஒரு 'போனஸ்பட் காம்பட்டிஷன் மஸ்ட் பிரிவெயில்' என்ற அளவிலே இந்தக் கட்டுமானக் கழகத்தை நாம் கொண்டு வந்தோம். இக்கழகத்தின் மூலமாக இன்றளவும் அவர்கள் எடுத்துச் செய்கின்ற வேலைகளின் எண்ணிக்கை 102. ஆகவே, 102 வேலைகள் அந்த இலாகாவின் மூலமாகச் செய்யப் பட்டு வருகின்றன என்பதையும் நான் பணிவன்புடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

நெடுஞ்சாலைத் துறை மூலமாக, இன்று திருச்சியில் நடை பெற்றுக் கொண்டிருக்கிற இன்னொரு முக்கியமான பணி கொள்ளிடம் பால வேலை. இந்தக் கொள்ளிடம் பால வேலை ரூ 3 கோடிக்கு மேல் செலவாகும் என்று மதிப்பீடு செய்யப் பட்டிருக்கிறது. ஆனால் இலாகாவின் மூலமாகச் செய்வதால், ரூ. 2 கோடி அளவிலேயே அந்தப் பணியைச் செய்ய முடியும். அந்த நல்ல பணியை இன்று இலாகாவே ஏற்றுக் கொண்டு செய்து கொண்டிருக்கிறது. இதற்காக, இந்த மாமன்றத்தின் மூலமாக, இலாகாவிலே பணி புரிகின்ற அந்தப் பொறியாளர் களுக்கு எல்லாம் நான் நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக் கிறேன்.

அதேபோல், இங்கே பல்வேறு கருத்துக்கள் கூறப்பட்டன. குறிப்பாக, பூங்காவனம் அவர்கள் இங்கே ஒரு கருத்தைத் தெரிவித்து இருக்கிறார்கள் குறிப்பாக, பள்ளிக்கூடங்களைக் கட்டுகின்ற நேரத்தில், நீங்கள் சிமெண்ட் ஓடுகளைப் போடு கிறீர்கள்; அதாவது ஆஸ்பெஸ்டாஸ் ஷீட் போடுகிறீர்கள். அது குழந்தைகளுக்கு ஒத்துவராது வெயில் காலத்தில், அந்த உஷ்ணம் அந்தக் குழந்தைகளைப் பாதிக்கும் என்றெல்லாம் எடுத்துச் சொன்னார்கள். அதற்காக, இன்று ஆணைகள் பிறப்பிக்கப் பட்டு, இனி போடுகின்ற தளம் யாவும் சிமெண்ட் தளங்களாகத் தான் போடப்பட வேண்டும், சிமெண்ட் ஆஸ்பெஸ்டாஸ் ஷீட்களைப் போடக்கூடாது என்கிற உத்தரவை நாம் கொடுத் திருக்கிறோம் என்பதையும் குறிப்பிடக் கடமைப்பட்டிருக் கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் சொக்கலிங்கம் அவர்கள் ஒரு கருத்தைத் தெரிவித்தார்கள். ஆதி திராவிடர்களுக்கான காலனிகளை ஏன் அமைக்கவில்லையென்ற கேள்வியினைக் கொடுத்தார்கள். இப்பொழுது மத்திய அரசாங்கத்தின் மூலமாக



அந்த விதிகளையெல்லாம் மாற்றி தேசிய கிராமப்புற வேலை வாய்ப்புத் திட்டத்தின் அடிப்படையில் அந்த காலனியை அமைக்க வேண்டுமென்று அவர்கள் உத்தரவு கொடுத்திருக்கிறார்கள். ஆகவே, அதன் மூலமாக, ஒரு பிளாக்கிலே, ஒரு ஒன்றியத்திலே, ஒருகிராமத்தில் அந்தக் காலனியைக்கொண்டு வரலாம் என்கின்ற நிலைமையிலே நாம் நடவடிக்கை எடுத்து இருக்கிறோம்.

கடந்த ஆண்டிலே ஒரு அறிவிப்பைச் செய்தேன். அதைப் பற்றி மாண்புமிகு உறுப்பினர்களெல்லாம் கேள்விகளைக் கேட் டிருப்பார்கள் என்று எதிர்பார்த்தேன். ஆனால் கேட்கவில்லை தனியார் சந்தைகளை நாம் எடுக்கவிருக்கிறோம், மசோதா கொண்டு வர இருக்கிறது என்று கடந்த ஆண்டு அறிவிப்பு செய் தேன். ஆனால் இப்பொழுது அதற்குரிய நடவடிக்கைகள் எடுக்கப் பட்டிருக்கின்றன. இப்பொழுதுள்ள சட்டத்தின் மூலமாக அந்த நடவடிக்கை எடுக்கப்பட்டு, உரிமங்கள் பறிக்கப்படுகின்ற, எடுக் கப்படுகின்ற ஆணைகள் பிறப்பிக்கப்பட்டிருக்கின்றன. யார் யார் எந்தச் சந்தையை வைத்துக் கொண்டிருந்தார்களோ அந்த நிலத்தை ஆர்ஜிதம் செய்வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப் பட்டு வருகின்றன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஆகவே, இவ்வளவு பணிகளையும் நல்லமுறையிலே ஊராட்சி மன்றங்களின் மூலமாக சமுதாய வளர்ச்சிக்காக சமுதாயப் பணிகளை இந்த அரசு செய்து கொண்டிருக்கிறது.

இன்னொரு முக்கியமான பிரச்னையைப் பற்றி மதிப்பிற் குரிய சங்கரய்யா அவர்சள் எழுப்பினார்கள். குறிப்பாக தேர்தலைப் பற்றி இன்று காலையிலிருந்தே அதிகமாகப் பேசிக் கொண்டிருக்கிறோம் என்று நினைக்கிறேன். காரணம், இந்த அறிக்கையைக் கொடுத்த பிறகு, கடந்த 15—ம்தேதியன்று விளக்கமாகச் சொன்னதற்கு பிறகும்கூட மாண்புமிகு உறுப் பினர்கள் இந்தக் கருத்துக்களை மீண்டும் மீண்டும் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள்.

ஆனால் இங்கே இருப்பவர்கள் எல்லோரும் அறியும் வண்ணம் மூர்த்தி அவர்கள் ஒரு கருத்தைத் தெரிவித்தார்கள். ஒதுக் கீடுகள் செய்யாமல் தேர்தல்கள் வந்தால் கண்டிப்பாகக் கோர்ட்டுக்குச் சென்று ஸ்டே பெறுவோம் என்று தெரி வித்தார்கள். ஆனால் மூர்த்தி அவர்கள் வேண்டுமானால் நாம் சொல்வதைக் கேட்டுக் கொள்வார்களோ, கேட்டுக்கொள்ள மாட்டார்களோ என்பதைப்பற்றிக் கவலைப்படவில்லை.

ஆனால் மாண்புமிகு பல்வேறு உறுப்பினர்கள், சிதம்பரம் போன்றவர்கள் அரசுக்கு ஆதரவான கருத்துக்களைத் தெரி வித்தார்கள். இட ஒதுக்கீடு தேவை, ஆனால் தேர்தல்களைச் சீக்கிரமாகக் கொண்டுவர வேண்டும் என்று சொன்னார்கள். இந்தக் கருத்தை நாம் ஏற்கனவே சொன்னோம். இட ஒதுக்கீடு தேவை ஏனென்றால்

ஒதுக்கீட்டைச் செய்து விட்டு, அந்த இட ஒதுக்கீடு நகராட்சித் தேர்தல்களுக்கும். மாநகராட்சித் தேர்தல்களுக்கும் இல்லை என்றால் நாளைக்கு இதையே காரணமாகக் காட்டி கூட ஒருவர் கோர்ட்டுக்குச் செல்லவும் முடியும். அப்படிப்பட்ட நிலைமைகள் இல்லாமல், எல்லோருக்கும் இட ஒதுக்கீடு வேண்டுமென்ற கொள்கையைத்தான் இந்த அரசு கடைப்பிடித்து வருகிறது. ஆகவே கொள்கை என்று வருகின்ற நேரத்தில் எப்படிப்பட்ட நிலை ஏற்பட்டாலும்அதைக் காப்பாற்றியாக வேண்டுமென்ற எண்ணம் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்திற்கும், தமிழகத்தின் முதல்வரவர்களுக்கும் இருக்கிறது என்பதை நான் பணிவோடு தெரிவித்துக் கொள்கிறேன். எங்களுக்குக் கொள்கையே முக்கியம். எங்கள் கொள்கை இட ஒதுக்கீடு தேவை என்பது. இட ஒதுக்கீடு இல்லாமல் தேர்தல் வரக்கூடாது என்பது எங்கள் கொள்கை. அந்தக் கொள்கையின் அடிப்படையிலே இந்தத் தேர்தலை நடத்த, நடைமுறைப்படுத்த வேண்டுமென்று நாங்கள் நடவடிக்கைகளை எடுத்துக்கொண்டிருக்கிறோம்.

உச்ச நீதிமன்றத்திலே இருக்கின்ற மேல் முறையீட்டையும், இதற்குத் தடை இல்லை என்ற கருத்தையும் சொன்னார்கள். உண்மையில் தடை என்பது பெயர் அளவில் இல்லை. ஆனால் மேல் முறையீடு, அட்மிஷன், அனுமதியாகியிருக்கிறது என்றால், 2845/82 என்ற மேல் முறையீடு உச்ச நீதிமன்றத்தில் நிலுவையில் இருக்கிறது. அப்படி அட்மிஷன் ஆகிவிட்டதாலே தடை கொடுக்காவிட்டாலும் அந்த வழக்கு முடிந்த பிறகு நாம் தேர்தலை வைத்துக் கொள்வது சரியாக இருக்கும். அவ்வாறு இன்றி முன்கூட்டியே இந்தத் தேர்தலை நடத்திவிட்டால் மேல் முறையீட்டின் காரணமாக, நாம் கொடுத்த ஒதுக்கீடு சரியல்ல என்று உச்ச நீதிமன்றத்திலிருந்து தீர்ப்பு கிடைத்தால் நாம் என்ன செய்யப் போகின்றோம்? யார் யார் தேர்ந்து எடுக்கப்பட்டார்களோ அவர்களையெல்லா வீட்டுக்கு அனுப்பப்போகிறோமா? அதற்காக செலவழிக்கின்றோமே பணம், ஒரு கோடியோ இரண்டு கோடியோ இந்த அரசின் மூலம் செலவு செய்யப்படும் பணம் வீணாகப் போகிறது அல்லவா?

இதையெல்லாம் நினைத்துப் பார்த்துத்தான் நாம் உச்ச நீதிமன்றத்திலே உள்ள வழக்கு எவ்வளவு சீக்கிரமாக முடிகிறதோ அதை முடித்த பிறகு தேர்தலை நடத்த வேண்டுமென்றுதான் பஞ்சாயத்துத் தேர்தல்களே இப்பொழுது வேண்டாம் என்று அனைத்துக் கட்சித் தலைவர்களும் சொன்னதன் அடிப்படையிலே பரிசீலித்தோம்.

ஆகவே, அந்த மேல் முறையீட்டிலே சீக்கிரமாக நடத்த வேண்டுமென்று அனைத்துக் கட்சித் தலைவர்களும் கடந்த 28—11—82லே கூடிய கூட்டத்திலே கேட்டுக்கொண்டார்கள்.





அதற்கிணங்க 5—12—82 ஆம் தேதி ஒரு மனுவைத் தாக்கல் செய்தோம். எக்ஸ்பெடிஷன் பெட்டிஷன் என்று தாக்கல் செய்யப்பட்டு, 8—4—83லே உச்ச நீதிமன்றத்திலே விசாரணைக்கு எடுத்துக்கொள்ள இருக்கிறார்கள்.

நகராட்சிகளுக்கும், மாநகராட்சிகளுக்கும் இந்த ஒதுக்கீட்டுக்கு உண்டான திருத்தத்தை இப்பொழுதே, இந்தச் சட்டசபைத் தொடர் கூட்டத்திலேயே நிறைவேற்றி விட்டால், அந்தத்தீர்ப்பும் முடிந்து விட்டால் இவைகளையெல்லாம் வைத்துக்கொண்டு தேர்தலை நடத்துவதற்கு ஏதுவாக இருக்கும் என்பதால் அந்த அறிவிப்பைக் கொடுத்தோம்.

(பிற்பகல் 2-10)

ஆகவே, கண்டிப்பாக வருகிற நான்கு மாதங்களுக்குள்ளாக இந்தத் தேர்தல்களை நடத்தமுடியும். யாருக்கும் சந்தேகம் வேண்டாம். உங்களுக்கு இருக்கிற சந்தேகம் எல்லாம் ஏற்கனவே வழக்குமன்றத்திற்குப் போய் விட்டது, இனிமேல் நாம் இட ஒதுக்கீடு செய்தால் யாராவது வழக்குமன்றத்திற்குப் போய் தடை பெற்று விடுவார்களோ, தேர்தல்கள் நடக்காதோ என்பது. உண்மையில் உங்கள் எண்ணத்தை நான் பாராட்டுகிறேன். நீங்கள் எண்ணுவது, உங்களுடைய எண்ணம் தேர்தல்கள் நடக்க வேண்டும் என்ற அந்த பொது எண்ணம் ஏற்பட்டுள்ளதை நான் பாராட்டுகிறேன். அதே எண்ணத்தைத்தான் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகமும் ஏற்றுக்கொண்டிருக்கிறது. எங்களுக்கும் சீக்கிரம் தேர்தல்களை நடத்தவேண்டும்என்ற எண்ணம்தான். தேர்தலை நடத்தாமல் இங்கு ஒரு அமைச்சர் உட்கார்ந்துக்கொண்டு 40,000க்கு மேற்பட்ட குடியிருப்புகள், 12,569 ஊராட்சி மன்றங்கள், 626 பேரூராட்சிகள், 106 நகராட்சிகள், மூன்று மாநகராட்சிகள் இவைகளுக்கு ஒரு அமைச்சர் இருக்க வேண்டும் என்பதல்ல. எல்லா இடங்களிலும் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள் வரவேண்டும் என்ற எண்ணம் தான் எங்களுக்கும் இருக்கிறது. ஆகவே அந்த அடிப்படையில் சீக்கிரமாக, நான்குமாதங்களுக்குள்ளாக இந்தத் தேர்தலை நடத்துவதற்குரிய நடவடிக்கைகளில் நாங்கள் ஈடுபட்டிருக்கிறோம்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. செல்வராசன் அவர்கள் ஒ[illegible] கருத்துத் தெரிவித்தார்கள். குறிப்பாக இன்று 21 வயது வந்[illegible] வர்களுக்கெல்லாம் வாக்காளர் பட்டியல் எடுத்துக்கொண்டிரு[illegible] கிறார்கள். நீங்கள் 18 வயது வந்தவர்கள் என்று சொல்[illegible] வாக்காளர் பட்டியல் தயாரிப்பதாகச் சொன்னீர்களே என்[illegible] சொன்னார்கள். இது அசெம்பளி தேர்தலுக்காக. 21 வய[illegible] வந்தவர்கள் வாக்காளர் பட்டியல் தயாரிக்கும் பணி இந்த அரசி[illegible] சார்பில் அது தனியாக நடைபெறுகிறது. ஆனால் நகராட்[illegible] மன்றங்கள், மாநகராட்சிகள் பொறுத்தவரையில் 1-1-198[illegible] அன்று யார் யார் 18 வயது அடைந்திருக்கிறார்களோ அவ[illegible] களையெல்லாம் அடிஷனல் லிஸ்ட் என்ற முறையில் கூடு[illegible]

வாக்காளர் பட்டியல் தயாரிப்பதற்காக அந்த நடவடிக்கைகளை
நாங்கள் எடுத்துக்கொண்டிருக்கிறோம். ஆகவே இந்த இரண்டு
பணிகளும் நடக்கிற காரணத்தால் இது ஏதோ குழப்ப நிலை
என்ற எண்ணம் அவர்களுக்கு ஏற்படக்கூடிய அந்த நிலை
இல்லை. இது நகராட்சிகள் மூலம் நடைபெறுகிற காரியம்.
அது அரசாங்கம் மூலம் 21 வயது வந்தவர்கள் வாக்காளர்கள்
பட்டியல் அசெம்பளி தேர்தலுக்காக எடுக்கப்படக்கூடிய பணி.
ஆகவே இந்தப் பணிதான் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.
வார்டுகளைப் பிரிக்க வேண்டும், வார்டுகளை அதிகமாக்க
வேண்டும் என்ற பணி இந்த இலாகா மூலம் நடைபெற்றுக்
கொண்டிருக்கிறது. அந்தப் பணி தொய்வின்றி தொடர்ந்து
நடைபெறுமானால் நான்கு மாத காலத்தில் தேர்தல்களை
நடத்தமுடியும். யாருக்கும் சந்தேகம் தேவையில்லை; இந்த
அரசு தூய உள்ளத்தோடு, நல்லெண்ணத்தோடு இந்தத் தேர்தல்
களை நடத்தவேண்டும் என்ற அடிப்படையில்தான் செயல்பட்டு
வருகிறது. ஆகவே இதற்கு மாசு கற்பிக்காமல், இந்த அரசு
கொண்டுவருகிற அந்த ஒதுக்கீடுகளுக்கு களங்கம் கற்பிக்காமல்
யாரும் கோர்ட்டுக்குப்போய் தடை பெறாமல் இருந்தால்
போதும், கண்டிப்பாக தேர்தல்கள் நடந்துவிடும். அந்தப்பணிக்கு
நாங்கள் ஆட்படும் விதத்தில் மாண்புமிகு உறுப்பினர்கள்
ஒத்துழைப்பு நல்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டு யார் யார்
வெட்டுத் தீர்மானங்கள் கொடுத்துள்ளார்களோ அவர்கள்
அவற்றைத் திரும்பப்பெற்றுக்கொண்டு இந்த அரசுக்கு எதுவாக
இந்த மானியக் கோரிக்கைகள் வெற்றி பெறுவதில்
அவர்கள் ஈடுபடவேண்டும் என்று கேட்டு அமர்கிறேன்.

**திரு. அ. ரகுமான்கான்:** அரசாங்கம் பெண்களுக்கும், தாழ்த்
தப்பட்ட மக்களுக்கும் இட ஒதுக்கீடு செய்வதை திராவிட முன்
னேற்றக் கழகம் வரவேற்கிறது. அதில் கருத்து வேறுபாடு
இல்லை. ஆனால் ஏற்கனவே பஞ்சாயத்து, பஞ்சாயத்து
யூனியன்கள் சம்பந்தப்பட்ட பிரச்னைகளில் ஒதுக்கீடு செய்தபோது
தென் ஆற்காடு ஜில்லாவில் குறிப்பாக ஒரு கிராமத்தில்
அரிசனங்கள் இல்லாத இடத்தில் அதை அரிசன தொகுதி என்று
அறிவித்த காரணத்தால் பல சிக்கல்கள் ஏற்பட்டதால் கோர்ட்
டுக்குப் போனார்கள். இது போன்ற தவறு நகராட்சிகளில் இட
ஒதுக்கீடு செய்கிறபோது அதனால் பாதிக்கப்படுகிறவர்கள்
கோர்ட்டுக்குப் போவார்கள். அவர்களை யாரும் தடுக்க
முடியாது. ஆகையால் இட ஒதுக்கீடு என்று நீங்கள் அறிவித்து
விட்டாலும் தேர்தல்கள் நடைபெறுவதற்கான வாய்ப்பை தவிர்க்
கிற முறையில்—கட்சிகள் அமைதியாக இருக்கலாம்—பொது
மக்களில் ஒருவர் கோர்ட்டுக்குப் போவதை எப்படி தடுக்க
முடியும்? அப்படிப் போனால் தேர்தல்கள் வரும் என்பதற்கு
என்ன உத்தரவாதம்? எனவே இது ஒரு கண்துடைப்பா என்று
கேட்க விரும்புகிறேன்.





**திரு. என். சங்கரய்யா:** தலைவர் அவர்களே, அமைச்சரவர்கள்
பேசும்போது சுப்ரீம் கோர்ட் இப்போது தடை செய்யாவிட்டா
லும்கூட நாம் தேர்தலை ஏன் நடத்தவில்லையென்பதற்கு
தேர்தலை நடத்தியதற்குப் பிறகும் வழக்கில் வேறு விதமான
முடிவு வந்தால் அது பாதிக்கப்படும் என்ற காரணத்தால் நடத்த
வில்லை என்று சொல்கிறார்கள். இப்போது வரக்கூடிய
ரிசர்வேஷன் சட்டத்திற்கு ஒத்துழைப்பு தாருங்கள் என்கிறார்கள்.
இந்த ரிசர்வேஷன் சட்டத்தை மன்ற உறுப்பினர்கள் ஏற்றுக்
கொண்டு இங்குள்ளவர்கள் ஒத்துழைப்பு தருவது என்ற பிரச்னை
இல்லை. அப்படிப்பட்டதொரு சட்டத்தை நிறைவேற்றிய
பிறகு சுப்ரீம் கோர்ட்டுக்குப் போய் யாராவது ஒருவர்
ஆட்சேபனை செய்வார் என்ற காரணத்தால் இப்போது தடை
இல்லாவிட்டாலும் கூட அதை அமலுக்குக் கொண்டுவர
தயாரில்லை என்று சொன்னால் நீங்கள் சர்வக்கட்சிக் கூட்டம்
கூட்டியிருக்க வேண்டிய அவசியமில்லை. சுப்ரீம் கோர்ட்டின்
முடிவு தெரிந்த பிறகுதான் இதுபற்றிய மற்றப் பிரச்னைகளைப்
பேசமுடியும் என்று நீங்கள் ஒரு வார்த்தை சொல்லியிருந்தால்
பிரச்னை இல்லை. எதற்காக மாநகராட்சி, நகராட்சித்
தேர்தல்கள் பற்றிப் பேசுவோம் என்று அழைத்து அதில் ஒரு
நான்கு மாத திட்டத்தைப் போட்டு—நான்கு மாதங்களுக்குள்
தேர்தல்கள் நடக்கும் என்று உறுதி கொடுத்தால் அதைப் பற்றி
எங்களுக்கு ஆட்சேபனையில்லை. நான் கடைசியாகக் கேட்டுக்
கொள்வது என்னவென்றால், நான்கு மாதங்களுக்குள்ளாக தேர்
தல்களை நடத்துவதற்கு அரசாங்கம் ஒப்புக்கொண்டு அதற்கான
உத்தரவாதத்தை அளித்தால் அது எங்களுக்கு பரம திருப்தி.

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு:** துணைத் தலைவர்
அவர்களே, தேர்தல்களைப் பொறுத்த அளவிலே இது வேண்டும்
என்றே ஆதிதிராவிட மக்களுக்கும், பெண்களுக்கு எல்லாம் இட
ஒதுக்கீடு செய்வது என்பது கண்துடைப்பு என்று ஒரு ஐயப்பாட்
டினை மாண்புமிகு உறுப்பினர் ரகுமான்கான் அவர்கள் தெரிவித்
திருக்கிறார்கள். அது அல்ல. (குறுக்கீடு).

**மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவர்:** நீங்கள் முடித்துவிடுங்கள்.

**திரு. அ. ரகுமான்கான்:** மாண்புமிகு மன்றத்தினுடைய
துணைத் தலைவர் அவர்களே, நான் அமைச்சர் அவர்கள்
சொல்வதைப் போல் சொல்லவில்லை. இட ஒதுக்கீடு செய்கின்ற
போது நாங்கள் எங்களை பொறுத்தமட்டிலும் கோர்ட்டுக்குப்
போகவேண்டிய அவசியம் இல்லை என்றுவைத்துக்கொள்ளுங்கள்.
மற்றும் உள்ள அரசியல் கட்சிகளைப் பொறுத்தமட்டில்,
ஏற்கனவே பஞ்சாயத்து யூனியன் சம்பந்தமாக இட ஒதுக்கீட்டில்
சில முறைகேடுகள் என்று சொல்லி, சிலர் வெளியே உள்ளவர்கள்
போய் இருக்கிறார்கள் அல்லவா, அந்த மாதிரி இதிலேயும்
போனால் யார் அவர்களைக் கட்டுப்படுத்த முடியும். எப்படி
தேர்தல் நடக்கும்?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத்
துணைத் தலைவர் அவர்களே, தனிப்பட்டவர்கள் அவர்களுக்கு
என்று ஏற்பட்டிருக்கின்ற நிர்வாகக் குறை காரணமாக, நீதி
மன்றம் செல்வது என்பது வேறு. ஆனால் நாம் எடுத்த
கொள்கை முடிவையே எதிர்த்து உச்சநீதிமன்றத்திற்குச் சென்
றிருக்கிறார்கள். அதாவது பெண்களுக்கு இட ஒதுக்கீடு செய்வது
சரியா என்ற பாயின்ட்டை வைத்துத்தான் அதிலே போய்
இருக்கிறார்கள். உயர்நீதிமன்றத்திலேயும் அப்படித்தான் என்று
நான் கருதுகிறேன். அதாவது கான்ஸ்ட்டிடியூசன்படி இதிலே
ரிசர்வேஷன் செய்வது சரியா என்று போயிருக்கிறார்கள்.
யினாலே இந்தக் கொள்கையிலே நமக்கு ஒரு முடிவு கிடைத்து
விட்டால் மற்ற பிரச்னைகள் எல்லாம் தீர்ந்துவிடும். ஆகை
தான் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்கிறார்கள்.
வருகின்ற ஏப்ரல் மாதம் 8-ஆம் தேதி வருகிறது. அதைத்
நமக்கு ஒரு தெளிவான நிலை கிடைக்கும் என்ற அதற்குப் பிறகு
சொல்கிறார்கள். இதை மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர்கள் வகையிலே
ஏற்றுக்கொள்ளவேண்டும்.

திரு. என் சங்கரய்யா: நீங்கள் சொல்வது உண்மை. டெல்லி
உயர்நீதிமன்றம் இந்தச் சட்டத்தினுடைய கோட்பாடு சரி என்று
ஏற்றுக் கொண்டிருக்கிறது. அதை எதிர்த்து அவர்கள்
அப்பீலுக்குப் போய் இருக்கிறார்கள். அதுதான் பிரச்சினை.
ஆனால் அவர்கள் சுப்ரீம் கோர்ட்டிலே கேட்டிருக்கிறார்கள்.
இதற்கு ஸ்டே கொடுக்க வேண்டும், நடவடிக்கை எடுக்கக் கூடாது
என்று அந்த பார்ட்டிஸ் கேட்டபோது சுப்ரீம் கோர்ட் சொல்லி
விட்டது' உங்களுக்கு நாங்கள் ஸ்டே கொடுக்கமாட்டோம்.
அவர்கள் இந்தச் சட்டம் வரவில்லை என்று சொல்லிவிட்டார்கள்.
அதாவது நோட்டிபிகேசன் என்று வந்து, அதற்குப்பிறகு வந்தால்
தான் இந்தப் பிரச்னை வரும் என்று. நாம் தைரியமாக இந்த
நோட்டிபிகேசன் கொடுப்பது, அதற்காக ஏற்பாடு செய்வது,
அப்புறம் போனால் அதைத் தடுக்க முடியாது. ஏன் இதை
அரசாங்கம் செய்யக்கூடாது என்று தான் கேட்கிறோம்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: துணைத் தலைவர்
அவர்களே, இதிலே இருக்கின்ற இடர்பாடுகளை நாம் கவனிக்க
வேண்டும். ஏனென்றால், உச்சநீதிமன்றத்திற்கு அவர்கள் சென்
றிருக்கிறார்கள். இன்று கான்ட்டிடியூசனல் வேலிடிட்டி இருக்
கிறதா என்ற கேள்வியை அவர்கள் கேட்டிருக்கிறார்கள்.
பெண்களுக்கு ஒதுக்கீடு செய்தது சரியா, அது அரசியல் சாசனப்
படி செல்லுமா என்ற கேள்வி எழுந்திருக்கிறது. ஆகவேதான்
இது உயர்நீதிமன்றத்திலே இருக்கின்ற காரணத்தினாலேதான்,
அதுமட்டுமல்லாமல் அட்மிசன் கொடுத்திருக்கிறார்கள். அப்படி
அட்மிசன் கொடுக்காமல், அவர்கள் மேல்முறையீடுகள் மட்டுமே
அங்கே இருந்தால் அந்த நிலைமையைப் பற்றி நாம் கவலைப்பட
வேண்டியது இல்லை. அட்மிசன் கொடுத்துவிட்டதாலே,
கான்ஸ்ட்டிடியூசன் வேலிடிட்டி, கான்ஸ்டட்டிடியூசனல் பாயின்ட்
கேட்க விரும்புகிறேன.



அங்கே இருக்கிறது என்பதும், அரசியல் சாசனப்படி விவாதிக்க
வேண்டிய பிரச்னைகள் இருக்கிறது என்பதும் நமக்கு தெளிவா
கிறது. தேர்தல் நடத்தவேண்டும் என்று நாம் குறிப்பிட்ட
உடனே அவர்கள் தடை கொடுப்பார்கள். அதுதான் ஏனென்றால்
எங்களுக்கு கொடுக்கக்கூடிய குறிப்புகள் எல்லாம் பஞ்சாயத்துக்
களுக்கு தேர்தல் தேதியைக் குறிப்பிட்டுவிட்டால், உடனடியாக
அவர்கள் அங்கே இருக்கின்ற கோர்ட் தடை விதித்துவிடும்.
ஆகவே அப்படிப்பட்ட நிலை இருப்பதால்தான் சொல்கிறேன்.
இதிலே யாருக்கும் பயப்படத் தேவையில்லை. நாங்கள எதற்
காக பயப்படவேண்டும். நாங்கள் எல்லோரும்தான் மக்களைச்
சந்திக்கபோகிறோம். அதேநேரத்தில் தனிப்பட்ட ஒன்றியங்
களைப் பொறுத்தவரையில் மாண்புமிகு ரகுமான்கான் அவர்கள்
சொன்னார்கள். கடந்த 1982–லே நாம் அந்த தேர்தலைக்
கொண்டு வந்தநேரத்திலே தென் ஆற்காடு மாவட்டத்திலுள்ள
அண்ணா கிராமம் ஒன்றியத்திலுள்ள ஒருசில கிராமங்களைக்
குறித்து இந்த அவையின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன.
இப்போது உயர்நீதிமன்றம் நமக்கு சில மாடலிட்டிகளை, சில
கைட்லைன்ஸ்களைக் கொடுத்திருக்கிறார்கள். ஆகவே அந்த
கைட்லைன்ஸ்படிதான் செயல்பட முடியும். ஆகவே இனிமேல்
அப்படிப்பட்ட தவறுகள் கண்டிப்பாக வராது என்பதுதான்
என்னுடைய திடமான எண்ணம்.

திரு. நா. சுந்தரராஜ்: மாண்புமிகு அமைச்சர் அவர்கள்
சொல்கின்ற நேரத்தில் தமிழகத்தினுடைய இந்திரா காங்கிரசார்
ரன் இந்த அரசாங்கத்தைப் பாராட்டக்கூடாது என்று சொன்
னார்கள். ஒன்றை நான் தெளிவாகச் சொல்ல விரும்புகிறேன்.
காங்கிரஸ் கட்சியைப் பொறுத்தவரையில் இது ஒரு எதிர்க்கட்சி
தானே தவிர, எதிரிக் கட்சி அல்ல. அதேநேரத்தில் நீங்கள்
ங்களை விமர்சனம் செய்கின்ற நேரத்தில் நாங்கள் திருப்பி
விமர்சனம் செய்வதற்குக் கடமைப்பட்டிருக்கிறோம். அதைத்
நான் செய்துக் கொண்டிருக்கிறோம். அதேபோல் காங்கிரஸ்
கட்சி தமிழகத்திலேயிருந்து விரட்டப்பட்டுக் கொண்டிருப்பது
போன்ற ஒரு உணர்வை அவர்கள் சொல்லியிருக்கிறார்கள்,
அதற்கான காரணம் திருச்செந்தூர் தேர்தலிலே நாங்கள் பெற்ற
வோட்டுகளும், கிடைத்த தோல்வியும் என்று சொன்னார்கள்.
அதேநேரத்தில் அவர்கள் ஒன்றைச் சொன்னார்கள். பங்காளிகள்
சண்டையிலே காங்கிரஸ் கட்சி லாபம் பெறப் பார்க்கிறது என்று
சொன்னார்கள்.

*(பிற்பகல் 2–20)*

ஒரு அரசியல் கட்சிக்கு தேர்தலில் தோல்வியும் சகஜம், வெற்றி
யும் சகஜம். அதைப்பற்றி சோர்வடையவோ வருத்தப்படவோ
தேவையில்லை. ஆனால் நான் கேட்க விரும்புவது என்னவென்
றால், மாண்புமிகு அமைச்சர் குழந்தைவேலு அவர்களுக்கு
எதிர்க்கட்சித் தலைவர்மீது எப்போது பாசம் ஏற்பட்டது?
மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் கலைஞர் அவ...

[திரு. நா. சுந்தரராஜ்] [1983 மார்ச் 17

தமிழர் அல்ல என்று சொன்ன அமைச்சர் குழந்தைவேலு அவர்களுக்கு பங்காளி என்று சொல்லும் நிலை எப்படி வந்தது?

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: விவாதம் முடிவுற்றது இப்போது வாக்கெடுப்பு.

கோரிக்கை எண் 28— சமுதாய நல வளர்ச்சித் திட்டங்களும் நகராட்சி நிர்வாகமும்.

திருவாளர்கள் மு. அரங்கநாதன், கே. கல்லன், ரா. கிருஷ்ணன் எம். ஆறுமுகம் ஆகியவர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளப் பெற்றன.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி:

''மானியக் கோரிக்கை எண் 28—சமுதாய நல வளர்ச்சித் திட்டங்களும் நகராட்சி நிர்வாகமும் என்ற தலைப்பின்கீழ் ரூ.1,40,21,14,000—க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெற வேண்டும்''.

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, கோரிய தொகை அரசுக்கு வழங்கப் பெற்றது.

கோரிக்கை எண் 39—சாலைகளும் பாலங்களும்.

திருவாளர்கள் த. வேணுகோபால், எல். இளையபெருமாள், டி. மணி ஆகியவர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன், திரும்பப்பெற்றுக்கொள்ளப்பெற்றன.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி:

''மானியக் கோரிக்கை எண் 39—சாலைகளும் பாலங்களும் என்ற தலைப்பின்கீழ் ரூ.67,54,80,000—க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்.

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்று, கோரிய தொகை அரசுக்கு வழங்கப் பெற்றது.

கோரிக்கை எண் 53—சாலைகள் பாலங்கள் குறித்த மூலதனச் செலவு.

திருவாளர்கள் பெ. சு. திருவேங்கடம், கே. எம். தங்கமணி ரா. கிருஷ்ணன் ஆகியவர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன், திரும்பப் பெற்றுக் கொள்ளப் பெற்றன.



மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி:—

''மானியக் கோரிக்கை எண் 53—சாலைகள்பாலங்கள் குறித்த மூலதனச் செலவு என்ற தலைப்பின் கீழ் ரூ.27,62,77,000—க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெறவேண்டும்.''

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, கோரிய தொகை அரசுக்கு வழங்கப் பெற்றது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, 18.3.1983 காலை 9.00 மணிக்கு பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 2.22 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

8. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

(அ) சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்

எதுவுமில்லை.

(ஆ) அறிக்கைகள், அறிவிப்புகள், ஏனைய தாள்கள்

77. கோரிக்கை எண். 28—ன் மீதான சமுதாய வளர்ச்சி மற்றும் நகர நிர்வாகம் பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு 1983—84 (தமிழ், ஆங்கிலம்).

78. கோரிக்கை எண். 39— சாலைகளும் பாலங்களும், மற்றும் கோரிக்கை எண் 53—சாலைகளும் பாலங்களுக்கான மூலதனச் செலவு ஆகியவற்றின் மீதான தமிழ்நாட்டில் சாலை மேம்பாட்டுத் திட்டங்கள் பற்றிய 1982—83 ஆம் ஆண்டிற்கான ஆய்வுரையும், 1983—84 ஆம் ஆண்டிற்கான திட்டங்களும் (தமிழ் ஆங்கிலம்).

79. சமுதாய வளர்ச்சி கோரிக்கையைச் சார்ந்த செயல் ஆக்க வரவு செலவுத் திட்டம், 1983—84 (தமிழ், ஆங்கிலம்).

80. 1982—83 ஆம் ஆண்டு சாலைகளும், பாலங்களும் மீதான மானியக் கோரிக்கையின் மீது நடைபெற்ற விவாதத்தின் போது சட்டமன்றப் பேரவை உறுப்பினர் [illegible] ஆலோசனைகளின் மீது எடுக்கப்பட்ட [illegible] விவர அறிக்கை (தமிழ், ஆங்கிலம்).

## இணைப்பு I.

(502ம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.)

கோரிக்கை எண் 28 சமுதாய நல வளர்ச்சித் திட்டங்களும், நகராட்சி நிர்வாகமும்.

### முன்னுரை.

தமிழகத்தில் தற்போது 378 ஊராட்சி ஒன்றியங்களும்,
620 பேரூராட்சிகளும், 106 நகராட்சிகளும், உள்ளன. இந்த
உள்ளாட்சி அமைப்புகளின் பிரச்சினைகளை நிவர்த்திக்கவும்
தேவைகளை மட்டும் பூர்த்தி செய்யவும் முறையான
நடவடிக்கைகளும், பயனளிக்கும் முறையில் அவற்றை செயல்
படுத்தும் திட்டங்களும் இன்றியமையாதவையாகின்றன. இந்த
நோக்கத்துடன் கிராமப்புறங்களில் பொருளாதார மாற்றத்தை
ஏற்படுத்துவதற்காக, தன்னிறைவுத் திட்டம், தேசிய ஊரக
வேலை வாய்ப்புத்திட்டம், ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித்
திட்டம் போன்ற சிறப்புத் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு
வருகின்றன. ஏழை மக்களின் நன்மையைக் கருத்தில் கொண்ட
மேலே கூறப்பட்ட நல்வாழ்வுத் திட்டங்கள் தமிழ்நாட்டில்
வறுமையை ஒழிப்பதற்கு உறுதுணையாக இருக்கும். இந்தத்
திட்டங்களோடு, 1983–84 ஆம் நிதியாண்டில் ரூ. 1,500
இலட்சம் மதிப்பீட்டில் மாண்புமிகு முதல்வரால் வழங்கப்
பட்டுள்ள "குடும்பத்தில் ஒருவருக்கு வேலை" என்ற புதிய
திட்டமும் எல்லா ஊராட்சி ஒன்றியங்களிலும் செயலாக்கப்படும்.
இத்திட்டங்கள் கிராமப்புற மக்களிடையே வேலையில்லாத்
திண்டாட்டத்தை பெரும் அளவில் போக்கி, அவர்களின்
பொருளாதார மேம்பாட்டிற்கு வழிகோலும் என்று நம்பப்
படுகிறது. சுருக்கமாகக்கூறின், கிராமப்புற மக்கள் விழிப்புணர்வு
பெற்று, பொருளாதார வளர்ச்சிக்கு உறுதுணையாக நிற்கும்
வகையில் இந்த மேம்பாட்டுத் திட்டங்களில் பங்கேற்பார்கள்.



### ஊரக வளர்ச்சி.

### I. ஊரக வளர்ச்சி இயக்ககம்.

#### 1. அடிப்படைத் தேவைகள்—வளர்ச்சித் திட்டங்கள்.

#### (1) தன்னிறைவுத் திட்டம்.

குறிப்பிட்ட கால அளவுக்குள், கிராமப்புற மக்களின் சமுதாய, பொருளாதார வளர்ச்சிக்காக அவர்களுக்கு குடிநீர், சாலை, பள்ளிக்கூடங்கள் போன்ற அடிப்படை வசதிகள் செய்து தருவதை தலையாய குறிக்கோளாகக் கொண்ட தன்னிறைவுத் திட்டம் அரசினரால தொடங்கப்பட்டது.

அடிப்படைத் தேவையான வசதிகள் பல இருந்தாலும் உடனடியாகத் தேவைப்படும் அத்தியாவசியத்தையும் நிதி நிலைமையையும் கருத்தில் கொண்டு பின்வரும் அடிப்படை வசதிகளுக்கு முதன்மை அளிக்கப்பட்டது:—

(1) பாதுகாக்கப்பட்ட குடிநீர் விநியோகம்.

(2) இணைப்புச் சாலைகள்,

(3) சிறு பாலங்கள்.

(4) ஆதிதிராவிட மக்கள் குடியிருப்பிலிருந்து இடுகாட்டிற்குச் செல்லும் சாலைகள்.

(5) சிறுபாசனத் திட்டங்கள் அபிவிருத்தி.

(6) ஊரக மருந்தகங்கள்.

(7) மகப்பேறு மற்றும் குழந்தைகள் நல சாப்பகங்கள்.

(8) பள்ளிக்கட்டிடங்கள்.

(9) ஆதிதிராவிட மக்களுக்கான குடியிருப்புகள்.

இத்திட்டம் மூன்று கட்டங்களாக எல்லா ஊராட்சி ஒன்றியங்களிலும் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது,

| | | | |
|---|---|---|---|
| முதல கட்டம் | 1980–81 | 69 | ஊராட்சி ஒன்றியங்கள். |
| இரண்டாம் கட்டம் | 1981–82 | 150 | ஊராட்சி ஒன்றியங்கள். |
| மூன்றாம் கட்டம் | 1982–83 | 159 | ஊராட்சி ஒன்றியங்கள். |
| மொத்தம் .. | | 3[illegible] | ஊராட்சி ஒன்றியங்கள். |

1980–81 மற்றும் 1981–82 ஆம் ஆண்டுகளில் பின்வரும் பணிகள் முடிக்கப்பட்டன:

| பணிகளின் விவரம். (1) | செலவிடப்பட்ட தொகை 1980–81 (2) | செலவிடப்பட்ட தொகை 1981–82. (3) | சாதனை 1980–81. (4) | சாதனை 198 –82. (5) |
|---|---|---|---|---|
| | (ரூபாய் இலட்சத்தில்.) | | | |
| 1 குடிநீர் விநியோகம் .. | 1,950·21 | 2,031.00 | 2,534 குடியிருப்புகள். | 2,552 குடியிருப்புகள். |
| 2 இணைப்புச் சாலைகள் .. | 1,239.60 | 2,672.03 | 6,602.66 கி. மீ. | 11,971.50 கி. மீ. |
| 3 சிறு பாலங்கள் .. | 350.86 | 1,620.85 | 3,046 எண்ணிக்கை. | 12,460 எண்ணிக்கை. |
| 4 ஆதி திராவிடர் குடியிருப்புகளில் இருந்து இடுகாட்டுக்குச் செல்லும் பாதைகள் .. | 79,89 | 46.25 | 927.71 கி. மீ. | 859.10 கி. மீ. |
| 5 சிறுபாசனத் திட்டங்களின் அபிவிருத்தி .. | 68.67 | 51.20 | 1,023 எண்ணிக்கை. | 563 எண்ணிக்கை. |
| 6 ஊரக மருந்தகங்கள் .. | 47.43 | 112.10 | 82 | 171 |
| 7 மகப்பேறு மற்றும் குழந்தைகள் நல காப்பகங்கள் .. | 118.95 | 296·45 | 237 | 483 |
| 8 பள்ளிக்கூடக் கட்டிடங்கள் .. | 487.45 | 1,021.45 | 949 | 1,873 |
| மொத்தம் .. | 4,343.06 | 7,851.33 | .. | .. |



1982–83 ஆம் ஆண்டிற்கான நிதி மற்றும் சாதனை இலக்குகளும், 31—1—1983 வரையிலான சாதனைகளும் பின்வருமாறு தரப்படுகின்றன:

| வரிசை எண்ணும், பணிகளின் விவரமும். (1) | பணிகள் இலக்கு. (2) | நிதி ஒதுக்கீடு இலக்கு. (3) (ரூபாய் இலட்சத்தில்) | 31—1—83 வரை முடிக்கப்பட்ட சாதனை பணிகள். (4) | 31—1—83 வரை முடிக்கப்பட்ட சாதனை நிதி. (5) (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|---|---|
| 1 குடிநீர் விநியோகம் .. | 2,792 குடியிருப்புகள் | 2,200.00 | 1,676 குடியிருப்புகள் | 1,388.27 |
| 2 இணைப்புச் சாலைகள் .. | 5,505.66கி.மீ. | 2.013.55 | 4,040.30கி. மீ. | 1,438.60 |
| 3 சிறு பாலங்கள் .. | 13,710 எண்ணிக்கை | 1,854.52 | 10,149 எண்ணிக்கை | 1,466 68 |
| 4 ஆதி திராவிடர் குடியிருப்புகளில் இருந்து இடுகாட்டுக்குச் செல்லும் பாதைகள் (க) .. | 1,339.00 கி.மீ. | 152.57 | 947.80 கி.மீ. | 100.56 |
| 5 சிறு பாசனத் திட்டங்களின் அபிவிருத்தி (க) .. | 929 எண்ணிக்கை | 135.80 | 585 எண்ணிக்கை | 61.90 |
| 6 ஊரக மருந்தகங்கள் .. | 215 எண்ணிக்கை | 139.85 | 99 எண்ணிக்கை | 113.53 |
| 7 மகப்பேறு மற்றும் குழந்தைகள் நல காப்பகங்கள் .. | 468 எண்ணிக்கை | 280.65 | 192 எண்ணிக்கை | 232.06 |
| 8 பள்ளிக்கூடக் கட்டிடங்கள் .. | 2,359 எண்ணிக்கை | 1,499.24 | 1,011 எண்ணிக்கை | 1,216.64 |
| மொத்தம் .. | | 8,276.18 | | 6,018.24 |

(க) இப்பணிகள் தேசிய ஊரக வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன.

...தேசிய ஊரக வேலை வாய்ப்பு திட்டம்.

தேசிய ஊரக வேலை வாய்ப்பு திட்டம் 1980 அக்டோபர் முதல் மத்திய அரசு உதவியோடு செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் செலவினை தமிழ்நாடு அரசும், மத்திய அரசும் சமமாக பகிர்ந்து கொள்கின்றன. 1982-83 ஆம் ஆண்டின் மொத்த நிதி ஒதுக்கீடு ரூபாய் 3,120 இலட்சங்களாகும். இந்நிதியாண்டில் மத்திய அரசும், மாநில அரசும் அளித்த நிதி மற்றும் அரிசியின் அளவு வருமாறு :

| | நிதி (ரூபாய்) | அரிசி |
|---|---|---|
| மத்திய அரசு | 855.34 இலட்சம் | 14,890 மெ. ட. |
| மாநில அரசு | 1221.00 இலட்சம் | |
| மொத்தம் | 2076·34 இலட்சம் | 14,890 மெ. ட. |

31—1—83 முடிய செலவழிக்கப்பட்ட நிதி மற்றும் அரிசியின் அளவு கீழ் வருமாறு :—

| | 1—4—82 அன்றுள்ள ஆரம்ப நிலை. (ரூபாய்) | 1982—83-ல் ஒதுக்கீடு. (ரூபாய்) | மொத்தம். (ரூபாய்) | 31—1—83 முடிய செலவு. (ரூபாய்) | 31—1—83 அன்று இருப்பு நிலை. (ரூபாய்) |
|---|---|---|---|---|---|
| நிதி .. | 1,075.41 இலட்சம். | 2,076.34 இலட்சம். | 3,151.66 இலட்சம். | 3,064.54 இலட்சம். | 162.69 இலட்சம். |
| அரிசி .. | 14,585 மெ.ட. | 14,890 மெ.ட. | 29,475 மெ.ட. | 20,569 மெ.ட. | 8,906 மெ.ட. |



(i) முந்தைய ஆண்டுகளில் தொடங்கி முடிக்கப்பட வேண்டிய பணிகள்:

| வரிசை எண்ணும், மாவட்டங்களும். (1) | | | முந்தைய ஆண்டுகளில் நிலுவையிலிருந்து நடப்பு நிதி ஆண்டிற்குக் கொண்டு வரப்பட்டவை. (2) | 31—1—1983 வரை முடிக்கப்பட்டவை. (3) | 31—1—1983 அன்று நிலுவையில் உள்ளவை. (4) |
|---|---|---|---|---|---|
| செங்கற்பட்டு | .. | .. | 1,194 | 1.128 | 66 |
| தென் ஆற்காடு | .. | .. | 1,226 | 940 | 286 |
| தஞ்சாவூர் | எஞ்சியுள்ள பணிகள் ஏதும் இல்லை. | | | .. | .. |
| புதுக்கோட்டை | .. | .. | 209 | 176 | 33 |
| திருச்சிராப்பள்ளி | .. | .. | 1179 | 1020 | 159 |
| இராமநாதபுரம் | .. | .. | 2376 | 2376 | இல்லை |
| மதுரை | .. | .. | 835 | 828 | 7 |
| திருநெல்வேலி | .. | .. | 697 | 637 | 60 |
| கன்னியாகுமரி | .. | .. | 728 | 687 | 41 |
| வட ஆற்காடு | .. | .. | 1,060 | 1,034 | 26 |
| பெரியார் | .. | .. | 129 | 129 | இல்லை |
| சேலம் | .. | .. | 524 | 479 | 45 |
| தர்மபுரி | .. | .. | 1,037 | 1,010 | 27 |
| கோயம்புத்தூர் | .. | .. | 382 | 357 | 25 |
| நீலகிரி | .. | .. | 108 | 105 | 3 |
| மொத்தம் | .. | | 11,684 | 10,906 | 778 |

(ii) 1—4—1982 முதல் எடுக்கப்பட்ட புதிய வேலைகள் :

| வரிசை எண்ணும் மாவட்டங்களும். (1) | எடுக்கப்பட்ட புதிய பணிகள். (2) | 31—1—1983 வரை முடிக்கப் பட்டவை. (3) | நிலுவையில் உள்ளவை. (4) |
|---|---|---|---|
| 1 செங்கற்பட்டு .. .. | 2,260 | 1,422 | 838 |
| 2 தென் ஆற்காடு .. .. | 2,501 | 1,728 | 773 |
| 3 தஞ்சாவூர் .. .. | 5,515 | 3,915 | 1,60[illegible] |
| 4 புதுக்கோட்டை .. .. | 2,728 | 1,404 | 1,324 |
| 5 திருச்சிராப்பள்ளி .. .. | 4,521 | 3,774 | 747 |
| 6 இராமநாதபுரம் .. .. | 3,510 | 1,385 | 2,115 |
| 7 மதுரை .. .. | 3,495 | 2,126 | 1,369 |
| 8 திருநெல்வேலி .. .. | 4,792 | 3,187 | 1,605 |
| 9 கன்னியாகுமரி .. .. | 1,484 | 759 | 725 |
| 10 வட ஆற்காடு .. .. | 5,456 | 4,582 | 1,874 |
| 11 பெரியார் .. .. | 1,642 | 1,204 | 438 |
| 12 சேலம் .. .. | 1,637 | 1,034 | 603 |
| 13 தர்மபுரி .. .. | 2,926 | 1,837 | 1,089 |
| 14 கோயம்புத்தூர் .. .. | 1;622 | 1,027 | 595 |
| 15 நீலகிரி .. .. | 660 | 227 | 433 |
| மொத்தம் .. | 44,749 | 28,611 | 16,139 |



(iii) பள்ளிக் கட்டிடங்கள் :

| வரிசை எண்ணும் மாவட்டங்களும். (1) | ஒதுக்கப்பட்ட பள்ளிக் கட்டிடங்களின் எண்ணிக்கை. (2) | 31—1—1983 வரை முடிக்கப் பட்டவை. (3) | 31—1—1983 அன்று நிலுவையில் உள்ளவை. (4) |
|---|---|---|---|
| 1 செங்கற்பட்டு .. .. | 162 | 58 | 104 |
| 2 தென் ஆற்காடு .. .. | 204 | 103 | 95 |
| 3 தஞ்சாவூர் .. .. | 204 | 200 | 4 |
| 4 புதுக்கோட்டை .. .. | 72 | 39 | 33 |
| 5 திருச்சிராப்பள்ளி .. .. | 186 | 121 | 65 |
| 6 இராமநாதபுரம் .. | 192 | 88 | 104 |
| 7 மதுரை .. .. | 204 | 200 | 4 |
| 8 திருநெல்வேலி .. .. | 186 | 102 | 84 |
| 9 கன்னியாகுமரி .. .. | பள்ளிக் கட்டிடங்கள் ஏதும் ஒதுக்கப்படவில்லை. | | |
| 10 வட ஆற்காடு .. .. | 216 | 216 | இல்லை. |
| 11 பெரியார் .. .. | 34 | 34 | இல்லை. |
| 12 சேலம் .. .. | 210 | 202 | 8 |
| 13 தர்மபுரி .. .. | 96 | 94 | 2 |
| 14 கோயம்புத்தூர் .. .. | 34 | 34 | இல்லை |
| 15 நீலகிரி .. .. | பள்ளிக் கட்டிடங்கள் ஏதும் ஒதுக்கப்படவில்லை. | | |
| மொத்தம் .. | 2,000 | 1,497 | 503 |

(iv) சமுதாயக் கூடங்கள்.

2,500 சமுதாயக் கூடங்கள் கட்டுவதற்கு எடுத்துக் கொள்ளப்பட்டன. அவற்றில் 1983 ஆம் ஆண்டு சனவரித் திங்கள் முடிய 938 சமுதாயக் கூடங்கள் கட்டி முடிக்கப்பட்டன.

(3) ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம்.

மத்திய அரசால் 1978–79 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்ட
ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித்திட்டம் தற்போது தொடர்ந்து
செயல்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் குறிக்கோள்
சமுதாயத்தின் முழு வேலைவாய்ப்பு வசதிகளை
குறிப்பிட்ட கால அளவுக்குள் உற்பத்தித் திட்டங்கள் நல்குவதும்
நலிந்த வர்க்கத்தைச் சேர்ந்தவர்களை உயர்த்துவதும், மூலம்
உழவர்கள், குறுநில உழவர்கள், வேளாண்மைத் சிறு
லாளர்கள், இதர தொழிலாளர்கள், கிராம கைவினைஞர்கள். தொழி
வறுமைக் கோட்டிற்குக் கீழேயுள்ள ஆதி திராவிட குடும்பத்தினர்
ஆகியவர்களுடைய வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதாகும்.
இத்திட்டம் இம்மாநிலத்திலுள்ள எல்லா ஊராட்சி ஒன்றியங்
களிலும் 2–10–80 முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்
திட்டம் மத்திய அரசின் இருபது அம்ச திட்டத்திலும் இடம்
பெற்றிருக்கிறது.

2. 1982–83 ஆம் ஆண்டுயில்
ரூபாய் 8.0 இலட்சம் வீதம் எல்லா ஒரு வட்டாரத்திற்கு
ரூ. 3,008 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டது. வட்டாரத்திற்கும்
செலவினம் மத்திய, மாநில அரசினரால் 50:50 என்ற விகிதத்தில்
ஏற்றுக் கொள்ளப்படுகிறது. மாவட்ட ஊரக இத்திட்டத்தின்
முகமைகளின் திட்ட அதிகாரிகள் மற்றும் பல்வேறு துறைகளைச்
சேர்ந்த தொழில் நுட்ப அலுவலர்களின் உதவியுடன் வளர்ச்சி
ஆட்சியாளர் இத்திட்டத்தை மாவட்ட அளவில் மாவட்ட
வருகிறார்கள். செயல்படுத்தி

3. ஒவ்வொரு வட்டாரத்திலும் இத்திட்டத்தால் ஒவ்வொரு
ஆண்டிற்கும் 600 குடும்பங்கள் உதவி பெறுகின்றன.
வரை, இவ்வாறு உதவிபெற தேர்ந்தெடுக்கப்படும் கூடுமான
களில் 50 சதவிகிதம் தாழ்த்தப்பட்ட இன குடும்பங்
இருக்கவேண்டும் என்று அரசு மாவட்ட ஆட்சியாளர்களுக்கு
அறிவுறுத்தியுள்ளது. இத்திட்டத்தின்கீழ் சிறு உழவர்கள் 25 குடும்பங்களாக
சதவிகிதம் உதவித்தொகையும், குறுநில உழவர்கள்
வேளாண்மைத் தொழிலாளர்கள் மற்றும் ஊரக கைவினைஞர்கள்
ஆகியோர் 33.1/3 சதவிகிதம் உதவித் தொகையும் பெறுவர்.
ஒரு குடும்பத்துக்கான உயர்ந்த பட்ச உதவித்தொகை ரூ. 3000
ஆகும். ஆயினும், மலைவாழ் மக்கள் குடும்பத்துக்கு உயர்ந்த
பட்சமாக ரூ. 5000 உதவித் தொகை அளிக்கப்படுகிறது.
இந்த உதவித்தொகையுடன் வணிக வங்கிகள் மூலம் அதற்கு
சமமான தொகை கடனாக அளிக்கப்படவேண்டும். நிதி
ஒதுக்கீட்டு இலக்கான ரூ. 30.08 கோடியில், 1982 ஆம் ஆண்டு
டிசம்பர் மாதம் வரையில் ரூ. 22.71 கோடி செலவிடப்
பட்டுள்ளது. இது மொத்த நிதி ஒதுக்கீட்டில் 76 சதவீதமாகும்.
இதன்மூலம் 1,86,850 குடும்பங்கள் பயனடைந்துள்ளன.





பெட்டிகளும் செங்கல்பட்டு, வட ஆற்காடு, தென்ஆற்காடு ஆகிய மூன்று மாவட்டங்களில் 559 தொலைக்காட்சிப் பெட்டிகளும் நிறுவப்பட்டுள்ளன. அவைகள் ஊரக வளர்ச்சி இயக்குநரின் கட்டுப்பாட்டில் உள்ள தமிழ்நாடு உள்ளாட்சி வானொலி மற்றும் தொலைக்காட்சி பராமரிப்பு நிறுவனத்தால் பராமரிக்கப்பட்டு வருகின்றன. இவ்வாண்டிலும் 50 தொலைக்காட்சி பெட்டிகள் வைக்க செங்கல்பட்டு, வட ஆற்காடு, தென் ஆற்காடு மாவட்டத்தைச் சார்ந்த 50 ஊராட்சிகளுக்கு ஒரு தொலைக் காட்சிப் பெட்டிக்கு ரூபாய் 1,000/- வீதம் மானியம் அளிக்க திட்டமிடப்பட்டுள்ளது.

11 பொருட்காட்சி

தமிழ்நாடு சுற்றுலா துறையினரால் சென்னை மற்றும் மாவட்ட தலைநகர்களில் பொருட்காட்சிகள் நடத்தப்பட்டு வருகின்றன. ஊரக வளர்ச்சித்துறை இந்த பொருட்காட்சிகளில் பங்கெடுத்து வருகிறது. ஒவ்வொரு ஆண்டும் சமூகக் கல்வி மானியத்தின்கீழ் மாநில அளவில் பொருட்காட்சி நடத்த நிதி ஒதுக்கீடு செய்யப்படுகிறது. 1982-83-ம் ஆண்டுக்கு ரூபாய் 10,700 நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. அண்மையில் அகில இந்திய சுற்றுலா மற்றும் வர்த்தக பொருட்காட்சியில் ஊரக வளர்ச்சி இயக்ககம், பேரூராட்சி இயக்ககம் மற்றும் நகராட்சி இயக்ககம் ஆகிய துறைகள் சார்பில் ஒரு பொது அரங்கு ஏற்படுத்தப்பட்டது.

12 பயிற்சித் திட்டங்கள்

கிராமப்புற மனித சக்தியினை மேம்படுத்துவதற்கு ஊரக வளர்ச்சித்திட்ட ஆரம்ப காலத்திலேயே பயிற்சிமுறை முக்கிய இடம் பெற்றது. ஊரக வளர்ச்சித் திட்டத்தில் பங்கு பெற்றிருக்கும் அலுவலர்கள் மற்றும் பலதரப்பட்ட கிராம மக்களின் தேவைகளை பூர்த்திச் செய்யவும் ஊரக வளர்ச்சி இயக்குநரின் மேற்பார்வையில் கீழ்க்கண்ட ஐந்து பயிற்சி நிலையங்கள் இயங்கி வருகின்றன.—

(1) மாநில ஊரக வளர்ச்சி பயிற்சி நிறுவனம், பவானி சாகர், பெரியார் மாவட்டம்.

(2) நான்கு ஊரக விரிவாக்க பயிற்சி நிலையங்கள்.—

(அ) தே. கல்லுப்பட்டி, மதுரை

(ஆ) பட்டுக்கோட்டை, தஞ்சாவூர் மா

(இ) சத்தியவிஜயநகரம், வட ஆற்காடு மா

(ஈ) கிருஷ்ணகிரி அணை, தருமபுரி மா

[1983 மார்ச் 17

கிராம இளைஞர்களுக்கு சுய வேலை வாய்ப்பு பயிற்சி அளிக்கும் தொழில் பட்டறை பிரிவுகள் மேற்படி பயிற்சி நிலையங்களில் செயல்பட்டு வருகின்றன. மேலும் தே. கல்லுப் பட்டி, சத்தியவிஜயநகர ஊரக விரிவாக்க பயிற்சி நிலையங் களில் மனையியல் பிரிவுகள் உள்ளன. இவற்றில் பாலசேவிகா மற்றும் மகளிர் நலத்துறை பணியாளர்களுக்குப் பயிற்சி அளிக்கப்படுகின்றது.

### பயிற்சிகளின் விவரம்

பவானிசாகர் மாநில ஊரக வளர்ச்சி பயிற்சி நிறுவனத்தில் வட்டார வளர்ச்சி அலுவலர்களுக்கு இரண்டு மாத பணிப் பயிற்சியும் ஊராட்சி விரிவாக்க அலுவலர்கள் மற்றும் பேரூராட்சி நிர்வாக அலுவலர்களுக்கு 15 நாட்கள் சிறப்பு பயிற்சியும், வளர்ச்சித்துறைகளை சார்ந்த மாவட்ட அலுவலர்கள் மற்றும் ஊரக வளர்ச்சி துறையை சார்ந்த அலுவலர்களுக்கு 15 நாட்கள் சிறப்புப் பயிற்சியும் அளிக்கப்பட்டு வருகின்றன. தே. கல்லுப் பட்டி மற்றும் சத்தியவிஜயநகர பயிற்சி நிலையங்களில் உள்ள மனையியல் பிரிவுகளில் பெண் பணியாளர்களுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டு வருகின்றன. இந்த 5 பயிற்சி நிலையங்களிலும் ஊர் நல அலுவலர்களுக்கு 2 மாத புத்துணர்வு பயிற்சி அளித்து ரூ. 100 பயிற்சி உதவிப் பணமும் அளிக்கப்படுகிறது.

### தேவை மற்றும் திறமை அடிப்படையிலான ஒருங்கிணைந்த பயிற்சி.

மேற்கூறப்பட்ட பயிற்சிகளைத் தவிர்த்து ஊரக இளைஞர் சுய வேலை வாய்ப்பு பயிற்சி திட்டத்தின்கீழ் மாவட்ட கிராம வளர்ச்சி முகமைகளால் அனுப்பப்படும் கிராம இளைஞர்களுக்கு பல்வேறு பிரிவுகளில் பயிற்சிகள் அளிக்கப்படுகின்றன. பயிற்சிக் கான உதவித்தொகை மற்றும் இதர செலவுகள் ஒருங்கிணைந்த ஊரக வளர்சித் திட்ட நிதியிலிருந்து அளிக்கப்படுகின்றன. பயிற்சி பிரிவின் காலமும், 3 மாதம் முதல் 8 மாதம் வரை தேர்ந்தெடுக்கப்பட்ட பயிற்சிகளின் தேவையை ஒட்டி வகைப் படுத்தப்பட்டுள்ளது.

31-12-82 முடிய 2477. கிராம இளைஞர்களுக்கு பல்வேறு துறைகளில் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. மேலும் 913 இளைஞர்கள் பயிற்சி பெறுகின்றனர்.

1983-84 ஆம் ஆண்டில் 2215 இளைஞர்களுக்கு பல்வேறு துறைகளில் பயிற்சி அளிக்க திட்டமிடப்பட்டிருக்கிறது.



1983 மார்ச் 17]

## 13. தமிழ்நாடு ஊரக சீரமைப்பு சங்கம்

தமிழ்நாடு அரசு வருமான வரி செலுத்துவோரிடமிருந்து நன்கொடை பெற்று அதனை கிராம வளர்ச்சித் திட்டங்களுக்கு பயன்படுத்த ஓர் தனி அமைப்பை ஏற்படுத்தி சட்டப்படி பதிவும் செய்து உள்ளது. தொழில் நிலையங்கள் மற்றும் தொழிலதிபர்கள் நல்மனம் பெற்றோர் கிராம வளர்ச்சித் திட்டங்களுக்கு வழங்கும் நன்கொடைகளுக்கு, வருமான வரியி லிருந்து முழு விலக்கு உள்ளது. தமிழ்நாடு ஊரக சீரமைப்பு சங்கம் (தாரா) இந்த சலுகையினைப் பயன்படுத்தி கிராம மக்களின் அவசியத் தேவைகளைப் பூர்த்தி செய்யவும் கிராம முன்னேற்றத்திற்கு தக்க நடவடிக்கைகள் எடுக்கவும் முயன்று வருகிறது.

முதலமைச்சரின் சத்துணவுத் திட்டத்தின் கீழ் கிராமப் புறங்களில் 200 சமுதாய நிலையங்களை கட்ட இந்த சங்கம் தற்போது நடவடிக்கை எடுத்து வருகிறது. இந்த திட்டத்திறகு மாநில வருமான வரிக் குழுவும் அனுமதி வழங்கி உள்ளது. இதுவரை மேற்படி சத்துணவுத் திட்டத்திற்காக நன்கொடையாக தொழிலதிபர்களிடமிருந்தும், தனி நபர்களிடமிருந்தும் இந்த சங்கம் ரூ. 18.32 லட்சம் பெற்று உள்ளது. கிராமங்களில் சமுதாய நிலையங்கள் அமைக்க பல்வேறு மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு இந்த நன்கொடை பிரித்துக் கொடுக்கப்பட்டு உள்ளது.

இதுவரை அளிக்கப்பட்ட நன்கொடைகளிலிருந்து கீழ்க் கண்டவாறு கிராம புற வேலைத் திட்டங்கள் நிறைவேற்றப் பட்டு உள்ளன.

| வருமான வரிச் சட்டம், | திட்டங்களின் எண்ணிக்கை. | முதுலீடு (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|
| வருமான வரிச் சட்டத்தின் பிரிவு 35 சிசி கீழ் தனி தொழில் நிலையங்கள் செய்தவை | 15 | 15.37 |
| வருமான வரிச் சட்டத்தின் பிரிவு 35சிசிஏ கீழ் | | |
| 1. வேறு தனியார் நிறுவனங்கள் செய்தவை | 23 | 305.64 |
| 2. தாரா மூலம் செய்தவை | 26 | 264.01 |
| மொத்தம் | 64 | 585.02 |

[1983 மார்ச் 17

## II. பேரூராட்சிகளின் இயக்கம்

இம்மாநிலத்தில் 607 பேரூராட்சிகள் மற்றும் 13 நகரியக் குழுக்கள் இருக்கின்றன. 1981 ஆம் ஆண்டு கணக்கெடுப்பின் படி மக்கள் தொகை 71.68 இலட்சம் ஆகும். அவைகளின் வகை கீழ்வருமாறு:

| வரிசை எண். | பேரூராட்சிகளின் வகை. | எண்ணிக்கை. |
|---|---|---|
| (1) | இரண்டாம் நிலை | 102 |
| (2) | முதல் நிலை | 343 |
| (3) | தேர்வு நிலை | 162 |
| (4) | நகரியக்குழு | 13 |
| | மொத்தம் | 620 |

### 1. குடிநீர் வழங்குதல்

தற்போதுள்ள பேரூராட்சிகளில் உள்ள 1725 குடியிருப்புகளில் 3357 குடியிருப்புகளுக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கும் திட்டங்கள் செயல்பட்டு வருகின்றன, 1315 குடியிருப்புகளுக்கு குடிநீர் வசதி போதுமானதாக இல்லை. அவைகளை மேம்படுத்த வேண்டும். 248 குடியிருப்புகளுக்கு குடிநீர் வழங்க வசதியே இல்லாமல் இருக்கிறது. இத்தகைய குடியிருப்புகளுக்கு தெளிவமைந்த ஒரு திட்டம் அமைத்திடல் அவசியம். இதன்பொருட்டு 1982-83ல் மாற்றி அமைத்த குடிநீர் வழங்கு திட்டத்தின்படி மானியமாக 50 சதவிகிதமும் உயிர் காப்பீட்டு கழகம் போன்ற நிறுவனங்களிடமிருந்து 50 சதவிகிதமும் கடனாக பெறவும் வகை செய்யப்பட்டுள்ளது. அதன் படியே ரூபாய் 731.47 இலட்சங்கள் மதிப்பீட்டில் 11 குடிநீர் வழங்கு திட்டங்களுக்கு 1982-83 ஆம் ஆண்டு அரசு ஒப்புதல் அளித்துள்ளது.

### 2. உடமை அமைப்பு வசதிகள்

பேரூராட்சிகள் 1200 கிலோமீட்டர் நீளமுள்ள தார்சாலைகளையும், 2400 கிலோமீட்டர் நீளமுள்ள கருங்கல் சல்லி சாலைகளையும், 6600 கிலோமீட்டர் நீளமுள்ள சல்லி மற்றும் மண் சாலைகளையும் பராமரித்து வருகின்றன. 1982-83 ஆம் ஆண்டு தார் சாலைகள் அமைப்பதற்காக பேரூராட்சிகளுக்கு ரூபாய் 15 இலட்சம் 50 சதவிகிதம் மான்ய அளவில் ஒதுக்கீடு செய்யப்பட்டது. மேலும் பேரூராட்சிகள் சுமார் 4500 கிலோமீட்டர் நீளமுள்ள தெருக்களையும், 1200 கிலோ மீட்டர் நீளமுள்ள [illegible]களையும் பராமரிக்கின்றன.



1983 மார்ச் 17]

### 3. வருமானம் அளிக்கும் இனங்கள்

பேரூராட்சிகள் சுமார் 200 பேருந்து நிலையங்களையும் 260 அங்காடிகளையும் பராமரித்து வருகின்றன. பேருந்து நிலையங்கள், அங்காடிகள், வியாபார மையங்கள், கட்டண கழிப்பிடங்கள் போன்றவைகளைக் கட்ட பேரூராட்சிகள் மத்திய மற்றும் மாநில ஒருங்கிணைந்த நகர வளர்ச்சித் திட்டத்தின் மூலம் கடன் வசதி பெறுகின்றன.

அவ்வாறு ஒப்புதல் அளிக்கப்பட்ட திட்டங்கள் கீழ்வருமாறு:—

| திட்டம் | எண்ணிக்கை | மதிப்பீடு (ரூபாய் இலட்சங்களில்) |
|---|---|---|
| **மாநில அரசு** | | |
| (1) பேருந்து நிலையம் | 4 | 44.96 |
| (2) அங்காடிகளும், கடைகளும் | 6 | 18.79 |
| (3) கட்டண கழிப்பிடங்கள் | 20 | 11.18 |
| (4) தங்கும் விடுதிகள் | 1 | 9.45 |
| மொத்தம் | 31 | 84.38 |
| **மத்திய அரசு** | | |
| பேருந்து நிலையங்கள் அங்காடிகள் மற்றும் கட்டண கழிப்பிடங்கள் | 11 | 157.50 |

### 4. மகாபலிபுரம் இராமேஸ்வரம் மற்றும் கன்னியாகுமாரி நகரியங்களுக்கான அடிப்படை வசதிகள்

மகாபலிபுரம், இராமேஸ்வரம் மற்றும் கன்னியாகுமரி நகரியங்களுக்கு அங்காடிகள், விளக்கு வசதிகள், பேருந்து நிலையங்கள், கட்டண கழிப்பிடங்கள், மனமகிழ் வசதிகள் போன்றவைகளை அளிப்பதற்காக 1982-83 ஆம் ஆண்டில் 50 சதவிகிதம் மானியம், 50 சதவிகிதம் கடன் என்ற அடிப்படையில் ரூபாய் 58 இலட்சம் உதவிக்கு அரசு ஒப்புதல் அளித்துள்ளது.

### 5. தன்னிறைவுத் திட்டம்

(1) குடிநீர் வழங்கும் திட்டம்

(2) வடிகால்கள்

(3) இணைப்பு சாலைகள்

(4) சிறு பாலங்கள்

(5) ஆதி திராவிட குடியிருப்பிலிருந்து மயானம் செல்லும் சாலை வசதி.

(6) துணி துவைக்கும் துறைகள்

(7) சாலை விளக்குகள்

இத் தன்னிறைவுத் திட்டம் 1982-83 ம் ஆண்டில் முதற் கட்டமாக செயல்படுத்த 146 பேரூராட்சிகள் தெரிந்தெடுக்கப் பட்டுள்ளன. இம்முதற்கட்டத்தின் நிதி மற்றும் செயற் திறன் இலக்குகள் கீழ்வருமாறு,—

| பணிகளின் வகை. | செயல்திறன் அலகுகள். | தேவையான நிதி மதிப்பீடு. (ரூபாய் கோடிகளில்) |
|---|---|---|
| (1) குடிநீர் வழங்கல் | (1) பெரிய திட்டங்கள் 25<br>(2) மேல்நிலை தொட்டிகள் 186<br>(3) ஆழ்நிலை கிணறுகள் 148<br>(4) குழாய்களின் மேம்பாடு (565.6 கி.மீ) 145 | 9·12 |
| (2) வடிகால்கள் | | 5.66 |
| (3) இணைப்புச் சாலைகள்<br>(i) சரளைகள் பரப்புதல்<br>(ii) கருங்கல் சல்லி பரப்புதல் | <br>505.7கி.மீ<br>904.9கி.மீ | 5.97 |
| (4) சிறு பாலங்கள் | 1797 | 1.80 |
| (5) ஆதிதிராவிடர் குடியிருப்பிலிருந்து மயானம் செல்லும் சாலை வசதி | 167.9கி.மீ | 0.26 |
| (6) துணி துவைக்கும் துறைகள் | 44 | 0.17 |
| (7) சாலை விளக்குகள் | 7716 | 0.47 |
| | மொத்தம் | 23.45 |



4. இவ்வாறு வறுமைக் கோட்டுக்குக் கீழே உள்ள குடும்பங்களுக்கு உதவுவதோடுகூட ஏற்னவே இருந்துவரு அல்லது புதிதாக ஏற்படுத்தப்பட்ட அடிப்படை வசதிப்பணி ளை விரிவு படுத்த வேண்டியதின் அவசியத்தையும் தள்ளிவிட முடியாது. எனவே ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின்கீழ், மாவட்ட அளவில் மொத்த நிதி ஒதுக்கீட்டில் 10 சதவீதத்துக்கு மேற்படாமல் உள்ள ஒதுக்கீட்டை, இத்திட்டத்தை வெற்றிகரமாகச் செயலாக்கும் பொருட்டு மற்ற திட்டங்களால் அளிக்கப் பட முடியாத இடங்களில் தேவையான அடிப்படை வசதி திட்டங்களுக்காக செலவிடப்படுகிறது. இத்தகைய திட்டங்கள் ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்துக்கான மத்திய அரசின் பிரதிநிதி ஒருவர் உள்ளிட்ட மாநில திட்ட ஒருங்கிணைப்புக் குழுவினரின் ஒப்பளிப்புக்காக வைக்கப்படும். 1981—82-ஆம் ஆண்டில் பால்வளம், கால்நடை பராமரிப்பு கைத்தறி மற்றும் துணிவகை தயாரிப்பு, தொழிற்சாலைகள், பட்டுப்புழு வளர்ப்பு, மீன்வளம், கோழி வளர்ப்பு. பூதானம் மற்றும் கதர் ஆகிய பல்வேறு துறைகளைச் சேர்ந்த 73 பணிகளுக்கு ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் மாநில ஒருங்கிணைப்புக் குழுவினரால் ஒப்புதல் தரப்பட்டது. மேற்கண்ட பணிகளுக்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகை ரூ. 2,02,69.025 ஆகும். 1982—83 ஆம் ஆண்டில் கால்நடை பராமரிப்பு, பால்வளம், கைத்தறி மற்றும் துணி தயாரிப்பு, தொழிற்சாலைகள் பட்டுப்புழு வளர்ப்பு, தோட்டக்கலை மீன் வளம், பூதானம் மற்றும் கதர் ஆகிய துறைகள் சம்பந்தப்பட்ட 64 பணிகளுக்கு இதுவரை மேற்கண்ட குழுவினரால் ஒப்பளிப்பு தரப்பட்டு அப்பணிகளுக்காக ரூ. 1,81,57.623 நிதி ஒதுக்கீடும் செய்யப்பட்டது.

2. சாண எரிவாயுக் கூடம் அமைக்கும் திட்டம்

மத்திய அரசு நடப்பு ஆறாவது ஐந்தாண்டு திட்டத்தின்கீழ் சாணஎரிவாயு கூடம் அமைக்கும் திட்டத்தினை தேசிய திட்டமாக ஏற்றுக் கொண்டு தமிழ்நாட்டில் 35,000 கலன்கள் அமைப்பதற்கான குறியீட்டினையும் அங்கீகரித்து உள்ளது. மேற்படி திட்டமானது 1981—82ஆம் ஆண்டு மத்தியிலிருந் தமிழ்நாட்டில் செயல்படுத்தப்படுகிறது. 1981-82ஆம் ஆண்டு இம்மாநிலத்திற்கு அளித்த 3500 இலக்கில் 1327 சாண எரிவாயு கலன்கள் முடிக்கப்பட்டன. இத்திட்டத்திற்த மத்திய அரசு 1981—82ல் உதவித் தொகை ரூ. 1092 இலட்சம் வழங்கியது. 1982—83ல் ஆண்டு மத்திய அரசு இம்மாநிலத்திற்கு 5000 கலன்கள் அமைக்குமாறு இலக்கு அளித்துள்ளது இதில் 3000 கலன்கள் ஊரக வளர்ச் துறையின் மூலமும் 2000 கலன்கள் கதர் மற்றும் கிராம கைத்தொழிற் ஆணைக்குழு

இலட்சங்கள் வழங்கியுள்ளது. இத்துறை மூலம் 2132 கலன்கள் முடிக்கப்பட்டுள்ளன. மேலும் மேற்சொன்ன உதவித் தொகையினை தவிர இத்திட்டத்தை செயல்படுத்தப்படும் செங்கற்பட்டு வட ஆற்காடு, தென்னாற்காடு, கோயம்புத்தூர், மதுரை, தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி மற்றும் பெரியார் ஆகிய எட்டு மாவட்டங்களின் அரசு அனுமதித்துள்ள பணியாளர்களின் சம்பளத்திற்கான செலவையும் மத்திய அரசு ஏற்றுள்ளது. மேலும், சாண எரிவாயு கலன்கள் அமைப்பதற்காக 20 கிராம கொத்தனார்களுக்கு பயிற்சி அளிப்பதற்காக 5 பயிற்சித் திட்டங்கள் நடத்தவும், அப்பயிற்சிக்கு உண்டான செலவையும் மத்திய அரசே ஏற்றுள்ளது. இப்பயிற்சி நடத்துவதற்காகப் பயிற்சிக்கு ரூ. 18,000 வீதம் அரசு முதல் கட்டமாக ரூ. 90,000 அனுமதி வழங்கியுள்ளது. மேற்படி தொகையில், கொத்தனார்களுக்கு சாண எரிவாயு கூடங்கள் அமைப்பதற்காக பயிற்சி வகுப்புகள் ஊரக வரிவாங்க பயிற்சி நிலையங்களிலும், பவானிசாகரிலுள்ள மாநில ஊரக வளர்ச்சி பயிற்சி நிறுவனம் மூலமும் நடத்தப்படுகின்றன. 31-12-82 முடிய 4 ஊரக வளர்ச்சி பயிற்சி நிலையங்களில் பயிற்சி வகுப்புகள் நடத்தி முடிக்கப்பட்டு 67 கொத்தனார்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. மத்திய அரசு மேலும் இது போன்ற மூன்று பயிற்சி வகுப்புகளை நடத்த அனுமதித்துள்ளது. அப்பயிற்சி வகுப்பும், மீதமுள்ளவைகளும் இந்நிதியாண்டு முடிவதற்குள் நடத்தப்படும்.

மேலும், மகளிர்க்கு இத்திட்டத்தின் மீது விழிப்புணர்ச்சி ஏற்படுத்தவும் சாண எரிவாயு கூடங்கள் இயக்குதலும் பராமரித்தலும் பற்றியும் மத்திய அரசு இம்மாநிலத்தில் 30 ஒரு நாளைய பயிற்சி வகுப்புகள் நடத்த அறிவுறுத்தியுள்ளது. அதன்படி, ஒவ்வொரு பயிற்சி வகுப்பிலும் 50 மகளிர்க்குப் பயிற்சி நடத்துமாறும், ஒவ்வொரு பயிற்சி வகுப்பிற்கும் ரூ. 750 வரை செலவிடவும் அனுமதி அளித்துள்ளது. இம்மாநிலத்தில் தீவிரமாக செயல்படும் எட்டு மாவட்டங்களில் ஏழு மாவட்டங்களில் தலா 4 பயிற்சி வகுப்புகள் நடத்தவும், திருச்சி மாவட்டத்தில் 2 பயிற்சி வகுப்புகள் நடத்தவும் ஆக, 30 பயிற்சி வகுப்புகள் இந்நிதியாண்டிற்குள் நடத்தி முடிக்கப்படும். இப்பயிற்சி வகுப்புகள் மூலம் 1500 மகளிர்க்குப் பயிற்சி அளிக்கப்படும்.

மேலும், இத்திட்டத்தின் மீது மக்களின் கவனத்தைக் கவர ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒரு செயல்விளக்க சாண எரிவாயு கூடம் என்ற அளவில் ரூ. 6000 வரை செலவிட அனுமதித்து 15 கூடங்களுக்கு மத்திய அரசு அனுமதி அளித்துள்ளது எல்லா மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கும் இந்நிதியாண்டிற்குள் ஒரு செயல்விளக்க சாண எரிவாயு கூடம் அமைக்க அறிவுறுத்தப்பட்டுள்ளது.

3, ஒரு குடும்பத்தில் ஒருவருக்கு வேலை அளிக்கும் திட்டம்

ஒரு குடும்பத்தி ஒருவருக்கு வேலை அளிக்கும் திட்டத்தை [illegible] ... இதற்கான விவரங்கள் தய ரிக்கப்



பட்டு வருகின்றன. 1983-84 ஆம் ஆண்டு இத்திட்டத்தை செயலாக்குவதற்காக ரூ. 15.00 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

4. கிராமப்புறப் பணித் திட்டம்—(i) இணைப்புச் சாலைகள்

ஒட்டுமொத்தமான கிராம பொருளாதார வளர்ச்சிக்கு சாலை இணைப்பு வசதிகளின் வளர்ச்சி மிகவும் தலையாயதாகும். சில கிராம குடியிருப்புகளுக்கு செல்ல பாதை வசதிகள் இல்லை இந்த குறைபாட்டினைத் தவிர்க்க இணைப்புச் சாலைத் திட்டம் எடுத்துக் கொள்ளப்பட்டது, இணைப்புச் சாலை வசதி செய்து தருவதற்காக ஒதுக்கப்பட்ட நிதி, ஏற்கனவே இருந்து வரும் சாலைகளை மேம்படுத்துவதற்காக உபயோகப்படுத்தப்பட்டு வருகிறது. தமிழ்நாட்டில் உள்ள 44547 கிலோமீட்டர் நீள கிராம இணைப்புச் சாலைகளில் 14,862 கிலோ மீட்டர் நீளம் மண் சாலைகளாகவும் 17,015 கிலோ மீட்டர் நீளம் சல்லி பரப்பப்பட்ட சாலைகளாகவும் உள்ளன. மேலும் 11.87 கிலோமீட்டர் நீளம் கப்பியிடப்பட்டும் 775 கிலோமீட்டர் நீளம் தார் சாலைகளாகவும் 24 கிலோ மீட்டர் நீளம் சிமெண்ட் சாலைகளாகவும் உள்ளன. இவற்றில் சுமார் 1159 கிலோமீட்டர் நீளம் சென்ற ஆண்டு கிராமப்புற பணித் திட்டத்தின் கீழ் மேம்படுத்தப்பட்டது. மொத்த நிதி ஒதுக்கத்தில் 20 சதவீதம் ஆதி திராவிடர்களுக்கு பயன்படும் பணிகளில் ஒதுக்கப்பட்டது. இணைப்புச் சாலைகளை புதிதாக ஏற்படுத்துவதோடு கூட ஏற்கனவே இருந்து வரும் சாலைகளை அவை எப்போதும் ஊரக மக்களுக்கு பயன்படும் விதத்தில் மேம்படுத்தும் பணிகளும் மேற்கொள்ளப்பட்டன. தன்னிறைவுத் திட்டத்தின் கீழ் இணைப்புச் சாலைகளுக்காக ஒதுக்கப்பட்ட நிதி தவிர 1981-82 ஆம் ஆண்டில் ரூ. 100 இலட்சம் 1,313 கிலோ மீட்டர் நீளம் சாலைகளை மேம்படுத்துவதற்காக அளிக்கப்பட்டது. 1983-84 ஆம் ஆண்டு நிதி ஒதுக்கீட்டில் இப்பணிகளுக்காக ரூ. 100 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

(ii) பள்ளிக்கூடக் கட்டிடங்கள்.

இத்திட்டத்தின் கீழ் ஊராட்சி ஒன்றியங்களில் ஆரம்ப மற்றும் நடு நிலை பள்ளிக்கட்டிடங்கள் கட்டுவதும் சேர்த்துக் கொள்ளப்பட்டது. ஊராட்சி ஒன்றியங்களுக்கு உட்பட்ட இடங்களில் உள்ள 28,784 பள்ளிக்கூடங்களில் 23,458 பள்ளிக்கூடங்கள் சொந்த கட்டிடங்களில் உள்ளன.

1981-82 ஆம் ஆண்டில் 1012 பள்ளிக்கூடங்கள் கட்டப்பட்டன. 1982-83 ஆம் ஆண்டில் ஆரம்ப மற்றும் நடுநிலை பள்ளிகளுக்காக 1203 கட்டிடங்கள் கட்ட திட்டமிடப்பட்டு 1983 சனவரி மாதம் வரையில் 557 பள்ளிக் கட்டிடங்கள் கட்டி முடிக்கப்பட்டன. 1983.84 ஆம் ஆண்டு பள்ளிக் கட்ட[illegible] டங்களுக்காக ரூ. 150 இலட்சம் [illegible]

### (iii) ஊரகக் குடிநீர்த் திட்டம்

ஊரகக் குடிநீர்த் திட்டத்திற்காக 1983-84ல் ரூ.150 இலட்சம் கிராம வேலைத் திட்டத்திற்கு ஒதுக்கப்பட்டுள்ளது. இத்தொகை குடிநீர் வசதி செய்து தரவும் வருவாயற்ற குடிநீர்த் திட்டங்களான மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டி மற்றும் தரைமட்ட நீர்த்தேக்கத் தொட்டிகளுக்கு மின் இணைப்பு வழங்குவதற்கான முதலீட்டுத் தொகை செலுத்தவும் பயன்படுத்தப்படும். குடிநீர் வசதி இல்லாத புதிதாக உருவாகும் குடியிருப்புகளிலும் மற்றும் இது குறித்த அவசரப் பணிகளும் இதில் மேற்கொள்ளப்படும்.

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திற்கு அளிக்கப்படும் பணம் தவிர இது கூடுதல் ஒதுக்கீட்டாகும்.

### 5. ஊராட்சி அலுவலகங்கள் மற்றும் சமுதாயகூடங்கள்.

ஊரக வளர்ச்சித் திட்டத்தில் தலையாய பணிகளில் ஒன்று ஊராட்சிகள் மற்றும் ஊராட்சி ஒன்றியங்கள் முதலிய ஊராட்சி மன்ற அமைப்புகளை அவற்றின் நிர்வாகம் சிறப்பாக அமைய வழிவகை செய்வதாகும். ஊராட்சி மன்ற அமைப்புகளின் நிர்வாகச் சிறப்பை அவற்றின் நிர்வாக இயந்திரம் சீராக செயல்படுவதன் மூலம்தான் உறுதிபடுத்த முடியும். அந்த வட்டார மக்கள் எளிதில் தொடர்பு கொள்ளும் வசதியான இடத்தில் ஊராட்சி மன்ற நிர்வாக அலுவலகங்களை அவற்றின் சொந்த கட்டிடங்களில் அமைக்கவேண்டியது அவசியமாகும். எனவே சொந்தமான அலுவலகக் கட்டிடங்கள் இல்லாத ஊராட்சிகளுக்கு சொந்த கட்டிடம் கட்டுவதற்காக நிதி உதவி அளிக்க அரசு தீர்மானித்துள்ளது.

அநேக ஊராட்சிகளுக்கு சொந்தமாக அலுவலகக் கட்டிடங்கள் இல்லை. இந்த ஊராட்சிகளில் அலுவலகக் கட்டிடங்களை பல கட்ட திட்ட வேலைகளாக கட்டித்தர அரசு முடிவு செய்துள்ளது. அலுவலகத்துக்காக மட்டுமின்றி வேறு பல பயன் உள்ளதாக இருக்கும் பொருட்டு அந்த கட்டிடங்களை ஊரக வானொலி சங்கம் மற்றும் மகளிர் மன்றம் போன்ற அமைப்புகளையும் அவற்றில் அமைக்கும்படியாக கட்ட அரசு திட்டமிட்டுள்ளது.

இந்தக் கட்டிடங்களைக் கட்டுவதற்கான ஊராட்சிகள் பின்வரும் விதிமுறைகளை கருத்தில் கொண்டு தேர்ந்தெடுக்கப்படும்.

(1) தேர்ந்தெடுக்கப்படும் ஊராட்சி கட்டிடத்தின் திட்ட மதிப்பீட்டுத் தொகையில் குறைந்த அளவு 25 சதவிகிதத்தை ஏற்கக் கூடியதாக இருக்கவேண்டும். நிதிநிலை சீராக இருக்கும் [illegible] மதிப்பீட்டுத் தொகையில் 50 சதவிகிதம் வழங்க



(2) மகளிர் மன்ற கட்டிடங்களோ அல்லது ஊரக சாவடிகளோ இல்லாத ஊராட்சிகளுக்கு முன்னுரிமை தரப்படும்.

(3) அதிக பரப்பளவுள்ள பெரிய ஊராட்சிகளுக்கு முன்னுரிமை தரப்படும்.

(4) இந்தக் கட்டிடங்களுக்காக அரசால் ஒப்பளிக்கப்பட்ட கட்டிட அமைப்பையே ஏற்க வேண்டும்.

1982–83 ஆம் ஆண்டில் தன்னிறைவுத் திட்டம் செயல்படுத்தப்படும் வட்டாரங்களுக்கு முன்னுரிமையளித்து அவற்றில் 50 கட்டிடங்களைக் கட்ட அனுமதி வழங்கப்பட்டு அப்பணிகள் நடைபெற்று வருகின்றன. இதற்காக 1982–83 ஆம் ஆண்டு ரூ. 15 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது.

### 6. உற்பத்தித் திட்டங்கள்.

#### (1) வேளாண்மை, கால்நடை மற்றும் மீன் வளம்

ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம் மற்றும் பயிற்சி வழித் தொடர்பு திட்டம் ஆகியவற்றில் சேர்க்கப்படாத திட்டங்கள் 1982–83–ல் எடுத்துச் செய்யப்பட்டன. இத்திட்டங்கள் அவ்வப்போது அரசு வெளியிடும் வழிகாட்டு விதிமுறைகளின் அடிப்படையில் செய்யப்படுகின்றன.

#### (அ) வேளாண்மை

1982-83-ல் திட்டத்தின் கீழ் ஒதுக்கீடு செய்யப்பட்ட ரூ. 45.00 லட்சம் கீழ்க்கண்ட வேலைகளுக்காக பகிர்ந்தளிக்கப்பட்டன.

| | | |
|---|---|---|
| (1) | 46 வேளாண்மை கிடங்கு துணை வேளாண்மை கிடங்கு கட்ட | ரூ. 27.60 இலட்சம் |
| (2) | முசுக்கொட்டை செடி வளர்க்க சேலம் மற்றும் தர்மபுரி மாவட்டங்களில் உள்ள ஊராட்சி ஒன்றியங்களில் மட்டும் | ரூ. 7.61 ,, |
| (3) | செங்கற்பட்டு, மதுரை, தஞ்சாவூர் மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களில் தீவிர மீன்வளத் திட்டம் செயலாக்க, (நிதி மாற்றமாக) | ரூ. 5.70 ,, |
| (4) | திருச்சி மற்றும் தஞ்சாவூர் மாவட்டங்களில் 20 கதிரடிக்கும் தளங்கள் அமைக்க | ரூ. 4.09 ,, |
| | மொத்தம் .. | ரூ. 45.00 |

பயிற்சி வழித்தொடர்புத் திட்டங்கள் மாநிலத்தில் செயலாக்கப்படுவதை வேளாண்மைத் துறை கவனித்துக் கொள்ளும். எஞ்சிய முடிக்க இயலாத வேலைகளை ஊரக வளர்ச்சி இயக்குநரால் முடிக்கப்பெறும்.

(ஆ) கால்நடை பராமரிப்பு:

கால்நடை பராமரிப்புக்கென 1982–83-ல் ஒதுக்கீடு செய்யப்பட்ட ரூ. 12.00 லட்சத்தில் கீழ்க்கண்ட திட்டங்கள் எடுத்துக் கொள்ளப்பட்டன:—

| | |
|---|---|
| (1) 1981–82–ல் எடுத்துக் கொள்ளப்பட்ட 12 கால்நடை மருந்தகங்களை கட்டி முடிக்க | ரூ. 2.70 இலட்சம் |
| (2) 16 புதிய கால்நடை மருந்தகங்கள் கட்ட | ரூ. 9.30 இலட்சம் |
| மொத்தம் | .. ரூ. 12.00 இலட்சம் |

இக்கால்நடை மருந்தகங்கள் கட்டுவதற்கான செலவினம் மாநில அரசாலும் ஊராட்சி ஒன்றியங்களினாலும் கீழே குறிப்பிட்டிருக்கும் விகிதத்தில் ஏற்கப்படுகிறது: —

| | அரசு மானியம், | ஊராட்சி ஒன்றியத்தின் பங்கு. |
|---|---|---|
| முதலாவது கால்நடை மருந்தகம் | 75 சதவிகிதம் | 25 சதவிகிதம் |
| இரண்டாவது கால்நடை மருந்தகம் | 50 ,, | 50 ,, |
| மூன்றாவது கால்நடை மருந்தகம் | 25 ,, | 75 ,, |
| நான்காவது கால்நடை மருந்தகம் | ஒன்றுமில்லை | 100 ,, |

ஒரு மருந்தககத்திற்கு அரசு மான்யம் ரூ. 67,500 என்ற விகிதத்தில் 16 கால்நடை மருந்தகங்களுக்கு ரூ. 10,80,000 அரசு மான்யம் தரப்படவேண்டும், இதில் ரூ. 9.30 இலட்சம் ஏற்கனவே அனுமதிக்கப்பட்டு விட்டது. மீதமுள்ள ரூ. 1.50 லட்சம் 1983–84 நிதி மதிப்பீட்டில் சேர்க்கப்படும்.



1983–84-ல் 15 புதிய கால்நடை மருந்தகங்கள் கட்ட திட்டமிடப்பட்டிருக்கிறது. இதற்கென ரூ. 12.00 இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டிருக்கிறது.

(இ) மீன்வளம்

மீன்வளத் திட்டத்திற்காக இவ்வாண்டு ரூ. 3.00 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மேலும் மீன்வளத்தினை அதிகரிக்கச் செய்யும் எண்ணத்தோடு ரூ. 5.70 இலட்சம் வேளாண்மைத் திட்டங்களிலிருந்து நிதி மாற்றம் செய்யப்பட்டுள்ளது. ஆக கன்னியாகுமரி, மதுரை, செங்கற்பட்டு மற்றும் தஞ்சாவூர் மாவட்டங்களில் ''தீவிர மீன்வளத்திட்டம் செயல்படுத்த ரூ. 8.70 இலட்சம் 1983-84 ஆம் ஆண்டு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்கு ஆகும் மொத்தச் செலவு ரூ– 11.60 இலட்சம் ஆகும். இத்திட்டத்திற்கு ஆகும் மொத்த செலவில் 75 சதவீதத்தை அரசு மான்யமாக அளித்துள்ளது. மீதியை சம்பந்தப்பட்ட ஊராட்சி ஒன்றியங்கள் ஏற்றுக்கொள்கின்றன.

7. நல்வாழ்வுத் திட்டங்கள்

(1) திருத்தியமைக்கப்பட்ட ஊட்டச் சத்துணவுத்திட்டம்

1962–63 ஆம் ஆண்டிலிருந்து செயல்பட்டு வந்த ஊட்டச் சத்துணவுத் திட்டம், 1 4,1909 ஆம் ஆண்டு முதல் மத்திய அரசின் நிதி உதவி நிறுத்தப்பட்டமையால் மாநில அரசே, முழுச் செலவையும் எற்று செயல்படுத்தி வந்தது. இத்திட்டம் 1981-82 முதல் திருத்தி அமைக்கப்பட்ட ஊட்ட சத்துணவுத் திட்டமாக அமைக்கப்பட்டது. அத்திட்டத்தின் சில இனங்களை விடுத்து திருத்தி அமைக்கப்பட்ட ஊட்டச் சத்துணவுத் திட்டம் 30-6–82 வரை செயல்பட்டு வந்தது. மாண்புமிகு முதலமைச்சரின் சத்துணவுத் திட்டம் செயல்பட தொடங்கிய பின்னர் மேற்படி திட்டம் 1–7-82 முதல் அத்துடன் இணைக்கப்பட்டது.

8. சுகாதாரத் திட்டங்கள்

(1) தாய் சேய்நல மையங்கள்

ஊராட்சி ஒன்றிய தாய் சேய் நல மையங்கள் 1–10–92 முதல் சுகாதாரத் துறைக்கு மாற்றப்பட்டன. மேலும் பல நோக்கு சுகாதாரப்பணியாளர் திட்டத்தின்கீழ் பணியாற்ற ஊராட்சி ஒன்றிய சுகாதாரப் பணியாளர்கள் (மகப்பேறு உதவியாளர்கள் மற்றும் சுகாதார உதவியாளர்கள்) பொது சுகாதாரத்துறையின் கீழ் பணிசெய்ய எடுத்துக் கொள்ளப்பட்டார்கள். ஆனால் தற்போது உள்ள ஆயாக்கள் தொடர்ந்து அவர்களுக்கான பணிகளை மேற்படி மையங்களில் செய்வார்கள் அவர்களின் ஊதியச் செலவில் மூன்றில் இரண்டு பங்கு அரசு மான்யமாக அளிக்கப்படும்.

(2) ஊராட்சி ஒன்றிய மருந்தகங்கள்

ஊராட்சி ஒன்றிய மருந்தகங்களை அமைத்துப் பராமரிக்கும் பணியும் ஊராட்சி ஒன்றியங்களின் பொறுப்பாகும். மேலும் ஊராட்சிகளில் கிராமப்புற மருந்தகங்கள் இயங்கி வருகின்றன. ஆண்டொன்றுக்கு ரூ. 5400-க்கு மேற்படாமல் பராமரிக்கப் படும் ஒரு மருந்தகத்தின் செலவில் 50 சதுவிகிதத்தை அரசிட மிருந்து நிதி உதவியாக ஊராட்சி ஒன்றியங்கள் பெற்றுக் கொள்ளலாம். 1983-84-ல் ஒதுக்கப்பட்டுள்ள தொகை ரூ. 5.00 இலட்சம்.

(3) கிராமங்களில் பொதுக் கழிப்பிடங்கள் கட்டுதல்

இம்மாநிலத்திலுள்ள 16,000 வருவாய் கிராமங்கள் ஒவ்வொன்றிலும் தாய்மார்களுக்கும் ஆண்களுக்குமாக பொதுக் கழிப்பிடங்கள் கட்டும் மாபெரும் திட்டம் ரூ. 22.56 கோடி மதிப்பீட்டில் (சயல்பட்டு வருகிறது. இந்நிதியாண்டிற்குல் 8000 வருவாய் கிராமங்களில இப்பணி முடிக்கப்பட்டு மீதமுள்ளவை பிப்ரவரி 84-க்குள் முடிக்கப்படும். 1982—81ல் இதற்கான நிதி ஒதுக்கீடு ரூ. 11·00 கோடி ஆகும். 1983-84-க்கும் இதே தொகை ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இது ஒவ்வொன்றும் ஆறு அறைகள் கொண்ட பீங்கான் கழிப்பிட வசதியுள்ள சிமென்ட் கூரை அமைக்கப்பட்ட கழிப்பிடம் ஆகும். மண்ணின் தரத்தைப் பொறுத்து கழிவறை வசதியோ அல்லது கழிப்பிடக் குழியே அமைக்கப்படும். குழிவெட்டி கட்டப்படும் கழிப்பிடம் அமைக்க ரூ[ 14,100-ம், செப்டிக்டேங்க் (Septsc Tank) அமைக்கப்பட்ட கழிப்பிடம் அமைக்க ரூ. 14,400ம் செலவாகும் தண்ணீர் வசதியும் அதற்கான பராமரிப்பு வசதியும் ஏற்பாடு செய்யப்படும்.

9· சமூகக் கல்வி மையங்கள்

ஊராட்சி ஒன்றியத்தால் நடத்தப்பட்டு வரும் சமூகக் கல்வி மற்றும் செய்தி மையங்களுக்கு நிதிஉதவி இத்திட்டத்தின் கீழ் கொடுக்கப்பட்டு வருகிறது. தற்போது 13.496 சமூகக் கல்வி மையங்கள் தமிழகத்தில் உள்ளன. இந்த சமூகக் கல்வி மற்றும் தகவல் மையங்கள் ஒவ்வொன்றிற்கும் முறையே ரூபாய் 1650/- மற்றும் 200/- வீதம் அரசு நிதி உதவி அளிக்கப்பட்டு வருகிறது. 1983-84 ஆம் ஆண்டில் இதற்காள ஒதுக்கீடு ரூ. 9.00 இலட்சம் ஆகும்.

10 வானொலிப் பெட்டிகள் மற்றும் தொலைக்காட்சிப்பெட்டிகள்

தற்போது விவசாயம். குடும்பநலம்' பொது சுகாதாரம் ஆகிய துறைகளில் உள்ள முன்னேற்றத்தை கிராம மக்களுக்கு எடுத்துரைக்கும் வ...கயில் தமிழகத்தில் 47,893 வானொலிப்



1982—83 ஆம் ஆண்டு மேற்குறித்த தன்னிறைவுத் திட்டத்திற்காக அரசு ரூபாய் 5 கோடி மான்யமாக அளித்து 1983—84 ஆம் ஆண்டு இத்திட்டத்தை சுமார் 200 பேரூராட்சிகளில் நிறைவேற்ற ரூபாய் 10.00 கோடி நிதி ஒதுக்கீடு செய்துள்ளது.

6. பேரூராட்சிகளில் பொதுக் கழிப்பிடங்கள்.

பேரூராட்சிப் பகுதிகளில் பொதுக் கழிப்பிடங்களைக் கட்டுவதென முடிவு செய்யப்பட்டுள்ளது. இதற்காக 1983—84 ஆம் ஆண்டில் சுமார் 200 பேரூராட்சிகள் தொடங்கப்படும்.

III நகர அபிவிருத்தி.

1. நகராட்சிகளின் நிர்வாகம்

இம்மாநிலத்தில் கீழ்க்கண்ட 98 நகராட்சிகளும் 8 நகரியங்களும் உள்ளன.

| நிலை | நகராட்சிகள் | நகரியங்கள். |
|---|---|---|
| சிறப்பு நிலை | 5 | இல்லை. |
| தேர்வு நிலை | 8 | 3 |
| முதல் நிலை | 29 | 3 |
| இரண்டாம் நிலை | 33 | 2 |
| மூன்றாம் நிலை | 23 | — |
| மொத்தம் .. | 98 | 8 |

பெருகிவரும் நகராட்சிகளின் பிரச்சினைகள், நிர்வாகத்தில் அதிகரித்து வரும் வேலைப் பளு மற்றும் பொறுப்புகளைச் சமாளிக்கும் பொருட்டு நகராட்சிகளின் இயக்குநரகத்தில் பல்வேறு துறைகள் அதாவது கணக்கு, கல்வி, பொறியியல் ஆகிய துறைகள் 1981 முதல் செயல்படுகின்றன. அதுபோலவே நகராட்சி ஆணையர்கள் மற்றும் பணியாளர்களுக்கு நிர்வாகத்தினை அபிவிருத்தி செய்யும் நோக்கத்துடன் கோயம்புத்தூரில் "தமிழ்நாடு நகர்ப்புறவியல் பயிற்சி நிலையம்" என்ற பெயரில் ஒரு பயிற்சி நிலையம் 18—1—1982-ல் துவக்கப்பட்டுள்ளது. இப்பயிற்சி நிலையம் ஒரு இயக்குநரின் தலைமையின் கீழ் செயல்படுகிறது. மேற்படி பயிற்சிகளைத் தவிர காலக்கிரமத்தில் இதனை ஒரு ஆராய்ச்சி நிலையமாகவும். புள்ளி விவரங்கள் சேகரிக்கும்

(2) (i) நகராட்சி தொடக்கப் பள்ளிகளுக்குக் கட்டிடம் கட்டுதல்:

தமிழகத்திலுள்ள நகராட்சிகள் மற்றும் நகரியங்கள் மொத்தம் 106-ல் நூறு நகராட்சிகள் மற்றும் நகரியங்கள் 1026 தொடக்கப்பள்ளி மற்றும் நடுநிலைப்பள்ளிகளை நடத்தி வருகின்றன. இப்பள்ளிகளில் 3,42,792 மாணவ—மாணவியர்கள் கல்வி பயின்று வருகின்றனர். மேற்சொன்ன பள்ளிகளில் 302 பள்ளிகள் வாடகைக்கு எடுத்துள்ள கட்டிடங்களிலும் 109 பள்ளிகள் நகராட்சிக்குச் சொந்தமான கூரை கட்டிடங்களிலும் செயல்பட்டு வருகின்றன. மீதம் உள்ள 615 பள்ளிகள் போதிய இடவசதியின்றி செயல்படுவதால் இப்பள்ளிகளுக்கு மாணவர் களின் கூடுதல் எண்ணிக்கையைக் கணக்கிட்டு அதிகப்படியாக இடவசதி செய்து தர வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது. இப்பள்ளிகளுக்கு நல்ல முறையில் கட்டிடங்கள் கட்டுவதற்கு நகராட்சிகளுக்கு மான்யமாக 1980—81 ஆம் ஆண்டில் ரூ. 21.50 இலட்சமும், 1981—82 மற்றும் 1982—83 ஆம் ஆண்டில் ஒரு ஆண்டிற்கு ரூ. 20 இலட்சம் வீதமும் மான்யமாக நகராட்சி/ நகரியங்களுக்கு அளித்து உதவியுள்ளது. இத்தொகையில் 167 பள்ளிக் கட்டிடங்கள் கட்டுவதற்கு வேலைகள் துவக்கப்பட்டு 130 பள்ளிக்கூடங்களுக்குக் கட்டிட வேலை பூர்த்தி செய்யப் பட்டுள்ளது. மீதமுள்ள 37 பள்ளிகளுக்குக் கட்டிட வேலை நடந்து வருகிறது.

(ii) உயர்நிலைப் பள்ளி மற்றும் மேல் நிலைப்பள்ளி கட்டிடங்கள் கட்டுதல்.

இத்துறையின் கீழ் இயங்கி வரும் 31 நகராட்சிகள், 59 உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளை நடத்தி வருகின்றன. இப்பள்ளிகளில் 65,502 மாணவ/மாணவியர்கள் கல்வி பயின்று வருகின்றனர். அநேக நகராட்சி உயர்நிலை மற்றும் மேல்நிலை பள்ளிக் கட்டிடங்கள் மிகவும் பழமையானதாகவும், மாணவர் களின் தற்போதுள்ள கூடுதல் எண்ணிக்கைக்கு ஏற்ப இடவசதி யுள்ளதாகவும் இல்லை. இந்நிலையைச் சமாளிக்க, கூடுதல் இட வசதியுடன் கூடிய புதிய கட்டிடங்கள் கட்டுவதற்காக 1981—82 ஆம் நிதியாண்டில் ரூ. 25 இலட்சமும் 1982—83 ஆம் ஆண்டில் ரூ. 25 இலட்சமும் மான்யமாக அரசு அறிவித் துள்ளது. இம்மான்யத் தொகையின் மூலம் 28 நகராட்சிகளில் 34 உயர் மற்றும் மேல் நிலைப் பள்ளிகளில் கட்டிடங்கள் கட்டுவதற்கான பணிகள் துவக்கப்பட்டு இதன் மூலம் 3,200 மாணவ/மாணவியர்களுக்குப் பயன் பெறுமாறு இத்திட்டம் செயல்பட்டு வருகிறது.

3. ஒருங்கிணைந்த குடிசைப் பகுதி முன்னேற்ற மேம்பாட்டுத் திட்டம்:

நகர்ப்புறங்களில் குடிசைப் பகுதிகளில் வாழ்வோரின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தும் நோக்கத்துடன் 1977-78 ஆம் நிதியாண்டில், அரசு இப்புதிய திட்டத்தை துவக்கியுள்ளது. இத்துறையின் கீழ் இயங்கி வரும் 106 நகராட்சி மற்றும் ... 683 நகர்ப்புற குடிசைப் ...



ரூ50பெறுவர். இரண்டு நகராட்சிகளுக்கு 1977—78-ம் ஆண்டில் இலட்சம் மான்யமாக வழங்கப்பட்டு அதன் பின் ஆண்டு ஒன்றுக்கு ரூ. 50 இலட்சம் வீதம் நகராட்சிகளுக்கு மான்ய மாக அரசு வழங்கி வருகிறது.

கடந்த 6 ஆண்டுகளில் (1982—83 ஆண்டு உட்பட) ரூ. 300 இலட்சம் மான்யமாக குடிசைப் பகுதிகளை அபிவிருத்தி செய்ய நகராட்சிகளுக்கு வழங்கப்பட்டு, இத்திட்டத்தின் கீழ் சாலை அமைத்தல், குடிநீர் விநியோகம், தெரு விளக்குகள், கழிப்பிட வசதிகள் போன்ற வேலைகள் செய்யப்பட்டுள்ளன. இத்திட்டத்தினால் 1981—82 ஆம் ஆண்டு வரை 25 நகராட்சிகள் அந்நகராட்சிகளில் உள்ள 254 குடிசைப் பகுதிகளை அபிவிருத்தி செய்து, இதனால் 5 லட்சம் மக்கள் பயன் அடைந்துள்ளனர். நடப்பு நிதியாண்டில் மேலும் 19 நகராட்சிகளில் இத்திட்டப் பணிகள்நடைபெற்று வருகின்றன. இந்நகராட்சிகளில் அபிவிருத்தி வேலை முடியுங்கால், மேலும் ஒரு இலட்சம் குடிசைவாழ் மக்கள் பயன் பெறுவர் என எதிர்பார்க்கப்படுகிறது. இத்திட்டம் பிரதமரின் 20 அம்சத் திட்டத்தின்கீழ் வருவதால் இதனை இனி வரும் ஆண்டுகளிலும் தொடர்ந்து செயல்படுத்த அரசு தீர்மானித்துள்ளது.

1983—84 ஆம் ஆண்டு இதற்கான நிதி ஒதுக்கீடு ரூ.50.00 இலட்சம் ஆகும்.

4. பிற்பட்ட பகுதிகளில் ஒருங்கிணைப்பு வளர்ச்சித்திட்டம்:

நகராட்சிகளிலும் நகரியங்களிலும் ஏழை, எளியோர் வாழும் சில பகுதிகளில் அத்தியாவசிய வசதிகளைச் செய்திட அரசு 1977—78 ஆண்டில் பிற்பட்ட பகுதிகள் முன்னேற்ற ஒருங் கிணைப்பு திட்டத்தைத் தோற்றுவித்தது.

இத்திட்டத்தின் கீழ், தேவையான அடிப்படை வசதிகள், அதாவது சாலை அமைத்தல், குடிநீர் விநியோகம், தெரு விளக்குகள், பொதுக் கழிப்பிடம் போன்ற பணிகள், தேர்ந் தெடுக்கப்பட்ட பிற்பட்ட பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இத்திட்டத்தின் கீழ் 1979—80 முடிய 21 நகராட்சிகளுக்கு கீழ்க் கண்டவாறு ரூ. 16 இலட்சம் மான்யமாக வழங்கப் பட்டுள்ளது.

| ஆண்டு | அளிக்கப்பட்ட மான்யம் | நகராட்சிகளின் எண்ணிக்கை. |
| --- | --- | --- |
| 1977—78 | ரூ. 10 இலட்சம் | 10 |
| 1978—79 | ரூ. 3 இலட்சம் | 5 |
| 1979—80 | ரூ. 3 இலட்சம் | 6 |

1981–82 நிதியாண்டில் 47 நகராட்சிகளுக்கு இத்திட்டத்தின் கீழ் ரூ. 25 இலட்சம் மானியம் அளிக்கப்பட்டு இத்திட்டத்தின் பணிகள் நிறைவேற்றப்பட்டு வருகின்றன. நடப்பு நிதியாண்டிற்கும் ரூ. 25 இலட்சம் மானியம் வழங்கப்பட்டுள்ளது.

5. தன்னிறைவுந் திட்டம்.

அரசு தன்னிறைவுத் திட்டத்தைப் பொருளாதாரத்தில் நலிவடைந்த நகராட்சிகளுக்கு விரிவுபடுத்தி உள்ளது. அதற்கிணங்க 20 நகராட்சிகள் நிதிநிலைப் பற்றாக்குறை காரணமாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன. 1982-83ம் ஆண்டுக்காக 500 இலட்சம் ரூபாய் அந்நகராட்சிகளுக்குத் தலா ரூ. 25 இலட்சம் வீதம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

மேற்கண்ட நகராட்சிகளில் இத்திட்டத்தின் கீழ் நிறைவேற்றப்படவிருக்கும் பணிகளின் விபரம் கீழ்வருமாறு:

| வரிசை எண். | விபரம். | வேலைகளின் எண்ணிக்கை. | மதிப்பீட்டுத் தொகை (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|---|
| 1. | குடிநீர் விநியோக அபிவிருத்தித் திட்டம் | 180 | 63.619 |
| 2. | சாலை அபிவிருத்தி | 547 | 180.309 |
| 3. | (i) சிறு பாலங்கள் (ii) மழை நீர் வடிகால்கள் கட்டுதல் | 338 | 113·0485 |
| 4. | ஆதிதிராவிடர்கள் குடியிருப்பு மற்றும் இடுகாட்டிற்குச் சாலை வசதிகள் அமைத்தல் | 61 | 16.307 |
| 5. | பள்ளிக்கட்டிடங்கள் (ஆரம்ப உயர்நிலை மற்றும் மேல் நிலைப்பள்ளிகள்) | 59 | 55.340 |
| 6. | மகப்பேறு மற்றும் குழந்தை நல இல்லங்கள் கட்டுதல் | 56 | 23.080 |
| 7. | பொதுச் சுகாதாரம் | 20 | 15.489 |
| 8. | தெரு விளக்குகள் | 87 | 8.9915 |
| 9. | சுகாதார ஊழியர்களுக்கு வீட்டுவசதி வழங்கல் | 81 | 19.779 |
| | மொத்தம் .. | 1429 | 496.96 |



6. வறட்சி நிவாரணப்பணி:

பருவ மழை தவறியதால் தமிழகத்தின் பல பாகங்களில் கடுமையான குடிநீர்ப் பற்றாக்குறை இருந்து வருகிறது. இந்நிலையைச் சமாளிக்க நகராட்சிகள் நகரப் பஞ்சாயத்து மற்றும் கிராமப் பஞ்சாயத்துக்களில் உள்ள தலைமை நீரேற்று நிலையங்களுக்குத் துணை நிலையங்களிலிருந்து தனியாக மின் இணைப்பு கொடுக்க ரூ. 14 இலட்சம் அளித்திட உத்தரவிட்டுள்ளது. நகராட்சிகளுக்கு இத்தொகை பாதி கடனாகவும் பாதி மான்யமாகவும் வழங்கப்பட உள்ளது.

1982-83 ஆம் ஆண்டில் கீழே குறிப்பிட்டுள்ள நகராட்சிகளுக்கு அந்நகராட்சிகளின் தலைமை நீரேற்று நிலையங்களுக்குத் துணை நிலையங்களிலிருந்து தனியாக மின் இணைப்பு கொடுக்க தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன:

| வரிசை எண் | நகராட்சியின் பெயர் | திட்டத்தின் உத்தேச வரம்பு (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|
| 1 | திருப்பூர் | 2.50 |
| 2 | மயிலாடுதுறை | 1.36 |
| 3 | திண்டுக்கல் | 2.545 |
| 4 | தருமபுரி | 1.451 |
| 5 | திருச்செங்கோடு | 8.70 |
| 6 | சாத்தூர் | ( 60 |
| 7 | தஞ்சாவூர் | 9.45 |
| 8 | சிவகங்கை | 6.50 |
| 9 | திருவாரூர் | 1.95 |
| 10 | மேலூர் | 3.00 |
| 11 | கோபிசெட்டிபாளையம் | 1.80 |

7, நகராட்சிகளின் தலைமை நீரேற்று நிலையங்களில் ஜெனரேட்டர்கள் பொருத்துதல்:

13-12-1982 முதல் மின்சார வெட்டு அமுல்படுத்தியதால், எல்லா நகராட்சிகளிலும் தண்ணீர் விநியோகம் பெரி[illegible] பட்டுவிட்டது. பொது மக்களுக்குத் [illegible] விநியோகம் செய்ய, தேவையா[illegible] தலைமை நீரேற்று நிலை[illegible] என்ஜின்களோ, ஜெனரேட்டர்[illegible] வைப்பதற்கான கருத்துருக்களும் ஆராயப்[illegible]

8. சென்னை நகரத்திற்கு அருகாமையில் வறட்சி நிலையில் பாதிக்கப் பட்டுள்ள நகராட்சிகளுக்குக் குடிநீர் விநியோக அபிவிருத்தி வேலைகளுக்கு நிதி உதவி.

வடமேற்கு மற்றும் தென்மேற்குப் பருவ மழை பொய்த் தமையால், சென்னை மாநகரத்தைச் சுற்றியுள்ள தாம்பரம், பல்லவபுரம் மற்றும், ஆலந்தூர் நகராட்சிகளில் தண்ணீர் வழங்கும் பணி மிகவும் சீர்குலைந்தது. இந்த நகராட்சிகளில், நிவாரண வேலைகளுக்காகவும், தண்ணீர் விநியோகத்தை அபிவிருத்தி செய்யும் பொருட்டும் அரசு ரூ. 28.85 இலட்சம் பாதி கடனாகவும், பாதி மான்யமாகவும் வழங்கியுள்ளது. இந்த நகராட்சிகளில் நிவாரண வேலைகள் எடுத்துக்கொள்ளப்பட்டு தொடர்ந்து வேலைகள் நடைபெற்றுவருகின்றன.

9. முதல்வரின் சத்துணவுத் திட்டம்.

முதல்வரின் 2 வயது முதல் 4 வயது முடிய உள்ள குழந்தை களுக்காகச் சத்துணவுத் திட்டம் 15–9–1982 முதல் தமிழகத் கலுள்ள அனைத்து 106 நகராட்சிகளிலும் மற்றும் நகரியங் செயல்படுத்தப்பட்டுள்ளது. 106 நகராட்சிகளிலும் மற்றும் நகரியங்களிலும் வசிக்கும் மொத்த மக்கட் தொகை 72,28,007. இதில் வறுமைக் கோட்டிற்குக் கீழுள்ள குழந்தைகள் மொத்தம் 395,741. இதன் மூலம் 2,25,000 குழந்தைகள் சத்துணவு பெறுகிறார்கள், இக்குழந்தைகளுக்குச் சத்துணவு வழங்க மொத்தம் 2,965 சத்துணவு மையங்களை அரசு அமைத்துள்ளது. இவற்றில் 176 வாடகையின்றி பெற்ற கட்டிடங்கள். 210 வாடகைக் கட்டிடங்கள். மீதமுள்ள புதிதாகக் கட்டப்பட வேண்டிய 2579 மையங்களில் 2541 கட்டிடங்கள் கட்டி முடிக்கப்பட்டுவிட்டன. 38 கட்டிடங்கள் கட்டப்பட்டு வருகின்றன:

அரசு ரூ. 4.7995 கோடியை மான்யமாக மேற்படி கட்டிடங்கள் கட்டுவதற்காக ஒப்பளிப்பு செய்துள்ளது, இதில் ரூ. 4.13 கோடி ஏற்கனவே வழிவகை முன்பணமாக அனுமதி 106 நகராட்சி மற்றும் நகரியங்களுக்கும் பிரித்துக் கொடுக்கப் பட்டுவிட்டது.

மேற்கூறிய திட்டத்தைப் போன்றே 5 வயது முதல் 9 வயது முடிப உள்ள குழந்தைகட்கும்; 10 வயது முதல் 14 வயது வரையிலான குழந்தைகட்கும் சத்துணவு வழங்கும் முதல்வரின் திட்டம் 1–7–1982 முதல் நகராட்சித் தொடக்க மற்றும் நடுநிலைப்பள்ளிகளில், பள்ளிக்கல்வி இயக்குநரால் செயல்படுத்தப் பட்டு 15-9-1982 முதல் நகராட்சி நிர்வாக இயக்குநரிடம் மாற்றப்பட்டது. 15–9–1982 முதல் அனைத்து மைய உணவுக் கூடங்களும் பொது உணவுக் கூடங்களும், நீக்கப்பட்டு,





தனித்தனி சமையற் கூடங்கள் அமைக்கப்பட்டுள்ளன. ஆக மொத்தம் உள்ள 1,026 நகராட்சி தொடக்க மற்றும் நடுநிலைப் பள்ளிகளில், 1025 பள்ளிகளில் சத்துணவு வழங்கப்பட்டு வருகிறது. திருப்பூரில் 6-வது வகுப்பு முதல் 8—வது வகுப்பு வரையுள்ள ஒரு நடுநிலைப் பள்ளியில் மட்டும் சத்துணவு வழங்கப்படவில்லை. மொத்தம் நகராட்சிப் பள்ளிகளில் பயிலும் மாணவர்கள் 3.36 இலட்சம். அதில் 1.70 இலட்சம் மாணவர்கள் சத்துணவு பெறுகின்றனர்.

10. மகாகவி பாரதியார் நூற்றாண்டு விழா—1982.

அனைத்து நகராட்சிகளிலும் நகரியங்களிலும் மகாகவி பாரதியார் நூற்றாண்டு விழா திட்டமிட்டவாறு 11-12-81 முதல் 11-12-82 முடிய கொண்டாடப்பட்டது. பள்ளி மாணவ மாணவியர்க்கும் பேச்சுப்போட்டி, கட்டுரைப் போட்டி, ஓவியப் போட்டி, கவிதைப் போட்டி ஆகிய போட்டிகள் நடத்தப்பட்டு, ஒவ்வொன்றிலும் பரிசுகள் மாணவர்களுக்கு வழங்கப்பட்டது. மற்றும் ஊர்வலம், பொதுக்கூட்டம், நாடகம், கவியரங்கம் முதலியன நடத்தப்பட்டு, இவ்விழா சிறப்பாகக் கொண்டாடப் பட்டது.

98. நகராட்சிகள் மற்றும் 8 நகரியங்களில் இவ்வாண்டில் புதியதாக கட்டப்பட்ட பள்ளிக் கட்டிடங்கள் அலுவலகக் கட்டிடங்கள் அங்காடிக் கட்டிடங்கள், நீர் தேக்கத் தொட்டிகள் மற்றும் பூங்காக்கள் ஆகியவற்றிற்கு பாரதியார் நூற்றாண்டு விழா நினைவு பெயர்சூட்டப்பட்டது.

11. உள்ளாட்சி அமைப்புகளுக்கான தேர்தல்கள்.

ஊராட்சிகளுக்கான தேர்தல்கள், தாழ்த்தப்பட்ட இனம், மலை வாழ் மக்கள் மற்றும் பெண்களுக்காக சில ஊராட்சித் தலைவர் இடங்களை தனித் தொகுதிகளாக அறிவிக்கப்பட்டதை எதிர்த்து புதுடில்லியில் உள்ள மேலாண்மை நீதிமன்றத்தில் (Supreme Court) தொடுக்கப்பட்டுள்ள மேல் முறையீட்டு வழக்கில் தீர்ப்பு ஆனவுடன் உடனடியாக நடத்தப்படும். நகராட்சிகள் மற்றும் சென்னை, கோயம்புத்தூர் மாநகராட்சிகளுக்கான தேர்தல் பற்றி விரைவில் நடக்கப்போகும் அனைத்துக் கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் கலந்தாலோசித்தப்பின் முடிவெடுக்கப் படும்.

## இணைப்பு II

(48-ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.)

### கோரிக்கை எண் 39—சாலைகளும் பாலங்களும்

### கோரிக்கை எண் 53-சாலைகள் பாலங்களுக்கான மூலதனச்செலவு

### தமிழ்நாட்டில் சாலை மேம்பாட்டுத் திட்டங்கள்

தமிழகத்தின் 1982-83-ஆம் ஆண்டிற்கான சாலை வளர்ச்சித் திட்டங்களின் ஆய்வுரை மற்றும் 1983-84 ஆம் ஆண்டிற்கான திட்டங்கள்.

1. முன்னுரை

1.1. ஒரு நாட்டின் சமூக பொருளாதார வளர்ச்சிக்குத்
தகுந்த முறையில் சாலைகள் அமைப்பதும் அவைகளை ம்மம்
படுத்துவதும் முக்கிய வழிகளில் ஒன்றாகும். சாலைகளும்,
சாலைப் போக்குவரத்தும் அத்தகைய ஒரு முன்னேற்றத்திற்கு
அடிப்படைத் தேவையாக அமைகின்றன. ஒரு நாட்டின் சாலை
வளர்ச்சியும், பொருளாதார வளர்ச்சியும். ஒன்றுக்கொன்று
நெருங்கிய தொடர்புடையவை. நமது நாட்டில் எண்பது
சதவீதத்திற்கும் மேற்பட்ட மக்கள் கிராமங்களில் வாழ்வதால்
அவர்களுக்குத் தக்கதொரு சாலை அமைப்பு அடிப்படைத்
தேவையாக உள்ளது. அதன் மூலம் கிராம மக்கள் அவர்கள்
உற்பத்தி செய்யும் பொருட்களை நகரச் சந்தைகளில் எளிதில்
விற்க முடிகின்றது. இந்நிலைமை பின்தங்கிய பகுதிகளுக்கும்,
பழங்குடியினர் வாழும் பகுதிகளுக்கும் மிகவும் பொருந்தும்.

1.2. இந்நாடு சுதந்திரம் அடைந்த பின்னர், திட்டப்பணிகள்
மூலம் இந்நாட்டில் பல்வேறு துறைகளில் குறிப்பாக பாசனம்,
வேளாண்மை, தொழில், வனவளம், மீன்வளம், சமூக நலம்,
பழங்குடி மக்கள் நலம் போன்ற பல்வேறு துறைகளில்
முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. நாட்டின் வளர்ச்சிக்கு சாலை
மேம்பாடானது ஓர் அடிப்படை பணியாகும். இந்நாட்டின்
சமூக பொருளாதார முன்னேற்றத்திற்கான நற்பயனை
அடைவதற்கு இதனை முன்னோடியாகக் கொண்டு பிற ஆக்கப்
பணிகளுடன் இணைந்து செயல்படுவது அவசியமாகும். சாலைப்
போக்குவரத்துப் பணிகளைப் பொறுத்தவரை தமிழ்நாடு
புரிந்துள்ள சாதனையானது அனைவராலும் பாராட்டப்
பட்டுள்ளது. ஐந்தாம், ஆறாம் திட்டக் காலங்களில் ''குறைந்த
அளவுத் தேவைத் திட்டத்தின்'' ஒரு பகுதியாக ஊரகச் சாலை
மேம்பாட்டுக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கப்பட்டுள்ளது.
1500-ம் அதற்கு மேலும் மக்கள் தொகையினைக் கொண்ட
கிராமங்கள் அனைத்திற்கும் எல்லா பருவ நிலைகளுக்கும் ஏற்ற
சாலைகளை அமைத்து அவற்றின்மூலம் இணைப்பினை ஏற்படுத்தித்
தருதலே இத்திட்டத்தின் அடிப்படை நோக்கமாகும்.

1.3. தமிழ்நாடு 'மாநில நெடுஞ்சாலை மற்றும் ஊரகப்
பணித்துறை' கீழே கொடுக்கப்பட்டுள்ள பல்வேறு வகைகளைச்
சேர்ந்த சாலைகளைப் பராமரித்து வருகின்றது. அச்சாலைகளின்
[illegible] 1—4—1982 அம் நாள் நிலவரப்படி [illegible]



| | | நீளம் கிலோ மீட்டரில். |
|---|---|---|
| (அ) தேசீய நெடுஞ்சாலைகள் (நகர்ப்பகுதி) | .. | 139 |
| (ஆ) மாநில நெடுஞ்சாலைகள் | .. | 1,814 |
| (இ) மாவட்டப் பெருஞ்சாலைகள் | .. | 14,028 |
| (ஈ) மாவட்ட இதர சாலைகள் | .. | 19,765 |
| மொத்தம் | .. | 35,746 |

1.4, உள்ளாட்சி மன்றங்களினால் பராமரிக்கப்பட்டு வரும் ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றியச் சாலைகளின் மொத்த நீளம் 81,139 கிலோ மீட்டராகும். இது இந்நாட்டிலேயே மிக உயர்ந்த அளவாகும்,

1.5. மேலும் ''மாநில நெடுஞ்சாலை மற்றும் ஊரகப் 'பணித்
துறை'' யானது மத்திய அரசு பொறுப்பேற்கும் திட்டமான
அதாவது ''மாநிலங்களுக்கு இடையே பொருளாதார மற்றும்,
மாநிலங்களுக்கிடையே முக்கியத்துவம் வாய்ந்த திட்டத்தையும்'',
'மலைவாழ் பகுதி மேம்பாட்டுத் திட்டம்'', ''மேற்குத்
தொடர்ச்சி மலை வளர்ச்சித் திட்டம்'', ''பழங்குடியினர் துணைத்
திட்டம்'' போன்ற மத்திய அரசுத் துறைத் திட்டங்களையும்
மேற்கொள்கிறது.

1.6. 1982 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 1 ஆம் நாள்
நிலவரப்படி, 75 பாலப் பணிகள், புதிதாக அமைக்கப்படவுள்ள
170.4 கி. மீ., நீளமும் மேம்படுத்தப்படவுள்ள 8`4.8 கி.மீ.
நீளமும் அடங்கிய 118 சாலைப் பணிகள் எஞ்சிய பணிகளாக
நிறைவேற்றப்பட இருந்தன. 1982–83ம் ஆண்டில், 43 பாலப்
பணிகள், புதிதாக அமைக்கப்படவுள்ள 11 கி. மீ.
நீளமும் மேம்படுத்தப்படவுள்ள 338.7 கி.மீ., நீளமும்
அடங்கிய 48 சாலைப் பணிகளுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.
மொத்தத்தில், 1982-83 ஆம் ஆண்டில் கையிலிருந்த மொத்தப்
பணிகளின் எண்ணிக்கை 118 பாலப்பணிகளும், புதிதாக
அமைக்கப்படுவதற்கான 181.4 கி. மீ., மற்றும் மேம்படுத்து
வதற்கான 1173.5 கி. மீ. நீளமும் அடங்கிய 166 சாலைப்
பணிகளும் ஆகும்.

1.7. இதுதவிர, 320 கிராமங்களில் வசிக்கிற, 4,50,000
மக்களுக்கும் பயன் அளிக்கும் வகையில், 1982–83 ஆம் ஆண்டில்
500 கி.மீ. கிராமப் பகுதி சாலைகளை மேம்படுத்த/அமைக்க
திட்டமிடப்பட்டுள்ளது. 1979-80 முதல் 1982–83 வரை பேருந்து
செல்லும் 9,325,5 கி. மீ, ஊராட்சி ஒன்றிய மற்றும் ஊராட்சி
சாலைகளை ''பேருந்து செல்லும் சாலைகளை எடுத்துச்

கொள்ளும் திட்டத்தின்'' கீழ் மேம்படுத்த அரசு ஆணை பிறப்பித்துள்ளதென்பதை இது தொடர்பாகக் குறிப்பிட வேண்டி யுள்ளது. இதில், 4422 கி. மீ. பேருந்து செல்லும் சாலைகள் மேம்படுத்தப்பட்டுள்ளன.

2. ஊரக வளர்ச்சிக்கான திட்டங்கள்

2,1. தகுந்த போக்குவரத்து வசதிகள் தேவைப்படும் ஊரகப் பகுதிகளின் முன்னேற்றம் குறித்து இவ்வரசானது ஆழ்ந்த கவனம் செலுத்தி வருகிறது. ஆதலால் இந்த அரசானது, ''ஊரகச் சாலைகள் திட்டம்'', ''பேருந்து வழித்தடங்களை எடுத்துக்கொள்ளும் திட்டம்'', ''தன்னிறைவுத் திட்டம்'' முதலான பல்வேறு வகைத் திட்டங்களை வகுத்து சாலைகளை அமைப்பது, மேம்படுத்துவது போன்ற பணிகளைச் செய்து வருகிறது. எனவே, இதனால் கிராமவாசிகள், அவர்களின் உற்பத்திப் பொருட்களை எளிதாகவும் இலாபகரமாகவும் சந்தையில் விற்று, அதன் மூலம் அவர்களின் பொருளாதார நிலையினை உயர்த்திக் கொள்ள இயலுகிறது.

2.2. ஊரகச் சாலைகள் திட்டம்

2.2.1. நகர்ப்பகுதிகளிலிருந்து சற்று தள்ளி உள்ளேயிருக்கும் கிராமங்களில் வசிக்கும் மக்கள் நகரச் சந்தைகளுக்குச் செல்வதற்கு தக்க சாலை வசதி இல்லாத காரணத்தால் மிகுந்த துன்பங்களை அடைந்து வருகின்றனர். ஆகவே, தமிழ்நாட்டிலுள்ள அனைத்து கிராமங்களுக்கும் தகுந்த போக்குவரத்து வசதிகளை ஏற்படுத்தி, அதன் மூலம் கிராமங்களை அவற்றிற்கு மிக அருகிலிருக்கும் வாகனப் போக்குவரத்து சாலைகளுடன் இணைத்து அதன் மூலம் கிராம மக்கள் சமூகப் பொருளாதார வளர்ச்சி பெற இந்த அரசானது கண்ணும் கருத்துமாக இருந்து வருகின்றது. அத்தகைய தோர் இலட்சியத் திட்டத்திற்குப் பெருமளவு மூலதனம் தேவைப் படுகின்றது. ஆகவே இத்திட்டம் படிப்படியாக நிறைவேற்றக் கருதப்பட்டுள்ளது. 1,500-ம் அதற்கு மேலும் மக்கள் தொகை யினைக் கொண்ட கிராமங்களுக்கு அவற்றிற்கு வெகு அருகாமையில் இருக்கும் வாகனப்போக்குவரத்துச் சாலைகளுடன் இணைப்பினை ஏற்படுத்தும் வகையில் சாலைகளை அமைத்துத் தருவதே இத்திட்டத்தின் ஆரம்ப காலப் பணியாகும். பின் தங்கிய மற்றும் வளர்ச்சி அடையாத பகுதிகளுக்கு இதிலிருந்து விலக்கு அளிக்கப்பட்டுள்ளது. அப்படிப்பட்ட பகுதிகளில் இருக்கும் கிராமங்களில் மக்கள் தொகை 1,000 இருந்தாலும் கூட, இத் திட்டத்தின்கீழ் எடுத்துக்கொள்ளப்படுகின்றது. பல குக்கிராமங் களின் மக்கள் தொகை கூட்டாக 1,500-ம் அதற்கு மேற்பட்டு இருந்தாலும் அவைகளையும் இத்திட்டத்தின்கீழ், சாலை வசதிகள் அளிக்க பரிசீலிக்கப்படுகின்றது. ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றியச் சாலைகள் இத்திட்டத்தின்கீழ் மேம்படுத்து வதற்காக எடுத்துக் கொள்ளப்பட்டு, அப்பணியானது முடிவடைந்ததும் எதிர்கால பராமரிப்பிற்காக அரசால் அவைகள்



எடுத்துக் கொள்ளப்படுகின்றன. அதன் மூலம் உள்ளாட்சி மன்றங்களின் நிதிச்சுமை குறைக்கப்படுகின்றது. புதிய சாலைகள் அமைக்கும் பணிகளும் இத்திட்டத்தின்கீழ் எடுத்துக்கொள்ளப் படுகின்றன. இதுவரை, இத்திட்டமானது ஆறு கட்டங்களாக ரூ. 7,567.19 இலட்சம் செலவில் 6,363.66 கிலோ மீட்டர் நீளத்திற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

2.2.2. 1982 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 31ஆம் நாள் வரை மொத்தமாக 4,536 கிலோ மீட்டர் நீளச்சாலைப் பணிகள் ரூ. 3,154.60 இலட்சம் செலவில் கிராமப் பகுதி சாலைகள் திட்டத்தின்கீழ் முடிக்கப்பட்டுள்ளன. இதனால், 1,886 பிரதான கிராமங்களும், 1,610 இடைப்பட்ட கிராமங்களும் பயனடைந் துள்ளன. ஊரகச் சாலைகள் அமைப்பதற்கு ஓர் இலட்சம் ரூபாய் முதலீடு செய்தால் சராசரியாக 5,000 மனித நாட்களுக்கான வேலை வாய்ப்பினை உருவாக்குகிறது என்பதனை கவனத்தில் கொள்ள வேண்டும். முதல் நான்கு கட்டங்களில் 3,237 கிராமங்கள் பயன்பெறும் வகையில் ரூ.2,445 இலட்சம் செலவில் 4,194.34 கிலோ மீட்டர் நீளமுள்ள சாலைகளை அமைத்தல் மற்றும் மேம்படுத்தல் போன்ற பணிகள் மேற்கொள்ளப்பட்டு முழுவதும் முடிவடைந்துள்ளன, ஐந்தாம் கட்டப்பணிகள் முடிவுறும் நிலையில் உள்ளன.

2.2.3. ஐந்தாம் கட்டமானது, ''தன்னிறைவுத் திட்டத்தின்' கீழ் ஒருங்கிணைந்த வளர்ச்சிக்காகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள 69 ஊராட்சி ஒன்றியங்களின் தேவைகளுக்குத் தக்கவாறு திட்டமிடப் பட்டுள்ளது.

2.2.4. ஆறாம் கட்டப் பணிகள் 1,030 கிராமங்கள் பயன் பெறும் வகையில் ரூ. 4,388 இலட்சம் மதிப்பீட்டுச் செலவில் 1,750.40 கிலோமீட்டர் நீளத்திற்கு மேற்கொள்ள, அரசு 1982 சனவரியில் அனுமதி வழங்கியுள்ளது. இப்பணிகள் பல்வேறு நிலைகளில் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. ஊரகச் சாலைகள் திட்டத்தின் இலக்குகள், செயல்முறைகள் கட்டம் வாரியாக காண்பிக்கும் விவர அறிக்கை கீழே கொடுக்கப்பட்டுள்ளது:—

ஊரகச் சாலைகள் திட்டம்.

திட்டங்களும் செயல்முறைகளும்.

நீளம்: கிலோ மீட்டரில்.
மதிப்பீடு ; ரூபாய் இலட்சத்தில்.

| தொடர் எண்ணும் கட்டங்களின் விவரமும். | | இலக்குகள். பணிகளின் எண்ணிக்கை. | பயன் பெற்ற கிராமங்கள். பிரதான கிராமங்கள் | குக்கிராமங்கள். | மொத்தம் | நீளம். | செலவு. |
|---|---|---|---|---|---|---|---|
| (1) | | (2) | (3) | (4) | (5) | (6) | (7) |
| 1. முதற் கட்டம் | .. | 542 | 814 | 802 | 1,616 | 1,708.00 | 842 |
| 2. இரண்டாம் கட்டம் | — | 216 | 409 | 356 | 765 | 1,106,00 | 546 |
| 3. மூன்றாம் கட்டம் | — | 174 | 228 | 315 | 543 | 917.13 | 637 |
| மொத்தம் | .. | 932 | 1,451 | 1,473 | 2,924 | 3.731.13 | 2,025 |
| 4. நான்காம் கட்டம் | .. | 112 | 214 | 105 | 319 | 475.46 | 441.75 |
| 5. ஐந்தாம் கட்டம் | .. | 145 | 232 | 140 | 372 | 406.67 | 712.44 |
| பெரு மொத்தம் | .. | 1,189 | 1,897 | 1,718 | 3,615 | 4.613.26 | 3,179.19 |
| 6. ஆறாம் கட்டம் | .. | 421 | 598 | 432 | 1,030 | 1,750.40 | 4.388.00 |
| ஆறு கட்டங்களின் மொத்தம். | | 1,610 | 2,495 | 2,150 | 4,645 | 6,363.66 | 7,567.19 |



ஊரகச் சாலைகள் திட்டம்—தொடர்ச்சி.

திட்டங்களும் செயல்முறைகளும்—தொடர்ச்சி.

நீளம் ; கிலோ மீட்டரில்
மதிப்பீடு ; ரூபாய் இலட்சத்தில்.

| தொடர் எண்ணும் கட்டங்களின் விவரமும். | | 31—3—1982 வரை நிறைவேற்றப்பட்டவை. பணிகளின் எண்ணிக்கை. | பயன் பெற்ற கிராமங்கள். பிரதான கிராமங்கள். | குக்கிராமங்கள். | மொத்தம். | நீளம். | செலவு. |
|---|---|---|---|---|---|---|---|
| | | (8) | (9) | (10) | (11) | (12) | (13) |
| முதற் கட்டம் | ... | 542 | 814 | 802 | 1,616 | 1,708.00 | 842.00 |
| இரண்டாம் கட்டம் | ... | 216 | 409 | 356 | 765 | 1,106.00 | 546.00 |
| மூன்றாம் கட்டம் | ... | 174 | 228 | 315 | 543 | 917.13 | 637.00 |
| மொத்தம் | ... | 932 | 1,451 | 1,473 | 2,924 | 3,731.13 | 2,025.00 |
| நான்காம் கட்டம் | ... | 110 | 212 | 101 | 313 | 463.21 | 420,00 |
| ஐந்தாம் கட்டம் | ... | 110 | 223 | 36 | 259 | 341.66 | 601.82 |
| பெரு மொத்தம் | ... | 1,152 | 1,886 | 1,610 | 3,496 | 4,536.00 | 3,046.82 |
| ஆறாம் கட்டம் | .. | .. | .. | .. | ... | ... | 107.78 |

ஊரகச் சாலைகள் திட்டம்—தொடர்ச்சி.

திட்டங்களும செயல் முறைகளும்—தொடர்ச்சி.

நீளம் : கிலோ மீட்டரில்.
மதிப்பீடு : ரூபாய் இலட்சத்தில்.

| தொடர் எண்ணும் கட்டங்களின் விவரமும். | 1—4—1982 ஆம் நாள் நிலவரப்படி நடந்தேறி வருபவை. பணிகளின் பயன் பெறும் கிராமங்கள். எண்ணிக்கை. (14) | பிரதான கிராமங்கள். (15) | குக்கிராமங்கள். (16) | மொத்தம். (17) | நீளம். (18) | செலவு. (19) |
|---|---|---|---|---|---|---|
| 1. முதற் கட்டம் .. .. | .. | .. | .. | .. | .. | .. |
| 2. இரண்டாம் கட்டம் .. | .. | .. | .. | .. | .. | .. |
| 3. மூன்றாம் கட்டம் .. | .. | .. | .. | .. | .. | .. |
| மொத்தம் .. | .. | .. | .. | .. | .. | .. |
| 4. நான்காம் கட்டம் .. | 2 | 2 | 4 | 6 | 12.25 | 30.06 |
| 5. ஐந்தாம் கட்டம் .. | 35 | 9 | 104 | 113 | 65.01 | 110.62 |
| 6. ஆறாம் கட்டம் .. | 21 | 29 | 26 | 55 | 220.00 | 1,899.65 |
| எடுத்துக் கொள்ளப்பட வேண்டியவை. | 400 | 569 | 406 | 975 | 1,530.40 | 2,372.26 |
| பெரு மொத்தம் | 458 | 609 | 540 | 1,149 | 1,827.66 | 4,412.59 |



2.2.5 1982–83-ம் ஆண்டில் ஊரகச் சாலைகள் திட்டத்தின் கீழ் 500 கிலோ மீட்டர் நீளம் கொண்ட ஊரகச் சாலைகளை மேம்படுத்துதல், அமைத்தல் போன்ற பணிகள் ரூபாய் 1,000 இலட்சம் செலவில் மேற்கொள்ளக் கருதப்பட்டுள்ளது. அதனால், 4,50,000 மக்களைக் கொண்ட 320 கிராமங்கள் பயன் பெறும். கிராமப்புற மக்கள் உரிய போக்குவரத்து வசதியினைப் பெற நிதி ஒதுக்கீட்டை படிப்படியாக இவ்வரசு உயர்த்திக்கொண்டு போவதை இதிலிருந்து அறியலாம்.

2.2.6 1983-84 ம் ஆண்டில் 1,000 இலட்சம் ரூபாய் செலவிட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

2.3.. பெருந்துவழித் தடங்களை மேற்கொள்ளும் திட்டம்

2.3.1. இச்சிறப்புத் திட்டம் 1960–61-ம் ஆண்டில் துவங்கப் பெற்றது. போதிய நிதி வசதி இல்லாததால் இத்திட்டம் 1974-ம் ஆண்டிலிருந்து 1979-ம் ஆண்டுக்கு தள்ளிப்போடப்பட்டது. 1960-61-ம் ஆண்டிலிருந்து 1973-74-ம் ஆண்டு வரை சுமார் 12,500 கி.மீ. நீளமுள்ள ஊராட்சிகள் மற்றும் ஊராட்சி ஒன்றியங்களைச் சேர்ந்த பெருந்து வழித் தடங்கள் மேம்படுத்தப் பட்டு, பராமரிப்பதற்காக, அவை அரசால் எடுத்துக் கொள்ளப் பட்டிருக்கின்றன. 1979–80-ம் ஆண்டில் இத்திட்டம் அரசால் ஆய்வு செய்யப்பட்டு மீண்டும் மிக ஊக்கத்துடன் மேற்கொள்ளப் பட்டது. அதன்படி, 1981–82-ம் ஆண்டு இறுதிவரை, 8,103 கி.மீ. நீளமுள்ள பெருந்து வழித்தடங்கள் (69 தன்னிறைவுத் திட்ட ஒன்றியங்களில் 1,517 கி.மீ., 150 தன்னிறைவுத் திட்ட ஒன்றியங்களில் 1,158 கி.மீ., மேற்படி தன்னிறைவுத் திட்ட ஒன்றியங்களில் இடம் பெறாத கிராமங்களில் 5,429 கி.மீ.) மேம்படுத்தப்பட்டு, அவற்றின் எதிர்கால பராமரிப்பிற்காக அவை அரசால் எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கின்றன. அதனால் உள்ளாட்சி மன்றங்களின் நிதிச் சுமை குறைகின்றது.

2.3.2. அங்ஙனம் மேற்கொள்ளப்பட்ட சாலைகளின் நீளம், செலவிடப்பட்ட தொகை ஆகியவை குறித்த விவரங்கள் ஆண்டு வாரியாகக் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:—

| வரிசை எண்ணும் ஆண்டும். (1) | ஒதுக்கீடு. (2) | செலவு கணக்குகள். (3) |
|---|---|---|
| | (ரூபாய் இலட்சத்தில்) | |
| (1) 1979—80 .. .. .. | 600.00 | 601.07 |
| (2) 1980—81 .. .. .. | 1,000.00 | 1,002.00 |
| (3) 1981—82 .. .. .. | 1,300.00 | 1,109.65 |
| (4) 1982—83 .. .. .. | 1,100.00 | .. |
| மொத்தம் ... | 4,000.00 | 2,712.72 |

| வரிசை எண்ணும் ஆண்டும். (1) | தன்னிறைவுத் திட்ட ஒன்றியங்கள். (4) | தன்னிறைவுத் திட்ட ஒன்றியங்களைத் தவிர. (5) | மொத்தம். (6) |
|---|---|---|---|
| | (நீளம் கிலோ மீட்டரில்) | | |
| (1) 1979—80 .. | 867 | 1,643 | 2,510 |
| (2) 1980—81 .. | 550 | 2,596 | 3,146 |
| (3) 1981—82 .. | 1,257 | 1,190 | 2,447 |
| (4) 1982—83 .. | 5 2 | 710.50 | 1,222.50 |
| மொத்தம் .. | 3,186 | 6139.50 | 9,325.50 |

| வரிசை எண்ணும் ஆண்டும். | பயன்பெற்ற கிராமங்களின் எண்ணிக்கை. (7) | மக்கள் தொகை. (8) |
|---|---|---|
| (1) 1979—80 .. .. | 1,255 | 12,58,500 |
| (2) 1980—81 .. .. | 1,573 | 16,22,000 |
| (3) 1981—82 .. .. | 1,224 | 12,53,500 |
| (4) 1982—83 .. .. | 612 | 6,14,000 |
| மொத்தம் .. | 4,664 | 47,48,000 |

2.3.3. 1983—84ஆம் ஆண்டில் பேருந்து வழித் தடங்களை மேற்கொள்ளும் திட்டத்தின் கீழ் 1,326.015 கி. மீ. நீளம் கொண்ட ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றியச் சாலைகளை மேம்படுத்தி அச்சாலைகளை பராமரிப்பதற்காக அரசு எடுத்துக் கொள்ளத் திட்டமிட்டுள்ளது. அதற்காக, 1983—84 ஆம் ஆண்டின் வரவு-செலவு திட்ட மதிப்பீட்டில் ரூபாய் 1,100 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

2.3.4. இத்திட்டத்தைச் செயற்படுத்தும்போது, "தன்னிறைவுத் திட்டத்தின்" கீழ் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள ஊராட்சி ஒன்றியங்களிலுள்ள பேருந்து வழித் தடங்களுக்கு முன்னுரிமை அளக்கப்பட்டு வருகின்றது.



2.4. தன்னிறைவுத் திட்டம்.

2.4.1. இத் திட்டம், 1980—81 ஆம் ஆண்டிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள ஊராட்சி ஒன்றியங்களில் செயல் படுத்தப்பட்டு வருகின்றது. ஊரகப் பகுதிகளில் வசிக்கும் மக்களின் பின்வரும் அடிப்படைத் தேவைகளை நிறைவு செய்வதே இத்திட்டத்தின் நோக்கமாகும்.
அடிப்படைத் தேவைகளாவன:—

(அ) இணைப்புச் சாலைகள்,

(ஆ) இடுகாட்டிற்கான பாதைகள்,

(இ) சிறு பாலங்கள்,

(ஈ) பள்ளிக் கட்டிடங்கள்,

(உ) சிறு பாசன வசதிகளை மேம்படுத்துதல்,

(ஊ) தாய்-சேய் நல விடுதிகள்,

(எ) ஊரக மருந்தகங்கள்,

(ஏ) பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கு திட்டம் மற்றும்,

(ஐ) ஆதி திராவிடர்களுக்காக வீடுகள் கட்டுதல் முதலியவை.

2.4.2 மேற்குறிப்பிட்டவற்றில் முதல் ஏழு திட்டங்கள் நெடுஞ்சாலை மற்றும் ஊரகப் பணித்துறையால் நிறைவேற்றப் பட்டு வருகின்றன. பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கும் திட்டத்தை, தமிழ்நாடு குடிநீர் வழங்கு வடிகால் வாரியம் நிறைவேற்றி வருகின்றது. இறுதியில் சொல்லப்பட்டுள்ள ஆதிதிராவிடர்களுக்கான வீடுகள் கட்டும் திட்டத்தை, தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டு வசதி வளர்ச்சிக் கழகம் செயற்படுத்துகின்றது.

2.4.3. தமிழ் நாட்டிலுள்ள அனைத்து கிராமங்களுக்கும் அனைத்து அடிப்படை வசதிகளையும், மூன்று ஆண்டுகளுக்குள் அளிப்பதே மேற்படித் திட்டத்தின் முக்கியக் குறிக்கோளாகும். இத்திட்டத்தின் முதற் கட்டமாக, 1980—81 ஆம் ஆண்டில் தேர்ந்தெடுக்கப்பட்ட 69 ஊராட்சி ஒன்றியங்களிலுள்ள அனைத்துக் கிராமங்களும் எடுத்துக்கொள்ளப்பட்டன. இரண்டாம் கட்டமாக 1981—82 ஆம் ஆண்டில் தேர்ந்தெடுக்கப்பட்ட 150 ஊராட்சி ஒன்றியங்களில் உள்ள அனைத்து கிராமங்களும் இத் திட்டத்தினை செயல்படுத்துவதற்காக எடுத்துக் கொள்ளப் பட்டிருக்கின்றன.

2.4.4 "நெடுஞ்சாலை ஊரகப் பணித் துறையால்" மேற்கொள்ளப்பட்டு வரும் பல்வேறு வங்கயான திட்டங்களில் 1980—81 ஆம் ஆண்டில் நிறைவேற்றப்பட்ட பணிகளின் சாதனை விவரங்கள் இணைப்பு—I (அ)—ல் கொடுக்கப்பட்டுள்ளன.

2.4.5· 1981—82 ஆம் ஆண்டில் இரண்டாவது கட்டத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட 150 ஊராட்சி ஒன்றியங்களில் திட்ட நிதி இலக்குகள் மற்றும் சாதனை குறித்த விவரங்கள் இணைப்பு 1 (ஆ)-வில் கொடுக்கப்பட்டுள்ளன.

2.4.6 மூன்றாவது கட்ட தன்னிறைவுத் திட் தின் கீழ் 159 ஊராட்சி ஒன்றியங்களில் (1982—83) 31—12—1982 வரை எய்திய திட்ட இலக்குகள் குறித்த விவரங்கள் இணைப்பு 2—ல் கொடுக்கப்பட்டுள்ளன.

2.4.7 இம்மாநிலத்தில் இதர ஊராட்சி ஒன்றியங்களில் உள்ள அனைத்து கிராமங்களும் 1982—83 ஆம் ஆண்டில் தன்னிறைவுத் திட்டத்தின் மூன்றாவது கட்டத்தில் சேர்க்கப் பட்டுள்ளன. இத்திட்டத்தின் மூன்றாவது கட்டத்தின் முடிவில் தமிழ்நாட்டில் உள்ள எல்லா கிராமங்களும் எல்லா அடிப்படை வசதிகளும் பெறும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

2.4.8. இத்திட்டத்தின்கீழ் மேற்கொள்ளப்பட்ட பணிகள் அனைத்தும் 31—3—1983-க்கு முன்னர் முடிக்கப்படத் திட்டமிடப் பட்டுள்ளது.

2.4.9. முதற் கட்டமான 69 ஊராட்சி ஒன்றியங்களில் நிதிப் பற்றாக் குறையால் விட்டுவிடப்பட்டப் பணிகள் எவையேனு மிருப்பின், அவற்றை 1983—84ஆம் ஆண்டில் எடுத்துக்கொள்ளக் கருதப்பட்டுள்ளது.

3. மாநிலச் சாலைகள் திட்டம்.

3.1. அதிகரித்துவரும் போக்குவரத்துத் தேவைகளை பூர்த்தி செய்வதற்காக, கீழே குறிப்பிடப்பட்டுள்ள மூலப் பணிகள் நெடுஞ்சாலை கிராமப் பணித்துறையால் எடுத்துக் கொள்ளப் படுகின்றன:—

(அ) தற்போதுள்ள உறுதியற்ற கட்டுமானங்களை உறுதி யாக அமைத்தல்:

(ஆ) பாலம் அமைக்கப்படாத கடவுப் பாதைகளில் மதகு களும் பாலங்களும் அமைத்தல்;

(இ) நடைபாதைகளை அகலப் படுத்துதல்/உறுதிப் படுத்துதல்;

(ஈ) வடிவமைப்பு இயல் மேம்பாடு போன்ற மூலப்பணி களை வளர்ந்து வரும் போக்குவரத்துத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக எடுத்துக் கொள்ளுதல்.





மாநிலச் சாலைப் பணிகள் திட்டத்தின்கீழ் ஒவ்வொரு துணைத் திட்டப் பணியைப் பொறுத்த வரையிலும் அவற்றின் நோக்கங்களுக்கிணங்க எய்திய சாதனை பற்றிய விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:—

தேசிய நெடுஞ்சாலைகள் (நகர்ப் பகுதி):

3.1.1. 20,000-க்கு மேல் மக்கள் தொகை கொண்ட நகராட்சி எல்லைகளுக்குள் அமைந்துள்ள தேசிய நெடுஞ்சாலைப் பகுதிகள் மாநில அரசால் மேம்பாடு செய்யப்பட்டு, பராமரிக்கப் பட்டு வருகின்றன. இப்பகுதிகளை தேசிய நெடுஞ்சாலைகளின் புற நகர் சாலைத் தரத்திற்குச் சிறிதும் குறைவுபடாமல் பராமரிக்கவும் நகரப் பகுதிகளின். போக்குவரத்து நெரிசலுக்கு ஈடு கொடுக்கும் விதத்திலும், நடைபாதை நீங்கலாக உள்ள சாலைப் பரப்பு முழுவதும் தூசி படியா சாலையாக இருக்கவும் நகர்ப் பகுதி தேசிய நெடுஞ்சாலைகள் படிப்படியாக மேம்பாடு செய்யப்படுகின்றன.

3.1.2. 1980—81ஆம் ஆண்டில் ஒரு பெரும் பணியானது அதாவது, பூவிருந்தவல்லி நெடுஞ்சாலையை புது ஆவடி சாலைச் சந்திப்பிலிருந்து வைணவக் கல்லூரி வரை, தேசிய நெடுஞ்சாலை 4-ல் 5/4 முதல் 7/6 கி.மீ. வரை ரூ. 100 இலட்சம் மதிப்பீட்டுச் செலவில் அகலப்படுத்த ஒப்புதல் அளிக்கப்பட்டு, செயலாக்கத் திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது. நிலத்தைக் கையகப் படுத்தும் பணி நடைபெற்று வருகின்றது. தேசிய நெடுஞ்சாலை 45-ல் 11/4 கி.மீ. முதல் 12/4 கி.மீ. வரையிலான சாலைப் பகுதியினை அதாவது ''கிண்டி சுரங்க நடைபாதை''யிலிருந்து மவுண்ட்—பூவிருந்தவல்லி சாலை மற்றும் மவுண்ட் சாலை ஆகியவற்றின் சந்திப்பு (கத்திப்பரா சந்திப்பு) வரையிலான பகுதியினை ஆறுவழிச் சாலையாக அகலப்படுத்தும் பணியானது ரூ. 22.00 இலட்சம் மதிப்பீட்டுச் செலவில் ஒப்புதலளிக்கப்பட்டு செயலாக்கத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது.

3.1.3. ரூ. 38.00 இலட்சம் மதிப்பீட்டுச் செலவில் ஆறு பணிகள் தாம்பரம், ஆம்பூர், திண்டிவனம், திருநெல்வேலி, பாளையங்கோட்டை மற்றும் நாமக்கல் ஆகிய நகராட்சிப் பகுதி களில் மேற்கொள்வதற்காக 1982-83ஆம் ஆண்டின் பகுதி II திட்டத்தில் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. (பணிகளின் விவரத்தை இணைப்பு 3-ல் காண்க.) அப்பணிகள் செயலாக்கத்தின் பல்வேறு நிலைகளில் உள்ளன.

3.1.4. 1982-83ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்டத்தில் ஒதுக்கப்பட்ட தொகை ரூ. 31.58 இலட்சமாக இருக்க ரூ. 36.30 இலட்சம் செலவிடத் திட்டமிடப்பட்டுள்ளது. 1982—83 ஆம் ஆண்டில் இத்திட்டத்தின்கீழ் முடிவடையக்கூடும் நான்கு பணிகளின் விவரம் வருமாறு:—

| தொடர் எண். | பணிகளின் பெயர். | செலவு. (ரூபாய் இலட்சத்தில்.) |
|---|---|---|
| 1. | செங்கற்பட்டு நகராட்சி எல்லைக்குள், கி. மீ. 54/4 முதல் 58/8 வரை சென்னை—திருச்சிராப்பள்ளி—திண்டுக்கல் (தேசிய நெடுஞ்சாலை 45) சாலைப் பகுதிக்கு கடின அடித்தளம் அமைத்து மேற்பரப்பினை சமப்படுத்துவதுடன் அச் சாலைப் பகுதியினை மேம்படுத்துதல் (செங்கல்பட்டு மாவட்டம்). | 3.75 |
| 2. | ஜி. எஸ். டி. சாலையில் (தேசிய நெடுஞ்சாலை 45), 26/2-4 கிலோ மீட்டரில் லாரிகள் தங்குமிடம் அமைத்தல் (செங்கல்பட்டு மாவட்டம்). | 3.50 |
| 3. | ஆம்பூர் நகராட்சி எல்லைக்குள் கிருஷ்ணகிரி—இராணிப்பேட்டை சாலையில் (தேசிய நெடுஞ்சாலை 46) 68/1 கிலோ மீட்டரில் பாலம் கட்டுதல் (வட ஆற்காடு மாவட்டம்). | 10.00 |
| 4. | பாளையங்கோட்டை நகராட்சி எல்லையில் கி.மீ. 0/0 முதல் 2/2 வரை பாளையங்கோட்டை—தூத்துக்குடி சாலை (தேசிய நெடுஞ்சாலை 7-ஏ) பகுதிக்கு கடின அடித்தளம் அமைத்து மேற்பரப்பினை சமப்படுத்துவதுடன் அச்சாலைப் பகுதியினை மேம்படுத்துதல் (திருநெல்வேலி மாவட்டம்). | 3.75 |

3.1.5. 1983-84-ம் ஆண்டிற்காக, மூன்று பணிகள் ரூ. 60.50 இலட்சம் மதிப்பீட்டுச் செலவில் ஒப்புதலளிக்கப்பட்டுள்ளன. (ஒப்புதலளிக்கப்பட்ட பணிகளின் விவரத்தை இணைப்பு 4-ல் காண்க.) 1983-84-ம் ஆண்டில் ரூ. 50.45 இலட்சம் செலவிட கருதப்பட்டுள்ளது.

3.2. மாநிலச் சாலைத் திட்டம் :

3.2.1. (அ) வாகனப் பாதைகளை அகலப்படுத்துதல், மற்றும் மேம்படுத்துதல், (ஆ) உறுதியற்ற சாலைகளை உறுதியுடன் திரும்ப அமைத்தல், (இ) மாநில அரசின் சாலைகளில் உள்ள பாலமில்லா கடவுகளில் புதிய பாலங்களைக் கட்டுதல் போன்ற மூலப்பணிகள் மாநில (நெடுஞ்சாலைகள், மாவட்டப் பெருஞ்சாலைகள், மாவட்ட இதர சாலைகள் உள்ளிட்ட மாநிலச் சாலைத் திட்டத்தின்கீழ் மேற்கொள்ளப்படுகின்றன.



3.2.2. மாநில நெடுஞ்சாலைகள் :

பெரும் தொழிற்சாலைகளின் அதிவேக வளர்ச்சிக்குத் தேவையான அடிப்படை வசதிகளை வழங்குவதற்கு இவ்வரசு தனி ஆர்வம் கொண்டுள்ளது. திருச்சி அருகே உள்ள திருவெறும்பூரிலும் வட ஆற்காடு மாவட்டத்திலுள்ள இராணிப்பேட்டையிலும் அமைந்துள்ள 'பெல்' நிறுவனத்திற்கு வெளிப்புறத்திலுள்ள சாலைகளை அகலப்படுத்துதல்—உறுதிப்படுத்துதல் போன்ற பணிகளுக்கு அரசு ஒப்புதல் வழங்கியுள்ளது. திருவெறும்பூரில் நிறுவப்பட்டுள்ள 'பெல்' நிறுவனத்தின் தொழில் தேவையை ஈடுசெய்ய அதை சுற்றியுள்ள துணை தொழிற்சாலைகளின் வளர்ச்சியினை பெருக்கவும் திருச்சி, திருவெறும்பூர் பகுதிகளில் பெருகியுள்ள போக்குவரத்தின் வசதிக்காகவும், திருச்சியிலிருந்து 'பெல்' தொழிற்பேட்டை வரை உள்ள சாலையை நான்கு வழித்தடங்கள் கொண்ட சாலையாக அமைத்திட ரூ. 122.00 இலட்சத்திற்கு ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. இத்திட்ட மதிப்பீட்டில் ஐம்பது சதவீதத் தொகையை 'பெல்' நிறுவனம் ஏற்க இசைந்துள்ளது.

3.2.3. 'பெல்' நிறுவனத்தால் வட ஆற்காடு மாவட்டத்தில் இராணிப்பேட்டையில் அமைக்கப்பட்டிருக்கும் 'கொதி ஆலை துணைத் திட்டத்தை' முன்னிட்டு பின்வரும் மூன்று பணிகளுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது :—

| தொடர் எண். (1) | பணிகளின் பெயர். (2) | செலவு. (3) (ரூபாய் இலட்சத்தில்.) |
|---|---|---|
| 1. | 'பெல்' நிறுவனத்திற்குப் பயன்படும் வகையில் தேசிய நெடுஞ்சாலைத் தரத்திற்கு ஏற்ப 3 4 கி.மீ. நீளத்திற்குச் சாலையினை அமைத்தல். | 18.40 |
| 2. | இராணிப்பேட்டை—பொன்னைச்சாலையில் (மாவட்ட இதர சாலைகள்) கி.மீ. 0/0 முதல் 4/0 வரையிலான பகுதியினை தேசிய நெடுஞ்சாலைத் தரத்திற்கு மேம்படுத்துதல். | 17.00 |
| 3. | இராணிப்பேட்டை—பொன்னைச்சாலையில் (மாவட்ட இதர சாலைகள்) கி.மீ. 2/8-ல் அமைந்துள்ள சுரங்கப் பாதையினை மேம்படுத்துதல். | 38.00 |
| | | 73.40 |

இதுபோன்ற பணிகள் தொழில் வளர்ச்சியினைப் பெருக்க உதவுவதுடன், பயிற்சி பெற்ற/பயிற்சி பெறாதவர்களுக்கு நல்ல வேலை வாய்ப்பினையும் அளிக்கின்றன.

3.2.4. 1982-83 ஆம் ஆண்டில் ரூ. 80·00 இலட்சம் மதிப்பீட்டுச் செலவில் ஆறு பணிகளுக்கு பகுதி II திட்டத்தின் கீழ் ஒப்புதலளிக்கப்பட்டுள்ளது. (பணிகளின் விவரத்தை இணைப்பு 5-ல் காண்க.) இப்பணிகள் பல்வேறு நிலைகளில் செயற்படுத்தப்படுகின்றன. ரூ. 36.00 இலட்சம் செலவில், தஞ்சாவூர் மாவட்டத்தில் இப்பகுதி மக்களின் நீண்ட நாள் தேவையை நிறைவு செய்யும் பெரம்பலூர்—மானாமதுரை சாலையில் 58/4 கிலோ மீட்டரில் பாலத்தை அகலப்படுத்தும் பணி குறிப்பிடத்தக்கதாகும்.

3.2.5. வரவு-செலவுத் திட்டத்தில் ரூ. 143·68 இலட்சம் ஒதுக்கப்பட்டிருக்க, நடப்பாண்டில் ரூ. 160·32 இலட்சம் செலவிடத் திட்டமிடப்பட்டுள்ளது. 1982–83 ஆம் ஆண்டில், இத்திட்டத்தின்கீழ் பின்வரும் இரு பணிகள் முடிவடையக் கூடும் :—

| தொடர் எண். (1) | மாவட்டத்தின் பெயர். (2) | பணியின் பெயர். (3) | செலவு. (4) (ரூபாய் இலட்சத்தில்.) |
|---|---|---|---|
| 1 | கோயம்புத்தூர். | கோயம்புத்தூர்—திண்டுக்கல் சாலையில் கி.மீ. 10/2 முதல் 11/6 வரை வடிவமைப்பு இயல் மேம்பாடு. | 6.00 |
| 2 | சேலம் .. | தலைவாசல் அருகில், சேலம்-உளுந்தூர்பேட்டை சாலையில் 65/2 கி.மீ. தொலைவிலுள்ள இருப்புப் பாதைக் கடவில் வடிவமைப்பு இயல் மேம்பாடு. | 2.00 |

3.2.6. 1983–84 ஆம் ஆண்டில் ரூ. 85.00 இலட்சம் செலவிலான ஆறு பணிகளுக்கு ஒப்புதலளிக்கப்பட்டுள்ளது. (பணிகளின் விவரத்தை இணைப்பு 6-ல் காண்க).

3.2.7. 1983–84-ம் ஆண்டில் ரூ. 210·51 இலட்சம் செலவிடக் கருதப்பட்டுள்ளது.



3.3. மாவட்டப் பெருஞ்சாலைகள் :

3.3.1. 1982–83 ஆம் ஆண்டிற்கு ரூ. 577·00 இலட்சம் செலவில் 25 பணிகள் பகுதி-II திட்டத்தின்கீழ் ஒப்புதலளிக்கப்பட்டுள்ளது. (பணிகளின் விவரத்தை இணைப்பு 7-ல் காண்க.) இப்பணிகள் பல்வேறு நிலைகளில் செயல்படுத்தப்படுகின்றன. மேற்குறிப்பிட்ட 25 பணிகளில், பின்வருவன முக்கியப் பணிகளாகும் :—

(1) மன்னார்குடி—வேதாரண்யம்—திருத்துறைப் பூண்டி சாலை கி.மீ. 29/0 முதல் 63/6 வரை மேம்படுத்துதல் (தஞ்சாவூர் மாவட்டம்)—ரூ. 60.00 இலட்சம்.

(2) மதுரை மாநகரைச் சுற்றிலும் சுற்றுச்சாலை போடுவதற்காக நிலத்தை கையகப்படுத்துதல் (மதுரை மாவட்டம்)—ரூ. 80 இலட்சம்.

(3) தேவகோட்டை ஊராட்சி எல்லைக்குள் வட்டாணம் சாலையில் கி.மீ. 0/10 இல் மணிமுத்தாறுக்கு (விருசலையாறு) குறுக்கே பாலத்தைப் புதுப்பித்துக் கட்டுதல் (இராமநாதபுரம் மாவட்டம்)—ரூ. 90.00 இலட்சம்.

(4) மார்த்தாண்டம்—பேச்சிப்பாறை சாலையில் கி.மீ. 5/6—ல் பாலத்தைப் புதுப்பித்துக் கட்டுதல் (கன்னியாகுமரி மாவட்டம்)—ரூ. 30.00 இலட்சம்.

(5) பொள்ளாட்சி—மீன்கரை சாலையில் கி.மீ. 7/4-ல் ஆளியாருக்குக் குறுக்கே பாலத்தைப் புதுப்பித்துக் கட்டுதல் (கோயம்புத்தூர் மாவட்டம்)—ரூ. 55.00 இலட்சம்.

(6) கொல்லிமலையில் (மலைச்சாலை) கி.மீ. 9/8 முதல் 16/0 வரை காரவல்லியிலிருந்து சோலைக்காடு வரை (அதாவது 20 ஆம் கொண்டை ஊசி வளைவிலிருந்து 50ஆம் கொண்டை ஊசி வளைவு வரை) சாலை அமைத்து மேம்படுத்துதல் (சேலம் மாவட்டம்) —ரூ. 30.00 இலட்சம்.

3.3.2. 1982–83 வரவு-செலவுத் திட்டத்தில் ரூ. 202.23 இலட்சம் ஒதுக்கப்பட்டிருக்க, இவ்வாண்டில் ரூ. 236.30 இலட்சம் செலவு செய்யக் கருதப்பட்டுள்ளது.

3.3.3. நடப்பாண்டில் பின்வரும் 9 பணிகள் முடிக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது :

| தொடர் எண். (1) | மாவட்டத்தின் பெயர். (2) | பணியின் பெயர். (3) | செலவு. (4) (ரூபாய் இலட்சத்தில்.) |
|---|---|---|---|
| 1. | திருச்சிராப்பள்ளி | திருச்சிராப்பள்ளி—சிதம்பரம் சாலையில் கி.மீ. 30/10-ல் பாலத்தைப் புதுப்பித்து அமைத்தல். | 2.00 |

| (1) | (2) | (3) | (4) (ரூபாய் இலட்சத்தில்.) |
|---|---|---|---|
| 2. | கோயம்புத்தூர் | திருப்பூர்—மேட்டுப்பாளையம் சாலையில் கி.மீ. 7/6-ல் நட்டாறுக்கு குறுக்கேயுள்ள பழுதடைந்த பாலத்தைப் புதுப்பித்துக் கட்டுதல். | 13.50 |
| 3. | நீலகிரி .. | குன்னூர்—குந்தா சாலையில் கி.மீ. 6/10-ல் தற்போதுள்ள குறுகலான பாலத்தை அகலபடுத்துதல். | 1.00 |
| 4. | நீலகிரி .. | குன்னூர்—குந்தா சாலையில் கி. மீ. 11/6-ல் தற்போது உள்ள குறுகலான பாலத்தை அகலப்படுத்துதல். | 1.00 |
| 5. | சேலம் .. | மட்டிக்கரை—தெம்மாம்பட்டி சாலையில் கி.மீ. 16/0-ல் சுவேதா ஆற்றுக்குக் குறுக்கேயுள்ள பாலத்தைப் புதுப்பித்துக் கட்டுதல். | 15.00 |
| 6. | இராமநாதபுரம் | தேவிபட்டினம்—திருப்பாலக்குடி சாலையில் கி.மீ. 0/0 முதல் 6/9 வரை சீரமைத்தல். | 9.00 |
| 7. | பெரியார் .. | தாராபுரம் புறச் சாலை .. | 27.00 |
| 8. | கோயம்புத்தூர் | கோயம்புத்தூரில், கோயம்புத்தூர்—தடாகம் சாலை (மாவட்டப் பெருஞ்சாலை) கோயம்புத்தூர்— மருதமலை சாலை (இதர மாவட்ட சாலை) வெள்ளி பிரான் சாலை (இதர மாவட்ட சாலை) ஆகியவற்றின் சந்திப்பைச் சீரமைத்தல். | 2.00 |
| 9. | தென் ஆற்காடு | குள்ளன்சாவடி—காட்டுகூடலூர் சாலையை கி.மீ. 23/6-ல் இருந்து (மாவட்ட பெருஞ் சாலை) புலவன்குப்பம் வழியாக (கி.மீ. 0/0 முதல் 4/2 வரை) எல்லைவட்டடிவரை சீரமைத்தல். | 7.50 |



3.3.4. 1983-84 ஆம் ஆண்டிற்கு ரூ. 475.00 இலட்சம் செலவாகக் கூடிய இருபத்தி ஒன்பது பணிகளுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. (பணிகளின் விவரத்தை இணைப்பு 8-ல் காண்க.)

3.3.5. 1983-84 ஆம் ஆண்டில் ரூ. 399.21 இலட்சம் செலவு செய்யக் கருதப்பட்டுள்ளது.

.4. இதர மாவட்டச் சாலைகள் :

3.4.1. 1982-83-க்கு ரூ. 473.00 இலட்சம் செலவாகக்கூடிய 8 பணிகளுக்கு பகுதி II திட்டத்தின்கீழ் ஒப்புதலளிக்கப் பட்டுள்ளது. (பணிகளின் விவரங்களை இணைப்பு 9 இல் காண்க.) நிறைவேற்றப்பட்டு வரும் இப்பணிகள் பல்வேறு நிலைகளில் உள்ளன.

இவற்றில் குறிப்பிடத்தகுந்த பெரும்பணிகள் வருமாறு :

1. பூவிருந்தவல்லி—பட்டாபிராம் சாலையில் கி.மீ. /6-8-ல் பாலம் கட்டுதல் (செங்கற்பட்டு மாவட்டம்)—ரூ. 75.00 இலட்சம்.

2. பக்கிங்காம் கால்வாயின் குறுக்கே பாலம் கட்டுதல். இதில் சென்னை-மாமல்லபுரம் சாலையையும் திருவான்மியூர்-ரட்டுக்காடு சாலையையும் இணைத்து துறைப்பாக்கத்திற்கு அருகில் இணைப்புச் சாலை போடுவதும் அடங்கும் (செங்கற் பட்டு மாவட்டம்)—ரூ. 40.00 இலட்சம்.

3. ஆலத்தூர்—காரை—காளக்கநத்தம் சாலையில் கி.மீ 1/0-ல் மருதையாறுக்குக் குறுக்கே பாலம் கட்டுதல் (திருச்சி மாவட்டம்)—ரூ. 50.00 இலட்சம்.

4. கரம்பக்குடி—இரெகுநாதபுரம் சாலையில் 58/0 கிலோ மீட்டரில் மகாராஜாசமுத்திரம் ஆற்றுக்குக் குறுக்கே பாலம் கட்டுதல் (புதுக்கோட்டை மாவட்டம்)—ரூ. 40.00 இலட்சம்.

5. குறுக்கு வடிகால் பணிகள் உட்பட, கீழ்குடி-கமுதி சாலையில் கி.மீ. 0/0 முதல் 13/4 வரையிலும் துத்திநத்தம்—கீழ்குடி சாலையில் கி.மீ. 0/0 முதல் 5/4 வரையிலும் சாலையைச் சீரமைத்தல் (இராமநாதபுரம் மாவட்டம்)—ரூ.40.00 இலட்சம்.

6. ஓமலூர்—சங்ககிரி சாலையில் கி.மீ. 5/0 லிருந்து பிரியும் முத்துநாயக்கன்பட்டி சாலையில் கி.மீ. 0/4—ல் சரபங்கா ஆற்றுக்குக் குறுக்கே பாலம் கட்டுதல்(சேலம் மாவட்டம்)—ரூ. 5.00 இலட்சம்.

7. கொளத்தூர்—தண்டா சாலையில் (தங்கல் பள்ளம்) கி.மீ. 9/0-ல் பாலம் கட்டுதல் (சேலம் மாவட்டம்)—ரூ. 42.00 இலட்சம்.

8. பைரநாயக்கன்பட்டி—நரிப்பள்ளி சாலையில் கி.மீ.3/2-ல் கல்லாறுக்குக் குறுக்கே பாலம் கட்டுதல் (தருமபுரி மாவட்டம்)-ரூ. 38.00 இலட்சம்.

1982—83 வரவு-செலவுத் திட்டத்தில் ரூ.165.85 இலட்சம் ஒதுக்கப்பட்டிருக்க, நடப்பாண்டில் ரூ.170.65 இலட்சம் செலவு செய்யக் கருதப்பட்டுள்ளது.

3.4.2. நடப்பாண்டில் பின்வரும் மூன்று பணிகள் முடிக்கப் படுமென்று எதிர்பார்க்கப்படுகிறது:—

| தொடர் எண். | மாவட்டத்தின் பெயர். | பணியின் பெயர். | செலவு. |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) (ரூபாய் இலட்சத்தில்.) |
| 1 | கோயம்புத்தூர் | புஜங்கனூர்-மேட்டுப்பாளையம் சாலையில் கி.மீ. 1/10லும், கி.மீ.3/2 லும் மேம்பாலம் கட்டுதல். | 27.00 |
| 2 | சேலம் .. | அயோத்தியாபட்டிணம்—பேலூர் சாலையில் கி.மீ. 19/4-ல் வசிஷ்ட நதிக்குக் குறுக்கே மூழ்கு பாலம் கட்டுதல். | 14.00 |
| 3 | தென்ஆர்க்காடு | குறுக்கு வடிகால் பணிகள் உட்பட ஆணைக்காரன் சத்திரம்—மணிக்கொல்லை சாலையில் கி.மீ. 0/0 முதல் 8/6 வரை தார் போடுதல். | 16.00 |

3.4.3.1983—84 ஆம்ஆண்டிற்கு ரூ.417.00 இலட்சம் செலவு ஆகக்கூடிய இருபத்தேழு பணிகளுக்கு ஒப்புதலளிக்கப்பட்டுள்ளது. (பணிகளின் விவரங்களை இணைப்பு 10-ல் காண்க.)

3.4.4. 1983—84 ஆம் ஆண்டில் ரூ. 245.37 இலட்சம் [redacted] செய்யக் கருதப்பட்டுள்ளது.



6.5. இதரச் சாலைகள் திட்டம்:

3.5.1.50,000 ரூபாய்க்கு மேல் செலவாகக்கூடிய ஊராட்சி, ஊராட்சி ஒன்றியச் சாலைகள், விடுபட்ட பெரிய மற்றும் சிறிய பாலங்கள், தாம்போகிகள், படுகைப் பாலங்கள், சாலை மேம்பாட்டுப் பணிகள் போன்ற மூலப் பணிகள் இத்திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்படுகின்றன. சாலைகளையும்,பாலங்களையும் பராமரிப்பதில் ஊராட்சிகளுக்கும் ஊராட்சி ஒன்றியங்களுக்கும் நிவாரணம் அளிக்கும்பொருட்டு உள்ளாட்சி மன்றங்களிடமுள்ள நல்லெண்ண அடிப்படையில், ஊரகச் சாலைகள் திட்டம், பேருந்து வழித்தடங்களை மேற்கொள்ளும் திட்டம். மத்திய சாலை நிதித்திட்டம் போன்ற திட்டங்களைப் போன்று ரூ. 50,000 அதற்கு மேற்பட்ட மதிப்பீட்டினையும் (காண்ட சாலை மற்றும் பாலம் அமைக்கும் பணிகளை நடைமுறைப் படுத்துதல், மேம்படுத்துதல் மற்றும் பராமரித்தல் போன்ற பணிகளை நெடுஞ்சாலை ஊரகப் பணித்துறை மேற்கொள்ள வேண்டும் என்று அரசு ஆணையிட்டுள்ளது.

3.5.2. 1982—83-ம் ஆண்டிற்காக, 26 பணிகளுக்கு ரூ. 580.50 இலட்சம் மதிப்பீட்டிற்கு ஒப்புதலளிக்கப்பட்டுள்ளது. (பணிகளின் விவரத்தை இணைப்பு 11-ல் காண்க.)

இவற்றில் பின்வருபவை குறிப்பிடத்தகுந்த பெரும்பணிகளாகும்:—

1. கண்டாச்சி மங்கலம்—வரஞ்சரம் சாலையில் கி.மீ. 1/4-ல் கோமுகி ஆற்றுக்குக் குறுக்கே பாலம் கட்டுதல் (தென் ஆற்காடு மாவட்டம்)—ரூ. 60.00 இலட்சம்.

2. தேவன்குடி—கே.புதூர் சாலையில் கி.மீ. 1/4-ல் மணிமுத்தாறுக்குக் குறுக்கே பாலம் கட்டுதல் (தென் ஆற்காடு மாவட்டம்)—ரூ. 65.00 இலட்சம்.

3. நரசிங்கக் காவேரிக்குக் குறுக்கே திருவப்படி—சிங்கவனம் சாலையில் கி.மீ. 1/2—ல் பாலம் கட்டுதல் (புதுக்கோட்டை மாவட்டம்)—ரூ. 44.00 இலட்சம்.

4. கூடலூர்—கருநாகமுத்தம்பட்டி சாலையைச் சீரமைப்பது உட்பட அச்சாலையில் கி. மீ. 4/8—ல் பெரியாறுக்குக் குறுக்கே பாலம் கட்டுதல் (மதுரை மாவட்டம்)—ரூ. 26.00 இலட்சம்.

5. தேவகோட்டை—வெங்களூர் சாலையில் கி.மீ. 1/0—ல் தேனாறுக்குக் குறுக்கே பாலம் கட்டுதல் (இராமநாதபுரம் மாவட்டம்)—ரூ. 30.00 இலட்சம்.

6, குறுக்கு வடிகால் பணிகள் உட்பட பிக்கிலி—கோலப் பட்டிச் சாலையில் கி.மீ. 0/0 முதல் 14/0 வரை மேம்பாட்டுப் பணி (தருமபுரி மாவட்டம்)—ரூ. 28.00 இலட்சம்.

7. செங்கம்—நாச்சிப்பட்டு சாலையில் கி.மீ. 0/8-ல் செய்யாறுக்குக் குறுக்கே பாலம் கட்டுதல் (வட ஆற்காடு மாவட்டம்)—ரூ. 31.00 இலட்சம்.

8. வத்திராயிருப்பு—அர்ச்சுணாபுரம் சாலையில் கி.மீ. 3/2—ல் அர்ச்சுணா ஆற்றுக்குக் குறுக்கே பாலம் கட்டுதல் ரூ. 40.00 இலட்சம்.

நிறைவேற்றப்பட்டு வரும் இப்பணிகள் பல்வேறு நிலைகளிலுள்ளன.

3.5.3. 1982-83 வரவு-செலவுத் திட்டத்தில் ரூ. 217.36 இலட்சம் ஒதுக்கப்பட்டிருக்க, நடப்பாண்டில் ரூ. 267.64 இலட்சம் செலவு செய்யக் கருதப்பட்டுள்ளது.

3.5.4. 1982-83 ஆம் ஆண்டில் 19 பணிகள் முடிக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது (பணி விவரங்களை இணைப்பு 12-ல் காண்க).

3.5.5. 1983—84 ஆம் ஆண்டிற்கு ரூ. 1,046.00 இலட்சம் மதிப்புள்ள இருபத்தாறு பணிகளுக்கு ஒப்புதலளிக்கப்பட்டுள்ளது. (பணி விவரங்களை இணைப்பு 13-ல் காண்க).

3.5.6. 1983-84-ல் ரூ. 426.75 இலட்சம் செலவு செய்யக் கருதப்பட்டுள்ளது.

3.6. நிழற் சாலைகள்:—

3.6.1. இயற்கைக்கு மாறுபடாத சூழ்நிலையைக் காக்கவும், நெடிய சாலைகளுக்கு அழகூட்டவும், சாலைப் பயணிகள் தங்கி இளைப்பாறவும், சாலை ஓரங்களில் நிழல் மற்றும் பயன் தரும் மரங்கள் அதிக அளவில் வளர்க்கப்படுகின்றன. இம்மரங்களிலிருந்து கிடைக்கக்கூடிய பொருட்களினால் அரசுக்கு வருமானமும் கிடைக்கிறது. மேலும், இத்திட்டம் கிராமப் பகுதிகளில் வேலை வாய்ப்பும், கிராமத் தொழில் வளர்ச்சியும் ஏற்பட வழி வகுக்கின்றது. தற்சமயம் பல இலட்சக்கணக்கான பனை மரங்கள், கட்டிடங்களுக்குத் தேவையான மரங்கள், எரிபொருள், எண்ணெய், கனிகள், மலர்கள் போன்ற பலவகை பயன்தரும் மரங்களை நடுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது.

3.6.2. மரங்கள் வளர்ப்பதற்காக 1982-83 ஆம் ஆண்டில் ரூ.11.00 இலட்சம் செலவிடத் திட்டமிடப்பட்டுள்ளது. 1982-83 ஆம் ஆண்டில் 20 இலட்சம் பனை மரங்களும், 1 இலட்சம் நிழல் தரும் மரங்களும் நடுவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளன.



3.6.3. 1983-84 ஆம் ஆண்டில் நூறு இலட்சம் பனை மரங்களும், நான்கு இலட்சம் நிழல் தரும் மரங்களும் வளர்க்கக் கருதப்பட்டுள்ளது.

3.6.4. 1983—84 ஆம் ஆண்டில் ரூ. 21.00 இலட்சம் செலவிடக் கருதப்பட்டுள்ளது.

3.7. கருவிகளும் தளவாடங்களும்:—

3.7.1. ஒவ்வொரு ஆண்டும் அரசின் பராமரிப்பிற்கு மேற்கொள்ளப்படும் சாலைகளின் நீளம் அதிகரிப்பதாலும், சாலைகளில் பெருகிவரும் அதிவேகமுள்ள வாகனங்களினாலும், அவற்றின் தேவைக்கேற்ப சாலைத் தளத்தை தரமுயர்த்தி அதிக அளவில் மேம்பாடு செய்து பராமரிக்கப்பட வேண்டியுள்ளது. எனவே, இப்பணிகளுக்கு தளவாடங்களின் எண்ணிக்கையினை அதிகப்படுத்தி, நவீனப்படுத்தப்படவேண்டிய சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. பேருந்து வழித் தடங்களை எடுத்துக்கொள்ளும் திட்டம், ஊரகச் சாலைகள் திட்டம், தன்னிறைவுத் திட்டம், கரும்பு ஆலை சாலைத் திட்டம், பழங்குடியினர் நல்வாழ்வுத் துணைத் திட்டம், மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டம் (நீலகிரி மாவட்டம் மட்டும்), மேற்குத் தொடர்ச்சி மலை மேம்பாட்டுத் திட்டம், மத்திய சாலை நிதித் திட்டம் போன்ற பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்படுவதால், நெடுஞ்சாலைத் துறையின் சாலைப் பணித் திட்டங்கள் கணிசமான அளவுக்கு அதிகரித்துள்ளன. இத்திட்டங்களின்கீழ் எடுத்துக் கொள்ளப்பட்ட சாலைகளை உரியவாறு சீரமைக்கவும், பராமரிக்கவும் போதுமான அளவு கருவிகளும் தளவாடங்களும் தேவைப்படுகின்றன.

3.7.2. மேலும், காலத்தின் போக்கால் பழுதடைந்த மற்றும் தேய்ந்துவிட்ட தளவாடங்களையும் கருவிகளையும் புதியனவற்றைக்கொண்டு மாற்றம் செய்யப்பட வேண்டும்.

3.7.3. 1981—82 ஆம் ஆண்டில், தன்னிறைவுத் திட்டத்திற்காக ரூ. 337.5 இலட்சம் செலவில் 150 சாலை உருளைகள் வாங்குவதற்கும், ரூ. 50.00 இலட்சம் செலவில் கருவிகள், தளவாடங்கள் வாங்குவதற்கும் அரசு ஒப்புதலளித்துள்ளது.

3.7.4. அதேபோல, 1982—83 ஆம் ஆண்டில் கருவிகள், தளவாடங்கள், சாலை உருளைகள், லாரிகள் முதலியவற்றை வாங்குவதற்காக அரசு ரூ. 186.66 இலட்சத்திற்கு ஒப்புதலளித்துள்ளது.

3.7.5. 1982—83-ல் அதிக அளவில் காரினை எடுப்பதற்கும், பாதுகாத்து வைப்பதற்கும் தேவையான [illegible] செய்வதற்கும் அரசு [illegible]

3.7.6. கருவிகள், தளவாடங்கள் வாங்குவதற்காக 1982–83 வரவு–செலவுத் திட்டத்தில் ரூ. 248.94 இலட்சம் ஒதுக்கப்பட்டிருக்க, ரூ. 333.96 இலட்சம் செலவிடக் கருதப் பட்டுள்ளது.

3.7.7. 1983–84 ஆம் ஆண்டு வரவு–செலவுத் திட்டத்தில் ரூ. 310.29 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

3.7.8. 1983–84 ஆம் ஆண்டில் ரூ.273.79 இலட்சம் செலவில் கருவிகள், தளவாடங்கள் வாங்க ஒப்புதலளிக்கப் பட்டுள்ளது.

### 3.8. தற்போதிருக்கும் சாலை இருப்புப்பாதை கடவுகளுக்குப் பதிலாக மேம்பாலங்கள்/சுரங்கப்பாதைகள் அமைத்தல்,

3.8.1. மேம்பாலங்களை/சுரங்கப் பாதைகளைப் பொறுத்த வரை ஏற்படும் செலவினைப் பகிர்ந்து கொள்வதில் இந்திய அரசின் தற்போதைய கொள்கை வருமாறு:—

1. அணுகு சாலை உட்பட மேம்பாலங்கள்/சுரங்கப்பாதைகள் அமைப்பதற்கு ஆகும் மொத்தச் செலவில் 50 விழுக்காட்டினை இரயில்வே ஏற்கும். மேற்கூறியவற்றில், மாற்றுவழிச் சாலை, வடிகால்கள், தந்திப் புதைவிடங்கள், தண்ணீர் எடுத்துச் செல்லும் பெருங்குழாய்கள் போன்றவற்றை அமைப்பதற்கான செலவும் அடங்கும். ஆனால் நிலத்தை கையகப்படுத்தும்போது அதில் கட்டுமானம் ஏதாவது இருந்தால் அதற்கு சேர்த்து ஆகும் செலவு இதில் அடங்காது.

2. அணுகு சாலைகள் உட்பட மொத்தச் செலவில் எஞ்சி யுள்ள 50 விழுக்காட்டினை மாநில அரசு ஏற்கும். கட்டுமானத் துடன் கூடிய நிலத்தை கையகப்படுத்துவதற்கான முழு செல வினத்தையும் மாநில அரசு ஏற்கும்.

3. பொதுவாக பாலங்கள் 24 அடி அகலம் உடையனவாக (இருவழி அகலம்) இருக்கும். நகரங்கள், மா நகரங்களுக்கு அருகிலுள்ள பகுதிகளில் அவசியமாயின் இரு நடைபாதைகள் (ஒவ்வொன்றும் 6 அடி அகலம்) அமைக்கப்படும். எதிர்காலத்தில் கூடுதல் இரயில் பாதைகள் அமைப்பதற்காக பாலக் கட்டுமானத் தில் கூடுதலாக இடம் ஒதுக்க வேண்டியிருப்பின், அந்தக் கூடுதல் கட்டுமானத்திற்காகும் செலவு முழுவதும் இரயில்வே துறை யினரால் ஏற்றுக் கொள்ளப்படும். அத்துடன் பாலத்தின் எஞ்சிய பகுதிக்காகும் செலவு, சாலைகளுக்காகும் செலவு [illegible]



4. மேலேயுள்ள பத்தி 3.8.1. (3)–ல் குறிப்பிடப்பட்டுள்ள அதாவது இரு வழி அகலத்திற்கு மேலே சாலையில் கூடுதல் அகலம் வேண்டுமென்று மாநில அரசு விரும்பினால், இக்கூடுதல் அகலத்திற்காகும் செலவு (அ) தற்போதுள்ள பாதையுடன் இணைப்பதற்காகப் பாலத்தின் நீளத்தை அதிகப்படுத்தும் செலவு முழுவதும் மாநில அரசும், (ஆ) வருங்காலத்தில், கூடுதல் இரயில்வே பாதையைக் கடப்பதற்காகப் போடப்படும் அந்தவொரு கூடுதல் நீளத்திற்காகும் செலவை மாநில அரசும், இரயில்வேயும் சமமாகப் பகிர்ந்து கொள்ளும்.

### 3.8.2. பணிகளுக்கான நிதி:—

3.8.2.1. சட்டப்படிக்கான விதி முறைகளின்கீழ் அமைக்கப் பட்டிருக்கும் தற்போதைய சாலை இருப்புப் பாதை கடவுகளுக்குப் பதிலாக மேம்பாலங்கள்/சுரங்கப் பாதைகள் அமைத்தல் தற்போதுள்ள சாலை இருப்புப்பாதை கடவுகளின் தரத்தை உயர்த்துதல், ஆளில்லாத இருப்புப்பாதை கடவுகளில் ஆட்களை நியமித்தல் போன்றவற்றுக்காக மாநில அரசு செய்த செலவுத் தொகையைத் திருப்பிக் கொடுக்க மத்திய அரசின் இரயில்வே அமைச்சகம், 1966 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 1 ஆம் நாள் முதற்கொண்டு "இரயில்வே பாதுகாப்பு பணி நிதி" எனப்படும் ஒரு நிதியை ஏற்படுத்தியுள்ளது.

3.8.2.2. ஆளில்லாத இருப்புப்பாதை கடவுகளில் ஆட்களை நியமிப்பதற்கும், தற்போதுள்ள இருப்புப்பாதைக் கடவுகளின் தரத்தை உயர்த்துவதற்கும் இரயில்வே சட்டத்தின்கீழ் இந் நிதியில் 20 விழுக்காடு இரயில்வேக்கு நேரடியாக ஒதுக்கப் படுகின்றது. இதன் தொடர்பாக, இரயில்வே பாதுகாப்புப் பணி நிதியிலிருந்து ஆளில்லாத இருப்புப்பாதை கடவுகளில் ஆட்கள் நியமித்தல், தற்போதுள்ள இருப்புப்பாதை கடவுகளின் தரத்தை உயர்த்துதல் ஆகியவற்றிற்கு இவ்வரசுக்கு கிடைக்கும் தொகை யானது மிகவும் சொற்பமானதாகும்.

இருப்புப்பாதை கடவுகள் நான்கில் பாதுகாப்பு நோக்கோடு 1982-83 ஆம் ஆண்டில் ரூ. 6.00 இலட்சம் செலவில் ஆட்களை நியமித்து வசதி செய்து தர கருதப்பட்டுள்ளது. 1983-84 ஆம் ஆண்டில் ரூ. 9.00 இலட்சம் செலவில் மேலும் ஆறு இருப்புப் பாதை கடவுகள் எடுத்துக்கொள்ளப்பட உள்ளது.

3.8.2.3. எஞ்சியுள்ள 80 விழுக்காடு நிதி, சாலை இருப்புப் பாதை கடவுகளுக்குப் பதிலாக, மேம்பாலம்/சுரங்கப் பாதைகள் அமைப்பதற்காக மாநில அரசுக்கு ஒதுக்கப்படுகின்றது. சட்டப் படியான விதிமுறைகளின்படி, ஏற்படுத்தப்பட்ட தற்போதுள்ள சாலை இருப்புப்பாதைக் கடவுகளுக்குப் பதிலாக மேம்பாலம்/ சுரங்கப்பாதை கட்டும் பணி, மாநில அரசு மற்றும் இரயில்வேயின் கூட்டு முயற்சியில் செய்யப்படுகின்றது. [illegible]

அரசாலும், இரயில்வேயினாலும் சமமாகப் பகிர்ந்து கொள்ளப் படுகின்றது. நிலம் கையகப்படுத்துவதற்கான செலவு நீங்கலாக, மாநில அரசின் பங்கு, தொடக்கத்தில் மாநில நிதியிலிருந்து கொடுக்கப்படுகின்றது; பின்னர், இது ''இரயில்வே பாதுகாப்புப் பணி நிதி''யிலிருந்து திருப்பிக் கொடுக்கப்படுகின்றது.

3.8.2.4. சாலை மேம்பாலங்கள் நகராட்சிகளின் அதிகார வரம்பிற்குள் வருமாயின், செலவுத் தொகையில் மாநிலத்தின் பங்கு (மொத்த செலவில் 50 விழுக்காடு) மாநில அரசு, நகராட்சிகளுக்கிடையே சமமாகப் பிரித்துக் கொள்ளப் படுகின்றது. இரயில்வே பாதுகாப்புப் பணி நிதியில் குறைந்தளவு தொகையே உள்ளதால், நகராட்சிகளுக்காகும் பங்கு செலவைப் பொதுவாக இந்நிதியிலிருந்து திருப்பிக் கொடுப்பதில்லை.

3.8.2.5. 1982-83 ஆம் ஆண்டில் ரூ. 17.26 இலட்சம் செலவிட கருதப்பட்டுள்ளது.

3.8.2.6. செயல்படுத்தப்படும் பணிகள் மற்றும் ஒப்புதல் அளிக்கப்பட்டு மேற்கொள்ளப்பட வேண்டிய பணிகள் ஆகியவற்றின் விவரங்கள் இணைப்பு 14-ல் கொடுக்கப்பட்டுள்ளன.

3.8.2.7. 1983-84 ஆம் ஆண்டில், மேற்படி பணிகளுக்காக ரூ. 14.79 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

3.8.2.8. இவை தவிர, பின்வரும் சில மேம்பாலக் கட்டுமானப் பணிகள் தமிழ்நாடு அரசின் தீவிரப் பரிசீலனையிலும், இரயில்வே மற்றும் இந்திய அரசின் ஒப்புதலை எதிர் நோக்கியும் உள்ளன:—

(அ) மணலி அருகே சென்னை—கல்கத்தா பாதையில் இணைப்புச் சாலையில் மேம்பாலம் அமைத்தல்.

(ஆ) துறைமுகத்திற்கும் இராயபுரத்திற்கும் இடையே தற்போதுள்ள இருப்புப்பாதை கடவுக்குப் பதிலாக மேம்பாலம் அமைத்தல்.

(இ) கிண்டி இரயில் நிலையத்திற்கு அருகே அமைந்துள்ள மேம்பாலத்தை சீரமைத்தல்.

**3.0 பழங்குடியினர் நலத் துணைத் திட்டம்:—**

3.9.1. பழங்குடியினர் குடியிருப்புகள் அனைத்தும், எளிதில் சென்று அடைய முடியாத பகுதிகளில் அமைந்துள்ளன; எனவே [redacted]



ஏற்படுத்திக் கொடுப்பதில் இம்மாநில அரசு பெரும் அக்கறை கொண்டுள்ளது. வட்டங்கள், வட்டாரங்கள் போன்ற முக்கியமான நிருவாக மையங்கள், மற்றும் அங்காடிப் பகுதிகளுக்குச் சென்று வர முன்னுரிமை அடிப்படையில் போக்குவரத்து வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கப்பட வேண்டும் என்று ஆறாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் பழங்குடியினர் மேம்பாட்டு செயற் குழுவும் பரிந்துரைத்துள்ளது.

3.9.2. இம்மாநில அரசு பழங்குடியினர் பகுதிகளுக்கான போக்குவரத்து வசதிகளை மேம்படுத்த பெரும்பட்டியல்ஒன்றைத் தயாரித்துள்ளது.

3.9.3. 1976–77 முதல் 1980–81 வரையில், பழங்குடியினர் நலத்துணைத் திட்டத்தின் கீழ் ரூ. 445.67 இலட்சம் செலவில் 173.1 கி.மீ. நீளமுள்ள சாலைகள் அமைப்பதற்கான 14 பணிகளுக்கு அனுமதி அளிக்கப்பட்டது (இணைப்பு 15-ல் காண்க). அவற்றின் விவரங்கள் மாவட்டவாரியாக வருமாறு:—

| | மலைப் பகுதியின் பெயரும் மாவட்டமும். | பணிகளின் எண்ணிக்கை. | நீளம் (கி.மீ.) | செலவு (ரூபாய் இலட்சத்தில்). |
|---|---|---|---|---|
| | (1) | (2) | (3) | (4) |
| 1. | சேலம்— | | | |
| | கல்ராயன் மலை (இனம் 1) | 1 | 10.0 | 17.00 |
| | பச்சமலை (இனங்கள் 2-ம், 9-ம்) | 2 | 15.4 | 42.00 |
| | கொல்லி மலை (இனங்கள் 3, 4, 5). | 3 | 31.0 | 1,94.80 |
| | ஏற்காடு (இனங்கள் 6, 7, 8). | 3 | 16.3 | 46.34 |
| 2. | தென் ஆற்காடு— கல்ராயன் மலை | 4 | 56.10 | 1,05.53 |
| | வட ஆற்காடு— ஜவ்வாது மலை .. | 1 | 14.3 | 40.00 |
| | மொத்தம் .. | 14 | 173.1 | 4,45.67 |

3.9.4. மேற்கூறியவற்றில், ரூ. 185.37 இலட்சம் செலவில் 92.45 கி.மீ. நீளமுள்ள எட்டு சாலைப் பணிகள் ஏற்கெனவே முடிக்கப்பட்டு விட்டன. முடிக்கப்பட்ட பணிகளில், சேலம் மாவட்டத்தில் 3 பணிகளும் (கல்ராயன் மலையில் ஒன்றும், ஏற்காட்டில் ஒன்றும், பச்ச மலையில் ஒன்றும்) தென் ஆற்காடு மாவட்டத்தில் 4 பணிகளும் (இந்நான்கும் கல்ராயன் மலையில்), வட ஆற்காடு மாவட்டம் ஜவ்வாது மலையில் ஒன்றும் அடங்கும். 1980-81 ஆம் ஆண்டு இறுதியில் அனுமதியளிக்கப்பட்ட எஞ்சியுள்ள ஆறு பணிகள் நடைபெற்று வருகின்றன.

3.9.5. 1981-82 ஆம் ஆண்டில், பழங்குடியினர் நலத் துணைத் திட்டத்தின் கீழ் ரூ. 499.00 இலட்சம் செலவில் 120 கி.மீ. நீளத்திற்கு 6 பணிகள் அனுமதிக்கப்பட்டன. அவற்றின் விவரங்கள் வருமாறு.—

| மலைப் பகுதியின் பெயரும் மாவட்டமும். | பணிகளின் எண்ணிக்கை. | நீளம் (கி.மீ.) | செலவு (ரூபாய் இலட்சத்தில்). |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 1. சேலம்— | | | |
| அரனூத்து மலை .. | 1 | 23.0 | 84.00 |
| கல்ராயன் மலை .. | 1 | 1.0 | 6.00 |
| 2. தென் ஆற்காடு— | | | |
| கல்ராயன் மலை .. | 2 | 59.4 | 321.00 |
| 3. வட ஆற்காடு— | | | |
| ஜவ்வாது மலை .. | 1 | 10.8 | 23.00 |
| 4. தர்மபுரி— | | | |
| சித்தேரி மலை .. | 1 | 25.8 | 65.00 |
| மொத்தம் .. | 6 | 120.0 | 499.00 |

எல்லா ஆறு பணிகளும் நடந்தேறி வருகின்றன. (ஆறு பணிகள் குறித்த பட்டியலை இணைப்பு 16-ல் காண்க.)

3.9.6. அரசு 31-3-1982 வரையில், ரூ. 944.67 இலட்சம் செலவிலான 20 பணிகளுக்கு அனுமதித்துள்ளது. அவற்றில் 8 பணிகள் முடிக்கப்பட்டு விட்டன. எஞ்சிய பணிகள் நடப்பு ஆண்டில் மேற்கொள்ளப்பட்டுள்ளன.





3.9.7. 1982-83 ஆம் ஆண்டில் ரூ. 232.25 இலட்சம் செலவாகக்கூடிய 3 பணிகளுக்கு அனுமதிக்கப்பட்டுள்ளது. (பணிகளின் பட்டியலை இணைப்பு 17-ல் காண்க.) இவ்வாறாக, பழங்குடியினர் நலத்துணைத் திட்டத்தின் கீழ் இதுவரை ரூ. 1,176.92 இலட்சம் செலவிலான 23 பணிகளுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இப்பணிகளின் கீழ் அமைக்கப்படும் சாலைகளின் மொத்த நீளம் 338.1 கி.மீ. ஆகும்.

3.9.8. நடப்பாண்டில், ரூ. 120.42 இலட்சம் செலவிடக் கருதப்பட்டுள்ளது. 1983-84 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூ. 137.29 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

3.10. மீனவர் குடியிருப்புகளுக்கு இணைப்புச் சாலைகள் அமைத்தல்:—

3.10.1. அநேக மீனவர் குடியிருப்புகள் தற்போது நல்ல இணைப்புச் சாலை வசதியின்றி உள்ளன. அங்காடி பகுதிகளையும் ஏனைய நகரங்களையும் இணைக்கக் கூடிய இணைப்புச் சாலைகளை ஏற்படுத்துவதனால் மீனவர்களின் வாழ்க்கை நிலை மேம்பாடு அடையும். மீனவர் சமுதாயத்தின் தேவைகளைக் கருத்திற்கொண்டு, அவர்களின் பயன்களுக்காகவே இவ்வரசு, ஆறாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் ரூ. 2.00 கோடி ஒதுக்கீடு செய்து ஒப்புதலளித்துள்ளது.

3.10.2. இத் திட்டம், 1979-80 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டது. முதல் கட்டத்தில் ரூ. 93.50 இலட்சம் செலவாகக் கூடிய 37 பணிகளுக்கு நிருவாக ஒப்புதல் அளிக்கப்பட்டது.

3.10.3. இரண்டாம் கட்டத்தில் ரூ. 36.90 இலட்சம் செலவாகக் கூடிய 15 பணிகளுக்கு அனுமதியளிக்கப்பட்டுள்ளது.

3.10.4. முதல் கட்டத்தின்கீழ் நீக்கப்பட்ட 3 பணிகளுக்குப் பதிலாக ரூ. 14.51 இலட்சம் செலவாகக் கூடிய 7 பணிகளுக்கு 1982-83 ஆம் ஆண்டில் அனுமதியளிக்கப்பட்டுள்ளது.

3.10.5. முதல் கட்டத்தில் ஒப்பளிக்கப்பட்ட 34 பணிகளில் (இணைப்பு 18 ல் காண்க) 1982, மார்ச் வரையில் 26 பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. 7 பணிகள் 1982-83-ல் முடிவடையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

3.10.6. இரண்டாம் கட்டத்தின் கீழ் அனுமதிக்கப்பட்ட 15 பணிகளில், 11 பணிகள் 1982-83-ல் முடிவுறும் என எதிர்பார்க்கப்படுகிறது. (இணைப்பு 18 (அ)-ல் காண்க.)

3.10.7. 1982-83 ஆம் ஆண்டில் அனுமதிக்கப்பட்ட 7 பணிகள், பல்வேறு நிலைகளில் நடைபெற்று வருகின்றன. [பணிகள் குறித்த விவரத்தை இணைப்பு 18 (ஆ)வில் காண்க].

3.10.8. 1979–80 ஆம் ஆண்டிலிருந்து ஏற்பட்ட செலவு குறித்த விவரம் வருமாறு:—

| | (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|
| 1979-80 | 15.42 |
| 1980-81 | 30.22 |
| 1981-82 | 30.33 |

3.10.9. 1982–83 ஆம் ஆண்டில் ரூ. 35.00 இலட்சம் செலவிட கருதப்பட்டுள்ளது.

3.10.10. 1983–84 ஆம் ஆண்டிற்கு ரூ. 25.97 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

3.11. நெடுஞ்சாலைகள்—கிராமப் பணிகள் துறையின் மலைப் பகுதி மேம்பாட்டுத் திட்டம்.

3.11.1. மலைப் பகுதி மேம்பாட்டுத் திட்டம் நீலகிரி மாவட்டத்திற்கு மட்டுமே உரியது. இதன் அடிப்படை நோக்கங்களாவன:—

(அ) மலைப் பகுதி கிராமங்களிலுள்ள மக்களின் சமூக மற்றும் பொருளாதார நிலையை மேம்படுத்துதல்;

(ஆ) வேளாண்மை, கால்நடை வளர்ப்பு, பால்பண்ணை வளர்ச்சி, மீன்வளம், வனம், தொழில் மற்றும் சுற்றுலா போன்ற ஏனைய பல்வேறு திட்டங்களின்கீழ் மேம்படுத்தக் கருதப்பட்டுள்ள எல்லா இடங்களுக்கும் எளிதில் செல்வதற்கான சாலை போடுதல்;

(இ) பழங்குடியினர் மற்றும் ஆதி திராவிடர்கள் வாழும் கிராமப் பகுதிகளை பொருளாதார மற்றும் சமூக வளர்ச்சி அடைந்த மையங்களுடன் இணைக்க சாலைகள் அமைத்தல். இத்திட்டம் 1975 ஆம் ஆண்டில் துவங்கப்பெற்று, ஒவ்வொரு ஆண்டும், பல பணிகள் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. தொடக்கத்தில், இத்திட்டத்தின்கீழ் 47 சாலைப் பணிகளுக்கு ரூ. 272.05 இலட்சம் செலவில் ஒப்புதல் வழங்கப் பட்டுள்ளது. 1981-82 ஆம் ஆண்டில் 7 புதுப் பணிகளுக்கு அரசு ஒப்புதல் வழங்கியுள்ளது.

3.11.2. அவற்றுள், 31-3-1982 ஆம் நாள் வரை, 28 பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. இப்பணிகளின் விவரத்தை இணைப்பு 19-ல் காண்க. மேற்கொள்ளப்பட்ட 26 பணிகள் வெவ்வேறு நிலைகளிலுள்ளன. இவற்றில் 17 பணிகள் 1982—83—ல் முடிந்து விடும் என எதிர்பார்க்கப்படுகிறது. (பணிகளின் விவரத்தை இணைப்பு 20-ல் காண்க.)

3.11.3. 1982-83 ஆம் ஆண்டில் [illegible] 80.00 இலட்சம் செலவிட உத்தேசிக்கப்பட்டுள்ளது. 1983–84 ஆம் ஆண்டிற்காக ரூ. 99.28 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.



3.12. வனப்பகுதியில், மலைப்பகுதி சாலை மேம்பாட்டுத் திட்டம்:—

3.12.1. மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டத்தில் வனப்பகுதி எல்லைக்குள் செல்லும் சாலைகளையும் மேம்பாடு செய்ய தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன. இது வரை, இத்திட்டத்தின் கீழ் ஆறு பணிகளுக்கு ரூ. 399.40 இலட்சம் மதிப்பீட்டிற்கு அனுமதி அளிக்கப்பட்டது. அவற்றில் ரூ. 59.40 இலட்சம் செலவிலான 3 பணிகள், வனத்துறையின் நிதிகளைக் கொண்டு செயற்படுத்தப்பட்டு வருகின்றன. ரூ. 340.00 இலட்சம் செலவிலான எஞ்சியுள்ள 3 பணிகள் நெடுஞ்சாலைகள் துறைக்காக ஒதுக்கப்பட்ட நிதிகளைக் கொண்டு நிறைவேற்றப்படுகின்றன. அனுமதிக்கப்பட்ட அப்பணிகள் வெவ்வேறு முன்னேற்ற நிலைகளில் உள்ளன. (பணிகளின் விவரத்தை இணைப்பு 21-ல் காண்க.)

3.12.2. வனத்துறை மற்றும் நெடுஞ்சாலைகள் துறைகளின் கீழ் மேற்கொள்ளப்பட்ட பணிகளுக்கு முறையே ரூ. 11.87 இலட்சமும், ரூ. 30.00 இலட்சமும் செலவிடக் கருதப்பட்டுள்ளது.

3.12.3. நெடுஞ்சாலைத் துறைகளின் கீழ் மேற் கொள்ளப்பட்ட இந்த 3 பணிகளுக்கும் 1983-84 ஆம் ஆண்டுக்கான செலவு உச்சவரம்பு ரூ. 55.00 இலட்சம் ஆகும்.

3.13. மேற்கு மலைத் தொடர் மேம்பாட்டுத் திட்டம்.

3.13.1. மலையில் விளையும் பொருட்களை சமவெளிக்குக் கொணர்வதற்காக தமிழ்நாட்டில் மேற்குத் தொடர்ச்சி மலையின் பல்வேறு பகுதிகளில் சாலை அமைத்தல், மேம்படுத்துதல், ஆகிய பணிகள் இந்திய அரசின் நிதி உதவியுடன் செயல்படுத்தப்படுகின்றன.

3.13.2. இது மத்திய அரசு பொறுப்பேற்கும் திட்டமாகும். இத்திட்டம் 1975-76-ல் துவக்கப்பட்டது. இத்திட்டத்தின் கீழ் பின்வரும் பணிகளுக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட வேண்டுமென திட்டக்குழு பரிந்துரை செய்திருப்பது குறிப்பிடத் தக்கதாகும்:—

(1) ஆடுகள், ஆவினம், கோழிகள் ஆகியவைகளின் பண்ணைகள் வளர்ச்சி மற்றும் பால்பண்ணை, சந்தை வசதிகள், புல்வெளி அபிவிருத்தி மற்றும் உடல் நல பாதுகாப்பு வசதிகள்.

(2) பயிர் வளர்ப்பு, மலைத் தோட்டப்பயிர்களை வளர்த்தல், மண் வளத்தை மேம்படுத்துதல், நில நிர்வாக வழி முறைகள் செய்வித்தல்.

(3) அணுக முடியாத பகுதிகள் மற்றும் அங்காடிகள் இடையே வழிவகை செய்வது சம்பந்தமான திட்டங்கள் மூலம் தோட்டக்கலை மற்றும் வனாந்திர வளங்களை மேம்படுத்துதல்.

3.13.3. இதுவரை இத்திட்டத்தின் கீழ் பின்வரும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு, அவற்றில் முதலில் குறிப்பிட்ட பணி மட்டும் முடிக்கப்பட்டுள்ளது. எஞ்சிய மூன்று பணிகள் செயலாக்கத்தில் பல்வேறு நிலைகளில் உள்ளன. பல்வேறு நிலைகளிலுள்ள இப்பணிகளின் விவரம் பின்வருமாறு :—

| வரிசை எண்ணும் பணிகளின் பெயரும். | | செலவு. (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|
| 1 | சிறுமலை மலைச் சாலையை மேம்படுத்துதல் .. .. | 15.00 |
| 2 | கும்பக்கரையிலிருந்து வெள்ளக்கவிக்கு சாலை அமைத்தல் (0/0—18/0 கி.மீ.) .. .. .. | 93.00 |
| | தர்மாத்துப்பட்டியிலிருந்து ஆடலூருக்கு சாலை அமைத்தல் (6/4—28/0 கி.மீ.) .. .. | 38.50 |
| | பெரியகுளத்திலிருந்து அடுக்கம் வரை சாலை அமைத்தல் (0/0—19/4 கி.மீ.) .. .. .. | 20.00 |
| 5 | கொடைக்கானல் மலைச் சாலையை அகலப்படுத்துதல் (0/0—52/4 கி.மீ.) .. .. .. | 1,00.00 |

3.13.4. 1980–81 ஆம் ஆண்டிலும் 1981–82 ஆம் ஆண்டிலும் இத்திட்டத்திற்காக முறையே ரூ. 30.00 இலட்சமும் ரூ. 42.85 லட்சமும் செலவிடப்பட்டது. 1982–83 ஆம் ஆண்டில் ரூ. 38.00 இலட்சம் செலவிட கருதப்பட்டுள்ளது. 1983–84 ஆம் ஆண்டிற்காக ரூ. 55.74 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

3.14. கரும்பாலை வளர்ச்சிக்கான சாலைப் பணிகள் திட்டம்:—

3.14.1. இத் திட்டம் சர்க்கரைத் துறை இயக்குநரின் கட்டுப்பாட்டின் கீழ் உள்ளது. கரும்பை, உற்பத்தி ஆகுமிடங்களிலிருந்து சர்க்கரை ஆலைகளுக்கு எளிதாக எடுத்துச் செல்வதற்காக, புதிய சாலைகளை அமைக்கவும், குறிப்பிட்ட கரும்பு சாகுபடியாகும் பகுதியிலுள்ள [illegible] களை மாவட்டப் பெருஞ்



சாலைகள் தரத்திற்கு மேம்படுத்துவதற்கும் ஆண்டுதோறும் அரசு நிதி ஒதுக்கீடு செய்கிறது. இம்மாநிலத்தில் சர்க்கரை ஆலைகளுக்கு அருகாமையிலேயே கரும்பு சாகுபடி பகுதியிலுள்ள சாலைகள் பொதுவாக அமைந்துள்ளன.

3.14.2. 1982–83 ஆம் ஆண்டில் ரூ. 1,94.50 இலட்சம் செலவில் 12 புதிய சாலைப் பணிகளை நிறைவேற்றுவதற்கு அரசு அனுமதி வழங்கியுள்ளது.

3.14.3. 1982–83 ஆம் ஆண்டில் மூலப் பணிகளுக்காக ரூ. 2,00·00 இலட்சமும் பராமரிப்பதற்காக ரூ. 50·00 இலட்சமும் செலவிட உத்தேசிக்கப்பட்டுள்ளது. 1982 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 31 ஆம் நாள் அன்றையபடி இத்திட்டத்தின் கீழ் அமைக்கப்பட்ட மற்றும் மேம்படுத்தப்பட்ட சாலைகளின் மொத்த நீளம் 799·102 கிலோ மீட்டராகும்.

3.14.4. 1983–84 ஆம் ஆண்டில் இத்திட்டத்தின் கீழ் மூலப் பணிகளுக்காக ரூ. 2,00·00 இலட்சமும் பராமரிப்பதற்காக ரூ. 50·00 இலட்சமும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

3.15. உலக வங்கித் திட்டத்தின் கீழ் சென்னை நகர்ப்புற வளர்ச்சித் திட்டம்.

3.15.2. உலக வங்கி உதவியுடன் தமிழ்நாடு அரசு மாநகரச் சுற்றுச் சாலையினை மேம்படுத்தவும், சிறிய மற்றும் பெரிய பாலங்கள் முதலியவற்றை அமைக்கும் பணிகளையும் மேற்கொண்டுள்ளது. இப்பணிகள் இரண்டு கட்டங்களில் மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ளது. முதல் கட்டப் பணிகளுக்கான முதலீடு ரூபாய் 7·18 கோடியாகும் (இதில் பெரு வழிச் சாலைகளுக்கான ரூ. 4.00 கோடியும், மாநகராட்சிப் பகுதிகளிலுள்ள இதரச் சாலைகளுக்கான ரூ. 3.18 கோடியும் அடங்கும்). இத்திட்டம் 1977-78-ல் துவக்கப்பட்டது. 1981-82 வரையிலான செலவு ரூ. 7,56.76 இலட்சமாகும். 19 2–83 ஆம் ஆண்டில் ரூ. 1,46.01 இலட்சம் செலவிட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

3.15.2. கட்டம் 1 :

கீழ்க்கண்ட பணிகளை எடுத்துக் கொள்ள திட்டமிடப்பட்டுள்ளது :—

(1) கூவம் ஆற்றின் குறுக்கே ஒரு பாலம் அமைப்பதைச் சேர்த்து மாநகரச் சுற்றுச் சாலை அமைத்தல் நீளம் 11.7 கி.மீ.

(2) அண்ணா சாலை, பெரியார் சாலை ஆகியவற்றில் பாதசாரிகள் மற்றும் மிதிவண்டி ஓட்டிகள் ஆகியோரின் வசதிக்கென்று மேம்பாட்டுப் பணிகள்—21 கி.மீ.

(3) ஏழு சிறு பாலங்களை மீண்டும் கட்டுதல்.

(4) கீழ்க்கண்ட உயர்மட்டப் பாலங்கள் இரண்டினைக் கட்டுதல் :—

(அ) நெல்சன் மாணிக்கம் சாலை.

(ஆ) கான்ட்ஸ் சாலை.

(5) நெல்சன் மாணிக்கம் சாலையில் வாகனப் போக்கு வரத்திற்கான சுரங்கப் பாதை அமைத்தல்.

(6) தண்டையார்பேட்டை இரயில் நிலையம் அருகில் வைத்தியநாத தெருவில் ஒரு மேம்பாலம் அமைத்தல்.

(7) எட்டு சுரங்க நடைபாதைகள் பாதசாரிகளுக்காக அமைத்தல்.

(8) சாலை சந்திப்புகளில் போக்குவரத்து கட்டுப்பாட்டிற்கான 10 தானியங்கி போக்குவரத்து சைகை விளக்குகள் பொருத்துதல்.

(9) இதர சில போக்குவரத்து மேம்பாட்டு வழிவகைகள்.

3.15.3. மேற்குறிப்பிட்டுள்ள பணியில் பின்வரும் பணிகள் இதுவரை முடிக்கப்பட்டுள்ளன :—

(1) மாநகரச் சுற்றுச் சாலை, அமைத்தல்—7.6 கி.மீ நீளம்.

(2) அண்ணா சாலை, பெரியார் சாலையில் பாதசாரிகள், மிதி வண்டி ஓட்டிகள் ஆகியோரின் வசதிக்கான மேம்பாட்டுப் பணி—21 கி.மீ.

(3) ஏழு சிறு பாலங்களை மீண்டும் கட்டுதல்.

(4) பாதசாரிகளுக்கான எட்டு சுரங்கப் பாதைகள்.

(5) சாலை சந்திப்புகளில் போக்குவரத்து கட்டுப்பாட்டிற்கான தானியங்கி சைகை விளக்குகள் ஒன்பது பொருத்துதல்.

(6) ஒருவழிப் போக்குவரத்து சாலைகளில் அறிவிப்புகள். மற்றும் மின்னும் விளக்குகள் அமைத்தல்.

3.15.4 பின்வரும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

(1) மாநகரச் சுற்றுச் சாலை அமைத்தல்—1.90 கி.மீ.

(2) இரு உயர்மட்ட பாலங்கள் அமைத்தல்.

(3) நெல்சன் மாணிக்கம் சாலையில் வாகனப் போக்கு வரத்திற்கான சுரங்கப்பாதை அமைத்தல்.



(4) தண்டையார்பேட்டை இரயில் நிலையத்திற்கருகில் வைத்தியநாதன் தெருவில் மேம்பாலம் கட்டுதல்.

(5) புது ஆவடி சாலைச் சந்திப்பிற்கருகே தானியங்கி போக்குவரத்து சைகை விளக்கு ஒன்று அமைத்தல்.

3.15.5. பின்வரும் பணிகள் செயல்படுத்தப்பட உள்ளன :—

(1) மாநகரச் சுற்றுச் சாலை அமைத்தல்—2·20 கி.மீ. நீளம்.

(2) மாநகரச் சுற்றுச் சாலையில் கூவம் ஆற்றின் குறுக்கே பாலம் ஒன்று அமைத்தல்.

3.15.6. 1982–83 ஆம் ஆண்டில் ரூபாய் 46·01 இலட்சம் செலவிடக் கருதப்பட்டுள்ளது. 1983–84 ஆம் ஆண்டிற்கு ரூ. 53.00 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

3.15.7. கட்டம் 2:

1980 ஆம் ஆண்டு அக்டோபர் திங்களில் சென்னைக்கு வந்து, தமிழக அரசின் பிரதிநிதிகளுடன் கலந்தாலோசித்த உலக வங்கி மதிப்பீட்டுக் குழு அலுவலர்கள், பின்வரும் பணிகளை, சென்னை மாநகர் வளர்ச்சித் திட்டத்தின் இரண்டாம் கட்டத்தில், நெடுஞ் சாலை கிராமப் பணிகள் துறையால் மேற்கொள்ள முடிவு செய்துள்ளனர் :—

(1) சென்னை மாநகர் வளர்ச்சித் திட்டத்தின் முதல் கட்டப் பணியின் தொடர்ச்சியாக பாடியிலிருந்து தேசிய நெடுஞ் சாலை எண் 5-ஐ இணைக்கும் ஆறு கி.மீ. நீளமுள்ள சென்னை மாநகரச் சுற்றுச் சாலையினை ரூ. 3.81 இலட்சம் செலவில் அமைத்தல்.

(2) வில்லிவாக்கத்திலிருந்து ஆவடி வரையிலான சென்னை-திருவள்ளூர் சாலையை ரூ. 1,51,00 இலட்சம் செலவில் 14.6 கி.மீ. நீளத்திற்கு மேம்படுத்துதல்.

(3) ரூ. 94.00 இலட்சம் செலவில் முகைப்பேர் மனை மற்றும் வசதி திட்டத்திற்கான அணுகு சாலை அமைத்து கூவம் ஆற்றில் ஓர் பாலம் அமைத்தல்.

3.15.8. மேற்படி பணிகள் ஆய்வு செய்யப்பட்டு அப்பணிகளுக்கான விரிவான மதிப்பீட்டிற்கு ஒப்புதலும் அளிக்கப்பட்டுள்ளது. நிலத்தை அரசு கையகப்படுத்த முன் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

3.15.9. 1981–82 ஆம் ஆண்டு வரையில் ரூ. 1,00.08 இலட்சம் செலவு செய்யப்பட்டது. நடப்பு 1982–83 ஆம் ஆண்டிற்காக ரூ. 1,00.00 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. 1983–84 ஆம் ஆண்டிற்கான ஒதுக்கீடு ரூபாய் 1,00.00 இலட்சமாகும்.

3.16. மாநகர வளர்ச்சி ஒருங்கிணைப்புத் திட்டம் (மாநில அரசு நிதி ஒதுக்கீடு).

3.16.1. இத் திட்டம், சென்னை பெருநகர்ப் பகுதிக்குள் நெடுஞ்சாலை கிராமப் பணித்துறை, சென்னை மாநகராட்சி ஆகியவற்றின் பொறுப்பிலுள்ள சாலைகளை தேர்ந்தெடுக்கப்பட்டு மேம்படுத்துவதற்கு வகை செய்கிறது.

3.16.2. பின்வரும் பணிகள் இத்திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்டுள்ளன :—

(1) சாலைகளை அகலப்படுத்தி உறுதிப்படுத்துதல்—12 கி.மீ.

(அ) பெரியார் சாலை (சென்ட்ரல் இரயில் நிலையத்திலிருந்து புதிய ஆவடி சந்திப்பு வரை).

(ஆ) அண்ணா சாலை—கத்திப்பாராவிலிருந்து விமான நிலையம் வரை.

(இ) அண்ணா நகர் சாலை சந்திப்பிலிருந்து, மாநகரச் சுற்றுச் சாலை சந்திப்பு வரையிலான புது ஆவடிச் சாலை.

(2) மூன்று புதிய சாலைகள் அமைத்தல்—5·7 கி.மீ. :—

(அ) வேளச்சேரி புறவழிச் சாலை.

(ஆ) தரமணி இணைப்புச் சாலை.

(இ) அண்ணா நகர் மேற்கிலிருந்து அம்பத்தூர் தொழிற்பேட்டை வரை.

(3) நான்கு புதிய பாலங்கள் அமைத்தல்—

திருவொற்றியூர்-பொன்னேரி-பஞ்செட்டி சாலையில் மூன்று பாலங்களும், கோட்டூர்புரத்தில் ஒரு பாலமும்.

(4) தற்போதுள்ள மூன்று பாலங்களை திரும்பக் கட்டுதல்:—

சென்ட்ரல் இரயில் நிலையம் அருகில் ஒன்றும், இராம கிருஷ்ணா மடம் சாலையில் ஒன்றும், தேசிய நெடுஞ் சாலை 5இல் கி.மீ. 7/6 இல் ஒன்றும் ஆக மூன்று.





(5) புற்று நோய் நிலையம் அருகில் பங்கிங்காம் கால்வாயின் குறுக்கே அமைந்துள்ள பாலத்தை அகலப்படுத்துதல்.

3.16.3. பின்வரும் பணிகள் செயலாக்கப்பட்டு வருகின்றன. அவற்றின் நிலை வருமாறு:—

(1) 12·00 கி.மீ, நீளத்திற்கான சாலைகளை அகலப்படுத்தி உறுதிப்படுத்துதல்:—

(அ) பெரியார் சாலை (சென்ட்ரல் இரயில் நிலையத்திலிருந்து புதிய ஆவடி சாலை சந்திப்பு வரை) இப்பணி முடிக்கப்பட்டது.

(ஆ) அண்ணா சாலை-கத்திப்பாராவிலிருந்து விமான நிலைவம் வரையிலான தேசிய நெடுஞ்சாலை 45-னை மேம்படுத்துதல் (கி.மீ. 11/7 முதல் 15/4 வரை இப்பணி முடிக்கப்பட்டது).

(இ) அண்ணாநகர் சாலை சந்திப்பிலிருந்து மாநகர சுற்றுச் சாலை சந்திப்பு வரையிலான புது ஆவடி சாலையினை மேம்படுத்துதல்—இப்பணி நடந்தேறி வருகிறது.

(2) மூன்று புதுச் சாலைகள் அமைத்தல்—5.70 கி.மீ.—

(அ) மற்றும் (ஆ) வேளச்சேரிக்கு புறவழிப்பாதை அமைத்தல் உட்பட, மர்மலாங்பாலம்—இரும்புலியூர் சாலையில் கி.மீ. 5/0 லிருந்து தரமணிக்கு இணைப்புச் சாலையினை அமைத்தல். பணி நடந்து வருகிறது.

(இ) அண்ணா நகருக்கும் அம்பத்தூர் தொழிற்பேட்டைக்கும் இடையே இணைப்புச் சாலையினை அமைத்தல். பணி முடிக்கப்பட்டது.

(3) நான்கு புது பாலங்கள் கட்டுதல்:—

திருவொற்றியூர்—பொன்னேரி—பஞ்செட்டி சாலையில் கி.மீ. 7/4, 8/2-ல் இரண்டு பாலங்கள் கட்டும் பணி நடந்து வருகிறது.

5/2 கி. மீட்டரில் பாலம் கட்டும் பணி தொடங்கப்பட உள்ளது. கோட்டூர்புரம் அருகே அடையாற்றின் குறுக்கே பாலம் கட்டும் பணி நடந்து வருகிறது.

(4) தற்போதுள்ள மூன்று பாலங்களைத் திரும்பக் கட்டுதல்.

(அ) சென்ட்ரல் இரயில் நிலையத்திற்கருகில் பணி நடந்து வருகிறது.

(ஆ) இராமகிருஷ்ணா மடம் சாலையிலுள்ள பாலத்தை திரும்பக் கட்டுதல்—பணி தொடங்கப்பட உள்ளது.

(இ) தேசிய நெடுஞ்சாலை எண் 5ல் கி.மீ. 7/6ல் பாலம் கட்டும் பணி நடந்து வருகிறது.

(5) புற்றுநோய் மருத்துவ நிலையத்திற்கருகே பக்கிங்காம் கால்வாயின் குறுக்கே உள்ள பாலத்தை அகலப்படுத்துதல்—பணி முடிக்கப்பட்டது.

3.16.4. 1982—83ஆம் ஆண்டிற்கு ரூ. 45·51 இலட்சம் செலவிட உத்தேசிக்கப்பட்டுள்ளது. 1983—84 ஆம் ஆண்டிற்கு ரூ. 42·37 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

3.17. ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி:

3.17.1. எந்த வளர்ச்சிப் பணிக்கும் ஆராய்ச்சி அடிப்படைத் தேவையாகும். சாலை அமைப்பதற்காகும் செலவைக் குறைப்பதும், சாலை போடுவதற்கு தகுந்த, உள்ளூரிலேயே கிடைக்கக் கூடிய மூலப் பொருள்களைப் பயன்படுத்துவதும் நெடுஞ்சாலை ஆராய்ச்சி நிலையத்தின் முக்கிய நோக்கமாக உள்ளது.

சென்னை நெடுஞ்சாலை ஆராய்ச்சி நிலையம் பல்வேறு ஆராய்ச்சித் திட்டங்களை மேற்கொண்டுள்ளது. இவ்வாராய்ச்சித் திட்டங்களினால், சாலை அமைத்தல், சாலை கட்டுமானப் பணிகளுக்காகும் செலவு பெருமளவு குறையும். ஆராய்ச்சிப் பணிகளை மேற்கொள்ள நவீன கருவிகள் தேவைப்படுகின்றன.

3.17.2. நெடுஞ்சாலை ஆராய்ச்சி நிலையத்திற்கு 1983—84-ல் ரூ. 42.7? இலட்சம் மதிப்பீட்டுச் செலவில் பின்வரும் கருவிகள் வாங்குவதற்கு அனுமதியளிக்கக் கருதப்பட்டுள்ளது.

(அ) கான்கிரீட், கட்டுமான ஆய்வுக்கூடத்திற்கான கருவிகள்.

(ஆ) மண், நிலக்கீல் ஆய்வுக் கூடத்திற்கான கருவிகள்.

(இ) போக்குவரத்து ஆய்வுக் கூடத்திற்கான கருவிகள்.

3.17.3. 1982—83-ல் ரூ. 14.40 இலட்சம் செலவிடக் கருதப்பட்டுள்ளது. 1983—84 ஆம் ஆண்டு நிதி ஒதுக்கீடு ரூ. 24.48



3.18. உறுதியற்ற கட்டுமானங்களை வலுப்படுத்தல்:

3.18.1. மாநில நெடுஞ்சாலைகள் மற்றும் மாவட்டப் பெருஞ்சாலைகளிலுள்ள படுகைப் பாலங்களுடன் பெரும்பாலான கட்டுமானங்கள் உறுதியிழந்தவையாகவும், தரமிழந்தனவாகவும் காணப்படுகின்றன. இவை தற்போதைய அனுமதிக்கப்படுகின்ற பளுவின் நிலையைத் தாங்கக்கூடியதாக இல்லை. மேற்படி சாலைகளில் பெரும் வாகனங்கள் செல்வதற்கு அனுமதி மறுக்கப்பட்டும் தடுக்கப்பட்டும் வருகின்றது. இந்நிலையானது தொழில் வளர்ச்சிக்குக் குந்தகமாக உள்ளது. தொழிற்சாலைகளின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் வகையில் உறுதியற்ற கட்டுமானங்களைத் திரும்பக் கட்டுதல், உறுதிப்படுத்துதல் போன்ற பணிகளை படிப்படியாக மேற்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளது. மாநில நெடுஞ்சாலைகளில் உடனடியாக செப்பனிட்டு திரும்ப கட்ட வேண்டிய பாலங்களுக்கு தோராயமாக ரூ. 500·00 இலட்சம் செலவாகும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது. மாவட்டப் பெருஞ்சாலைகளில் உடனடியாக திரும்பக் கட்டப்பட வேண்டிய பாலங்களுக்கும் மதகுகளுக்கும் செலவாகும் தொகையில் பாதி ரூ. 14,00·00 இலட்சம் என்று மதிப்பிடப்பட்டுள்ளது. ஆகவே, மேற்படி பணிகளுக்கு தேவைப்படும் மொத்த தொகை தோராயமாக ரூ. 19,00·00 இலட்சமென மதிப்பிடப்பட்டுள்ளது.

3.18.2. 1982-83 ஆம் ஆண்டு II-ம் பகுதி திட்டத்தின் கீழ் அரசு முதன் முதலாக ரூ 60·00 இலட்சம் செலவிலான பணிகளுக்கு ரூ. 25·00 இலட்சம் வரவு செலவுத் திட்ட நிதி ஒதுக்கத்துடன் அனுமதி வழங்கியுள்ளது. ரூ. 1.0? இலட்சம் மதிப்புள்ள செயற் குறிப்புகளுக்கு 1983-84-ல் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. 1983-84 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தில் ரூ. 30·00 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

3.19. சாலைப்புற வசதிகள் :

3.19.1. நெடுஞ்சாலைகளில் செல்லும் லாரிகள் மற்றும் பேருந்துகளில் பயணம் செய்பவர்களுக்கு ஓய்வு விடுதிகள், சிற்றுண்டிச் சாலைகள் போன்ற அடிப்படை வசதிகளை அளிக்க வேண்டியது மிக அவசியமாகும். வாகனங்களுக்கு பழுது பார்க்கும் வசதியினை அளிக்க வேண்டியதும் மிக அவசியமாகும். மேற்படி வசதிகள் இல்லாததால் நெடுஞ்சாலை ஓரத்தில் ஒழுங்கற்ற முறையில் காளான்களைப் போன்று வளரும் அத்தகைய நிலையங்கள் போக்குவரத்து நெருக்கடியினையும், விபத்துக்களையும் தோற்றுவித்து வருகின்றன. முதன் முறையாக அரசானது நெடுஞ்சாலைகளில் செல்லும் மோட்டார் மற்றும் பேருந்து ஓட்டுநர்களுக்கும், பயணிகளுக்கும் சாலைப்புற வசதிகள் ஏற்படுத்த உத்தேசித்துள்ளது. இத்திட்டத்திற்காக ஆறாம் ஐந்தாண்டுத் திட்டத்தில் (1980—85) ரூ. 1,00·00 இலட்சம் வைக்கப்பட்டுள்ளது.

3.19.2. 1982–83 ஆம் ஆண்டு II ஆம் பகுதி திட்டத்தில் 6 இடங்களில் மேற்படி வசதிகளை அளிப்பதற்காக ரூ. 24·00 இலட்சம் செலவிட இந்த அரசானது முதன் முறையாக இத் திட்டத்தை மேற்கொள்ள அனுமதித்துள்ளது. இதற்கான வரவு-செலவு திட்ட ஒதுக்கீடு ரூ. 10 இலட்சமாகும். (பணிகளின் விவரத்தை இணைப்பு 22-ல் காண்க.)

3.19.3. 1983–84 ஆம் ஆண்டு ரூ. 50·00 இலட்சம் மதிப்புள்ள செயற்குறிப்பிற்கு அனுமதிக்கப்பட்டுள்ளது. இதற்காக, வரவு-செலவுத் திட்டத்தில் ரூ. 20 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

3.20. ஆய்வுப் பணிகள் :

3.20.1. மூன்று கோட்டங்களுடன் கூடிய சிறப்பு வட்டம் ஒன்று, எல்லாப் பெருந் திட்டங்கள் பற்றிய ஆய்வுப் பணிகளுக்கும் விரிவான திட்டங்களையும், மதிப்பீடுகளையும் தயாரிக்கும் பணிக்கும் பொறுப்பு வகிக்கின்றது. தேசிய நெடுஞ்சாலைகளைத் தவிர, மாநிலத்திலுள்ள பாலப் பணிகள், முக்கிய சாலைப் பணிகள் அனைத்தையும் குறித்து இவ்வட்டம் தொடக்கத்திலேயே விரிவாக ஆய்வு செய்து விவரங்களைச் சேகரிக்கின்றது. இவை சரியான முறையில் திட்டங்களை வடிவமைப்பதற்கும் மதிப்பீடுகள் தயாரிப்பதற்கும் உதவுகின்றன. இத்துடன், அரசின் ஏனைய துறைகளான தொழில், வீட்டு வசதி, மீன்வளம், வனத்துறை, வேளாண்மைத் துறை, உள்ளாட்சி மன்றங்களின் பணிகள் குறித்து ஆய்வு செய்து திட்டங்களையும், மதிப்பீடுகளையும் தயாரித்தல் ஆகிய பணிகளை இவ்வட்டம் மேற்கொள்கின்றது.

3.20.2. விரிவான ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டிய பணிகள் பெருமளவில் இருப்பதைக் கருதி, நெடுஞ்சாலை கிராமப் பணித் துறையிலுள்ள ஆய்வுப் பிரிவினை வலுப்படுத்துவதற்கான கருத்துரு ஒன்று அரசின் தீவிரப் பரிசீலனையில் உள்ளது.

3.21. வடிவமைப்பு:

முக்கிய பாலப் பணிகளுக்கான வடிவமைப்புகளைத் தயாரிப்பதற்கு இத்துறையில் உள்ள தனி வட்டம் பொறுப்பு வகிக்கிறது. பெரிய பாலங்கள், மேம்பாலம், சுரங்கப்பாதை, நீண்ட விட்டமுள்ள முன்னரே வலுவேற்றப்பட்ட சிமிட்டிக் கற்கலவைக் கட்டுமானங்கள் போன்ற சிக்கலான கட்டுமானங்களின் வடிவமைப்புகளைத் தயாரித்து தற்போதைய தொழில் நுட்ப உத்தியுடன் இணைக்கும் பணியில் இவ்வட்டம் பெரும்பாலும் ஈடுபடுகிறது. இதன் காரணமாக இப்பணியை நிறைவேற்றுவதற்குச் சிக்கனமான, சிறந்த வடிவமைப்புகள் கிடைக்கின்றன.





வலுவற்ற கட்டுமானங்களைக் கண்டறிந்து, ஏற்கனவே உள்ள கட்டுமானத்திலுள்ள குறைகளைப் போக்குவதற்கு அவசியமான செயற்குறிப்பை தயாரிக்கும் பணியையும் இவ்வட்டம் மேற்கொள்கிறது.

3.22. போக்குவரத்து பொறியியல் நிர்வாக வட்டம் :

3.22.1. தமிழ்நாட்டில் போக்குவரத்து பெருமளவிற்கு வளர்ந்துள்ளது. அதன் காரணமாகப் போக்குவரத்தும், போக்குவரத்து பொறியியல் துறையும் மிகுந்த முக்கியத்துவம் அடைந்து வளர்ச்சியடைந்துள்ளது. சென்னையை தலைமையிடமாகக் கொண்டு போக்குவரத்துப் பொறியியல் பிரிவு ஒன்றை மாநில அரசு ஏற்படுத்தியுள்ளது. இப்பிரிவு மேற்பார்வைப் பொறியாளரது தலைமையின் கீழ் செயல்படுகிறது. இவருக்கு கோட்டப் பொறியாளர்கள் இருவர் உதவி புரிவர். இக்கோட்டங்களில் ஒன்று சென்னையிலும் மற்றொன்று திருச்சியிலும் உள்ளன. தமிழ்நாட்டில் சென்னை மாநகரிலும் ஏனைய முக்கியமான நகரங்களிலும் போக்குவரத்து சைகை விளக்குகளை அமைப்பதிலும் போக்குவரத்துக் கட்டுப்பாட்டு அமைப்பிற்கும் வகை செய்வதிலும், தேவையான இடங்களில் போக்குவரத்து தீவுத் திடல்களை ஏற்படுத்துவதிலும் போக்குவரத்து பாதுகாப்புடனும் முறையாகவும் செல்வதற்கு போக்குவரத்துப் பாதைகளை அமைப்பதிலும், சாலைகள் போக்குவரத்தைத் தாங்கும் திறனை உரிய அளவில் உயர்த்துவதிலும், நிர்வாகப் பணியாளர்களுக்கு இவ்வட்டம் ஆலோசனை கூறுகின்றது. இம்மாநிலத்திலுள்ள சாலைகளில் உரிய அளவு பளுவை தாங்கும் நிலைக்கும் இது உதவுகிறது.

3.23. தொழில் நுட்ப ஆய்வுப் பிரிவு :

3.23.1. நெடுஞ்சாலைத் துறை ஒவ்வோர் ஆண்டும் ரூ. 60 முதல் ரூ. 70 கோடி வரை மதிப்புள்ள பணிகளை சாதாரணமாக நிறைவேற்றி வருகின்றது. இத்தகையப் பெரும்பணிகளை மேற்கொள்ள சரியான தரக்கட்டுப்பாடு தேவைப்படுகிறது. அத்தகைய முறையான தரக்கட்டுப்பாட்டைக் கொண்ட பிரிவு ஒன்று இத்துறையில் தலைமைப் பொறியாளரின் கட்டுப்பாட்டின் கீழ் அமைக்கப்பட்டுள்ளது. தேர்ந்தெடுக்கப் பட்டுள்ள மதிப்பீடுகளை ஆய்வு செய்து, தொழில் நுட்ப கண்ணோட்டத்தில் செய்யப்பட்ட ஏற்பாடுகள் போதுமானதா என்று சந்தேகமறத் தெளிதல், பணிகளை நிறைவேற்றுகையில் குறிப்பீடுகள் சரிவர செயல்படுத்தப்பட்டுள்ளனவா என்பதை உறுதிப்படுத்துவதற்காக பெரும் பணிகளை திடீரென்றும் திட்டமிட்டும் சென்று பார்வையிடுதல், ஆகியப் பணிகளுக்கு இப்பிரிவு பொறுப்புள்ளதாகும். பெரும் பணிகளை வடிவமைத்தல், நிறைவேற்றுதல் ஆகியவற்றின் தரத்தினை உயர்த்துவதற்கு இப்பிரிவு உதவுகின்றது.

4.0 நெடுஞ்சாலை கிராமப் பணித்துறை அலுவலர்களுக்காக பயிற்சி நிலையம் அமைத்தல்:

4.1. நெடுஞ்சாலை கிராமப் பணித் துறையானது கல்லூரியில் பட்டப்படிப்பை முடித்து வரும் பொறியியல் பட்டதாரிகளை நேரடியாக பணிக்கு அமர்த்திக் கொள்கின்றது. புதிய பட்டதாரிகளால் மூலப்பணிகள், பராமரிப்புப் பணிகள், கணக்கு பராமரித்தல், தயாரித்தல் போன்ற பணிகளை விரைவாகவும் உணர்வு பூர்வமாகவும் செய்ய முடிவதில்லை. படித்து முடித்தவுடன் களத்தில் புகுவதால் அவர்களால் இக்குறைகள் ஏற்படுகின்றன.

4.2. ஆதலால், இத்துறையில், புதியதாக சேரும் பட்டதாரி பொறியாளர்களுக்கு நவீன தொழில் நுட்ப வளர்ச்சி தொடர்பான பயிற்சியையும், நினைவு கூர் பயிற்சியையும் அளிப்பதற்கு நிலையான பயிற்சி நிலையம் ஒன்றை அமைக்க வேண்டியது அவசியம் என்று நிர்வாக சீர்திருத்தக் குழு கருதியது. பொதுப் பணித்துறையில் பணி புரியும் பொறியாளர்களுக்காக ஐந்து இடங்களில் மேற்படி பயிற்சி நிலையங்கள் ஏற்கனவே நிறுவப் பட்டுள்ளன. நெடுஞ்சாலைத் துறை பொறியாளர்களுக் கன்றே அப்படிப்பட்ட பயிற்சி நிலையத்தை நிறுவுவது அரசின் தீவிரப் பரிசீலனையில் உள்ளது.

5. சென்னையில் நெடுஞ்சாலை ஊரகப் பணித் துறைக்காக புதிய அலுவலக வளாகம் அமைத்தல்:

ஆண்டுதோறும் பெருந் தொகையினை வாடகையாகக் கொடுப்பதைத் தவிர்க்கும் பொருட்டு, நெடுஞ்சாலை ஊரகப் பணித் துறையின் தலைமைப் பொறியாளர்கள் அலுவலகங்கள் அனைத்திற்கும் இட வசதி அளிக்க புதிய அலுவலகக் கட்டிடம் அமைப்பதற்கான செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது.

6. திட்டமிடுவதற்காக ஒரு தனி வட்டம் எற்படுத்துதல்:

நெடுஞ்சாலை ஊரகப் பணித் துறை மேற்கொள்ள வேண்டிய பணிகளின் நீண்ட காலத் தேவைகளை மதிப்பீடு செய்வதற்கும், மைய அரசு 1981-2001 இருபது ஆண்டு திட்டத்தின் தொடர் பாக கோரியுள்ள விவரங்களை தயாரித்துக் கொடுப்பதற்கும், திட்டமிடுவதற்கென தனி வட்டம் ஒன்றை அமைப்பதற்கான செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது.

7. வறட்சி நிவாரணப் பணிகள்:

7.1. மாநிலத்தில் நிலவும் கடுமையான வறட்சியின் காரணமாக, அரசு கிராமப்புற மக்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கும் வகையில் பல்வேறு நிவாரணப் பணிகளை மேற் கொண்டுள்ளது. அதன் தொடர்பாக, மண் சாலைகளை





அமைப்பதும், 50 ஏக்கருக்குக் குறைவான ஆயக் கட்டுகளைக் கொண்ட பாசன குளங்களை மேம்படுத்தும் பணிகளும் தற்போது எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன. வறட்சி நிலையின் விரிவான மதிப்பீடுகளை எதிர் நோக்கியும், மைய அரசு அளிக்கக் கூடிய நிதி வசதியினை எதிர் நோக்கியும், இவ்வரசு முதற்கட்டமாக ரூ. 4,00 இலட்சம் மேற்சொன்ன பணிகளை எடுத்துக் கொள்ள அனுமதித்துள்ளது. இதற்காக 542 சாலைப் பணிகளும், 1,016 பாசனப் பணிகளும், எடுத்துக் கொள்ளப்பட ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளன.

8. தமிழ்நாடு மாநில கட்டுமானக் கழகம் (வரையறுக்கப்பட்டது).

8.1. தமிழ்நாடு மாநில கட்டுமானக் கழகமானது (வரை யறுக்கப்பட்டது), 1980 ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 8ஆம் நாளன்று, 1956 ஆம் ஆண்டு கம்பெனிகள் சட்டத்தின் கீழ் அமைக்கப்பட்டு பதிவு செய்யப்பட்டது. அதன் முக்கிய நோக்கங்கள் பின் வருமாறு;

(1) ரூ. 5.00 இலட்சமும் அதற்கு மேற்பட்ட மதிப்பினைக் கொண்ட பணிகளை, திட்டமிடுதல், ஏற்பாடு செய்தல், செயல்படுத்தல் போன்ற பணிகளை மேற்கொள்ளுதல்.

(2) ஒப்பந்தக்காரர்களால் கைவிடப்படும் பணிகளையும், ஒப்பந்தப் புள்ளிகள் வரப்பெறாத பணிகளையும் அப்பணிகளின் மதிப்பு என்னவாயிருப்பினும் மேற்கொள்ளுதல்.

8.2. கழகத்தின் நிதி நிலை:

8.2.1. மேற்படி கழகத்திற்கு அனுமதிக்கப்பட்ட மூலதனம் ரூ. 1.00 கோடியும் தற்போது செலுத்தப்பட்ட மூலதனம் ரூ. 46.4 இலட்சமும் ஆகும். மொத்த மூலதனமும் தமிழக அரசால் அளிக்கப்பட்டுள்ளது 1981-82-ம் ஆண்டில் தமிழக அரசானது நிரந்தரக் கடனாக ரூ. 45.00 இலட்சம் வழங்கியது. 1982-83-ம் ஆண்டில் வழிவகை முன்பணமாக ரூ. 50 இலட்சம் வழங்கியது. 1982 டிசம்பரில், எஃகு கட்டுமான பளுதாங்கி அமைத்தது தொடர்பான செலவிற்காகக் கட்டுமானக் கழகத் திற்கு ரூ.20 இலட்சம் கடனாக வழங்க, தமிழ்நாடு போக்குவரத்து வளர்ச்சி நிதியுதவிக் கழகத்திற்கு அனுமதி வழங்கப்பட்டது. கழகத்தின் அடிப்படை வசதிகளை அபிவிருத்தி செய்ய இக்கழகமானது அத்தியாவசியமான ரூ. 62.94 இலட்சம் மதிப் புள்ள மூலதன உபகரணங்களையும், கருவிகளையும் தளவாடங்களையும் இதுவரை வாங்கியுள்ளது.

8.3. கழகத்தின் பணிகள்:

8.3.1. அரசுத் துறைகள் மற்றும் அரசு நிறுவனங்களால் கொடுக்கப்பட்ட மிகவும் தொழில் திறமை தேவைப்படும் பணிகளான பாலங்கள் மற்றும் கட்டிடங்கள் [illegible] மலைச்சாலைகளை அமைக்கல் [illegible]

செய்தல், மற்றும் தொழிற்பேட்டைகளை அமைத்தல் ஆகிய பணிகளை பல மாவட்டங்களில் மேற்கொண்டுள்ளது. நீண்ட கால அனுபவமுடைய தொழில் ஒப்பந்தக்காரர்கள் கூட போட்டி விதத்தில் மேற்கொள்ளத் தயங்கிய போக்குவரத்து வசதி இல்லாத பகுதிகளில் அமைந்துள்ள கடினமான பணிகளும் இதில் அடங்கும். சாதாரணமாக எல்லா நிறுவனங்களுக்கும் ஏற்படக்கூடிய இடர்பாடுகளை இக்கழகம் தொடக்க காலத்திலேயே அனுபவிக்க வேண்டியிருந்தது. இருப்பினும் தொடக்க நிலையிலேயே 1982–ம் ஆண்டு மார்ச்சு திங்களுக்குள் ரூபாய் 2.56 இலட்சம் மதிப்புடைய பணிகளை கழகத்தால் செய்து முடிக்க முடிந்தது. நடப்பு ஆண்டில் மேற்கொண்டும் ரூபாய் 3,00 இலட்சம் மதிப்புடைய பணிகளை செய்து முடிக்க திட்டமிடப்பட்டுள்ளது.

| ஆண்டு. | பணிகளின் விவரம். (ரூபாய் இலட்சத்தில்.) |
|---|---|
| 1980-81.. | 81 |
| 1981-82.. | 1,75 |
| 1982-83 (எதிர்ப் பார்ப்பு) | 3,00 |
| மொத்தம் .. | 556 |

8.3.2. ரூபாய் 1,115 இலட்சம் மதிப்புடைய 105 பணிகள் கழகத்திடம் இதுவரை கொடுக்கப்பட்டுள்ளன. கழகத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ள பணிகளின் விவரங்கள் கீழே கொடுக்கப் பட்டுள்ளன:—

| | பணிகளின் விவரம். | பணிகளின் எண்ணிக்கை. | பணிகளின் மதிப்பு. (ரூபாய் இலட்சத்தில்.) |
|---|---|---|---|
| 1. | (அ) 1982–ம் ஆண்டு டிசம்பர் திங்கள் வரை செய்து முடிக்கப் பட்டவை .. .. .. | 46 | 1,68 |
| | (ஆ) 1983–ம் ஆண்டு மார்ச் திங்களுக்குள் செய்து முடிக்கத் திட்டமிடப்பட்டுள்ளவை .. .. | 26 | 2.05 |
| | (இ) முடிக்கப்படாமல் இருந்த பணிகளில் 1982–83–ம் ஆண்டு முடிக்கப்பட எதிர்பார்க்கப்பட்டு 1983–84–ம் ஆண்டுக்கு கொண்டு செல்லப்பட வேண்டிய பணிகள்.. | 30 | 1,83 |
| | மொத்தம் .. | 1,02 | 5,56 |
| 2. | 1983–84 ஆம் ஆண்டுக்கு கொண்டு செல்லப்படும் பணிகள்— | | |
| | (அ) அண்மையில் கொடுக்கப் பட்டவை .. .. .. | 22 | 3,37 |
| | (ஆ) சென்ற ஆண்டு கொடுக்கப் பட்டவை .. .. .. | 8 | 3,39 |
| | (இ) பரிசீலனையில் உள்ள பணிகள் | 3 | 66 |
| | மொத்தம் .. | 33 | 7,42 |



1983–84 ஆம் ஆண்டில் ரூபாய் 4,00 இலட்சம் மதிப்புடைய பணிகளை முடிக்க கழகம் திட்டமிட்டுள்ளது.

8.3.3. தொடக்க காலத்தில் கடுமையான போட்டிக்கிடையே கழகம் ஒப்பந்தங்களைப் பெற்றது. இருப்பினும் தனியார் ஒப்பந்ததாரர்கள் அதிக ஒப்பந்தப் புள்ளிவீதங்களை தெரிவித்ததாலும், தனியார் ஒப்பந்ததாரர்களிடமிருந்து தகுந்த ஒப்பந்தப்புள்ளிகள் கிடைக்காததாலும், கழகத்தின் கடந்த கால செயல் முறையை கருத்திற் கொண்டும் 1981–82 மற்றும் 1982–83 ஆம் ஆண்டுகளில் அரசு இக்கழகத்திற்குப் பல பணிகளைக் கொடுத்துள்ளது.

8.4. கழகத்தின் பணிகள்:

8.4.1. கழகத்தின் சாதனைகளை மதிப்பிடும்பொழுது கழகத்திற்கு ஏற்பட்ட இடர்பாடுகளையும் தடங்கல்களையும் கருத்தில் கொள்ள வேண்டி உள்ளது. இடர்பாடுகளில் சில கீழே கொடுக்கப்பட்டுள்ளன:—

(i) அரசுத் துறைகளால் குறித்த காலத்தில் வழங்க வேண்டிய இடம் மற்றும் தனி வடிவமுள்ள இரும்புப் பொருட்கள் கிடைப்பதில் உள்ள பெரும் தட்டுப்பாடு [illegible]

[1983 மார்ச் 17

(2) கட்டுமானப் பணிகளுக்குத் தேவைப்படும் பொருள்களின் கடும் தட்டுப்பாடும் அவைகளின் அதிகவிலை ஏற்றமும்.

(3) பணி இடங்களில் கடுமையான வறட்சி நிலைமையால் தேவையான அளவுக்கு தண்ணீர் கிடைக்காமை.

(4) கடுமையான மின்வெட்டின் காரணமாக பணியிடங்களில் கம்பிகளை இணைத்தல் மற்றும் கட்டுதல் ஆகியவைகளில் ஏற்படும் தாமதம்.

(5) நிலம் கையகப்படுத்துவதில் நிலங்களினூடே செல்ல அனுமதி பெறல் மற்றும் தண்ணீர் குழாய்கள், தொலைபேசிக் கம்பிகள், மரங்கள் மற்றும் மின் தூண்கள் ஆகியவற்றை அப்புறப்படுத்துவதில் ஏற்படும் தாமதம்.

(6) பணிகளைச் செயல்படுத்தும்போது வடிவமைப்பு மற்றும் விவரக்குறிப்புகள் ஆகியவற்றில் மாற்றங்களும் மற்றும் மூல ஒப்பந்தங்களில் பெரிய மாற்றங்களும்.

(7) துறைகளிடமிருந்து சாலை உருளைகள், காற்றழுத்தக் கருவிகள் மின் உற்பத்தி சாதனங்கள் மற்றும் இணைப்புக் கருவிகள் ஆகிய தனித்தன்மை வாய்ந்த இயந்திரங்களைப் பெறுவதில் தாமதம்.

8.4.2. மேற்சொன்ன தடங்கல்கள் இருந்த போதிலும் ஒப்படைக்கப்பட்ட பெருவாரியான பணிகளைச் செய்து முடிக்க கழகம் முயற்சிக்கின்றது.

8.4.3. 31—3—1982 வரை முடிக்கப்பட்டுள்ள பணிகளின் விவரங்கள் 31—3—1983-க்குள் முடிக்கக்கருதி உள்ள பணிகளின் விவரங்கள் போன்றவை இணைப்பு 23-இல் கொடுக்கப்பட்டுள்ளன.

8.5. முதலீட்டின் பலன்கள்.

8.5.1. நேரிடையான பலன்கள்.

8.5.1.1. தேய்மானம் மற்றும் முதலீட்டுக்காக ரூபாய் 1.14 இலட்சத்தை ஒதுக்கிய பிறகு 8—2—1980 முதல் 31—3—1981 வரை ரூபாய் 3.39 இலட்சம் சிறிய இலாபம் இக்கழகம் ஈட்டியது. செயல்படத் தொடங்கிய முதல் ஆண்டிலேயே பொருளாதார ரீதியில் இலாபகரமாக இயங்கக் கூடிய ஒரு நிறுவனமாக இக்கழகம் நிரூபித்தது. ரூபாய் 5.27 இலட்சம் வட்டி செலுத்துவதற்காகவும் ரூபாய் 7.09 இலட்சம் தேய்மானங்களுக்காகவும் ஒதுக்கியதற்கு முன், 1981-82 ஆம் ஆண்டில் ரூபாய் 6.37 இலட்சம் இலாபம் கிடைத்தது. மேற்கண்டவாறு தேய்மானம் மற்றும் வட்டிக்கு நிதி ஒதுக்கிய பிறகு ரூபாய் 5.99 இலட்சம் சிறு இழப்பில் முடிந்தது.



1983 மார்ச் 17]

குறைந்த அளவு செயலமைப்பு செலவை சரிகட்டுதல் மற்றும் பணிக்காகும் செலவை குறைத்தல் ஆகிய நோக்கங்களை கொண்டு விலையை நிர்ணயிக்கும் கொள்கையை கழகம் கடைப்பிடித்ததே இந்த இழப்புக்கு காரணமாகும்.

8.5.2. அரசுக்கு ஏற்பட்ட மறைமுகமான பலன்கள்:

8.5.2.1. ரூபாய் 35 இலட்சம் மதிப்புடைய கீழ்கண்ட மறைமுகமான பலன்கள் அரசுக்கு கிடைத்துள்ளன.

(அ) மிகக் குறைந்த ஒப்பந்தப் புள்ளிகளை கழகம் அளித்ததில் ரூபாய் 16 இலட்சம் அரசுக்கு இலாபம் கிடைத்துள்ளது.

(ஆ) தனியார் ஒப்பந்தப் புள்ளிதாரர்களின் ஒப்பந்தப் புள்ளிகளை ரத்து செய்து அப்பணிகளை கழகத்திடம் ஒப்படைத்த வகையில் ரூபாய் 7 இலட்சம் அரசுக்கு மீதம் ஏற்பட்டது.

(இ) ஒப்பந்தப்புள்ளிகளை கேட்பதில் கழகம் பங்கு கொண்டதினாலேயே மட்டும் தனியார் ஒப்பந்தப் புள்ளிதாரர்கள் கேட்ட ஒப்பந்த கேட்புத் தொகை வெகுவாகக் குறைந்தது. கழகம் வெற்றி பெற இயலாத இனங்களில் கூட அரசு தனியார் ஒப்பந்தப் புள்ளியாளர்களிடமிருந்து போட்டி வகையிலான குறைந்த கேட்புத் தொகையை பெற முடிந்தது. இதனால் அரசுக்கு ரூ. 12 இலட்சம் மிச்சம் ஏற்பட்டது.

8.5.2.2. மேற்சொன்ன மறைமுக பலன்களைத் தவிர, போக்குவரத்து வசதியில்லாத பகுதிகளில் தனியார் நிறுவனங்கள் மேற்கொண்டு செய்ய முன்வராத ரூபாய் 1,36 இலட்சம் மதிப்புடைய கடினமான பணிகளை கழகம் மேற்கொண்டது.

8.6. பணியாளர்கள்:

8.6.1. இக்கழகத்தில் தற்பொழுது 77 தொழிற்நுட்பப் பணியாளர்களும் 64 கணக்கு மற்றும் நிர்வாகப் பணியாளர்களுமாக மொத்தம் 141 பணியாளர்கள் பணி புரிந்து வருகின்றனர். சிறப்பாக ஊரகப் பகுதிகளில் ஆயிரக்கணக்கான திறமை வாய்ந்த தொழிலாளர்களுக்கும், தொழில் நுட்பப் பணியாளர்களுக்கும் வேலை வாய்ப்பினை அளித்து கழகம் உதவியது. தொழில் நுட்பக் கருத்தரங்குகள், மேலாண்மை திட்டங்கள் ஆகியவற்றில் பங்கு பெறுதல், மற்றும் நாட்டின் பல பகுதிகளில் உள்ள பணியிடங்களுக்கு அனுப்புதல் ஆகியவற்றின் மூலமாக கழகப் பணியாளர்களுக்கு நவீன தொழில் நுட்பக் கண்டுபிடிப்புகள் மற்றும் நிர்வாக முறைகள் ஆகியவைகளை அறிய வாய்ப்பு உண்டாகிறது. இம்மாதிரியான பயிற்சி எதிர்காலத்தில் சிக்கல் மிக்க பணிகளை நம்பிக்கையுடன் மேற்கொள்ள பெரிதும் உதவும். கூடியவரையில் உடல் ஊனமுற்றோருக்கும் கழகம் உதவி செய்கிறது.

8.7. பொது:

பெருமை மிக்க திட்டப் பணிகளை நிறைவேற்றுவதில் பயனுள்ள ஓர் அமைப்பாக இக் கழகம் செயல்படுவதன் மூலமாக, அதன் நோக்கத்தை செவ்வனே நிறைவேற்றுகிறது.

9. தேசிய நெடுஞ்சாலை:

9.1. தேசிய நெடுஞ்சாலைப் பிரிவு 1971 ஆம் ஆண்டு செப்டம்பரில் ஏற்படுத்தப்பட்டு தனித்தலைமைப் பொறியாளர் ஒருவரின் கட்டுப்பாட்டின் கீழ் செயல்பட்டு வருகிறது. தேசிய நெடுஞ்சாலைப் பிரிவு, தேசிய நெடுஞ்சாலைத் திட்டங்களையும் மத்திய சாலை நிதித்திட்டங்களையும் கவனித்து வருகிறது. தேசிய நெடுஞ்சாலைத் திட்டங்கள் மத்திய அரசுத்துறைத் திட்டங்களாகும். இவற்றிற்கு மத்திய அரசு முழு நிதி உதவி அளிக்கிறது.

9.2. மத்திய சாலை நிதித் திட்டம்:

9.2.1. ''மத்திய சாலை நிதி'' காலம் கடந்து போகாத நிதியாகும். மோட்டார் எண்ணெய்க்கு, விதிக்கப்படும், சுங்க ஆயத்தீர்வையில் லிட்டர் 1-க்கு 3.5 காசு வீதம் இந்த நிதிக்கு வருவாய் கிடைக்கிறது. இம்மாதிரி கிடைக்கும் மொத்த வசூலில் 80 சதவிகிதம், இத்திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்டுள்ள பணிகளுக்காகும் செலவுகளை சரிகட்டுவதற்காக, மாநில அரசுக்கு ஒதுக்கப்படுகிறது. 20 சதவிகிதத்தை ''சேமத் தொகையாக'' மத்திய அரசு வைத்து வருகிறது.

9.2.2. இத்திட்டத்தின் தற்போதைய நோக்கத்தின்படி சாலைகள்/பாலங்கள் அமைக்கும் பணிகளுக்குக் குறைந்த முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது. ஆராய்ச்சித் திட்டங்கள், போக்குவரத்து ஆய்வுகள், பொருளாதார ஆய்வுகள், இளம் பொறியாளர்கள் பயிற்சித் திட்டம் ஆகிய பணிகளை மேற்கொள்ளுவதற்கும், வாகனங்களில் வருவோர் தங்குவதற்கான விடுதிகள் போன்ற வழியோர வசதிகள் செய்து கொடுப்பதற்கும் அதிக முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது.

9.3. நான்காவது திட்டம் (1969—74):

9.3.1. நான்காவது திட்டக்காலத்தில் 16 பணிகள் ரூபாய் 470.79 இலட்சத்திற்கு மத்திய அரசால் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. அவற்றுள் 14 பணிகள் இதுவரை முடிக்கப்பட்டுவிட்டன. (விவரங்கள் இணைப்பு 24-ல் காண்க.) பின்வரும் இரண்டு பணிகள் நடைபெற்று வருகின்றன.

(அ) வாணியம்பாடிக்கும், ஜாப்பராபாத்திற்கும் இடையே பாலாற்றின் குறுக்கே ஒரு மூழ்கு பாலம் கட்டுதல், வளத்திகும்மபண்டாவிலிருந்து ஆந்திர மாநில எல்லைக்குச் செல்லும் சாலைகளை மேம்படுத்துதல் (ரூபாய் 65.23 இலட்சம்) [illegible]



அணுகு சாலையில் 300 மீட்டர் நீளத்திற்குச் சாலை அமைக்கும் பணி நீங்கலாக மற்ற எல்லா பணிகளும் முடிந்துவிட்டன. நிலம் கையகப்படுத்தும் பணி அண்மையில் முடிவுற்றது. நிலங்கள் எடுத்துக் கொள்ளப்பட்டு ஒப்பந்தப் புள்ளிகள் கேட்கப்பட்டுள்ளன. ஒப்பந்தம் முடிவுற்றதும இப்பணி விரைவில் முடிக்கப்படும்.

(ஆ) வலுவிழந்த, பழைய பாலங்களை சோதனை செய்ய, ரூபாய் 7.70 இலட்சம் செலவில் ஒரு சோதனை வண்டி தயாரித்தல், தொழிலாளர் கலவரம், அதை தொடர்ந்து கதவடைப்பு ஆகியவை காரணமாக இச்சோதனை வண்டி (100 டன்) தயாரிக்கும நிறுவனம் மூடப் ட்டுள்ளது. நிறுவனம் திறக்கப்பட்ட பின்னர் இவை மேறகொண்டு பணி தொடரப்படும்.

9.3.2. நான்காவது திட்ட காலத்தில் மத்திய சாலை நிதிப் பணிகளுக்கு ரூபாய் 224.10 இலட்சம செலவிடப்பட்டுள்ளது.

9.4. ஐந்தாவது திட்டம் (1974—78):

9.4.1. ஐந்தாவது திட்டக்காலத்தில் 13 பணிகளுக்கு ரூபாய் 314.51 இலட்சம் மதிப்பீட்டிற்கு மத்திய அரசு அனுமதி அளித்தது. (விவரங்கள் இணைப்பு 25-ல் காண்க), இராமேஸ்வரத்தில் அருள்மிகு கோதண்ட இராமசாமி கோவிலிலிருந்து தேசிய நெடுஞ்சாலை 49-ஐ (மதுரை—தனுஷ்கோடி சாலை) இணைக்கும் சாலை அமைக்கும் பணியும் ஏற்கெனவே முடிந்து விட்டது.

9.4.2. கீழே கொடுக்கப்பட்டுள்ள மூன்று பணிகள் முடிக்கப்பட்டுவிட்டன;—

(1) தருமபுரி மாவட்டத்தில், பென்னகரம் பெரும்பாலை சாலையில் கி.மீ. 34/2-ல் தொப்பையாற்றின் குறுக்கே ஒரு உயர் மட்டப் பாலம் அமைத்தல்.

(2) வடாற்காடு மாவட்டத்தில் நெமிலி கிராமத்திற்கு அருகே பானாவரம்—சந்தமங்கலம் சாலையில் கி.மீ. 16/10—17/2-ல் ஒரு தரைமட்டப் பாலம் அமைத்தல்,

(3) கல்ராயன் மலையிலுள்ள கிலக்காடு—ஆரிய கவுண்டன் ஜாகீரை குறுப கவுண்டன் ஜாகீர் வழியாக ரெங்கப்பனூருடன் இணைக்கும் ஜீப் செல்லும் பாதை. (கல்ராயன் பாதை).

எஞ்சிய பணிகள் பல்வேறு நிலைகளில் உள்ளன.

9.4.3. இவற்றுள் பாலாற்றின் குறுக்கே கிர்க [illegible] அருகில் தமிழ்நாடு கர்நாடக மாநில எல்லையில் பாலம் கட்டும் ஒரு பணி கர்நாடக மாநிலத்தால் செயலாக்கப்பட்டு இருக்கிறது. இப்பணிக்கான செலவை [illegible]

சமமாக ஏற்க இருக்கின்றன. தமிழக அரசின் பங்கு ரூ.5.48 இலட்சம் ஒதுக்கப்பட்டு விட்டது. கர்நாடக மாநிலம் ஒப்புக்கொண்ட ஒப்பந்தப் புள்ளிகளின் அடிப்படையில், இப்பணிக்கு ரூ 28.25 இலட்சம் செலவாகும். கர்நாடக மாநிலம் மத்திய அரசிடமிருந்து திருத்த அனுமதியைப் பெற்ற பின்னர், தமிழ்நாடு மாநிலம் இத்திருத்த மதிப்பீட்டில் 50 சதவீதத்தை ஏற்கும்.

9.4.4. ஐந்தாவது திட்ட காலத்தில் ரூபாய் 266.31 இலட்சம் செலவிடப்பட்டது.

## 9.5. ஆண்டுத் திட்டம் (1978-79—1979-80):

9.5 1. 1978-79, மற்றும் 1979-89 ஆண்டுத் திட்ட காலங்களில் புதிய வேலைகள் ஒன்றும் அங்கீகரிக்கப்பட வில்லை. முந்தைய திட்ட காலத்தில் அங்கீகரிக்கப்பட்டு நடைபெற்று வரும் வேலைகளுக்காக இவ்விரு ஆண்டுகளிலும் ரூபாய் 109.23 இலட்சம் செலவிடப்பட்டது.

## 9.6. ஆறாவது திட்டம் (1980-85):

9.6.1. ஆறாவது திட்டத்தின்கீழ் ரூபாய் 154.80 இலட்சம் செலவிலான 8 பணிகளுக்கு மத்திய அரசு அனுமதித்துள்ளது. ரூ. 137,30 இலட்சத்திற்கான 6 பணிகளுக்கு மட்டுமே மாநில அரசு நிர்வாக ஒப்புதல் அளித்துள்ளது. பிற திட்டப் பணிகளின் கீழ் எடுத்துக் கொள்ளப்பட்டுள்ள ஏற்கனவே ஒப்புதல் அளிக்கப்பட்ட இரண்டு பணிகளுக்குப் பதிலாக வேறு இரண்டு பணிகளை எடுத்துக் கொள்ள கருத்துத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இணைப்பு 26-ல் காண்க.)

1960-ம் ஆண்டிலிருந்து 1982-ம் ஆண்டுவரை செலவினம் மற்றும் செய்யப்பட்டுள்ள பணிகளின் சாதனை விவரங்கள் இணைப்பு 27-ல் கொடுக்கப்பட்டுள்ளன.

9.6.2. இத்திட்டத்தின்கீழ் 1982-83ம் ஆண்டிற்கான திருத்திய மதிப்பீடு ரூ 80 இலட்சம். 1983-84-ல் வரவு-செலவு மதிப்பீடு ரூ. 42.60 இலட்சமாகும். ஜனவரி 1983 முடிய ஆன செலவு ரூ. 48.35 இலட்சம் ஆகும்.

## 10. நெடுஞ்சாலை ஆராய்ச்சி நிலையம்:

10.1. நெடுஞ்சாலை ஆராய்ச்சி நிலையம் 1957—ல் நிறுவப்பட்டு கடந்த 25 ஆண்டுகளாக சாலைகள், பாலங்களின் ஆய்வு, கட்டுமானம், பராமரிப்பு ஆகியவைகளைப் பற்றிய செயல்முறை ஆராய்ச்சிகளை நடத்தி வருகிறது. இவ்வாராய்ச்சி நிலையம் 1982 நவம்பரில் 25 ஆண்டுகள் நிறைவு பெற்று விரைவில் வெள்ளி விழாக்கொண்டாட உள்ளது. நடைமுறையில் காணப்படும் புலவிதப் பிரச்சினைகளைத் தக்க முறையில் தீர்வுகாண இந்நிலையம் ஆலோசனைகள் அளித்து வருகின்றது. [illegible] நிலையம் தமிழக நெடுஞ்சாலைத் [illegible]



பிரச்சினைகளை மட்டுமல்லாது அண்டை மாநிலங்களின் தேவைகளையும் நிறைவேற்றி வருகின்றது. இத்துறையின் பணிகள் அதிகரித்து வருவதால் வட்டார ஆய்வுக் கூடங்கள் நிறுவப்பட்டு அந்தந்த வட்டாரங்களில் ஏற்படும் சிக்கல்களுக்கு தீர்வு காணப்பட்டு வருகிறது. இந்நிலையம் நெடுஞ்சாலைத் துறையிலுள்ள அதிகாரிகளுக்கு தொழில் நுட்ப முன்னேற்றத்திலும் தரக் கட்டுப்பாட்டிலும், பயிற்சி அளிக்கிறது.

10.2. நெடுஞ்சாலை ஆராய்ச்சி நிலையத்தின் சில முக்கியப் பணிகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:—

10.2.1. ஒரு சோதனைப்பாதை அமைக்கப்பட்டு அதில் பல்வேறு வகையான மண்களைக் கொண்டு அமைக்கப்படும் சாலைத் தளங்களின்செயல்பாடுகளைப் பற்றிய தகவல்கள் கண்டறியப் படுகிறது. அங்கு பல நவீன கருவிகளை அமைத்து வாகனங்களை சோதனைச் சாலைத் தளங்களின் மேல் ஓட விட்டு அவைகளின் செயல்பாட்டு முறைகளைக் கண்டறிந்து அதன்மூலம் சிக்கனமான முறையில் சாலை கட்டுமான மூலப் பொருள்களையும் விவரக் குறிப்புகளையும் உருவாக்க ஆராய்ச்சி நடத்தப்படுகிறது.

10.2.2. முன் வார்ப்பு முறையில் சில பாலங்கள் அமைப்பதனால் கட்டுமான நேரமும், போக்குவரத்தில் தாமதமும், சிரமங்களும் குறைகின்றன. இம்முன்வார்ப்பு தொழில் நுணுக்க முறையில் வேலூருக்கு அருகே அப்துல்லாபுரம்—பாக்கம் சாலையில் சிறு பாலங்கள் கட்டும் வேலை மேற்கொள்ளப் பட்டுள்ளது.

10.2.3. நெய்வேலித் தாரில் இருந்து உபயோகமான ஒரு பிணை பொருளை தயாரிக்க ஒரு முன்னோடி ஆலை ஒன்று நெடுஞ்சாலை ஆராய்ச்சி நிலையத்தில் நிறுவப்பட்டு சோதனை ஓட்டங்கள் நடத்தப்பட்டு வருகின்றன.

மொத்தத்தில் 49 ஆராய்ச்சிப் பணிகள் நடப்பாண்டில் நடைபெற்று வருகின்றன. அவற்றுள் மத்திய அரசு (ஆராய்ச்சி மற்றும் மேம்பாடு பிரிவு) கொடுத்துள்ள 7 பணிகளும் அடங்கும்.

10.2.4. நெடுஞ்சாலை ஆராய்ச்சி நிலையத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் மத்திய அரசின் ஆராய்ச்சித் திட்டங்களை இணைப்பு 28-ல் காண்க.

10.2.5. தற்பொழுது, சிக்கலானதும், கடினமானதும், பெரிய அளவில் அமையப் பெற்ற வடிவமைப்புகளைச் சோதனை செய்து பார்த்திட இத்துறையில் வசதி இல்லை. எனவே நிலைத் தன்மையிலும் அதிர்வுத் தன்மையிலும் வடிவமைப்புகளை சோதனைச சாலையில் சோதனை செய்து பார்க்க 400 டன் திறன் கொண்ட கனரக சோதனை தளம் ஒன்று அமைக்கப்பட உள்ளது. மத்திய அரசு மத்திய சாலை நிதி (சாதாரணம்) [illegible] செய்யும் மானிய அடிப்படையில் சாலை [illegible] கனரக சோதனைத் தளத்தின் [illegible] கருவிகள், வா[illegible]

அளித்தது. இதில் ரூ. 35 இலட்சம் மாநில அரசு ஏற்கும். இதற்கான நிதி ஒதுக்கீடு பற்றிய விவரங்கள் கீழ்வருமாறு:—

| | (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|
| (அ) கனரக சோதனைதளம் அமைக்க ஆகும் செலவு (இதில் மாதிரி வடிவமைப்பு, வெப்ப நிலைக்கட்டுப்பாடு, விரிவடைந்து சுருங்கும் தன்மைபற்றி ஆராய்தல்). | 24.50 |
| (ஆ) 400 டன் திறன் கொண்ட பளு தாங்கும் இரும்பு சட்டம். | 15.00 |
| (இ) தானியியங்கி, ஜாக்கி இவற்றுடன் கூடிய அதிர்வு அமைப்பு. | 20.50 |
| (ஈ) பணிபுரியும் பொறியாளர்களுக்கு நெடுஞ்சாலை ஆராய்ச்சி நிலையம் மூலமாக பயிற்சி அளிக்க நிதி ஒதுக்கீடு. | 10,00 |
| மொத்தம் .. | 70.00 |



அகலமுள்ள இரு கண்களும் அமைந்துள்ளன. (இப்பாலத்தில் மொத்தம் 79 கண்கள் உள்ளன.) கப்பல் போக்குவரத்துக்காக உள்ள கண்களில் கீழ்மட்டம், கடல் பொங்கும் அலை உயர் மட்டத்திலிருந்து 17.68 மீட்டர் உயரத்தில் கப்பல்கள் எளிதாகக் கடக்க இயலும் வகையில் அமைக்கப்பட்டிருக்கிறது. இதற்காக மண்டபம் பக்கம் உள்ள கண்களில் ஒரு சதவிகிதம் சாய்வுடனும் பாம்பன் பக்கம் உள்ள கண்களில் 2 சதவிகிதம் சாய்வுடனும் இருக்குமாறு செய்யப்பட்டுள்ளது.

11.3 முக்கிய பாலம் :

11.3.1. இப்பால வேலையின் ஒப்பந்தம் திருவாளர்கள் நீலகண்டன் அண்டு சகோதரர்கள் கட்டுமான தனியார் நிறுவனம் சென்னை, அவர்களுக்கு 1974-ம் ஆண்டு அக்டோபர் திங்கள் 10-ம் நாள் அன்று முடிவாகியது. ஒப்பந்தப்படி ஒப்பந்தக்காரர்கள் பால வேலையை 19 8-ம் ஆண்டு நவம்பர் திங்கள் 16-ம் நாள் அன்று முடித்திருக்க வேண்டும். ஆனால் ஒப்பந்தக்காரர்கள் வேலையில் முன்னேற்றத்தை காட்டத் தவறி, இறுதியாக வேலையின் முன்னேற்றம் 36 விழுக்காடு இருந்தபோது, ஒப்பந்தக்கால நீட்டிப்பு தருணத்தில் 1979-ம் ஆண்டு ஜூலைத் திங்களிலிருந்து அனைத்து வேலைகளையும் நிறுத்திவிட்டனர். ஒப்பந்தக்காரர்கள் தொடர்ந்து வேலையில் முன்னேற்றத்தைக் காட்டத் தவறியதாலும், ஒப்பந்த விதிகளின்படி நடக்கத் தவறியதாலும் அவர்களது ஒப்பந்தம 1980-ம் ஆண்டு டிசம்பர் 29-ம் நாள் அன்று முழுவதுமாக ரத்து செய்யப்பட்டது.

11.3.2. ஒப்பந்தக்காரர்கள் 1980-ம் ஆண்டு டிசம்பர் திங்கள் 24-ம் நாள் அன்று, நடுவரை மாற்றக் கோரியும் மற்ற சில சலுகைகள் கோரியும், சென்னை உயர்நீதி மன்றத்தில் ஒரு வழக்கு தொடர்ந்தனர். இந்த வழக்கு விசாரணைக்கு இன்னும் எடுத்துக் கொள்ளப்படவில்லை. எனினும், மீதியுள்ள வேலைகளை முடிக்க ஒப்பந்தங்கள் கோருவதற்கு உயர்நீதி மன்றம் இத்துறைக்கு அனுமதி அளித்துள்ளது. முந்தைய ஒப்பந்தக்காரர்/மனுதாரர் முடிக்காது விட்டுச் சென்ற வேலைகளை முடிக்க எந்த ஒப்பந்தக்காரருக்கு ஒப்பந்தம் முடிவாகிறதோ, அந்த ஒப்பந்தக்காரரின் பெயரை உயர்நீதிமன்றத்தில் பதிவு செய்வதற்குத் தெரிவிக்கும்படியும் உயர்நீதிமன்றம் கோரியுள்ளது. அதன்படி, முன் அனுபவம் உள்ள 5 ஒப்பந்தக்காரர்களிடமிருந்து ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டன. 27—8—1982-ம்நாளன்று ஒப்பந்தப் புள்ளிகள் திறந்து பார்க்கப்படுகிற வரையில் 2 ஒப்பப் புள்ளிகளே வந்திருந்தன. இந்த ஒப்பந்தப்புள்ளிகள் மத்திய அரசிற்கு சிபாரிசு செய்யப்பட்டு, தற்பொழுது மத்திய அரசால் பரிசீலிக்கப்பட்டு வருகின்றன.

[1983 மார்ச் 17

11.3.3. இதற்கிடையில், ஒப்பந்தங்கள் முடிவு செய்யப்படும் காலம்வரை கீழ்க்கண்ட வேலைகளை துறையினராலும், சிறு வேலைக்காரர்கள் மூலமாகவும் செய்வதற்காக உயர்நீதி மன்றத்தை அணுகி, 1981-ம் ஆண்டு ஜூலைத் திங்களில் அவர்களின் அனுமதி பெறப்பட்டுள்ளது.

1. ஏற்கனவே முடிக்கப்பட்டு பால வேலை இடத்தில் இருக்கின்ற கான்கிரீட் விட்டங்களை தூண்களின் மேல் பொருத்துதல்.

2. முன்கூட்டியே வடிவேற்றப்பட்ட கான்கிரீட் விட்டங்களை மேல் வார்த்தல்.

3. பாம்பன் பகுதி சார்புச் சுவற்றின் பின்புறத்தை நிரப்புதலும், முன்புற பாதுகாப்பு வேலைகளை நிறைவேற்றுதலும்.

11.3.4. இதன்படி, மேற்படி வேலைகளைத் துறையினராலும், சிறு வேலைக்காரர்கள் மூலமாகவும் செய்வதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டன. இவ்வேலைகளை செய்வதற்காக, ஆட்கள், தளவாடங்கள் சேகரிக்கப்பட்டு, தேவைப்படும் இயந்திரங்கள் பழுது பார்க்கப்பட்டன. இதுகாறும் முப்பது விட்டங்கள் வைக்கப்பட்டுள்ளன. பத்து விட்டங்கள் வார்க்கப்பட்டுள்ளன. மேலும் விட்டங்கள் வார்க்கும் வேலையும் விட்டங்களை தூண்களின்மேல் பொருத்தும் வேலைகளும் நடைபெற்று வருகின்றன. பாம்பன் பகுதி சார்புச் சுவற்றின் பின்புறத்தை நிரப்புதல் முன்புற பாதுகாப்பு வேலைகளை முடித்தல் ஆகிய பணிகள் நடைபெற்று வருகின்றன.

11.4. அணுகு சாலைகள் ;

பாலத்தின் இருபுறமும் உள்ள அணுகு சாலைகள் அமைக்கும் பணி பல்வேறு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு பல ஒப்பந்தக்காரர்கள் மூலம் செயல்படுத்தப்பட்டு வருகின்றது. சாலையின் மொத்த நீளமான 8 கிலோ மீட்டரில் 6.0 கிலோ மீட்டரில் தார் மேற்பரப்பு வேலை உள்பட எல்லா சாலை அமைக்கும் பணிகளும் முடிக்கப்பட்டுள்ளன. மீதமுள்ள பகுதிகளில், இரயில்வே துறையின் நிலங்களும், கட்டிடங்களும் அமைந்துள்ளதால் அவற்றின் நில கையகப்படுத்துவது அண்மையில்தான் இறுதியாக்கப்பட்டு வேலைகள் நடைப்பெற்று வருகின்றன.

11.5. செலவு விவரங்கள் :

11.5.1. பாம்பன் பாலத் திட்ட வேலைக்கு 1982-ம் ஆண்டு மார்ச் திங்கள் 31-ம் தேதி முடிய செலவிடப்பட்ட மொத்த தொகை ரூ. 4,81.42 இலட்சம் ஆகும். 1983-ம் ஆம் ஆண்டிற்கான வரவு—செலவுத் திட்ட நிதி ஒதுக்கீடு ரூ. 25.00 இலட்சமாகும். 1983-ம் ஆண்டு ஜனவரி 31-ம் நாள் முடிய ரூ. 21.29 இலட்சம் செலவிடப்பட்டது.



1983 மார்ச் 17]

11.6. 1983—84 ஆம் ஆண்டிற்கான திட்டம்:

11.6.1. பாலம் கட்டுவதற்காக நியமிக்கப்பட்ட ஒப்பந்தக்காரர்கள் முடிக்காமல் விட்டுச் சென்ற பணியை புதிய ஒப்பந்தக்காரர் மூலம் 1983-84-ல் கட்டி முடிக்கக் கருதப்பட்டுள்ளது. அணுகுசாலை அமைப்புப் பணிகளையும் முடிக்கக் கருதப்பட்டுள்ளது. 1983—84-ம் ஆண்டிற்கான வரவு—செலவுத் திட்ட மதிப்பீட்டுக் கோரிக்கை ரூ. 75.00 இலட்சம் ஆகும்.

12. பொருளாதார, பன் மாநில முக்கியத்துவம் வாய்ந்த பணிகள்.

12.1. பொது:

